॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேஸிகன் அருளிச்செய்த

ஸ்ரீபரமபத ஸோபாநம்.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

வ்யாக்யானத்துடன் கூடியது.

நிகமபரிமளம் ஆபீஸ்,

ஸ்ரீபராங்குசமந்திரம், திருவல்லிக்கேணி, சென்னை.

நோபில் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி.

விலை ரூ 1-4-0 1926 [தபாற்கூலி வேறு.

முகவுரை.

இந்த ஸம்ஸார மண்டலத்தில் உழன்று போரும் ஜீவாத்மாக்களுக்கு மோக்ஷத்தில் ருசி உண்டாகி அதை அடைவதற்கு வேண்டிய உபாயத்தை அனுஷ்டித்து அத்தால் அதை அடைந்து திரும்பிவருதல் இல்லாமல் பகவானையே அனுபவித்துக் கொண்டிருக்கும் ப்ரகாரத்தை ஸகலரும் ஸுலபமாய் அறிவதற்காக ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச் செய்யப்பட்டது ஸ்ரீபரமபதஸோபாநம் என்னும் இக்கிரந்தம்.

இதினுடைய விசேஷார்த்தங்களை எல்லாம் நன்றாக ப்ரதிபாதித்து இதற்கு விஸ்தாரமான வ்யாக்யானம் எழுதும்படி மஸூலிபட்டணம் ரிடைர்ட் ஸிரஸ்தார் ராவ்ஸாஹிப் டி. எஸ். ஸ்ரீநிவாஸராகவாசார்யரின் ப்ரார்த்தனையை அங்கீகரித்து திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யார் ஸ்வாமியால் செய்யப்பட்ட வ்யாக்யானத்துடன் இது சென்ற ஸுமார் இரண்டு வருடகாலமாய் வேதாந்த தீபிகையில் மாதாமாதம் ப்ரசுரிக்கப்பட்டு வருகிறது.

தீபிகை வாங்காத மற்றவர்களுக்கும் உபயோகப்படுமாறு இதைத் தனி புஸ்தகமாக அந்த ஸ்வாமியின் நியமனத்தினால் இப்பொழுது வெளியிடப் படுகிறது.

மானேஜர்

நிகமபரிமளம்,

ஸ்ரீ பராங்குசமந்திரம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ:

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ பரமபத ஸோபாநத் தனியன்கள்.

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஶ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேஶிகம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

வ்யாஜீக்ருத்ய விமுக்திஸௌதபதவீஸோபாநஸம்வர்ணநம்
ஶாரீரார்ணவரத்நஜாதமிஹ ய: ப்ராவீகஶத்ஸர்வஶ: ।
தஸ்மிந் திஷ்டதி வேங்கடேஶ்வரகவௌ ஶ்ரீபாஷ்யகாராயிதே
யங்கஞ்சித் பரமந்யமப்யுபாஸிதுமயே மோஹாந்மந: ஸ்வஸ்தி தே ॥

॥ ஸ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜமஹாதேஶிகாய நம: ॥

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம்
ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபதஸோபாநத் தனியன்களின் வ்யாக்யானம்.

[ப - ரை.] விமுக்தி - மோக்ஷமாகிற, ஸௌத - மெத்தையின், பதவீ - வழியில் இருக்கிற, ஸோபாந - படிகளை, ஸம்வர்ணநம் - நன்றாக நிரூபிப்பதை, வ்யாஜீக்ருத்ய - வ்யாஜமாக வைத்துக்கொண்டு, ஶாரீரார்ணவ - வேதாந்த ஶாஸ்திரங்களாகிற ஸமுத்திரத்தில் இருக்கிற, ரத்நஜாதம் - ரத்னங்களின் கூட்டங்களை, ஸர்வஶ: - முழுமையும், இஹ - இந்தப் பூலோகத்தில், ய:—எந்த ஆசார்யன், ப்ராவீகஶத் - ப்ரகாஶம் செய்தாரோ, தஸ்மிந் - அப்படிப்பட்டவரான, ஶ்ரீபாஷ்யகாராயிதே - ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸமானமானவரான, வேங்கடேஶ்வரகவௌ - ஸ்ரீ வேங்கடேஶ்வரன்

என்கிற கவியாகிற ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன், திஷ்டதி - இருக்கும் பொழுது, ஹயே ஜநா: - ஓ! மனதே! யம் கஞ்சந - எவனையாவது ஒரு, புருஷம் - புருஷனை, உபாஸிதும் - ஆஸ்ரயிப்பதற்கு, மாகா: - போகாதே, தே - உனக்கு, ஸ்வஸ்தி - க்ஷேமம் உண்டாகட்டும்.

[தா - ம்.] 'வ்யாஜீக்ருத்ய' என்பதினால் ஸ்ரீபரமபதஸோபாநம் என்னும் இந்த க்ரந்தத்தில் பரமபதத்திற்கு வழிமாத்திரம் நிரூபிக்கப்படவில்லை, அதை வ்யாஜமாக வைத்துக்கொண்டு வேதாந்த ஶாஸ்திரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் எல்லா அர்த்தங்களும் நிரூபிக்கப்படுகிறது என்பது ஸூசிப்பிக்கப் பட்டதாகிறது. 'ஶாரீரகார்ணவ' இத்யாதியால் இதில்கேவலம்யுக்திமாத்திரத்தைக் கொண்டுவேதாந்த ஸித்தாந்தத்திற்கு விருத்தங்களான அர்த்தங்களை நிரூபிக்கை யன்றிக்கே வேதாந்தஶாஸ்திரத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் அர்த்தங்களே நிரூபிக்கப்பட்டிருக்கின்றனஎன்பதுதெரிவிக்கப்பட்டது. 'ரத்நஜாதம்' என்பதினால் வேதாந்த ஶாஸ்திரங்களிலும் அல்பஸாரம் முதலியவைகளைத் தள்ளிவிட்டு ஸர்வோத்க்ருஷ்டமாய், ஸாரதமமான அர்த்தங்களே இங்கு நிரூபிக்கப்படுகிறது என்பது காட்டப்பட்டதாகிறது. இத்தால் ரத்னங்களின் விஶேஷத்தை அறியாதவர்கள் அவற்றை அநாதரித்தாலும் அதை அறியக் கூடிய ஶக்தியுடையவர்கள் அதை ஆதரிக்குமாப்போலே இப்ரபந்தத்தின் சீர்மையை அறிபவர்கள் இதின் உத்கர்ஷத்தை அறிந்து இதை ஆதரிப்பார்கள் என்பது த்யோதிதம். 'ப்ராவீகஶத் ஸவத்ர ஶ:' என்பதினால் எல்லோரும் அறிந்து கொள்ளும்படி ப்ரகாஶம் செய்தருளின உபகாராதிஶயம் சொல்லப்படுகிறது. 'தஸ்மிந் திஷ்டதி' இத்யாதி - 'ஸ்திதே ஸரவிந்தே மகரந்த நிர்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே' (தேன் நிறைந்த தாமரைப்பூ ஸமீபத்தில் இருக்கும்பொழுது அதை விட்டுவிட்டு வண்டு நீர்முள்ளிப் பூவைக் கண்ணெடுத்துப் பாராதல்லவா) என்று ஸ்ரீ ஆளவந்தார் அருளிச் செய்திருக்கும் ந்யாயம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. 'ஸ்ரீபாஷ்யகாரஸரணிதேஶிகே' என்றது வேதாந்த ஶாஸ்திரங்களில் ஸாராம்ஶமான அர்த்தங்களை ப்ரகாசிப்பிக்கும் விஷயத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் போன்றவர் என்றபடி. 'யம் கஞ்சந புருஷம்' என்றது இவ்வாசார்யனைத் தவிர மற்ற எல்லோரும் அநுபாதேயர்கள் என்னும் அம்ஶத்தில் ஸர்வஜ்ஞுன பகவானோடும் ஒன்றும் தெரியாத ஜ்ஞான ஶூந்யனோடும் வாசியில்லை என்றபடி. 'தேஶிகோ நிகமாந்தாயார்யாத் தஸ்ய பக்தாத் ஸாத்விகோ ஜந: । தத்ஸூக்தேர் ப்ரபந்தோ நாஸ்தி நாஸ்தி மஹீதலே॥' (ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனைத் தவிர ஆசார்யன் இல்லை, அவரிடத்தில் பக்தி செய்யுமவர்களைவிட ஸாத்விகர்கள் இல்லை, அவருடைய ஸ்ரீ ஸூக்திகளைத் தவிர இந்த லோகத்தில் வேறு ப்ரபந்தம் இல்லை) என்றிவை முதலிய பூர்வர்களின் அநுஸந்தானம் இங்கு ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. இப்படியாகில் எம்பெருமான் தானும் மற்றுமுள்ள

பூர்வாசார்யர்களும் அநாஸ்ரயணீயர்கள் என்கிற ப்ரஸங்கம் வருமே என்னில், அது உசிதமல்ல—இவ்வாசார்யன் உகந்தவர்கள் அவர்கள் என்று இவருடைய உகப்பே ப்ரயோஜனமாகையினுலே அவர்களும் ஆஸ்ரயணீயர்களாவார்களாகையினுல். இவ்வர்த்தத்தை இவர் தாமே ஸ்ரீ பாஷ்யகாரர் விஷயத்தில் 'வத்பாதஸம்பந்தி நாம் ஸ்ரீமத்பாஷ்யகாரஸ்ய ஸம்பந்தேந ஸம்ருத்தான் ஸக்த்யா நமாமி' (ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடிகளை ஸேவித்து அவர் திருவடிகளின் ஸம்பந்தத்தினுலும் திருமுடியின் ஸம்பந்தத்தினுலும் வ்ருத்தியடைந்த மஹிமையையுடைய மற்றஆசார்யர்களையும் ஸேவித்து) என்று அருளிச்செய்திருப்பது நமக்கு இவர் விஷயத்தில் அநுஸந்தேயமாகத் தட்டில்லையிறே. அன்றிக்கே இவ்வளவு உபகாரம் செய்யாதவர்களான ஸ்ரிய:பதி முதலியவர்களை நேரில் ஆஸ்ரயிப்பது அவ்வளவு விஸேஷம் இல்லை என்றபடி யாகவுமாம். 'ஸித்தி ஹரேர்வா பவதி வா நேதி ஸம்ஸயோ ஹ்யச்யுதஸேவிநாம் । ந ஸம்ஸயோ ஸ்து தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்॥' (பகவானை நேரில் ஆஸ்ரயித்தவர்களுக்குப் பலம் உண்டாகுமோ என்பதில் ஸந்தேஹம், அவனுடைய பக்தர்களிடத்தில் பக்தி யுடையவர்களுக்கு பலம் கிடைப்பதில் ஸந்தேஹம் இல்லை), 'வேதம் வல்லார்களைக் கொண்டு' இத்யாதிகளை இங்கு அநுஸந்திப்பது. 'ஸ்வஸ்தி தே' என்றது இப்படிப்பட்ட இந்த ஆசார்யனை ஆஸ்ரயித்தால் உனக்கு க்ஷேமம் உண்டாகும், இல்லாவிடில் க்ஷேமம் உண்டாகாது என்றபடி. ஆசார்ய லக்ஷண பூர்த்தியை உடைய ஆசார்யனை ஆஸ்ரயிப்பதே க்ஷேமத்திற்கு ஸாதனமாகும் என்பதை இவ்வாசார்யன் தாமே 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே' என்றாரம்பித்து 'தேஸிகம் ஸம்ஸ்ரயேத' என்னுமளவாக ஒரு ஸ்லோகத்தில் நிரூபித்தருளினர். அப்படிப்பட்ட ஆசார்ய லக்ஷணபூர்த்தியும் இவ்வாசார்யனுக்கே பூர்ணமாக உள்ளது என்பதை ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனும் ஸப்ததி ரத்னமாலிகையில் 'ஆசார்யோக்தா முநீந்த்ரைர் மநுமுககதிதா: தேஸிகேந்த்ரேண ஸாக்ஷாத் ஸ்வேந ப்ரோக்தா: ஸமஸ்தா ஹரி கணநாய்யா: ஸத்கவிப்ரஸக்தா: ஸத்வாத்யா த்யாநயுக்தா: । ஸிஷ்யப்ரோக்தா விசேஷா அபி ச குணகணா: க்ஷோணி தாயாதியாஸ்மிந் நாந்யத்ராசார்யவர்கே க்வசிதபி ச கேசித் கேசிதத்ர ஹி குணா: ப்ராயஸஸ்து த்ருஷ்டா:॥' என்று அருளிச்செய்தார். அதாவது முனிவர்களின் கூட்டங்களினுல் சொல்லப்பட்டவைகளும், ஸ்ரீதேசிகன் தம்மாலேயே நிரூபிக்கப்பட்டவைகளுமான ஆசார்யனு யிருப்பதற்குத் தகுதியான குணங்கள் எல்லாம் ஸர்வதந்திர ஸ்வதந்திரரான ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனிடத்தில் ஒன்று சேர்ந்து இருந்தன, எப்படி ஸிஷ்யனுக்கு வேண்டிய குணங்கள் எல்லாம் கூரத்தாழ்வானிடம் இருந்ததோ (அதைப்போல), ஆசார்ய வர்க்கத்தில் வேறு ஒருவரிடத்திலுமில்லை, அவர்களிடத்தில் அவைகள் சில பெரும்பாலும் காணப்பட்டன என்றபடி.

இப்படி ஒரு ஶ்லோகத்தால் தம்முடைய மனதைக் குறித்து ஸ்ரீதேஶிகனையே ஆஶ்ரயிக்க வேண்டும் என்று உபதேசித்ததும், மனது அதற்கு இசைந்து தனக்கு ஸஹகாரியாய் நிற்க, அத்தால் ஸ்ரீதேசிகனை ஆஶ்ரயிக்கிறார்—'𑌤𑌸𑍍𑌮𑍈' என்றாரம்பித்து.

𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑌵𑍇 𑌤𑌾𑌦𑍃𑌶𑌵𑌿𑌭𑌵𑌾𑌯 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 ।
𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌪𑌰𑌮𑌪𑌦𑌸𑍋𑌪𑌾𑌨𑌮𑍍 ॥

[ப-ரை.] 𑌭𑍁𑌵𑌿 - இந்தப் பூமியில், 𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 - ஜனங்களுக்கு, 𑌪𑌰𑌮𑌪𑌦𑌸𑍋𑌪𑌾𑌨𑌮𑍍 - பரமபதமாகிற மெத்தைக்குப் படியை, 𑌪𑍍𑌰𑌾𑌵𑌰𑍍𑌤𑌯𑌤𑍍 — (எந்த ஆசார்யன்) உண்டாக்கினரோ, 𑌤𑌾𑌦𑍃𑌶𑌵𑌿𑌭𑌵𑌾𑌯 - அப்படிப்பட்ட மஹிமையை உடையவரான, 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 - வேங்கடேஶன் என்கிற திருநாமத்தையுடைய, 𑌤𑌸𑍍𑌮𑍈 - அந்த, 𑌗𑍁𑌰𑌵𑍇 - ஆசார்யனின் பொருட்டு, 𑌨𑌮𑌃 - நமஸ்காரம், 𑌅𑌸𑍍𑌤𑍁 - இருக்கட்டும்.

[தா-ம்.] '𑌤𑌾𑌦𑍃𑌶𑌵𑌿𑌭𑌵𑌾𑌯' என்றது கீழ் ஶ்லோகத்தில் ஆஶ்ரயணீயதைக்கு உறுப்பாகச் சொல்லப்பட்ட குணவிஶேஷங்கள் எல்லாவற்றையும் உடையவரான என்றபடி. '𑌗𑍁𑌰𑌵𑍇' என்றது '𑌗𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌰𑍁𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌕𑌃 । 𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌰𑌨𑌿𑌰𑍋𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌗𑍁𑌰𑍁𑌰𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥' (கு என்னும் பதம் அந்தகாரம் என்பதைச் சொல்லுகிறது, ரு என்னும் பதம் அதை நிவ்ருத்தி செய்வதைச் சொல்லுகிறது, அஜ்ஞானமாகிற இருட்டை நீக்குகிறபடியினால் குரு என்று சொல்லப்படுகிறான்) என்று சொல்லப்பட்ட குரு ஶப்தார்த்த பௌஷ்கல்யத்தை உடையவரான என்றபடி. ஆதலால் '𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁𑌪𑌯𑍁𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾 𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑌯𑌃 । 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌶𑌬𑍍𑌦𑌃 𑌮𑍁𑌖𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ॥', '𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌲𑍇𑌶𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌗𑍌𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌃' இத்யாதிகளில் எப்படிப் பகவானிடத்தில் ப்ரும்ம ஶப்தம் முக்ய வ்ருத்தியைஉடையது என்பதும், மற்றவர்களிடத்தில் அப்படிப்பட்ட குணங்களில் ஏகதேஶம் இருப்பதினால் கௌணமாக ப்ரயோகிக்கப்படுகிறது என்பதும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறதோ அதைப்போல ஆசார்யஶப்தமும் இவர் ஒருவரிடத்திலேயே முக்ய வ்ருத்தியை உடையது, மற்றவர்களிடத்தில் கௌணமாக ப்ரயோகம் செய்யப்படுகிறது என்றறியத்தக்கது. இத்தைக் கணிசித்தே பின்புள்ளாரும் நிருபபதமான தேசிகன், ஆசார்யன் என்னும் பதங்களை இவர் திறத்திலேயே ப்ரயோகித்துப் போருகிறார்கள். இந்த ஶ்லோகத்தில் இவ்வாசார்யன் விஷயமாகவும், இவரையிட்டு இக்ரந்தத்தை ப்ரவர்த்திப்பித்த திருவேங்கடமுடையான் விஷயமாகவும் தாத்பர்யம் அறியத்தக்கது. அப்பொழுது '𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑌵𑍇' என்று இவ்வாசார்யனும், '𑌤𑌾𑌦𑍃𑌶𑌵𑌿𑌭

வாய வெ௯டெஶாய' என்று திருவேங்கட முடையானும், 'ஶூரவ௯யஷ' என்பதினால் ஸாக்ஷாத்தாகவும் இவரை த்வாரமாகக் கொண்டும் ப்ரவர்த்திப்பதும் பொருளாகக்கடவது.

தேனேறு தாமரையாள் திருமார்பன் தன்
    திண்ணருளா லவனடியில் விவேகம் பெற்று
கூனேறு பவக்குழியை வெறுத்ததற்பின்
    கூர்விரத்தியுடன் வினையின் திரளுக்கஞ்சிக்
கூனேறு பிறையிறையோன் சாபம் தீர்த்தான்
    குரைகழலே சரணடைந்து குரம்பைவிட்டு
வானேறும் வழிப்படிக ளடைவே கண்ட
    வண்புகழ் தூப்புல்வள்ளலருள் பெற்றோமே.

[ப - ம்.] தேன்-மது, ஏறு-வ்ருத்தியடைந்து வருகிற, தாமரையாள் - தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கிற லக்ஷ்மியை, திருமார்பன்தன் - திருமார்பிலே உடையவனான ஶ்ரிய: பதியினுடைய, திண்-த்ருடமான, அருளால்-க்ருபையினால், அவனடியில் - அந்த எம்பெருமானுடைய திருவடிகளின் விஷயமாக, விவேகம் - விவேகத்தை, பெற்று - அடைந்து, கூன்-வக்ரதை, ஏறு - வளர்ந்து வருகிற, மேன்மேலென வக்ரத்தோடு வ்ருத்தியாகா நிற்கிற என்றபடி, பவ - ஸம்ஸாரமாகிற, குழியை, வெறுத்ததற்பின் - வெறுத்ததற்குப் பிறகு, கூர் - கூர்மையுடையதான, விரத்தியுடன் - வைராக்யத்துடன், வினையின் - கர்மத்தின், திரளுக்கு - கூட்டத்திற்கு, அஞ்சி - பயந்து, கூனேறு - வளைந்ததான, பிறை - சந்திரனுடைய கலையைத் தரித்தவனான, இறையோன் - (தன் ப்ரமத கணங்கள் விஷயத்தில்) ஸ்வாமியான ருத்திரனுடைய, சாபம் - சாபத்தை, தீர்த்தான் - போக்கடித்த எம்பெருமானுடைய, குரை - ஶப்தித்துக்கொண்டிருக்கிற, கழலே - திருவடிகளையே, சரண் - ஶரணமாக, அடைந்து - ஆஶ்ரயித்து, குரம்பை - ஶரீரத்தை, விட்டு - விட்டுவிட்டு, வானேறும் - பரமபதத்தில் ஏறுகிற, வழி - அர்ச்சிராதிமார்க்கம் என்கிற, படிகள்-படிகளை, அடைவே - க்ரமமாகவே, கண்ட - கண்டவரான, வண் - விலக்ஷணரான, புகழ் - கீர்த்தியை உடைய, தூப்புல் வள்ளல் - தூப்புல் (விஶ்வாமித்ர) குலத்தில் அவதரித்த பரமோதாரரான ஸ்ரீ தேசிகனுடைய, அருள் - க்ருபையை, பெற்றோம் - அடைந்தோம்.

தனியன்களின் வ்யாக்யானம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

ஸ்ரீ பரமபத ஸோபாநம்.

॥ अथ प्रथमं विवेकपर्व ॥

सेयं सोपानपद्वी श्रीमता विहिता स्वयम् ।
प्रपन्नसन्ततिं हृत्वा तु स्वस्यालयं नेतुं जिहीर्षता ॥

॥ ஸ்ரீ: ॥

॥ श्रीमते श्रीनिवासरामानुज महादेशिकाय नमः ॥

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானம்.

முதலாவது விவேகபர்வம்.

संसाराब्धिव्यपायोनिधिकुहरमहावर्तपातप्रमत्तं
मामुद्धृत्य स्वकीयानपायकरुणया ज्ञानहस्तं प्रसार्य ।
निश्श्रेणीषु स्वयान्तैः प्रणिहितचरणं यो विधत्ते विना तं
का वा श्रीवासरामानुजमुनिनवं दैवतं मे वदान्या ॥

विश्वस्रष्टा विहितमनघं मुक्तिसोपानमार्गं
वेदान्तेषु प्रपञ्चविचितं यः करोति स्ववेद्यम् ।
वेदान्तार्यं गुरुवरमहं सद्गुणौघैः समेतं
प्राविष्कृतं निजकारुण्यया वेङ्कटेशं भजेऽहम् ॥

அவதாரிகை.

ஶ்ரிய:பதியின் அவதார விஶேஷமாகிய சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் அகிஞ்சனர்களாய் ஸம்ஸாரத்தில் முழுகிக்கிடக்கிற சேதனர்களிடத்தில் பரமக்ருபையினால் அவர்கள் எல்லோரும் தத்வஹித புருஷார்த்தங்களை ஸுலபமாயறிந்து, பரமபுருஷார்த்தமாகிற மோக்ஷத்தை ஸுலபமாய் அடைந்து உஜ்ஜீவிக்க வேண்டுமென்கிற திருவுள்ளத்தாலே ஸ்ரீ பரமபதஸோபானம் என்னும் இக்ரந்தத்தை அருளிச்செய்ய ஆரம்பித்து அதில் முதலில் இந்த மார்க்கம் பகவான் தன்னாலேயே ஏற்படுத்தப்பட்டது என்று எம்பெருமான் திறத்தில் உபகாரஸ்ம்ருதி ரூபமான மங்களாசரணம் செய்தருளுகிறார்—'ஜயம்' என்றாரம்பித்து. இதில் இந்த க்ரந்தத்தின் திருநாமம், ப்ரயோஜனம், அதிகாரி, முதலியவைகளும் ஸங்க்ரஹிக்கப்படுகின்றன. இந்த க்ரந்தத்தின் திருநாமம் தன்னாலேயே மோக்ஷம் என்கிற பரமபதம் ஒரு பெரிய மெத்தை என்பதினால் அது மற்ற ஸ்வர்க்க ப்ரும்மலோகாதிகளைக் காட்டிலும் வேறுபட்ட தேசத்தில் இருக்கிறது என்பதும், அப்படி இருந்தால் நம்மால் அதை அடைவது மிகவும் துர்லபமாகுமே என்கிற ஶங்கைக்கு நிவாரணமாக மிகவும் ஸுலபமாய் அடையும்படி மெத்தைப்படிக்கட்டுகள் போல் அனேகம் பர்வங்கள் அடங்கிய இக்ரந்தம் இருக்கிறது என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது. லோகத்தில் இருக்கும் ஒரு சேதனன் மோக்ஷமாகிற புருஷார்த்தத்தை அடைய வேண்டுமாகில் முதலில் இந்த லோகத்தில் இருக்கும் தன் ஸ்வரூபாதிகளைப் பற்றிய யதாவஸ்தித ஜ்ஞானத்தைப்பெற்று, இதுவரையில் இதில் இருந்து வீணேகாலம் கழித்ததற்காகத்துக்கத்தை அடைந்து, இதைவிட கொஞ்சம் ஸௌக்யம் என்று தோன்றுகிற ப்ரும்மாதி பதங்களும் நிரூபித்துப்பார்க்கில் தோஷ துஷ்டங்கள் என்று உணர்ந்து, அவைகளில் நின்றும் விரக்தி பிறந்து, இனி இதிலேயே இருக்கும்படி நேர்ந்துவிட்டால் மிகவும் கொடியதாகுமே என்று பயந்து, பகவானுடைய யாத்ருச்சிக கடாக்ஷாதி பரம்பரையினால் ஆசார்ய ப்ராப்தியைப்பெற்று, அவனால் பகவானிடத்தில் பரந்யாஸம் செய்யப்பட்டவனாய், இந்த ஸ்தூல ஶரீரத்தினின்றும் விடுபட்டு, அர்ச்சிராதி மார்க்கத்தினால் பகவானுடைய திவ்ய தேசத்தை அடைந்து, அவனை அணுகி அனுபவிக்கவேண்டும் என்று ஶாஸ்திரங்களில் விஸ்தாரமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கும் அர்த்தங்கள் ஒவ்வொன்றையும் ஒருபடியாக நிரூபித்து இக்ரந்தத்தில் அருளிச்செய்திருக்கிறார் என்பது அறியத்தக்கது. ஆகையினால் பரமபதமாகிற தேசத்தை அடைவதற்கு ஒரு பெரிய வழி ஏற்பட்டிருப்பதினால் நம்போலியர்கள் மற்ற வழிகளில் வீணாக அலையாமல் இந்த க்ரந்தத்தை ஸேவித்து அத்தால் ஸுலபமாய் மோக்ஷத்தை அடையலாம் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது.

விவேக நிர்வேத விரக்தி பீதய:
ப்ரஸாத ஹேதூத்க்ரமணார்சிராதய: ।
ப்ரக்ருத்யதிக்ராந்த பதாதிரோஹணம்
பராப்திரித்யத்ர பதாநி ஷோடஶ: ॥

[ப - ரை.] **ஸ்வதாஸாந்** - தன்னுடைய தாஸர்களை, அதாவது தன்னை ஆஶ்ரயித்தவர்களை, **ஶுத்தஸத்த்வமயம்** - ஶுத்தஸத்வமான வஸ்துவின் பரிணாமமான, **ஸ்வஸௌதம்** - தனக்கு வாஸஸ்தானமாகிய பரமபதமான மெத்தையை, அதைக்குறித்து என்றபடி, **நேதும்** - அழைத்துக்கொண்டு போவதற்கு, **உத்யதா** - விரும்பிக் கொண்டிருக்கிற, **ஸ்ரீதரா** - ஶ்ரிய:பதியினால், **ஸ்வயம்** - தானே, **விஹிதா** - ஏற்படுத்தப்பட்டதான, **ஸா** - அப்படிப்பட்ட, **ஸோபாநபத்ததி** - படிகளின் மார்க்கம், **இயம்** - (மேலே நிரூபிக்கப்படப்போகிற) இது.

[தா - ம்.] '**ஸ்ரீதரா**' என்று லக்ஷ்மியை முன்னிட்டு எம்பெருமானை நிரூபித்திருப்பதினால் மங்களாசரணமும் அர்த்தாத் அருளிச்செய்யப்பட்டதாயிற்று. '**ஸோயம்**' இத்யாதியால் இந்த க்ரந்தத்திற்கு பரமபதஸோபாநம் என்பது திருநாமம் என்றும், இதில் அந்வயிப்பவர்கள் பரமபதத்தை அடைவார்கள் என்பது ப்ரயோஜனம் என்றும், பகவத் தாஸர்கள் எல்லோரும் இதை அதிகரிக்க அதிகாரிகள் என்றும் நிரூபிக்கப்பட்டதாயிற்று.

இப்படிப் பொதுவாக இக்ரந்தத்தின் திருநாமத்தை அருளிச்செய்து இப்ரபந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படும் படிகளின் வரிசைகளை ஒரு ஶ்லோகத்தாலே நிரூபித்தருளுகிறார்—'**விவேக**' என்றாரம்பித்து.

[ப - ம்.] **விவேக** - சித், அசித், ஈஶ்வரன், என்கிற தத்வங்களைப் பற்றிய ஜ்ஞானமாகிய பகுத்தறிவு, **நிர்வேத** - இவ்வளவு நாள்தான் ஸ்வரூப விருத்தமான கார்யங்களை அனுஷ்டித்துப் போந்ததை அறிந்ததினால் உண்டான வெறுப்பு, **விரக்தி** - தன் ஸ்வரூபத்திற்கு விருத்தங்களான ப்ராக்ருத போகங்களை அனுபவிப்பதில் வைராக்யம், **பீதி** - மறுபடியும் இந்த ஸம்ஸாரத்தையே உண்டாக்கக் கூடிய கர்மங்களையே செய்திருப்பதினால் அந்த ஸம்ஸாரம் துடருமே என்கிற பயம், **ப்ரஸாதஹேது** - பகவானுடைய அனுக்ரஹத்திற்குக் காரணமான பக்தி ப்ரபத்திகளாகிய உபாயம், **உத்க்ரமண** - ஶரீரத்தைவிட்டு வெளிப்புறப்படுதல், **அர்சிராதய:** - அர்ச்சிராதிகதிகள், **ப்ரக்ருத்யதிக்ராந்தபதாதிரோஹணம்** - ப்ரக்ருதி மண்டலத்திற்கு மேலான பரமபதத்தை அடைதல், **பராப்தி:** - (அங்கு) பரமாத்மாவை

அடற்புள்ளரசிலு மந்தணர்மாட்டிலு மின்னமுதக்
கடற்பள்ளிதன்னிலுங் காவிரியுள்ள முகந்தபிரான்
இடைப்பிள்ளையாகி யுரைத்ததுரைக்குமியதிவரனுர்
மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே. 1

அனுபவிக்கிறது, ஐதி - என்று, ஸத்ரு - இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகிற, வவூணாம் - பர்வங்களினுடைய (படிகளினுடைய), க்ரமஃ - வரிசை (அறியத்தக்கது).

எல்லா மதங்களிலும் மோக்ஷமும், அதற்கு வழிகளும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன, அதுவுமன்றி ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸித்தாந்தத்திலேயே சில வ்யத்யாஸங்களும் ஏற்பட்டிருக்கின்றன, அப்படியிருக்க இதுதான் பகவானுல் விதிக்கப்பட்ட ஸோபானபதவீ என்று நிஶ்சயம் செய்வது எப்படி என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிருர்—'அடற்புள்ளரசிலும்' என்றுரம்பித்து.

[ப - ரை.] அடல் - பராக்ரமத்தை உடைய, புள்ளரசிலும் - பக்ஷி ராஜனுகிய கருடன் இடத்தில் காட்டிலும், அந்தணர் - ப்ராம்மணர்களினுடைய, மாட்டிலும் - தனமாகிய வேதத்தில் காட்டிலும், இன் - போக்யமான, அமுதக்கடல் - அம்ருதம் உண்டான க்ஷீரஸமுத்திரமாகிற, பள்ளிதன்னிலும் - படுக்கையில் காட்டிலும், காவிரியுள்ளம் - திருக்காவிரியின் மத்யப்ரதேசமாகிய ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தை, உகந்த - ப்ரீதி பூர்வகமாக அங்கீகரித்த, பிரான் - உபகாரகனுன எம்பெருமான், இடைப்பிள்ளையாகி - கோபகுமாரனுகி ஸ்ரீ க்ருஷ்ணனுயவதரித்து, உரைத்தது - அருளிச்செய்த ஸ்ரீ கீதைக்கு, உரைக்கும் - வ்யாக்யானம் செய்தருளின, யதிவரனுர் - ஸ்ரீ பாஷ்யகாரருடைய, மடைப்பள்ளி - மடைப்பள்ளியில், வந்த, மணம் - வாஸனை, மடைப்பள்ளியாச்சான் வழியாக உபதேச பரம்பரையில் வந்த ஸம்ப்ரதாயார்த்தம் என்றபடி, எங்கள், வார்த்தையுள் - வார்த்தைக்குள், மன்னியதே - ஸ்திரமாக இருக்கிறது. 1

[தா - ம்.] 'அந்தணர் மாட்டிலும்' என்றது 'ப்ராஹ்மணாநாம் யநம் வேதஃ', 'அந்தணர்மாட்டந்திவைத்த மந்திரத்தை' என்றிவை முதலியவைகளைத் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தபடி. இங்கு வேதத்தைப்பொதுவாக அருளிச் செய்திருந்தபோதிலும் அதில் ஸாரமான உபநிஷத்பாகமே உபாதேயமாகக்கடவது. வைஷ்ணவர்களின் ஸமீபத்திலும் என்றும் அர்த்தமாகவுமாம். அப்பொழுது 'வஸந்தி வைஷ்ணவாயத்ர நித்யம்ஸந்நிஹிதோஹரிஃ' இத்யாதிகள் விவக்ஷிதங்கள். 'இன்னமுத' இத்யாதி - 'தவ ப்ரியம் யாஶயநீய ஜந்மஹ்ருதிஃ' என்கிறபடியே எம்பெருமானுக்கு மிகவும் ப்ரீதி விஷயமான வாஸஸ்தானம் க்ஷீராப்தி என்றல்லவோ நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்றபடி.

அன்றிக்கே ‘இன்னமுத’ என்பதினால் ஸாதாரணமான அம்ருதத்தை வ்யாவர்த்திப்பித்து அமுதில் பிறந்தபெண்ணமுதான பெரிய பிராட்டியார் ஆவிர்பவித்த கடல் என்னவுமாம். ‘காவிரியுள்ளம்’ என்றது இவைகள் எல்லாவற்றில் காட்டிலும் திருக்காவிரியின் மத்யத்தில் இருக்கும் ஸ்ரீரங்கத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக ப்ரீதி பூர்வகமாக அங்கீகரித்தவன் என்றபடி. அதாவது ‘அடல்’ என்கிற விஶேஷணத்தினால் பராக்ரமம் அவஶ்யம் வேண்டியதான யுத்த ஸமயங்களிலும், அவஸரமாகச் செல்ல வேண்டிய கஜேந்திர ரக்ஷணாதிகள் பண்ணும் ஸமயத்திலுமே ‘புள்ளரசில்’ வாஸம் செய்வது என்பது த்யோதிதம். அந்தணர் மாட்டிலும் ஒருவர்க்கும் ப்ரகாசமாகத் தோன்றாமல் மறைந்து வஸிப்பது. இன்னமுதக்கடல் பள்ளி தன்னிலும் அகிஞ்சனர்களான நம் போலியர்களுக்கு அபிகந்தவ்யதை இல்லாமல் இருப்பது. ஆகையினால் இந்த ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் வஸிக்கும் பொழுதே ஸர்வருக்கும் அபிகந்தவ்யனாயும் ப்ரகாசமாய் தோன்றுமவனாயும் நித்யவாஸம் பண்ணுமவனாயும் இருக்கிறபடியினால் அவைகளைக் காட்டிலும் இங்கு பகவானுக்கு ப்ரீதி விஶேஷம் அதிகம் என்பது த்யோதிதம் என்றபடி. ‘காவிரியுள்ளும்’ என்று பாடாந்தரம். அப்பொழுது கருடன் முதலியவர்களுடன் துல்யமாக ஸ்ரீரங்கத்தை உகந்தருளினவன் என்றர்த்தம். ‘இடைப்பிள்ளை’ இத்யாதியால் கீதைக்கு அனேகம் வ்யாக்யானங்கள் இருந்தபோதிலும் அந்த வ்யாக்யாதாக்கள் அவரவர்கள் மனதில் தோன்றின அர்த்தங்களைக் கீதையில் ஆரோபித்தார்கள் அத்தனை, ஸ்ரீபாஷ்யகாரர் ஒருவருமே ஸ்ரீ க்ருஷ்ணன் எந்த அர்த்தத்தை அருளிச் செய்தாரோ அதையே தம்முடைய வ்யாக்யானத்தில் வெளியிட்டருளினார் என்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. ‘மடைப்பள்ளி’ இத்யாதி - வேதாந்தோதயனர் என்றும், ப்ரணதார்த்திஹரர் என்றும் ப்ரஸித்த திருநாமங்கள் இருக்கச் செய்தே ஆசார்ய கைங்கர்யத்தையே ஸ்வரூபப்ராப்தமாக நினைத்து யதிராஜமஹாநஸிகர் என்று அத்தையே தமக்குத் திருநாமமாக அங்கீகரித்தமையினால் அவருடைய ஆசார்யபக்தி விஶேஷம் த்யோதிதமாயிற்று. இத்தால் ‘𑌯𑌸𑍍𑌯 𑌦𑍇𑌵𑍇 𑌪𑌰𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌃 𑌯𑌥𑌾 𑌦𑍇𑌵𑍇 𑌤𑌥𑌾 𑌗𑍌𑌰𑍌 । 𑌤𑌸𑍍𑌯𑍈𑌤𑍇 𑌕𑌥𑌿𑌤𑌾 𑌹𑍍𑌯𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑍍𑌤𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥’ என்கிற கடஶ்ருதியின்படியே ஸ்ரீபாஷ்யகாரரால் உபதேசிக்கப்பட்ட ரஹஸ்யார்த்தங்கள் எல்லாம் இவருடைய குருபக்தியின் விஶேஷத்தினால் இவருக்கு யதாவத்தாக ப்ரகாசித்துக்கொண்டிருந்தன என்பது விவக்ஷிதம். மடைப்பள்ளியிலிருந்து வருகிற பக்வமான அன்னங்களின் வாஸனை என்றும் ஒரு அர்த்தம் த்வனிக்கிறது. இங்கு மடைப்பள்ளி ஆச்சான் என்று நிர்தேஶியாதே கேவலம் மடைப்பள்ளி என்று அருளிச் செய்திருப்பதினால் இவருடைய ஆசார்ய பாரதந்த்ர்யத்தின் பராகாஷ்டை காட்டப்பட்டதாகிறது. இத்தால் ஸ்ரீ பாஷ்யகாரினாலே ரஹஸ்ய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக நியமிக்கப்பட்ட

கள்ளமனத்துடன் கண்டுமுயன்ற கடுவினையால்
நள்ளிருளாழியி னற்சுவையைந்தென நாடியதோர்
அள்ளலினூடும் விழுந்தழியா வகை யாரணநூல்
வள்ளல் வழங்கிய வான்படியான வழியிதுவே. 2

கிடாம்பி ஆச்சானுடைய ஸம்ப்ரதாயம் உபதேச பரம்பராகதமாய் அப்புள்ளார் மூலமாய்த் தமக்குக் கிடைத்தபடி அருளிச் செய்யப்பட்டதாகிறது. ஆகையினால் இதுவே ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்தில் இருந்த அர்த்தம் என்பதும் ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரரோ ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவுள்ளத்தை அனுஸரித்தவர். ஆதலால் எம்பெருமானுடைய திருவுள்ளத்தை உள்ளபடியே அறிந்த ஸ்ரீபாஷ்யகாரருடையதிருவுள்ளத்தில் இருந்தவைகளாயும் சிரகாலம் அவருக்கு அந்தரங்க ஶுஶ்ரூஷாதிகள் செய்ததினால் அவரால் அனுக்ரஹிக்கப்பட்ட ஆச்சான்முகமாக வந்தவைகளாயும் இருக்கிற ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்டஅர்த்தவிஶேஷங்களை ப்ரதிபாதிக்கிற இந்த க்ரந்தத்தில் நிரூபிக்கப்படுகிற ஸோபான மார்க்கமே'ஸ்ரீ உதா விஹிதா' என்னத் தட்டில்லை என்றதாயிற்று. ஆகையால் ஆச்சான் ஸம்ப்ரதாயத்தில் அந்வயமில்லாதவர்களுடைய ரஹஸ்யார்த்தங்கள் ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளத்திற்கு அனுகுணமானவைகளல்ல என்பதும் த்யோதிதம். 'மன்னியதே' என்றது வாதிகளாலும் கலக்க வொண்ணாதபடி ஸ்திரமாக இருக்கிறது என்றபடி. இத்தால் ஆசார்ய ஸ்ம்ருதிரூபமான யங்களமும் செய்தருளப்பட்டதாயிற்று.

இப்படிக் கீழ் நிரூபித்த மார்க்கம் கேவலம் ஸம்ப்ரதாயாகதமாய் ஏற்பட்ட அர்த்தத்தினால் நிஸ்சயம் செய்யப்பட்டது மாத்திரமல்ல, இதுவே வேதாந்த ஶாஸ்திரங்களில் ப்ரதிபாதிக்கப்பட் டிருக்கும் மார்க்கம் என்றருளிச்செய்கிறார் - 'கள்ள' என்றாரம்பித்து.

[ப - ரை.] கள்ள - சௌர்யத்தைச் செய்கிற, மனத்துடன் - மனதோடு, கண்டு - வஸ்துக்களைப் பார்த்து அறிந்து, முயன்ற - அதினால் செய்யப்பட்ட, கடு-க்ரூரமான, வினையால் - கர்மத்தினால், நள்இருள் - காடாந்தகாரம் நிறைந்த, ஆழியில் - சுழியில், நல்-நல்ல, சுவை - ஸாரம், அதாவது அனுபவிக்கக்கூடிய வஸ்து, ஐந்து - இவை ஐந்தும், என-என்றெண்ணி, நாடியது - தேடப்பட்ட, ஓர்-அத்விதீயமான, அள்ளலில் - குழைந்த சேற்றில், விழுந்து அழியாவகை - நாம் நஶித்துப் போகாத விதமாக, வள்ளல் - மிகவும் உதாரமான, ஆரண நூல்-வேதாந்த ஶாஸ்திரத்தினால், வழங்கிய - கொடுக்கப்பட்டதான, வேதாந்த ஶாஸ்திரங்களில் ப்ரதிபாதிதமான என்றபடி, வான் - பரமபதத்திற்கு, படியான,வழி - மார்க்கம், இதுவே-இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற விவேகாதிகளே. 2

[தா-ம்.] 'கள்ளம்' என்றது அபஹாரம், அதாவது 'இவ்வபஹாரம் விபூதியையும் விபூதிமானையும் பற்ற இரண்டு வகையாயிருக்கும், அதில் விபூதிமானை

அபஹரிக்கையாவது ச்ரிய:பதியான ஸர்வேச்வரனை இல்லை என்னுதல், வேறொருத்தனை ஈச்வரனாகக் கட்டி ஸர்வேச்வரனை விபூதிகோடியில் வைத்தல் செய்கை. விபூதியை அபஹரிக்கையாவது விபூதியை ஒரு முகத்தாலே இல்லையென்னுதல், உண்டாக்கி ஈச்வரனோடு ஸம்பந்தமறுத்து ஸ்வதந்திரமென்னுதல், பரதந்திரமாக்கித் தன்னோடு பிறரோடு பிணைப்புதல் செய்கை' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அருளிச் செய்யப்பட்ட அபஹாரங்கள். 'கண்டு முயன்ற' என்பதினால் அஹங்கார மமகார நாஸ்திக்ய புத்தி முதலியவற்றை அடைந்து அதனால் க்ருத்யாக்ருத்ய விவேக சூன்யர்களாய்ச் செய்யும் பாபங்கள் என்றபடி. பொய்நின்ற ஜ்ஞானம் உண்டாயிற்றாகில் அதன் மேல்படியான பொல்லா வொழுக்கமிறே ஏற்படும். இங்கு 'கள்ள' இத்யாதியால் 'பொய்நின்ற ஞானமும்' என்பதும், 'முயன்ற கடுவினையால்' என்பதினால் 'பொல்லா ஒழுக்கும்' என்பதும் விவரிக்கப்பட்டதாயிற்று. 'நள்ளிருள் ஆழி' என்றது அஜ்ஞானமாகிற இருட்டை உண்டாக்கக் கூடிய கர்ப்ப ஜன்ம ஜராமரணாதி சக்கரம் என்றபடி. 'விஷ்ணு மாயா மஹாவர்த்த:' என்று சொல்லப்பட்டதிறே. 'நல்சுவையைந்து' என்றது இவனுடைய புத்தியினால் நல்ல ஸுகம் என்று எண்ணப்படுகிற சப்தஸ்பர்சாதி விஷயங்கள் என்றபடி. விஷய ப்ராவண்யமாவது ஐந்து தலை நாகம் படம் விரித்தாடிக்கொண்டிருக்கையில் அள்ளிக்கொள்ளப் புகுகிறது அறியாமே அதன் கீழே நிழலுக்கு ஒதுங்கி வர்த்திக்கை என்றார்களிறே அபியுக்தர்களும். ஆதலால் இவன் ஸுகமென்று ப்ரமித்து ஆத்மவிநாச பர்யந்தமான கேட்டை விளைவித்துக் கொள்ளுகிறான் என்று தாத்பர்யம். 'அள்ளல்' என்பதினால் சேற்றைப்போல் இந்த விஷயங்கள் தங்களிடத்தில் ஸம்பந்தப்பட்ட இந்திரியங்களைத் தங்களிடத்தில் இருந்து மீட்க ஒண்ணாமல் அகப்படுத்திக்கொள்ளும் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'புலன் படிந்துண்ணும் போகம்' என்றும், 'கண்டு கேட்டுற்று மோந்து உண்டுழலும் ஐங்கருவி கண்டவின்பம்' என்றும் அருளிச் செய்யப்பட்டதிறே. 'நாளும்' என்பதினால் எப்பொழுதும் இந்தச் சேற்றிலேயே நாட்செல்ல நாட்செல்ல அழுந்திக்கிடக்கும் என்பதேற்படுகிறது. 'விழுந்தழியாவகை' என்பதினால் 'ஸங்காத் ஸஞ்ஜாயதே காம:' என்கிறபடியே விஷயங்களில் ஸங்கமுண்டாகில் 'புத்தி நாசாத் ப்ரணச்யதி' என்கிறபடியே அது விநாசபர்யந்தமாகும் என்பது த்யோதிதம். 'வள்ளல்' என்றது 'மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம்' என்கிற ந்யாயத்தினால் அனேகம் தாய்தந்தையர்களைக் காட்டிலும் வாத்ஸல்யமுடையதாகையினால் நம்முடைய ஹிதத்தைத் தெரிவிக்கக்கூடிய ஔதார்யத்தை உடையது வேதாந்த சாஸ்திரம் என்றபடி. அன்றிக்கே 'ஆரணநூல் வள்ளல்' என்றந்வயிக்கவுமாம். அதாவது வேதாந்த சாஸ்திரத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிற பரமோதாரனாகிய எம்பெருமான் என்றபடி. 'வழியிதுவே' என்றது 'ஹோதா ஹோத்ரம் ப்ரசாஸ்தாரம் ச ஸேவா ஜுஷ்டஸ்ததோ ந்ரு

அஶேஷசிதசித்வஸ்துஶேஷியான ஶ்ரிய:பதிக்கு அநந்யார்ஹ நிருபாதிகஶேஷபூதராய் அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும்

ம்ருதத்வமேதி' (சிதசிதீஶ்வர தத்வங்களைத் தனித்தனியே அறிந்து அதனால் ஈஶ்வரனுடைய க்ருபைக்குப் பாத்திரனாகி மோக்ஷத்தை அடைகிறான்)' என்றும், 'ஸமானே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோ அநீஶயா ஶோசதி முஹ்யமாந: ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:' (ஒரே ஶரீரமாகிய வ்ருக்ஷத்தில் அழுந்திக் கிடக்கிற ஜீவாத்மா ஶக்தி யில்லாமையினால் மோஹத்தை அடைந்து துக்கப்படுகிறான், தன்னை விட வேறுபட்டவனாய்த் தன்னிடத்தில் ப்ரீதியையுடைய ஸர்வேஶ்வரனையும் அவனுடைய மஹிமையையும் எப்பொழுது அறிகிறானோ அப்பொழுது துக்கமில்லாதவனாகிறான்) என்றும் ஶ்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிற படியினால் வேதாந்த ஶாஸ்திரங்களிலும் விவேகம், நிர்வேதம், வைராக்யம், பகவத் ப்ரஸாதம் இவை முதலியவைகளே மோக்ஷ மார்க்கங்களாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றன என்றபடி. 2

இப்படி ஸத்ஸம்ப்ரதாய ஸித்தமாயும், வேதாந்த ஶாஸ்திரத்தில் ப்ரதிபாத்யமாயும் இருக்கிற பரமபத ஸோபான க்ரமத்தை விஸ்தாரமாக அருளிச்செய்ய உபக்ரமித்து அதில் முதலாவதான விவேகம் என்னும் பர்வத்தை நிரூபித்தருளுகிறார்—'**அஶேஷ**' என்றாரம்பித்து. அதில் 'எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான ஆகாரத்தையும், ஸம்ஸாரியான தனக்கு இப்பொழுது இருக்கும் ஆகாரத்தையும் தனித்தறிய வேண்டும்' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் அர்த்த பஞ்சகாதிகாரத்தில் அருளிச்செய்தபடியே முதலில் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவான ஆகாரத்தை அருளிச்செய்கிறார்—'**அஶேஷ**' என்றாரம்பித்து '**க்ஷேத்ரஜ்ஞர்**' என்னுமளவாக. **அநந்யார்ஹ நிருபாதிக ஶேஷபூதராய்** - வேறொருவருக்கு இப்படி ஶேஷபூதராயிருப்பதற்கு யோக்யதையில்லாமல் ஒரு காரணமுமில்லாமல் ஸ்வபாவத்திலேயே ஶேஷபூதராய். இத்தால் சிலருக்குச் சிலரைப்பற்ற ஶேஷத்வம் இருந்தபோதிலும் அது கர்மக்ருதமாகையினால் நிருபாதிகமல்ல என்பது த்யோதிதமாயிற்று. பாகவத ஶேஷத்வமும் அவர்களுடைய பாகவதத்வமடியாக வந்ததாலே நிருபாதிகமல்ல என்பதும் விவக்ஷிதம். அந்தமில் - முடிவில்லாத (அளவில்லாத), பேர் - அதிகமான, இன்பத்து - ஆநந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிற, அடியரோடு - தாஸபூதர்களான நித்யமுக்தர்களோடு. அனைத்துலகுமுடைய - எல்லா லோகங்களையும் தனக்கு ஶேஷபூதமாக உடைய, அரவிந்த லோசனனை - தாமரைப்புஷ்பங்கள் போன்ற திருக்கண்களையுடைய ஸர்வேஶ்வரனை, தினைத்தனையும் - தினையளவும், அதாவது

விடாதே அநுபவிக்க ப்ராப்தரான க்ஷேத்ரஜ்ஞர் அநாத்யவித்யா கர்மாதி ப்ரவாஹத்திலொழுகிக் கரையேற விரகற்று அலமருகின்ற படியைக் கண்டருளின பரமகாருணிகனான பரமசேஷி தானே ஜ்ஞானக்கை கொடுத்து இவர்களை யெடுக்கவிடம் பார்த்து, அஜ்ஞாதயாத்ருச்சிகாநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்யவிசேஷரூப ஸுக்ருத

கொஞ்சமேனும், திணை என்பது ஒரு மிகவும் சிறியதான தான்யம், பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூத்யாதிகளில் ஒன்றையும் கொஞ்சமேனும் விடாமல் என்றபடி. ப்ராப்தரான - ஸ்வரூபத்தில் யோக்யதை உடையவரான, க்ஷேத்ரஜ்ஞர்- ஜீவாத்மாக்கள். இதற்குமேல் ஸம்ஸாரமண்டலத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு அஸாதாரணமான ஆகாரத்தை அருளிச்செய்கிறார்—'அநாதி' என்றாரம்பித்து. அநாதி - ஆதியில்லாத, அவித்யா கர்மாதி ப்ரவாஹத்தில் - அவித்யை, கர்மம், வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தங்களாகிற பரம்பரையில். 'கர்மா வித்யாதி சக்ரே' என்கிறபடியே இவைகள் ஒரு சக்ரம்போல் சுழன்று மாறிமாறி அநாதியாக ப்ரவாஹம்போல் துடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன என்றதாயிற்று. ஒழுகி - அதிலேயேபோய்க்கொண்டு. விரகற்று - உபாயமில்லாமல், அலமருகின்ற-ஶ்ரமப்படுகிற, படியை - ப்ரகாரங்களை. இப்படி ஸம்ஸாரத்தில் முழுகிக்கரையேற வழிதெரியாமல் திகைத்துக்கொண்டு நிற்கும் இவனுக்கு இதிலிருந்து கரையேறுவதற்கு வழி ஏற்படும் ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார்—'பரமகாருணிகனான' என்றாரம்பித்து. பரமசேஷி-தனக்கு வேறொரு சேஷி இல்லாமல் எல்லாவற்றிற்கும் தானே சேஷியாயிருப்பவன். இது மேலே 'உபதேசிக்க' என்பதோடு அந்வயிக்கிறது. 'தானே' என்றது வேறொரு காரணம் ஒன்றுமில்லாமல் என்றபடி. ஜ்ஞானக்கை-ஜ்ஞானமாகிறகையை. நதியின்ப்ரவாஹத்தின்வழியே போய்க்கொண்டிருப்பவனுக்குப் பிடித்துக்கொண்டு கரையேறுவதற்கு ஸாதனமாகக் கையை நீட்டுவதைப்போல் இங்கு பகவானும் ஜ்ஞானத்தை உண்டு பண்ணி அது வழியாக இவனை ஸம்ஸாரத்தில் இருந்தும் கரையேற்றுகிறானகையினால் இங்கு ஜ்ஞானத்தைக் கையாக நிரூபித்தருளினபடி. இவர்களை எடுக்க - இந்த ப்ரவாஹத்தின் மத்யத்திலிருந்து கரையேற்றிவிட, இடம் பார்த்து - அவஸரத்தை எதிர்பார்த்து. 'தஸ்யைவ ஸாவகாஶ:' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதங்கள். 'அஜ்ஞாத' இத்யாதி பதங்கள் மேல் 'ஸுக்ருத' என்னும் பதத்துடன் அந்வயிக்கின்றன. 'அஜ்ஞாத ஸுக்ருத'மாவது தானே இது ஒரு ஸுக்ருதம் என்றறியாமல் நேரும் ஸுக்ருதம்; அதாவது வேறு கார்யார்த்தமாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது பகவத் ஸந்நிதி முதலியவைகளை ப்ரதக்ஷிணமாகப் போகிறோம் என்றறியாமலே ப்ரதக்ஷிணம் செய்துகொண்டு போவது என்றபடி. 'யாத்ருச்சிகஸுக்ருத'மாவது தான்

விஶேஷங்களை வ்யாஜமாகக்கொண்டு விஶேஷகடாக்ஷம் பண்ணி அத்வேஷாபிமுக்யஸாத்விகஸம்பாஷணாதிகளை யுண்டாக்கி, ஸாதாரணநித்யஸம்பந்தஸஹகாரியான ஆபாதஸம்பந்தத்தை

எதிர்பாராமல் நேர்ந்த ஸுக்ருதம், அதாவது பகவான் முதலியவர்களை ஸேவிக்கவேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் இருக்கும்பொழுது பகவான், பாகவதர்கள் முதலியவர்கள் தாங்களே எழுந்தருளி ஸேவை ஸாதிக்க அப்பொழுது அவர்களை ஸேவிப்பதால் ஏற்படும் ஸுக்ருதம் என்றபடி. 'ஆநுஷங்கிகஸுக்ருத'மாவது வேறொரு கார்யத்தை உத்தேசித்துப் போகும்பொழுது நடுவில் நேரும் பகவத்ஸேவை முதலிய ஸுக்ருதம். 'ப்ராஸங்கிகஸுக்ருத'மாவது வேறொரு கார்யத்தைச்செய்யும்பொழுது இதுவும்கூட இருக்கட்டும் என்று செய்வது. 'ஸாமாந்யபுத்திக்ருத ஸுக்ருதவிஶேஷ'மாவது ஸாமாந்ய தர்மமென்று நினைத்துச்செய்யச் செய்தே அது விசேஷஸுக்ருதமாக ஏற்படுவது, அதாவது ஸாதாரணமாகப் பிச்சையிடுகிறோம் என்றெண்ணிப் பிச்சை கொடுக்கும்பொழுது அது பாகவதர்கள்விஷயத்திலேயாய் நேருமவை என்றபடி. 'வ்யாஜமாகக்கொண்டு' என்பதினால் அவனுடைய ஸஹஜஸௌஹார்த்தமே முக்ய காரணம், இந்த வ்யாபாரங்கள் பக்ஷபாதாதி தோஷங்கள் உண்டாகாமைக்காகக் கேவலம் வ்யாஜமாக ஏற்பட்டவை என்பதும், இந்த ஸுக்ருதங்களின் விஶேஷங்களினால் ரக்ஷிக்கவில்லை, பகவான் தன்னுடைய ஸஹஜகாருண்யத்தினாலேயே ரக்ஷிக்கிறான் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகிறது. விஶேஷகடாக்ஷம் பண்ணி - மோக்ஷ பர்யந்தமான பரிபாகங்களை உண்டாக்குவதற்குக் காரணமான விஶேஷ கடாக்ஷத்தைப் பண்ணி. ஏற்கனவே இவர்களைக் கரையேறவிட எண்ணி யிருந்தவனுக்குப் பூர்வோக்தங்களான அஜ்ஞாத யாத்ருச்சிகாதி ஸுக்ருதங்கள் ஒரு அவஸர ப்ரதானம் பண்ணிற்று என்றபடி. அத்வேஷம் - பகவானிடத்தில் த்வேஷமில்லாமை. இதற்கு முன் பகவான் என்னும் பெயரை வேறு யாராவது சொல்லும்பொழுதும் கூட த்வேஷம் உண்டானவனுக்கு அது இல்லாமல் போவது என்றபடி. ஆபிமுக்யம் - த்வேஷமும் ப்ரீதியுமில்லாமல் உதாஸீநனா யிருக்கும் அவஸ்தை தாண்டி பகவானிடத்தில் கொஞ்சம் ப்ரீதி உண்டாவது. ஸாத்விகஸம்பாஷணம் - ஸாதுஜனங்களான பாகவதோத்தமர்களுடன் ஸம்பாஷிப்பது. ஸாதாரண - ஸர்வ ஜீவாத்மாக்களுக்கும் பொதுவான, நித்ய - நித்யமாயிருக்கிற, ஸம்பந்த - ஜீவாத்மாவிற்குத் தன்னோடுண்டான ஶேஷஶேஷிபாவ ஸம்பந்தத்திற்கு, ஸஹகாரியான - ஒத்தாசையான, அதாவது ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உண்டான ஶேஷஶேஷிபாவ ஸம்பந்தம் எப்பொழுதும் எல்லா ஆத்மாக்களுக்கும் இருந்தபோதிலும் இவ்வளவு காலமாய் அது

ஸிஸ்ருக்ஷை பண்ணி, விஶேஷண விஶேஷ்யோபய ஸ்வபாவ விஷய மாகத் திருந்தக் கண்டுரைக்க வல்ல தெளிவுற்ற சிந்தையனாய் குலிங்கஶகுநிவக்த்ராந்த வைஶேஷிகனான தேஶிகன் திருவடிகளிலே சேர்த்து, அவன் மநஸ்ஸிலும் வாக்கிலும் கோயில் கொண்டு பிரமகுருவாகி நின்று தீதில் நன்னெறி காட்டவொருப்பட்டு, ஸ்வோஜ்ஜீவநாபேக்ஷி

ப்ரயோஜன முடையதாக ஆகவில்லை, எல்லா ஆத்மாக்களுக்கும் ப்ரயோஜனத்தைக் கொடுக்கவுமில்லை, ஏனெனில் அதற்கு ஒத்தாசையான ஆசார்ய ஸம்பந்தம் இல்லாமையாலே, அது உடையவனுக்கே அந்த ஸம்பந்தம் கார்யகரமாகிறது என்றபடி. **ஸிஸ்ருக்ஷை** பண்ணி - இவனுக்கு உண்டாக்க வேண்டும் என்கிற ஸங்கல்பத்தைச்செய்து. இதற்குமேல் ஆசார்ய ஸம்பந்தத்தை நிரூபித்தருளுகிறார் — '**விஶேஷண**' என்றாரம்பித்து. **விஶேஷண**ங்களாவன பகவானுக்கு ஶரீரங்களாகிய சேதநாசேதன வஸ்துக்கள், **விஶேஷ்ய**மாவது இவைகளுக்கு ஆதாரபூதமான எம்பெருமான், **உபய** - இவை இரண்டின், '**ஸ்வபாவ**' என்றது அவைகளின் ஸ்வரூபத்திற்கும் உபலக்ஷணம். 'தத்வேந யஶ்சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ' என்று தத்வங்களின் ஸ்வரூபமும் ஸ்வபாவமும் ஜ்ஞாதவ்யங்களாக ஸங்க்ரஹிக்கப்பட்டதிறே. திருந்த - நன்றாக, நிஶ்சயரூபமாக என்றபடி. உரைக்கவல்ல-உபதேசிக்கக் கூடிய. தெளிவுற்ற - நைர்மல்யத்தை உடைய, அதாவது வைஶத்யத்தை உடைய என்றபடி. சிந்தையனாய்-புத்தியை உடையவனாய், அன்றிக்கே தத்வங்களைப் பற்றிய அநுஸந்தானத்தை உடையவனாய், 'யஸ்யாநுபவ பர்யந்தா புத்திஸ் தத்வே ப்ரதிஷ்டிதா। தத்த்ருஷ்டிகோசரா: ஸர்வே முச்யந்தே ஸர்வகில்பிஷை:॥' என்றும், 'உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்ஶிந:' என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யக்ஷமாக அறிவதைப்போலே விஶதமாக அறியக்கூடிய அநுஸந்தான விஶேஷத்தை உடையவனாய் என்றபடி. '**குலிங்க**' இத்யாதி — குலிங்கபக்ஷியின் நடவடிக்கைக்கு வெகு தூரத்தில் இருப்பவனான. குலிங்க ஶகுனி என்கிற பக்ஷி 'மா ஸாஹஸம் குரு' என்று ஶப்தித்துக் கொண்டு இருக்கச் செய்தே சிங்கம் வாய்திறந்து கொட்டாவி விடும்பொழுது அதின் பல் நடுவில் இருக்கும் மாம்ஸத் துண்டங்களை கொத்திக் கொண்டுவந்து புஜிக்கையாகிற ஸாஹஸமான கார்யத்தைச் செய்கிறது, அப்படித் தன்னுடைய உபதேசத்திற்கு விரோதமான ஆசாரம் இல்லாதவனான என்றபடி. **தேஶிகன்** - ஆசார்யனுடைய. கோயில்கொண்டு - ஸாந்நித்யம் பண்ணி, பிரமகுருவாகி - ப்ரும்மவித்யையை உபதேசிக்கிற ஆசார்யனாகி, தீது - தோஷம், இல் - இல்லாத, நன்னெறி - நல்ல மார்க்கத்தை, காட்ட - ப்ரகாசம் செய்ய, ஒருப்

தங்களான ரஹஸ்யார்த்தங்களை அஜ்ஞாநஸம்ஶயவிபர்யய விபரீதருசிகள் புகாதபடி உபதேஶிக்க; 'உபதேஶோ நிரர்த்தக:' என்னுதபடி கருவிலே திருவுடையனாய் ஸத்பாத்ரனாய் 1'ஶிஷ்யஸ்தேஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்' என்று செவிதாழ்த்திச் சேதநன் சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்

பட்டு - ஆரம்பித்து. ரஹஸ்யார்த்தங்களை - ரஹஸ்யங்கள் என்று பெயர்பெற்ற திருமந்திரம், த்வயம், சரமஶ்லோகம் முதலியவைகளின் அர்த்தங்களை. அன்றிக்கே ரஹஸ்யங்களான ஶப்தங்களையும், அவைகளின் அர்த்தங்களையும் என்றாகவுமாம், அதாவது மந்திர மந்திரார்த்தங்களை என்றபடி. அஜ்ஞாந - அறியாமை, ஸம்ஶய - ஸந்தேஹம், விபர்யயம் - விபரீத ஜ்ஞானம், விபரீதருசி - விபரீதமான அனுஷ்டானத்தில் ஆசை. இப்படி எம்பெருமான் செய்தருளுகிற உபகாரபரம்பரைகளை ஆசார்ய ப்ராப்திபர்யந்தமாக நிரூபித்தருளி, இனி ஶிஷ்யனுடைய கர்த்தவ்யங்களை நிரூபித்தருளுகிறார்— 'உபதேஶோ' என்றாரம்பித்து. உபதேஶ:—உபதேஶம் செய்தது, நிரர்த்தக:—ப்ரயோஜனமற்றது, என்னுதபடி - என்று சொல்லும்படி போகாதபடி, கருவிலே - கர்ப்பத்திலேயே, கர்ப்பவாஸம் செய்யும் தசையிலேயே என்றபடி, திருவுடையனாய் - ஸம்பத்தையுடையவனாய், அதாவது 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மதுஸூதந: । ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ॥' என்கிறபடியே ஜாயமான தசையிலேயே தேவ ஸம்பத்திற்குக் காரணமான பகவானுடைய கடாக்ஷத்தைப் பெற்றவனாய் என்றபடி. ஸத்பாத்ரனாய் - ப்ரணிபாத பரிப்ரஶ்நாதிகளாலே யதா ஶாஸ்திரம் வந்தடைந்தவனாய். இத்தால் 'உபஸந்நாய ஸம்யக்' என்கிற ஶ்ருதிவாக்யத்தில் சொல்லப்படுகிற குணவிஶேஷங்கள் எல்லாம் விவக்ஷிதங்கள். அஹம் - நான், தே - உமக்கு, ஶிஷ்ய: - ஶிஷ்யன், த்வாம் - உம்மை, ப்ரபந்நம் - ஶரணமாக அடைந்திருக்கிற, மாம் - என்னை, ஶாதி - ஶிக்ஷிக்கக்கடவீர், அதாவது உபதேஶாதிகளைச் செய்து திருத்த வேண்டும், என்று-என்று ப்ரார்த்தித்து, செவி தாழ்த்தி - உபதேசம் பெறுவதற்குக் காதை ஏகாக்ரமாக்கி. சேதநன் - இந்த ஜீவாத்மா. சூழ்ந்து - வெளிப்புறங்களில் வ்யாபித்து, அகன்று - விஸ்த்ருதமாய், ஆழ்ந்து - கீழ்ப்ரதேஶங்களில் வ்யாபித்து, உயர்ந்த - மேல் ப்ரதேசத்தில் வ்யாபித்திருக்கிற, முடிவில் - முடிவில்லாத, அபரிச்சின்னையான, பெரும்பாழில் - பெரியதான ப்ரக்ருதியில், எழுந்த - உண்டான, அதாவது ப்ரக்ருதியின் பரிணமங்களான என்றபடி. மான் - மஹத், ஆங்

1. பகவத்கீதை-2-7.

பாழி லெழுந்த மானாங்கார மனங்கள் முதலான விவிதவிஷவ்ருக்ஷங்களினுடைய ஸஹஸ்ரப்ரகாரபாதகத்வத்தையும் சூழ்ந்ததனில்பெரிய பர நன் மலர்ச் சோதியான ஜீவாத்மாக்களுடைய ஶரீரகாராக்ருஹநிவாஸகைங்கர்யஸாம்ராஜ்யஶ்ரீகளையும் சூழ்ந்ததனில் பெரியசுடர் ஞானவின்பமான உயர்வறவுயர்நலமுடையவன் படிகளையும் ஸாவஹிதனாய்க் கேட்டு, உய்வதோர் பொருளாலுணர்வெனும் பெரும்பதம் தெரிந்து

காரம், மனம் - மனது, முதலான - மற்றப் பஞ்சபூதங்கள், அதாவது இந்திரியங்கள் முதலிய எல்லா விகாரங்கள் என்றபடி, **விஷவ்ருக்ஷ**ங்கள் - நிழலில் ஒதுங்கின மாத்திரத்தினாலேயே நாசத்தை உண்டாக்கக் கூடியவைகளான மரங்கள். '**ஸஹஸ்ரப்ரகார**' இத்யாதி அநேகவிதமாக விரோதம் செய்யும் தன்மையையும். சூழ்ந்து - இந்த ப்ராக்ருதமான விகாரங்களை யெல்லாம் வ்யாபித்து, அதனில் - அவைகளில் காட்டிலும், பேரிய - பெரியதான, பர - [1]'இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்' என்று சொல்லப்படுகிறபடியே மேலானதாயும், நல் - நல்லதாயும், ஜ்ஞாநாநந்த ஸ்வரூபத்தை உடையதாயும் என்றபடி, மலர் - விகாஸத்தை உடையதாயும், தர்மபூத ஜ்ஞானத்தின் விகாஸத்தை உடையதாயும் என்றபடி, கீழ் 'சூழ்ந்ததனில் பெரிய' என்றதும் இப்படித் தர்மபூத ஜ்ஞானத்தின் வழியாகவே என்றறியத்தக்கது. சோதியான - ஸ்வயம் ப்ரகாசமான. **ஶரீரகாராக்ருஹநிவாஸ** - பத்ததசையில் ஶரீரமாகிற ஜயிலில் வஸிப்பதாகிய தசையையும். '**கைங்கர்ய**' இத்யாதி - மோக்ஷதசையில் வரப்போகிற கைங்கர்யமாகிற ஸாம்ராஜ்யத்தையும். சூழ்ந்து - கீழ்ச்சொல்லிய ப்ராக்ருதி பரிணாமங்களையும், முக்தாத்மாக்களையும் வ்யாபித்து, அதனில்பெரிய - அவைகளைக் காட்டிலும் பெரியதான, சுடர் - ப்ரகாசத்தையுடைய, எல்லாவற்றையும் அறியும்படியான ஜ்ஞான விஶேஷத்தையுடைய, ஞானவின்பமான - ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனான, உயர்வற - இதரவஸ்துக்களுக்கு உத்கர்ஷம் இல்லாமல் இருக்கும்படி, உயர் - உயர்ந்து கொண்டிருக்கிற, நலம் - ஆநந்தம் முதலிய கல்யாண குணங்களை, உடையவன் - உடையவனான எம்பெருமானுடைய, படிகளையும் - ப்ரகாரங்களையும், **ஸாவஹித**னாய் - ஸாவதானத்தை யுடையவனாய், உய்வது - உஜ்ஜீவிக்கக் கூடியதான, உஜ்ஜீவிப்பதற்குக் காரணமான என்றபடி, ஓர் - அத்விதீயமான, பொருளால் - அர்த்தத்தினால், அதாவது பகவத் க்ருபையினால் என்றபடி, அதில் கௌரவத்தினால் மறைத்து இப்படி அருளிச்செய்யப்பட்டது, உணர்வெனும் - ஜ்ஞானம் என்கிற, பெரும் - பெரியதான, பதம் - ஸ்தானத்தை, ஜ்ஞானமே புருஷார்த்த மாகையினால் அதைப் பரமபதம்

1. இதைவிட வேறுபட்டதான ஜீவாத்மாவாகிய உயர்ந்த என்னுடைய ப்ரக்ருதியை அறி.

ஸ்வரூப பர பல ஸமர்ப்பண ஜ்ஞேய ப்ரதானமாய் ஶேஷஶேஷிகளைப் பிரியாதபடி பிணைத்து வணக்கி உல்லஸிதமாக்குகிற பதத்ரயத்திலே தன்னுடைய ஜ்ஞாத்ருத்வ கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை பாரார்த்யங்களாகவும் பராதீனங்களாகவும் பார்த்து ; முதற்றனிவித்தாய்த் திருத்தித் திண்ணிலை மூவுலகுந் தன்னுளிருத்திக் காக்குமியல்பினனாய், தனதே

போல் ஒரு ஸ்தானமாக நிரூபித்திருக்கிறது, தெரிந்து - அறிந்து, ‘ஸ்வரூப’ இத்யாதி - திருமந்திரத்தில் ப்ரணவம் ஸ்வரூப ஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது, நமஶ்ஶப்தம் பரஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது, சதுர்த்யந்தபதம் பல ஸமர்ப்பணத்தைச் சொல்லுகிறது என்றபடி. ஜ்ஞேய ப்ரதானமாய் - இவ்வர்த்தங்களே ப்ரதானமாக ப்ரதிபாத்யங்கள், மற்றவைகளும் இப்பதங்களில் அறியத்தக்கவைகள் என்றபடி. ஶேஷஶேஷிகளை - ஜீவாத்மாக்களையும், பரமாத்மாவையும், பிணைத்து - ஶேஷஶேஷி பாவத்தினால் ஒன்று சேர்த்து, வணக்கி - ‘நாயகத்வவிவா தேவம்’ இத்யாதிகளின் படியே இவன் வணங்குவதினால் பகவானும் இவனுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி வருகிறபடியினாலே இருவரையும் வணக்குகிறது நமஶ்ஶப்தம் என்றபடி. இவ்வர்த்தத்தை இவர் தாமே ‘நாம் வணங்கத் தாமிணங்கா நிற்பார் வந்தார்’ என்றருளிச்செய்திருப்பது இங்கனுஸந்தேயம். உல்லஸிதமாக்குகிற - ப்ரீதர்களாக்குகிற, இவனுடைய கைங்கர்யத்தினால் ஶேஷி ப்ரீதனாக அதைக்கண்டு இவனும் ப்ரீதனாகிறான் என்றபடி. பதத்ரயத்திலே - திருமந்திரத்தில் இருக்கும் மூன்று பதங்களிலே. பாரார்த்யங்களாகவும் - பகவானுடைய ப்ரயோஜனத்திற்காக ஏற்பட்டவைகளாகவும், பராதீனங்களாகவும் - அவனுக்கு வஶப்பட்டவைகளாகவும். ப்ரணவத்தில் மகாரம் ஜ்ஞாத்ருத்வத்தையும், சதுர்த்யந்த பதம் கர்த்ருத்வ போக்த்ருத்வங்களையும், நடுவில் இருக்கும் நமஶ்ஶப்தம் இவைகள் பரார்த்தங்களாகவும் பராதீனங்களாகவும் இருப்பதையும் சொல்லுகிறது என்றபடி. முதல் - முதலிலேயே இருக்கிற, தனி - அத்விதீயமான, வித்தாய் - உபாதான காரணமாய், திருத்தி - உலகங்களை ஸ்ருஷ்டித்து, இத்தால் நிமித்த காரணத்வமும் அருளிச் செய்யப்பட்டதாகிறது. திண் - த்ருடமான, நிலை - ஸ்திதியை உடைய, அதாவது ப்ரவாஹம் போல் நித்யங்களான, மூவுலகும் - மூன்று லோகங்களையும், இங்கு ‘உலகு’ என்றது மூன்று விதங்களான சேதனாசேதனங்களை என்றபடி, தன்னுள் - தனக்குள்ளே, இருத்தி - இருக்கும்படி செய்து, ஸர்வாதாரனான தான் அவைகளைத் தன்னிடத்தில் இருக்கும்படிசெய்து, காக்கும் - ரக்ஷிக்கும், இயல்பினனாய் - ஸ்வபாவனாய், உலகு - லோகங்கள், தனதே - தனக்கு ஶேஷபூதமே, என - என்று எல்லோரும் சொல்லும்படி, நிற்குமவனாய். இத்தால் ஸர்வாதாரத்வ ஸர்வஶேஷித்வங்கள் அருளிச்செய்யப் பட்டதாகின்

யுலகென நிற்குமவனாய், அடைக்கலம் கொண்டஞ்சலென்ன ப்ராப்தனாய், உலகங்களுக்கெல்லாமோருயிராய் உலகுதன்னோடொன்றி நிற்க வேறு நிற்குமவனாய், உபாயோபேயபூதனை ஸ்ரீய:பதியை உளனென்று தேறியிருக்குமுணர்ச்சியுடையவன் தானும் உளனுமென்று தைத்திரீயாதி ச்ருதிகள் சொல்லலுற்றன.

அருவுருவானவை யனைத்து மறிவாரேலு
  மருங்கலைகள் கற்றுரைக்க வல்லாரேலும்
தருமவழியழியாமற் காப்பாரேலும்
  தனிமறையின்றூற்பரியக் தருவாரேலும்
இருவினையினொழுக்கத்தாலேவலோரா
  திங்கே நாம் சிறையிருந்த வினைத்தீர்க்கும்
திருமகளார்பிரியாத தேவன்றிண்ணம்
  தேறுதார் திண்படியிலேறுதாரே. 3

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீ பரமபதஸோபாநே

|| ப்ரதமம் விவேகபர்வ ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ||

றன. அடைக்கலம் கொண்டு - நம்மை ரக்ஷ்ய வஸ்துவாக அங்கீகரித்துக் கொண்டு, அஞ்சல் - பயப்படாதே, என்ன - என்று அபயப்ரதானம் பண்ண, ப்ராப்தனாய் - உரியனாய், இப்படி ஸர்வாதாரத்வ ஸர்வ சேஷித்வத்தாலே, உலகங்களுக்கெல்லாம் - ஓர் - அத்விதீயமான, உயிராய் - அந்தராத்மாவாய், தன்னோடு ஒன்றி - சேர்ந்து, நிற்க - நின்றபோதிலும், வேறு நிற்குமவனாய் - இவைகளைக் காட்டிலும் வேறுபட்டு நிற்குமவனாய், அதாவது அவைகளில் உண்டான தோஷங்களும், அவைகளுடன் சேர்ந்திருப் பதினால் உண்டாகக்கூடிய தோஷங்களும் தன்னிடத்தில் ஸம்பந்தப்படாமல் நிற்குமவனாய் என்றபடி. உளன் என்று - எப்பொழுதும் இருக்கிறான் என்று, தேறி இருக்கும் - நிச்சயத்தை அடைந்திருக்கும், உணர்ச்சியை உடையவன் - ஜ்ஞானத்தை உடையவன், தானும், உளனும் - ஸத்தாவான். ‘தைத்திரீயாதிச்ருதிகள்’ என்றது ‘அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது:’ என்றிவை முதலியவைகள் என்றபடி.

இப்படிக்கீழ் நிரூபித்தருளின அர்த்த விசேஷங்களை ஸுலபமாய் அனு ஸந்தானம் செய்யும் பொருட்டு ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—

'அருவுருவானவை' என்றாரம்பித்து. அதில் மற்ற விசேஷங்களைப் பற்றிய ஜ்ஞானம் எவ்வளவு இருந்தபோதிலும் 'தஜ்ஜ்ஞாநஜ்ஞாநமந்யதாந்யஶ்ஶில்பகௌஶலம்', 'வித்யாந்யா ஶில்பநைபுணம்' இத்யாதி ப்ரமாணங்களின்படியே அவை கள் ப்ரயோஜன மற்றவைகள்; பராவரதத்வ விவேகமே இவனுக்குப் பரம பதத்தில் ஏறும் மார்க்கத்தில் முதல் படியாயிருக்கிறது என்று அருளிச்செய் கிறார்.

[ப - ம்.] அருவு - ரூபமில்லாத வஸ்துக்கள், உருவு - ரூபமுடைய வஸ்துக்கள், சேதநாசேதன வஸ்துக்கள் என்றபடி, அன்றிக்கே உருவு - ஶரீரம், அருவு - ஆத்மா, ஆனவை - ஆகிய இவைகள், அனைத்தும் - எல்லா வற்றையும், அறிவாரேலும் - அறிந்தவர்களா யிருந்தபோதிலும், அரும் - இத ரர்களால் அறிவதற்கு அஶக்யங்களான, கலைகள் - ஶாஸ்திரங்களை, கற்று - தாங்கள் அப்யஸித்து, உரைக்க - அயலாருக்கு உபதேசிக்க, வல்லாரேலும்- ஶக்தியுடையவர்களா யிருந்தபோதிலும், தருமவழி - தர்ம மார்க்கத்தை, அழி யாமல் - நஶித்துப் போகாமல், காப்பாரேலும் - ரக்ஷிப்பவர்களா யிருந்தபோதி லும், அதாவது அவற்றை தங்கள் உபதேஶத்தாலும் அநுஷ்டானம் முதலிய வைகளினாலும் ரக்ஷித்துக் கொண்டிருந்தபோதிலும், தனி - ஒப்பற்ற, ப்ரமா ணதமமான என்றபடி, மறையின் - வேதத்தின், தாற்பரியம் - தாத்பர்யார்த் தத்தை, தருவாரேலும் - இதரர்களுக்கு உபதேஶிப்பவர்களாய் இருந்தபோதி திலும், இருவினையின் - புண்யம் பாபம் என்று இருவகைப்பட்ட கர்மங்க ளின், ஒழுக்கத்தால் - ப்ரவாஹத்தினால், ப்ரவாஹம் போல் தொடர்ந்து வருகிற பரம்பரையினால் என்றபடி, ஏவல் - பகவானுடைய நியமனத்தை, ஓராது - யோசிக்காமல், அவனுடைய ஆஜ்ஞைப்படி நடவாமல் அதைமீறி நடப்பவர்க ளாய் என்றபடி, பூர்வபூர்வ கர்மங்களினால் மேல்மேல் ஆஜ்ஞாதிலங்கனாதிகள் தொடர்ந்து வருகின்றன என்றபடி, இங்கே - இந்த ப்ரக்ருதி மண்டலத்திலே, நாம் - ஜ்ஞாநாநந்த ஸ்வரூபரான ஆத்மாக்களான நாம், சிறை - காராக்ருஹத் தில், இருந்த - வஸித்த, ஶரீரமாகிய ஜயிலில் வஸித்ததினால் உண்டான என் றபடி, ஈனம் - குறைவை, ஜ்ஞான ஸங்கோசாதிகளை, தீர்க்கும் - நிவ்ருத்தி செய்கிற, திருமகளார் பிரியாத - லக்ஷ்மீ 'அகலகில்லேனிறையும்' என்று வஸிக்கிற, தேவன் - தேவனான ஶ்ரிய:பதியினுடைய, 'ஶ்ரியா தேவோ தேவஸ்ஸ்ம்ருத:', 'திருவில்லாத் தேவரைத்தேறேல் மின் தேவு' இத்யாதி களிற்படியே திருமகளார் பிரியாமையினாலன்றோ இவனுக்குத்தேவத்வம் ஸித் தித்தது என்றபடி., திண்ணம் - தார்ட்யத்தை, அதாவது த்ருடப்ரமாணத்தி னால் ஸித்தனாயிருப்பதை, 'என்று மோர் இயல்பொடு நின்றவென்திடரே' என்றதிறே, தேறுதார் - நிஶ்சயிக்காதவர்கள், திண் - த்ருடமான, படியில் - பரமதத்திற்குப்போகும் மார்க்கத்தில் இருக்கும்படியில், ஏறுதார் - ஏறக்கூடிய யோக்யதை உடையவர்களல்ல, ஏகாரம் நிஶ்சய த்யோதகம். 'கீழ் உளனென்று

தேறியிருக்கு முணர்ச்சியுடையவன்' என்றருளிச் செய்திருப்பதையும், அதற்கு மூலமான தைத்திரீய ஶ்ருதியையும், 1 '𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌤𑌦𑌾𑌕𑌾𑌰𑍇 𑌤𑌤𑍍𑌪𑌰𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌪𑍌𑌷𑍍𑌕𑌰 । 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌸𑌤𑍍𑌤𑌾 𑌹𑍃𑌦𑌯𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑍌 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥' இத்யாதி ப்ரமாணங்களையும் இங்கனுஸந்திப்பது. 2

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

முதலாவது விவேகபர்வம் முற்றிற்று.

1. எப்பொழுதும் உள்ளதான அவருடைய ரூபத்திலும், அந்தப் பகவானுடைய மேன்மையிலும் எவனுக்கு மனதில் உளது என்கிற எண்ணம் இருக்கிறதோ அவனுக்கு இந்தப் பகவான் ஸமீபத்தை அடைவான், அன்றிக்கே இந்த மனிதன் அந்தப் பகவானுடைய ஸமீபத்தை, அதாவது பரமபதத்தை அடைவான்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

॥ த்விதீயம் நிர்வேதபர்வ ॥

மறுத்தார் திருவுடன் மார்பிற்றரித்தவன் வாசகத்தை
மறுத்தார் மயக்கமுமற்றதனுல் வந்த மா நரகும்
நிறுத்தார் பவத்தினெடுநாளுழன்றமை கண்டதனுல்
வெறுத்தாரணநெறியே வெள்கியோட விரைவர்களே. 4

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

இரண்டாவது நிர்வேதபர்வம்.

இப்படி விவேகம் உண்டான பிறகு கீழ்க் கழிந்ததற்கு நிர்வேதம் உண்டாகும் க்ரமத்தை இரண்டாவது படியாக நிர்வேதபர்வம் என்றருளிச்செய்ய ஆரம்பித்து அதை முதலில் ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிருர்—'மறுத்தார்' என்றுரம்பித்து.

[ப - ம்.] மறு - ஸ்ரீவத்ஸம் என்கிற மறு, தார் - மாலை, திருத்துழாய் மாலை, வைஜயந்திமாலை, முதலியவைகளை, திருவுடன் - லக்ஷ்மியுடன், மார்பில் - தன்னுடைய திருமார்பில், தரித்தவன் - தரித்துக் கொண்டிருக்கிற எம்பெருமானுடைய, இத்தால் அஸ்த்ர பூஷணத்யாயாதிகளிற்படியே ப்ரக்ருதியின் அதிஷ்டானமாகிய மறுவையும், இரு பூத மாலைகளையும் தன்னுடைய திருமேனியில் தாங்கிக்கொண்டிருப்பவன் என்பது த்யோதிதம், வாசகத்தை - வார்த்தையை, 'ஶ்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்கிறபடியே அவனுடைய ஆஜ்ஞாரூபங்களான ஶ்ருதி ஸ்ம்ருத்யாதி ஶாஸ்திரங்களை என்றபடி, அன்றிக்கே ஸ்ரீக்ருஷ்ணனுயவதரித்து ஸ்ரீகீதாஶாஸ்திரத்தில் நியமித்தருளினதை என்றபடியாகவுமாம், மறுத்தார் - நிஷேதித்தவர்கள், அதாவது அவைகளில் விதிக்கப்பட்ட கர்மயோக ஜ்ஞான யோக பக்தியோக ப்ரபத்திகளில் தங்கள் ஶக்திக்கு அனுகுணமானதொன்றை அனுஷ்டிக்காதவர்கள் என்றபடி, இதற்குமேல் 'விரைவர்களே' என்பதோடந்வயம், மயக்கமும் - அஜ்ஞானமும், மற்று - பின்னும், அதனுல் - அந்த அவித்யையினுல், வந்த - உண்டான, மா - பெரிய, நரகும் - நரகத்தையும்,

இப்படித் தானும் பிறரும் தனக்கு **ஶேஷியும்** தஞ்சமும் **ஸஹாயமு**மன்றென்று தோன்றும்படி **தயாஶீலதேஶிகோபதேஶலப்த பதத்ரயார்த்தபராமர்ஶத்தாலே த்ருவமஹாராஜனும்** போலே **ஸ்வச்சஸ்வாதுபவித்ரஶீதளமான பராவரதத்வவிவேகம்** பெற்றவன் தான் முன்பு **அநாதிகாலம் அஸமஞ்ஜஸ**ன்படியே நடக்கையாலே

நிறுத்து - தனக்குள் அடக்கிக்கொண்டு, ஆர் - நிறைந்திருக்கிற, அஜ்ஞானம் துடங்கி நரகபர்யந்தமாயுள்ள துக்கங்களைத் தனக்குள் அடக்கிக்கொண்டிருக்கிற என்றபடி, பவத்தில் - ஸம்ஸாரத்திலே, நெடுநாள் - தீர்க்ககாலம், அநாதியாக என்றபடி, உழன்றமை - ஸஞ்சரித்துக்கொண் டிருந்தமையை, கண்டு-நிரூபித்துப்பார்த்து, அதனால் - அந்த நிரூபணத்தினாலே, வெறுத்து - இப்படித்தான் நடந்து கொண்டமைக்குத் தன்னுள்ளேயே வெறுத்துக்கொண்டு, வேள்கி - லஜ்ஜையை அடைந்து, வெட்கப்பட்டு என்றபடி, ஆரணநெறியே-வேதங்களில் சொல்லப்படுகிற மார்க்கங்களிலேயே, ஓட - ஸஞ்சரிக்க, விரைவர்கள் - த்வரையை உடையவர்களாக ஆவார்கள். 4

இப்படி கீழ்ப்பாட்டில் ஸங்க்ரஹமாக அருளிச்செய்த நிர்வேதம் உண்டாகும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. தஞ்சமும் - ரக்ஷகனும். **தயாஶீல** - தயையையே ஸ்வபாவமாக உடைய, **தேஶிகோபதேஶலப்த** - ஆசார்யனுடைய உபதேஶத்தினால் ஏற்பட்ட, **பதத்ரய** - திருமந்திரத்தில் இருக்கும் மூன்று பதங்களினுடைய. **ஸ்வச்ச** - தெளிந்ததான, அதாவது ஸம்ஶயம் முதலியவைகள் இல்லாத, **ஸ்வாது** - ருசியுள்ள, அதாவது ஸ்வயம் போக்யமான, **பவித்ர** - பாபங்களைப் போக்கடிக்கக்கூடிய, **ஶீதள** - குளிர்ந்ததான, அதாவது ஸம்ஸாரதாபத்தைப் போக்கடிக்கக் கூடியதான, **பராவரதத்வ விவேகம்** - உயர்ந்த தத்வம், தாழ்ந்த தத்வம், இவைகளைப்பற்றிய விவேகத்தை. '**அஸமஞ்ஜஸ**ன்படியே' என்றது அஸமஞ்ஜஸன் என்பவன் வீதியில் விளையாடும் குழந்தைகளை எடுத்து ஸரயூநதியில் போட்டு அவைகள் முழுகுவதைப் பார்த்து ஸந்தோஷத்துடன் அனுபவித்து அத்தால் உண்டாகும் பாபங்களைச் சுமற்றிக்கொண்டான். இந்த வ்ருத்தாந்தம் பாகவதத்தில் ஒன்பதாவது ஸ்கந்தத்தில் எட்டாவது அத்யாயத்திலும், ராமாயணத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு அஸமஞ்ஜஸன்படியை த்ருஷ்டாந்தமாக்கினது அவன் என்ன ப்ரயோஜனத்திற்காகச் செய்தானோ அதற்காகவல்ல என்பதும், கெட்ட கார்யங்களைச்செய்து அத்தால் பாபத்தைச் சுமற்றிக்கொள்ளுவதற்கு மாத்திரம் த்ருஷ்டாந்தமாகக்கடவது என்பதும்

1 'ந க்ஷமாமி', 2 'க்ஷிபாமி' என்னும்படி துறப்புண்டு, அநந்தாயாம விஸ்தாரமான த்ரிகுணமருகாந்தாரத்திலே அநேகஜந்மஸாஹஸ்ரியான ஸம்ஸாராடவியை அடைந்து, அநுசிதவிஷயமருமரீசிகாஸ்வாதலுப்தனாய், அடி தெரியாதே யோடி வாஸநாரேணுகுண்டிதனாய், விபரீதபரிஶ்ரமபலனாய், ஒரு விஶ்ரமஸ்தாந

அறியத்தக்கது. ந க்ஷமாமி - பொறுக்கமாட்டேன். அதாவது 3 'பத்மபத்ரஶதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே' என்றும், 'உபசாரஶதேநாபி ந க்ஷமாமி வஸுந்தரே' என்றும்சொல்லப்பட்டதிறே. க்ஷிபாமி - (நரகத்திலேயே) தள்ளுகிறேன், அதாவது 4 'க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு' என்றபடி. என்னும்படி- என்று ஸங்கல்பிக்கும்படி. துறப்புண்டு - நிக்ரஹிக்கப்பட்டு. அநந்த - அளவில்லாத, ஆயாம - நீளம், விஸ்தாரமான - அகலம், இவைகளை உடைத்தானதான, அதாவது ஶுத்தஸத்வமயமான த்ரவ்யம் இருக்கும் இடம் தவிர மற்ற எல்லா இடங்களிலும் வ்யாபித்ததான என்றபடி. த்ரிகுண - ஸத்வம், ரஜஸ், தமஸ், என்கிற மூன்று குணங்களையுடைய ப்ரக்ருதியாகிற, மருகாந்தாரத்திலே - பாலைவனத்திலே, அநேக ஜந்மஸாஹஸ்ரியான - அனேகம் ஆயிரம் ஜன்மங்களை உடையதான. அநுசித - தகாததான, விஷய - ஶப்தம் முதலிய விஷயங்களாகிற, மருமரீசிகா - கானலை, ஆஸ்வாத - ஸாப்பிடுவதில், அநுபவிப்பதில் என்றபடி, லுப்தனாய் - ஆசையை உடையவனாய், அதாவது வெய்யில் காலத்தில் பெரிய பாலைவனங்களில் தூரத்தில் ஜலம் இருப்பது போல் தோன்றும், அதற்குக் கானல் என்று பெயர், அதில் தாகஶாந்தி செய்துகொள்ள வேண்டும் என்கிற வீணான ஆசையை உடையவனாய் என்றபடி, அடிதெரியாதே - தான் வைக்கப்போகிற அடி எந்த இடத்தில் என்று தெரிந்துகொள்ளாமல், அன்றிக்கே காரணம் தெரியாமல் என்றாகவுமாம். இது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபோத்காதாதிகாரத்தில் 'தட்டித் தாவற்று' என்றருளிச் செய்திருப்பதின் விவரணம். வாஸநா - ஶப்தாதி விஷயங்களை அநுபவிப்பதினால் உண்டாகிய வாஸனையாகிய, ரேணு-தூசிகளினால், குண்டிதனாய் - மறைக்கப்பட்ட ஜ்ஞானம் ஶக்தி முதலியவைகளை உடையவனாய். விபரீத - ஸ்வரூபத்திற்கு விருத்தமான, பரிஶ்ரம-ஶ்ரமத்தை, பலனாய் - பலமாக உடையவனாய். விஶ்ரமஸ்தாநம் - இளைப்பா

---

1. வராஹ புராணம். 2. கீதை-16-19.

3. நூறு தாமரைப் புஷ்பத்தினாலும், அதாவது அவைகளினால் ஆராதனம் செய்தாலும் பொறுக்கமாட்டேன். நூறு உபசாரங்களினாலும் பொறுக்கமாட்டேன்.

4. பாபிகளாகிய அவர்களை அஸுரர்களின் ஸ்வபாவமுடைய ஜாதிகளிலேயே எப்பொழுதும் தள்ளுகிறேன்.

மும் பெறாதே கராளகாலராத்ரிகள் வந்து முன்பு பரஸங்கல்ப ப்ரஸ்ருதையான ப்ரஜ்ஞையிழந்து மூச்சடங்க ப்ரஸுப்தனாய், போகமோக்ஷாதி ப்ரவ்ருத்திகளுக்கு ப்ரஸங்கமில்லாதபடி கரண களேபரங்களையிழந்து 1 ‘லூநபக்ஷ இவாண்டஜ:’ என்னும்படியாய், தனக்கு விசேஷித்தொரு பேரிடவொண்ணாதபடி மஹாதமஸ்ஸிலே இரும்புண்ட நீர் போல இறுகச் சுவறி, ஒரு மூலையிலே 2 ‘ஸம்ஹாரவிக்ஷேபஸஹஸ்ரகோடீஸ்திஷ்டந்தி ஜீவா:’ என்னும்படி ஆயிரங்கோடி யுகங்களடைப்புண்டு கிடக்கும்படிகளையும், மீண்டு பரமகாருணிகஸ்வதந்த்ரசேஷிஸங்கல்பவிசேஷநியதகாலும் வந்தால் 3 ‘ப்ரசரந்தி கேசந’ என்னும்படி மஹதாதி வழியே போந்து பரமசேஷிபாத நிவேதநாயோக்யயான விசித்ரதேஹ

றும் இடம். கராள - ப்ரளயகாலங்களாகிற, காலராத்ரிகள் - பயங்கரமான ராத்திரிகள். முன்பு - முன் நடந்த ஸ்ருஷ்டி தசையில், பரஸங்கல்ப ப்ரஸ்ருதையான - பகவானுடைய ஸங்கல்பத்தினால் பரவினதான, ப்ரஜ்ஞை - தர்மபூதஜ்ஞானத்தின் விகாஸம். ப்ரஸுப்தனாய் - தூங்கிக் கொண்டிருந்தவனாய். போகமோக்ஷாதி ப்ரவ்ருத்திகளுக்கு - ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஸுகதுக்கங்களை அனுபவித்தல், மோக்ஷமாகிற ப்ரயோஜனம், இவைகளை அடைவதற்குச்செய்யவேண்டிய கார்யங்களைச்செய்வதற்கு. கரண - இந்திரியங்கள். களேபரங்கள் - ஶரீரங்கள். லூநபக்ஷ இவாண்டஜ:-சப்பட்டைகள் அறுப்புண்ட பக்ஷிகளைப்போல. மஹாதமஸ்ஸிலே-ப்ரக்ருதிக்கும் ஸூக்ஷ்மாவஸ்தையான தமஸ் என்கிற த்ரவ்யத்திலே. இரும்புண்ட நீர்போல - நன்றாகக் காய்ச்சப்பட்ட இரும்பினால் இழுத்துக் கொள்ளப்பட்ட ஜலத்தைப்போல, இறுகச்சுவறி - தனித்தறிய வொண்ணாதபடி ஏகீபவித்து (ஒன்றாகி). ஸம்ஹார - ப்ரளயம், விக்ஷேப - ஸ்ருஷ்டி, இவைகளினுடைய, ஸஹஸ்ரகோடீ: - ஆயிரம் கோடி காலங்கள், ஜீவா: - ஜீவாத்மாக்கள், திஷ்டந்தி - இருக்கிறார்கள். மீண்டு - மறுபடியும், ஸங்கல்ப விசேஷநியத - ஸங்கல்ப விஶேஷத்தினால் ஏற்படுத்தப்பட்ட. கேசந - சில ஜீவாத்மாக்கள், ப்ரசரந்தி - வெளியில் ஸஞ்சரிக்கிறார்கள். மஹதாதி வழியே - மஹத், அஹங்காரம் முதலிய தத்வங்களின் வழியாக. ‘பரமசேஷி’ இத்யாதி - பரமஶேஷியான பகவானுடைய திருவடிகளில் ஸமர்ப்பிப்பதற்காக ஏற்பட்ட விசித்ரங்களான ஶரீரங்களின்

---

1. ப்ராதர்நிர்வேதகாரிகை. 2. 3.

ஸம்ருத்தியைப் பெற்றாலும் ஆக்கையின் வழியுழல்வேனென்று, நீ **பகவத்கிங்கரன்** என்றால் ஓமென்றிசையாதே **யமகிங்கரர்க்** கிடமாம்படி **இந்த்ரியகிங்கரராய்ப்** போந்த படிகளையும், தரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் பொழுது போக்க **ஹாஸ்யமா**யிருக்க சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து சுரிகுழன் மடந்தையர் திறத்துக் காதலே மிகுத்தும் வென்றியே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி புலன் படிந்துண்ணும் போகமே பெருக்கிப் பொழுதினை வாளாப் போக்கின படிகளையும், **பகவதநுபவவிச்லேஷாதிகளில்** 1 '**ஸா ஹாநி:**' என்று இழவுபட்டு **தஸ்யுபிர்முஷிதனைப்போலே** கூப்பிடவேண்டியிருக்க 2 " தாயொரு பக்கம்

சேர்க்கையை. ஆக்கையின் - ஶரீரத்தின், வழி - வழிகளிலே, அதுபோகும் வழிகளிலேயே என்றபடி, உழல்வேன் - உழன்றுகொண்டிருப்பேன். 'என்று' என்பதுமேல்'போந்தபடிகளையும்'என்பதுடன் அந்வயிக்கிறது. **யமகிங்கரர்க்கு** இடமாம்படி - யமகிங்கரர்கள் நம்மை ஆக்ரமிப்பதற்குப் பாத்திரமாகும்படி. தரித்து - மனதில் த்யானித்தும், எழுதி - புஸ்தகங்களில் எழுதியும், வாசித்தும், கேட்டும் - பிறர் வாசிக்கக் கேட்டும், வணங்கி - நமஸ்கரித்தும், வழிபட்டும் - ஸ்தோத்திராதிகளைச் செய்தும், பூசித்தும் - திருவாராதனங்களைச் செய்தும். இதற்கு எதிர் நடையாக நடத்தினபடியை நிரூபித்தருளுகிறார் - 'சூதினை' என்றாரம்பித்து. சூதினை - வஞ்சனையை, பெருக்கி - வ்ருத்தி செய்து, களவினை - அபஹாரத்தை, துணிந்து - தைர்யத்துடன் செய்து, சுரிகுழல் - சுருண்ட குழல்களையுடைய, மடந்தையர் திறத்து - ஸ்திரீகளின் விஷயத்தில், காதலே - ஆசையையே, மிகுத்தும் - அதிகமாக்கியும், வென்றியே-ஜயத்தையே, அதாவது பூஜ்யர்களான மாதா பிதா ஆசார்யர்கள் விஷயத்திலும் கூட தான் ஜயிக்கவேண்டும் என்பதையே, வேண்டி - ஆசைப்பட்டு, வீழ்பொருட்கு - நசிக்கக்கூடியதான ஐஶ்வர்யாதிகளுக்கு, இரங்கி - பிறர்களை யாசித்து, வேற்கணார் - வேல் ஆயுதம் போன்ற கண்களையுடைய ஸ்திரீகளின், கலவியே - ஸம்ஶ்லேஷத்தையே, கருதி - ஆசைப்பட்டு, புலன் - இந்திரியங்கள், படிந்து - அந்தந்த விஷயங்களிலேயே மக்னங்களாய் (முழுகி) இருந்து, உண்ணும் - அநுபவிக்கிற, போகமே - ஸுகத்தையே, விஷயங்களை அநுபவிப்பதினால் உண்டாகும் ஸுகங்களையே என்றபடி, பெருக்கி - வ்ருத்தி செய்து, பொழுதினை - காலத்தை, வாளா - வ்யர்த்தமாக. '**பகவத்**' இத்யாதி - பகவானுடைய அநுபவத்திற்குப் பிரிவு வந்தால் அதாவது பகவதநுபவம் கிடைக்காவிடில் என்றபடி, **ஸா ஹாநி:** -அது நஷ்டம். இழவுபட்டு - நஷ்டமடைந்ததாக எண்ணி. **தஸ்யுபி:** - திருடர்களினால், **முஷிதனைப்போலே**-அப

---

1. பாஞ்சராத்திரம். 2. பெரியாழ்வார் திருமொழி 4-8-9.

தந்தை யொரு பக்கம்' இத்யாதிகளிற்படியே ஸ்வாஸாத்யவிஷய விஶ்லேஷத்தில் அலற்றும்படிகளையும், நிற்கின்ற தெல்லா முடன்மிசை உயிரெனக் கரந்த நெடுமாலென்று ஓர்ந்து ஶத்ருமித்ர ப்ரஸ்தாவமற்று 'யதோ: ஸ்வாமீ' என்கிற ந்யாயத்தாலே ஸர்வபூதஸௌஹார்த்தாகை யுசிதமாயிருக்க அறப்பொருளை அறிந்தோராதே மறுக்கி வல்வலைப்

ஹரிக்கப்பட்டவனைப் போல, அதாவது எல்லாப் பொருளையும் அபஹரிக்கப் பட்டவனைப்போல. இங்கு 1 'யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே । ஸா ஹாநிஸ் தந்மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா ॥ ஏகாந்தவிப்ரயுக்தாநாம் முஹூர்த்தைர் யாநவர்ஜிதே । தஸ்யுபிர் முஷிதேநைவ யுக்தமாக்ரந்திதம் ப்ருஶம் ॥' என்று சொல்லப்பட்டிருப்பது அநுஸந்திக்கத்தக்கது. தாயொருபக்கம் - ஒரு பக்கத்தில் தாயும், தந்தை - தகப்பனார், ஒருபக்கம் - ஒரு பக்கத்திலும், 'அலற்ற' என்று மேல் பதம். ஸ்வாஸாத்யவிஷய விஶ்லேஷத்தில் - தனக்குத் தகாத விஷயங்களின் பிரிவுகளில், அலற்றும்படிகளையும் - கதறுகிற ப்ரகாரங்களையும். நிற்கின்றதெல்லாம் - இவ்வுலகத்தில் இருக்கிற ஸ்தாவர ஜங்கமமாகிய வஸ்துக்கள் எல்லாம், உடன்மிசை - ஶரீரத்தில் இருக்கிற, உயிர் - ஜீவாத்மா, என - என்று சொல்லும்படி, கரந்த - மறைந்துகொண்டிருக்கிற, நெடுமால் - ஶ்ரிய:பதி. ஓர்ந்து - யோசித்து, ஶத்ருமித்ரப்ரஸ்தாவம் - இவன் மித்ரன், இவன் ஶத்ரு என்கிற ப்ரஸ்தாபம், அற்று - இல்லாமல். 'யதோ:' இத்யாதி - 'ததோ தாஸ:' என்று மேல்பதம். அதாவது யஜமானன் எப்படிப்பட்ட ஸ்வபாவத்தை உடையவனுயிருக்கிருனே, தாஸனும் அப்படிப்பட்ட ஸ்வபாவத்தை உடையவனுயிருக்கவேண்டும் என்றபடி. ஸர்வபூத ஸௌஹார்த்தாகை - எல்லா ப்ராணிகளுக்கும் நன்மையை விரும்பும் ஸ்வபாவத்தை உடையவனுயிருக்கை. இதற்கு எதிர்நடையான ஸ்வபாவத்தை நிரூபித்தருளுகிருர் - 'அறப்பொருளை' என்றுரம்பித்து. அறப்பொருளை - தர்மமாகிற புருஷார்த்தத்தை, அல்லது தர்மத்திஞல் ஏற்படக்கூடிய ப்ரயோஜனத்தை, அறிந்து - தெரிந்துகொண்டு, ஓராதே - யோசிக்காமல், மறுக்கி - மறுகும்படி செய்து, அதாவது துக்கங்களை உண்டாக்கி, வல் -

1. ஒரு முகூர்த்தகாலமாவது ஒரு க்ஷணகாலமாவது பகவான் த்யானிக்கப்படவில்லை என்கிற எதுவோ அது நஷ்டம், அது பெரிய தோஷம், அதுவே ப்ரமம், அதுவே விகாரம், அதாவது ஒருக்ஷணகாலமாவது பகவானை த்யானம் செய்யாமை இவ்வளவு விதமான ஆபத்திற்குக் காரணம் என்று தாத்பர்யம், ஒரு முகூர்த்தமும் பகவானைப்பற்றிய த்யானம் இல்லாமல் தாண்டிப்போ யிருக்கும்பொழுது திருடர்களினுல் அபஹரிக்கப்பட்டவன்போல மிகவும் அழுகை உசிதம்.

படுத்திக் குமைத்திட்டுப் பல்லுயிரைக் கொன்றுண்ணும்படிகளையும், ஹரிரித்யக்ஷரத்வயத்தை **அவஶ**மாகவாகிலும் உச்சரித்து பரலோக கமநத்துக்கு பரிகரபந்தம் பண்ணுகையே புத்திமத்க்ருத்யமாயிருக்க ப்ரஹ்மகல்ப நியுதாநுபவத்திலு முண்டறுக்கவொண்ணாதபடி **அக்ஷய்ய**ஃபலமான **அபசாரவர்க்க**த்தை க்ஷணார்த்தந்தோறும் நடத்திப் போந்தபடிகளையும், முன் நடப்பைப் புரிந்து பார்த்து 1 'வாடினேன்வாடி', 2 'வாணிலாமுறுவல்', 3 'தாயே தந்தை' இத்யாதிகளில்படியே பஶ்சாத்தாபம் பிறந்து, பழுதே பல பகலும்

த்ருடமான, அறுக்கமுடியாததான என்றபடி, வலைப்படுத்தி - நிர்ப்பந்தத்திற்குள்ளாகும்படி செய்து, குமைத்திட்டு - ஹிம்ஸித்து, பல்லுயிரை - அநேகம் ப்ராணிகளை, கொன்று - ஜீவஹிம்ஸை செய்து, உண்ணும் படிகளையும்- தான் ஸுகத்தை அநுபவிக்கும் ப்ரகாரங்களையும். **ஹரிரித்யக்ஷரத்வயத்தை** - ஹரி என்கிற இரண்டு அக்ஷரங்களையுடைய பதத்தை, **அவஶ**மாக- தன் புத்தி பூர்வகமாகவல்லாமல் என்றபடி. **பரிகரபந்தம்** - எடுத்துக் கொண்டு போகவேண்டிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு போகுதல், அதாவது மூட்டை கட்டுதல் என்றபடி. இங்கு 4 'ஸக்ருதுச்சரிதம் யேந ஹரிரித்யக்ஷரத்வயம் । பத்த: பரிகரஸ்தேந மோக்ஷாய கமநம் ப்ரதி ॥' இத்யாதி அநுஸந்தேயம். **புத்திமத்க்ருத்யம்** - புத்திமான் செய்ய வேண்டிய கார்யம். 'ப்ரஹ்மகல்ப' இத்யாதி - ப்ரும்மாவின் கல்பங்களில் லக்ஷம் கல்பங்கள் அநுபவித்தாலும், உண்டறுக்கவொண்ணாதபடி - ஜீர்ணம் பண்ணிக்கொள்ள முடியாதபடி, அதாவது நிவ்ருத்தி செய்துகொள்ள முடியாதபடி. **அக்ஷய்யஃபலமான** - அழிவில்லாத பலத்தைக் கொடுக்கக் கூடியதான. 5 'ப்ரஹ்மகல்ப நியுதாநுபவேப்யநாஶ்யம் தத்கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே' என்னப்பட்டதிறே. **க்ஷணார்த்தந்தோறும்** - அரை க்ஷணம் அளவுள்ள காலம் தோறும். முன் நடப்பை - முன்னால் நடந்ததை, புரிந்து பார்த்து - திரும்பிப் பார்த்து. 'இத்யாதிகளில்படியே' என்றது என்றாரம்பிக்கும் திருமொழிகளில் சொல்லியிருக்கிறபடியே. பலபகலும் - அனேகம் தினங்களும், பழுதே - வ்யர்த்த

---

1. 2, 3, பெரிய திருமொழி-1-1-1; 1-6-1, 1-9-1.

4. எவனால் ஹரி: என்கிற இரண்டு எழுத்து ஒருதடவை சொல்லப்பட்டதோ அவனால் மோக்ஷத்தின் பொருட்டுப் போவதற்காக பரிகரங்கள் (ஸாதனங்கள்) கட்டப்பட்டன.

5. எந்தப் பாபமானது ப்ரும்மாவினுடைய ஒரு லக்ஷம் கல்பங்கள் அனுபவித்தாலும் நாசமடையாதோ அப்படிப்பட்ட பாபத்தை இந்த ஜந்து ஒரு க்ஷணத்தில் செய்து விடுகிறது.

போயினவென்று அஞ்சியழ ஹூரவதமாயிருக்க ஹூகூரதிவெதாஜீ வரவசனும் 1 ‘காலு ஜெதஜவா ஜவாநு’ என்னும்படி கலங்கிக் கண்டவாறு திரிந்த படிகளையும் கண்டு, 2 ‘அஹொ ஜெ ஊஹதீ யாதா நிஷ்ஹூா ஜநூ ஸஷதிஃ’, 3 ‘யானே யென்னை யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்’, 4 ‘நானே நானு வித நரகம் புகும் பாவஞ் செய்தேன்’, 5 ‘அருநரகத்தழுந்தும் பயன் படைத்தேன்’, 6 ‘ந ஸஷி தாவஷி ஜஷாநி ஜொகெ ஸிஹெூந ஹூகூவா ஙஹவொ ஊயாதாஃ’’ ஊதூாதி வரிஜெவநங்களைப் பண்ணும்படி முன்பு ஸாகவிகஸஂஹாஷணாதிகளாலே முகிழ்த்த நிவெஃஜம்

மாகவே, போயின - சென்றன. அஞ்சி - பயந்து. ஹூகூரதிவெதாஜீ-ப்ரக்ருதியாகிற பிசாசுக்கு. ஸதஂ காலஂ-இவ்வளவு காலம், ந ஙவாஜவாநு - அறியவில்லை. கண்டவாறு - கண்டபடியாக, அதாவது வாயால் இன்ன ப்ரகாரம் என்று சொல்லமுடியாதபடி. ஜெ - எனக்கு, நிஷ்ஹூா - வ்யர்த்தங்களாக, ஊஹதீ - பெரியதான, ஜநூஸஷதிஃ - ஜன்மங்களின் பரம்பரை, யாதா - கழிந்தது, அஹொ - அந்தோ, இது மிகுந்த துக்கத்தைக் காண்பிக்கிறது. யானே - நானே, என்னை - என்னுடைய ஸ்வரூபம் முதலியவைகளை, அறியகிலாதே - தெரிந்து கொள்ளாமல், யானே - நானே எனக்கு சேஷீ, என்தனதே - இந்த வஸ்துக்களெல்லாம் என்னுடையதே, என்றிருந்தேன்- என்று எண்ணியிருந்தேன். நானே - நான் ஒருவனுமே, நானுவித நரகம்புகும்- அனேக விதங்களான நரகங்களில் ப்ரவேசிக்கும்படியான, பாவம் செய்தேன்- பாபங்களைச் செய்தேன். அருநரகத்து - ஒருவராலும் ப்ரவேசிக்கமுடியாத நரகத்தில், அழுந்தும் - சிரகாலம் மக்னனாய் இருக்குமதாகிய, பயன் - ப்ரயோஜனத்தை, படைத்தேன் - உண்டாக்கிக் கொண்டேன், அதற்குக் காரணங்களான பாபங்களைச்செய்தேன் என்றபடி. ஊயா - என்னால், ஸிஹெூந ஹூகூவா-ஸிம்மமாகி,சிங்கமாய் பிறந்துஎன்றபடி,ஙஹவஃ அனேகம்ப்ராணிகள், அதாஃ - ஸாப்பிடப்பட்டன, (எவ்வளவு என்னில்:—) ஜொகெ - இந்த லோகத்தில், தாவஷி - அவ்வளவு, ஜஷாநி - ஜலங்கள், ந ஸஷி - இருக்கவில்லையோ (அவ்வளவு), அதாவது இந்தலோகத்தில் இருக்கும்ஜலங்களின் திவலைகளைக்கணக்கெண்ணினுல் அவ்வளவுகணக்கு ஏற்படாது,அதாவது அவற்றைவிட அதிகமான ப்ராணிகள் ஹிம்ஸிக்கப்பட்டன என்றபடி. வரிஜெவநம்- அழுகை. ஸாகவிகஸஂஹாஷணம் - ஸாத்விகர்களோடு ஸம்பாஷித்தது. முகிழ்த்த - அரும்புபோல் உண்டான, அதாவது கொஞ்சமாய் உத்பவித்த என்றபடி. ‘நஊஸூவ’ இத்யாதி திருமந்திரத்தில் இருக்கும் ‘நஊஃ’ என்னும்

---

1. பார-ஸாந்தி-312-30. 2. ப்ராதர் நிர்வேத காரிகை. 3. திருவாய்மொழி-2-9-9.
4. பெரிய திருமொழி-1-9-2. 5. பெரிய திருமொழி-6-3-4. 6.

ஸமஸ்த நிஷித்த நிரஸநத்தாலே முற்றி, செய்யாதன செய்யோம் நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடென்னும்படி செய்யேல் தீவினை யென்றருள்செய்யும் கையார் சக்கரக் கண்ணபிரான் அநுமதி பண்ணாத வழிகளில் ஸ்வப்நதஶையிலுமடியிட நடுங்கும் படியாம். ஸாம்ஸ்பர்த்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில் அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப் பண்ணும். க்ரோதாதி மாயா நித்ரையாலே உறங்கினவனுக்கு உணர்த்தியாலே நிர்வேதம் பிறந்தால் இது தர்ப்பாதிகளான ஆஸுரஸ்வபாவங்களை யடியறுத்து அமாநித்வாதிகளான ஆத்மகுணங்களோடே அவிநாபூத

பதத்தில் எனக்கு நான் ஶேஷியல்ல, எனக்கு மற்றொன்றையும் பற்ற ஸ்வாமித்வமுமில்லை, எனக்கு ஸ்வாதந்த்ர்யமுமில்லை, எனக்கு ஒரு வித பாபங்களும் இருக்கக் கூடாது என்றர்த்தம் ஏற்படும் பொழுது அந்த அர்த்தங்களினால் தடுக்கப்படுகிறவைகளை நிரூபித்துப் பார்த்ததினாலே. **முற்றி** - முதிர்ந்து, பரிபக்வமாய் என்றபடி. செய்யாதன-பெரியோர்கள் அநுஷ்டிக்காத கார்யங்களை, செய்யோம்-செய்யமாட்டோம். பிறர் - அயலாருடைய, பொருள் - வஸ்துக்களை, நயவேன்- ஆசைப்பட மாட்டேன், கீழாரோடு- தாழ்ந்தவரோடு, நள்ளேன்-ஸ்நேஹம் செய்யமாட்டேன், என்னும்படி - என்று சொல்லும்படி, தீவினை - பாப கர்மங்களை, செய்யேல் - செய்யாதே, என்று, அருள்செய்யும் - க்ருபை பண்ணுகிற, கையார் - கையில் நிறைந்திருக்கிற, சக்கர - சக்ரத்தை உடைய, கண்ணபிரான் - ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்து உபகாரகனானவன், **அநுமதி**பண்ணாத - தன் ஆஜ்ஞா ரூபங்களான ஶாஸ்திரங்களில் இது செய்யத்தக்கது என்று அங்கீகரியாத. அடியிட - அடிவைக்க. இப்படித் திருமந்திராதிகளில் சொல்லுகிற ஸ்வரூபாதி விவேகத்தினால் உண்டான நிர்வேதமே பலபர்யந்தமாம் என்று நிரூபித்தருளுகிறார்—**'ஸாம்ஸ்பர்த்யாதி'** என்றாரம்பித்து. **ஸாம்ஸ்பர்த்யம்** - பொறுமை, அதாவது அயலானைப்பார்த்து அவன் செய்யக்கூடிய கார்யத்தைத் தானும் ஏன் செய்யக்கூடாது என்று பொறுமைப்பட்டு அப்படி இதுவரையில் தான் செய்து வராததற்கு நிர்வேதப்படுதல். **'க்ரோத'** ஶப்தம் கோபம் முதலியவற்றைச் சொல்லுகிறது. **வ்ருத்தங்களிலே** - அநுஷ்டானங்களிலே. கைவளரப்பண்ணும் - கைவளர்ந்து போகும்படி பண்ணும், அதாவது அவைகளைச் செய்யும்படி பண்ணும். **மாயா நித்ரையாலே** - ப்ரக்ருதியாகிற மாயையினால் உண்டாக்கப்பட்ட நித்ரையினாலே, உணர்த்தி - விவேகம். **தர்ப்பம்** - கர்வம், **ஆஸுரஸ்வபாவங்களை** - அஸுரர்களுக்கு உண்டாகக் கூடிய ஸ்வபாவங்களை, அடியறுத்து - வேருடன் அறுத்து. **அமாநித்வாதி**

மாய் அபவர்க்கஸாதநாதிகாரியாக்கும். ஆன பின்பு அக்ருத்யவ்யவஸாயியான அத்யந்தஸங்கோசத்திலு மாழங்கால்படாதே ஸர்வகார்யாப்ரவர்த்தகமான அத்யந்தநிர்வேதத்திலு மிழியாதே ஸாத்விகத்ருதியைக் கைப்பிடித்து நிஷித்தப்ரவாஹத்தை விலக்குகை நிஶ்சலவிவேகஜந்யநிர்வேதஃபலமும்.

வான்பட்ட மன்னிருளின் மயங்குமாறு
  மறித்தொருகாலலேன யூழிசென்றுலன்றோர்
ஊன்பட்டவுடலாழிவினையொழுக்கி
  லொருகரையும்காணுதே யொழுகுமாறும்
தேன்பட்டவிடம்போலத் தித்திக்கின்ற
  சிறுபயனே யுறுபயனென்றருந்து மாறும்
தான்பட்டபடி யிங்நோர் தானே கண்டு
  தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமே தக்கவாறே. 5

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஸ்ரீ பர மப த ஸோ பா நே

॥ த்விதீயம் நிர்வேதபர்வ ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

களான-கர்வம் இல்லாமை முதலிய, அதாவது கீதையில் 'அமாநித்வம் அதம்பித்வம்' என்றாரம்பித்துச் சொல்லப்பட்டவைகள். **அவிநாபூத**மாய்-பிரியாததாய். **'அபவர்க்க'** இத்யாதி - மோக்ஷத்திற்கு உபாயமான கார்யத்தை அனுஷ்டிக்க அதிகாரியாகும்படி செய்யும். **அக்ருத்யவ்யவஸாயி**யான - செய்யக்கூடாத கார்யத்தில் முடிவுபெறுகிற. ஆழங்கால்படாதே - முழுகிப் போகாதே. அத்யந்த ஸங்கோசம் இருந்தால் அது அக்ருத்யகரணத்தில் மூட்டும் என்றபடி. **ஸர்வகார்யாப்ரவர்த்தக**மான - ஒரு கார்யத்திலும் ப்ரவேசிக்காதபடி மனதைக் குன்றும்படி செய்யக்கூடியதான. **ஸாத்விகத்ருதி**யை - ஸாத்விக தைர்யத்தை, கைப்பிடித்து - அங்கீகரித்து, **நிஷித்தப்ரவாஹத்தை** - நிஷித்த கர்மங்களின் பரம்பரையை. **'நிஶ்சல'** இத்யாதி - சலிக்காத விவேகத்தினால் உண்டாகிய நிர்வேதத்தின் ப்ரயோஜனம்.

இப்படிக் கீழ் பர்வத்தில் விஸ்தாரமாக நிரூபித்த அர்த்தத்தை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்து அருளிச்செய்கிறார் - 'வான்பட்ட' என்றாரம்பித்து.

[ப - ம்.] வான்பட்ட - ஆகாசமாகிற, அதாவது ஸூக்ஷ்மமாயிருந்த, மன் - த்ருடமான, வெகுகாலம் இருக்கிற, இருளில் - தமஸ் என்கிற தத்வத்தில், மயங்குமாறும் - மயங்கிக் கிடக்கும் ப்ரகாரத்தையும், எனையூழி - அனேகம் கல்ப காலம், சென்றால் - இப்படித் தமஸ்ஸோடு சேர்ந்து கழிந்ததாகில், மறித்து - பிறகு, ஒருகால் - ஒரு ஸமயத்தில், அன்று - அந்த ஸ்ருஷ்டி காலத்தில், ஓர் - அத்விதீயமான, ஊன்பட்ட - மாம்ஸமயமான, உடல் - ஶரீரத்துடன் சேர்ந்த, ஆழி - சக்ரம் போன்ற, வினை - கர்மங்களினுடைய, அதாவது கர்மம் ப்ரக்ருதி ஸம்பந்தம் இவைகள் சக்ரம்போல் மாறி மாறிவருகிறது என்றபடி, 'கூடூாவிஜ்ூாதி வகெ' என்றருளிச் செய்யப்பட்டதிறே, ஒழுக்கில் - ப்ரவாஹத்தில், ஒரு கரையும் - ஒரு விதமான கரையையும், காணாதே - தெரிந்து கொள்ளாமல், அதாவது இதை விட்டுக் கரையேறக்கூடிய இடம் ஒன்றையும் காணமல், ஒழுகுமாறும் - ப்ரவாஹத்திலேயே போய்க் கொண்டிருக்கும் ப்ரகாரத்தையும், தேன்பட்ட - தேனுடன் ஸம்பந்தப்பட்ட, விடம்போல - விஷத்தைப்போல, தித்திக்கின்ற - போக்யங்களாகத் தோன்றுகிற, விஷம் கலந்த தேன் புஜிக்கும் பொழுது தித்திப்பதாகத் தோன்றினாலும் மரணாந்தமான அநிஷ்டத்தை உண்டாக்குமாப் போல இவைகளும் ஸுகம் போல் அனுபவகாலத்தில் தோன்றினாலும் ஆத்மநாசத்தை உண்டாக்கும் என்றபடி, சிறுபயனே - அல்ப ப்ரயோஜனங்களான ஶப்தாதி விஷயங்களே, உறுபயன் - ஆத்மாவிற்கு உசிதமான ப்ரயோஜனங்கள், என்று - என்று எண்ணி, அருந்துமாறும் - அவைகளை அனுபவிக்கும் ப்ரகாரமும், 'அழுந்துமாறும்' என்று பாடாந்தரம், அப்பொழுது அவைகளில் மக்னனாய் அனுபவிக்கும் ப்ரகாரமும் என்று தாத்பர்யம், இந்நோ்-இப்படிப்பட்டவைகளான, இன்னும் இதற்கு ஶத்ருஶங்களான என்றபடி, தான்பட்டபடி - தான் அனுபவித்த ப்ரகாரங்களை, அன்றிக்கே தான்பட்ட ப்ரகாரங்களை, இந்நோ் - இந்த நேரிலே, அதாவது கீழ் அதிகாரத்தில் கூறப்பட்ட விவேகபூர்வகமாக, தானே கண்டு - வேறொருவர் சொல்லவேண்டாமல் விவேகம் உண்டானதினாலேயே பராமர்ஶித்துப் பார்த்து, தளர்ந்திடுமேல் - நிர்வேதத்தை அடைவானேயாகில், மேல் - இதற்குப் பிறகு, தக்கவாறு - தனக்கு உசிதமான உபாயம், அல்லது ப்ரகாரங்கள், வளர்ந்திடும் - வளரும். 5

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

இரண்டாவது நிர்வேத பர்வம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ த்ருதீயம் விரக்திபர்வ ॥

உலகத்துயர்ந்தவ ரொன்றும் பயனிலுறுந்துயரும்
அலகிற்படாத வப்போகங் கவர்ந்தெழு மம்புயத்தோன்
கலகத் தொழின் மதுகைடபராற் படுங்கட்ட மெண்ணும்
பலகற்ற மெய்யடியார் படியாரிக்கடும் பவத்தே. 6

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

மூன்றாவது விரக்திபர்வம்.

இப்படி விவேக நிர்வேதங்கள் பிறந்தபின்பு நஶ்வரங்களான இதர புருஷார்த்தங்களில் வைராக்யம் உண்டாகிறது என்னும் அர்த்தத்தை இந்த மூன்றாவதாகிய விரக்திபர்வத்தில் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—‘உலகத்து’ என்றாரம்பித்து.

[ப - ரை.] உலகத்து - இந்தப் பூலோகத்தில், உயர்ந்தவர் - உத்க்ருஷ்டரானவர்கள், ஒன்றும் - அடைகிற, அதாவது அனுபவிக்கிற, பயனில் - ப்ரயோஜனங்களில், உறும் - நடுவில் உண்டாகக்கூடிய, துயரும் - துக்கத்தையும், அலகில் - கணக்கில், படாத-எற்படாத, அதாவது நம்மைவிட அதிகமான, அப்போகம் - அப்படிப்பட்ட ஸுகத்தை, கவர்ந்து - அனுபவித்துக்கொண்டு, எழும் - உயர்ந்தவனான, அம்புயத்தோன் - ப்ரும்மா, கலகத் தொழில் - சண்டையையே தொழிலாக உடைய, மதுகைடபரால் - மது, கைடபன், என்கிற அஸுரர்களால், படும் கட்டம் - படுகிற கஷ்டத்தையும், எண்ணும் - விசாரிக்கிற, ‘எண்ணில்’ என்று பாடாந்தரம், இதை பராமர்சித்துப் பார்க்கில் என்றர்த்தம், பலகற்ற-அநேகம் விதமான ஶாஸ்திரங்களைக் கற்றறிந்த, மெய்யடியார்-உண்மையான அடியார்கள், பகவத்பக்தர்கள் என்றபடி, இக்கடும்பவத்து - இவ்விதமான க்ரூரமான ஸம்ஸாரத்தில், படியார் - படியமாட்டார்கள், இதில் ஆசையை வைக்கமாட்டார்கள் என்றபடி. 6

[தா - ம்.] ‘உலகத்துயர்ந்தவர்’ என்றது இந்தப் பூலோகத்தில் உயர்ந்தவர்களாய் ‘ஒரு நாயகமாய் ஓடி உலகுடனாண்டவர்’ என்று சொல்லும்படியான சக்ரவர்த்தி பதம்பெற்ற ந்ருகன் நஹுஷன் யயாதி முதலியவர்கள்

இப்படி விவேகஜந்ய நிர்வேதஜநிதயாலே **அபாய பராவண்யமும்** மற்றும், 1 ‘ஸுக ஸங்கேந பத்நாதி’ என்னுமளவான ஸத்வமடியாய் ஐஹிகாமுஷ்மிக ஸுகஸங்காநுஷங்கத்தாலே போகஹேதுபூதங்களாகிற பொன் விலங்குகளைப் பூட்டிக்

என்றபடி. அவர்கள் ‘ஒன்றும் பயன்’ என்றது ஆதிராஜ்யம் ஸ்வர்க்கம், முதலிய பதவிகளை அனுபவிப்பதினால் உண்டாகும் ஸுகம் என்றபடி. அவர்கள் ‘உறுந்துயரும்’ என்றது ஓணுகவும், மலைப்பாம்பாகவும் பிறப்பது, தகரவிட்டுத் தள்ளப்படுதல் முதலியவை என்றபடி. ‘அலகில்படாத’ இத்யாதி-பரமாத்மாவின் ஆநந்தத்தைவிட எவ்வளவோ மடங்கு தாழ்ந்ததா யிருந்த போதிலும் நம்முடைய ஆநந்தத்தைவிட மிகவும் உயர்ந்ததாகையினால் இப்படி அருளிச் செய்யப்பட்டது என்றறியத்தக்கது. ‘மதுகைடபராற்படும் கட்டம்’ என்றது மது, கைடபன், என்கிற அஸுரர்கள் வேதங்களை அபஹரித்துக் கொண்டுபோக நீர்க்கிடை நிலைக்கிடை முதலியவை தெரியாமல் சுருணை இழந்த கணக்கன்போல கதறிக்கொண்டு நிற்கை என்றபடி. இது மஹாபாரதம் முதலியவைகளில் ப்ரஸித்தமிறே. ‘பலகற்ற’ என்றது தன்னுடைய ஸ்வரூபத்தையும், பரமாத்மாவின் ஸ்வரூபத்தையும் கீழ்ச்சொல்லிய தோஷாதிகள் ஒன்றும் கலசாமல் இருக்கும் மோக்ஷமாகிற ப்ரயோஜனத்தையும் அறிந்தவர்கள் என்றபடி. 6

இப்படி ஸங்க்ரஹேண நிரூபித்து இதர புருஷார்த்தங்களில் வைராக்யம் உண்டாகவில்லையாகில் கீழ் நிரூபித்த விவேக நிர்வேதங்கள் பிறந்தும் நிஷ்ப்ரயோஜனமாகும் என்றும், அந்த வைராக்யம் பிறப்பதற்குக் காரணத்தையும் விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் — ‘இப்படி’ என்றாரம்பித்து. **விவேகஜந்ய** - விவேகத்தைக் காரணமாக உடைய, **நிர்வேதஜநித**யாலே-அதிகமான வெறுப்பாலே என்றபடி. **அபாயபராவண்யம்**-நிஷித்த கர்மங்களில் ஆசை. **ஸுகஸங்கேந**-ஸுகத்தில் ஆசையை உண்டுபண்ணி அதன் வழியாக, **பத்நாதி**-ஸம்ஸாரத்தில் கட்டுண்ணப்பண்ணுகிறது.என்னுமளவான - என்று கீதையிலே சொல்லப்படும்படியான அளவுபட்ட ஸத்வம். இத்தால் மோக்ஷத்தில் ஆசைக்குக் காரணமான உத்கடஸத்வம் விலக்கப்படுகிறது. **ஸத்வ**மடியாய்-ஸத்வத்தைக் காரணமாக உடையதாய், **ஐஹிக**- இந்தப் பூலோகத்தில் உண்டாகக்கூடியதான, **ஆமுஷ்மிக** - ஸ்வர்க்கம் முதலிய பரலோகத்தில் உண்டாகக் கூடியதான, **ஸுகஸங்க** - ஸுகத்தில் ஆசையின், **அநுஷங்க**த்தாலே-ஸம்பந்தத்தினால், **போகஹேது** - ஸம்ஸாரத்தில் உண்டாகும் ஸுகாதிகளுக்குக் காரணமான. ‘பொன்விலங்கு’ என்றது நரகாதிகளைப் போல் துக்ககரமாக இல்லாமலும் மோக்ஷத்திற்குப் போவ

---

1. கீதை-14-6.

கொள்ளுமாகில் இவன் முமுக்ஷுவல்லனும். ஆகையால் கடையறப் பாசங்கள் விடும்படி இதர ஸுக தோஷங்களை யதாவஸ்திதமாக அநுஸந்திக்கவேண்டும். எல்லாருக்கும் தத்தம் ஸுகங்களை 1 'ஒரு நாயகம்', 2 'நண்ணாதார் முறுவலிப்ப', 3 'கொண்ட பெண்டிர்' இத்யாதி களிற்படியே தெளியப் பார்க்குமளவில் இவை நிரந்தர வ்யாப்த து:காந்தகாரத்தின் நடுவே மின் போலே தோற்றுவதும் மறைவது மாம்படி தோற்றும். போக்தாவுக்கு ஸ்தானமுமாய் போகோபகரணமுமான ஸ்வஶரீரமும் நிபுணனுக்கு குணபாதி

தற்குத் தடையாயும் இருப்பதைப்பற்றி இப்படி அருளிச்செய்தபடி. முமுக்ஷு-மோக்ஷத்தில் ஆசை உடையவன். கடையற - உபாயானுஷ்டானங்கள் அற்றுப்போகும்படி, பாசங்கள் - ஸுகாதிகளில் உண்டாகும் ஆசைகள். இதரஸுக - மோக்ஷத்தைத் தவிர மற்ற ஸுகங்களில் உண்டாகக்கூடிய. யதாவஸ்திதமாக - உள்ளபடியே. இப்படி அநுஸந்திப்பதற்கு உபாயத்தை நிரூபித்தருளுகிறார்—'எல்லாருக்கும்' என்றாரம்பித்து. தத்தம் - தங்கள் தங்களுடைய. 'ஒரு நாயகம்' என்கிற திருவாய்மொழியில் ஐஶ்வர்ய கைவல்யங்கள் அஸ்திரங்களாகையினால் துக்கத்திலேயே முடிவுபெறுகின்றன என்றருளிச்செய்யப்பட்டது. 'நண்ணாதார் முறுவலிப்ப' என்கிற திருவாய்மொழியில் இந்த லோகத்தில் அனுபவிக்கக்கூடிய ஐஶ்வர்யாதிகள் துக்கம் நிறைந்தவைகள் என்றருளிச்செய்யப்பட்டது. 'கொண்டபெண்டிர்' என்கிற திருவாய்மொழியில் நமக்கு துக்கத்தை நிவர்த்திப்பிக்குமவர்கள் என்று ப்ரமித்து நம்மால் பரிக்ரஹிக்கப்பட்ட ஆபாஸ பந்துக்கள் துக்கத்தைப்போக்கடிக்க மாட்டார்கள் என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. இத்யாதிகளிற்படியே-என்றிவை முதலியவைகளில் கீழ் நிரூபித்திருக்கும் அர்த்தம் அருளிச்செய்யப்பட்டிருக்கிறபடியே. தெளிய - நன்றாக, நிஶ்சயரூபமாக என்றபடி. நிரந்தர - இடைவிடாமல், வ்யாப்த - நிறைந்திருக்கிற, து:காந்தகாரத்தின் - துக்கமாகிற இருட்டின். மின்போலே - மின்னல்போல. 'தோற்றுவதும்' இத்யாதியால் அஸ்திரம் என்பது நிரூபிக்கப்பட்டதாகிறது. இப்படிப் பொதுவாக அருளிச்செய்யப்பட்ட அர்த்தத்தை க்ரமேண விஸ்தர ப்ரக்ரியையால் நிரூபித்தருளுகிறார். அதில் முற்பட ஶரீரத்தின் தோஷத்தை அருளிச்செய்கிறார் - 'போக்தாவுக்கு' என்றாரம்பித்து. போக்தாவுக்கு - ஸுகத்தைஅனுபவிக்கும் ஜீவாத்மாவிற்கு, ஸ்தானமுமாய் - வஸிக்கும் இடமுமாய், போகோபகரணமுமான - ஸுகத்தை அனுபவிப்பதற்கு ஸாமக்ரியுமான. இது மேல் யதாக்ரமம் அந்வயிக்கிறது. எந்தத் தன்னுடைய ஶரீரத்தில் இருந்து போகத்

1, 2, 3. திருவாய்மொழி-4-1-1., 4-9-1., 9-1-1.

வ்யாதியோக்யமாய் அநேகது:கவஶ்யமாய் அத்யந்தஹேயமுமாய் தடிச்சஞ்சலஜீவிதமுமாயிருக்கு மென்னுமிடம் 1 'ஸப்ததாதுமயம் த்ரிமலம் ஶுக்லஶோணித ஸம்பவம்' என்றாற்போல் சொல்லுகிற ஶ்ருதிகளிலும், 2 'அஸ்தி ஸ்தூணம் ஸ்நாயுபத்தம்', 3 'மாம்ஸாஸ்ருக் பூய விண்மூத்ர', 4 'அநித்யமஸுகம் லோகம்', 5 'யாஸ்யதி வஸுமதீ நாஶம்', 6 'மாநுஷ்யே கதலீஸ்தம்பம்', 7 'யாமேவ ராத்ரிம் ப்ரதமாம்', 8 'ப்ரத்யாஸந்நதராம் யாதி', 9 'மஸ்தகஸ்தாயிநம் ம்ருத்யும்', 10 'ப்ராத மூத்ரபுரீஷாப்யாம்', 11 'ஊனிடைச் சுவர் வைத்து', 12 'பொல்லா வாக்கை', 13 'புண்ணா

தை அனுபவிக்கிறானோ, எந்த மற்றொரு ஸ்திரீ முதலியவர்களின் ஶரீரத்தைக் கொண்டுபோகத்தை அனுபவிக்கிறானோ அப்படிப்பட்ட தன்னுடையவும் மற்றொருவருடையவும் ஶரீரம் என்றபடி. விதுஷனுக்கு - புத்திசாலிக்கு, குணப - பிணம். ஆதி என்னும் பதத்தினால் நரகம் முதலியவைகள் சொல்லப்படுகின்றன. வ்யாதியோக்யமாய் - இவைகள் அவைஎன்று புத்திபண்ணக்கூடியதாய், அநேக - எண்ணிறந்த, து:கவஶ்யமாய் - துக்கம் நிறைந்ததாய், அத்யந்த - மிகவும், ஹேயமுமாய் - அருவருக்கக் கூடியதாய், அதாவது விடக்கூடியதாய். தடித் - மின்னல்போல, சஞ்சல - அஸ்திரமான, ஜீவிதமுமாய் - ப்ராணனையுடையதாய். ஸப்ததாதுமயம் - ஏழுவித தாதுக்கள் நிறைந்ததாய், த்ரிமலம் - மூன்றுவித மலங்களை உடையதாய், ஶுக்லஶோணிதஸம்பவம் - ஶுக்லமும் ஶோணிதமும் சேர்ந்ததினால் உண்டானதாய். அஸ்திஸ்தூணம் - எலும்பைத் தூணாக உடையதும், ஸ்நாயுபத்தம் - நரம்புகளால் கட்டப்பட்டதும். மாம்ஸ - மாம்ஸம், அஸ்ருக் - ரத்தம், பூய - உயிர்த்தண்ணி, விட் - விஷ்டை, மூத்ர - மூத்திரம் இவைகளை. அநித்யம் - அழியக்கூடியதாயும், அஸுகம் - ஸுகமில்லாததாயும் இருக்கிற, லோகம் - இந்தப்பூலோகத்தை. வஸுமதீ - பூமியானது, நாஶம் - நாஶத்தை, யாஸ்யதி - அடையப்போகிறது. மாநுஷ்யே - மனித ஜன்மத்தில், கதலீஸ்தம்பம் - வாழைக்கட்டைபோல் ஸாரமில்லாமல் இருக்கிற ஐஸ்வர்யாதி புருஷார்த்தங்கள். யாமேவ - எந்த ராத்திரியைத் தானே, ப்ரதமாம் - முதலாவதாக (நினைக்கிறானோ அதுவே கடைசியாகவும் ஆய்விடுகிறது). (மரணமானது) ப்ரத்யாஸந்நதராம் - மிகவும் ஸமீபத்தில் இருப்பதை, யாதி - அடைகிறது. மஸ்தகஸ்தாயிநம் - தலையில் இருக்கிற, ம்ருத்யும் - மரணத்தை. ப்ராத: காலையில், மூத்ரபுரீஷாப்யாம் - மூத்திரம்

1, 2, 3. 4. கீதை-9-33. 5—10. 11. பெரியதிருமொழி-1-6-9.
12. திருவாய்மொழி-3-2-3. 13. பெரியதிருமொழி-1-9-6.

க்கை', 1 'மின்னின் நிலையில மன்னுயி ராக்கைகள்', 2 'வேதநூற் பிராயம் நூறு' இத்யாதிகளிலும் விளங்கக் காணலாம்.

ஆகையால் தர்மோத்தரராய் ஸார்வபௌமம் பெற்றிருந்த நள ந்ருக நஹுஷாதிகளுட்பட உந்மத்த க்ருகலாஸ ஸர்ப்ப துர்யோதநாத்யவஸ்தைகளையு மடைந்து அவர்கள் பட்டபாடுகளையும், அவர்கள் தாரங்களும் ஸஹமரணம் பண்ணிப்போனபடிகளையும் கேட்டால் 3 'இன்பமருஞ் செல்வமு மிவ்வரசும் யான் வேண்டேன்' என்னும்படி ராஜ்யாதி ஸுகஸங்கம் ஸம்ஸஜ்ஜியாது.

புரீஷம், இவைகளினால் காலம் கழிகிறது. ஊன் - மாம்ஸத்தை, இடைச்சுவர் - நடுவில் இருக்கும் சுவராக, வைத்து - செய்து. பெல்லாவாக்கை - மிகவும் துக்ககரமான ஶரீரம். புண்-புண்களினால், ஆர் - பூர்ணமாயிருக்கிற, ஆக்கை- ஶரீரம். மன் - ஸ்திரமான, உயிர் - ஜீவாத்மாக்களினுடைய, ஆக்கைகள் - ஶரீரங்கள், மின்னில் - மின்னலைக்காட்டிலும், நிலையில - நிலையில்லாதவைகள். வேதநூல் - வேதஶாஸ்திரங்களில் சொல்லியபடி, நூறு பிராயம் - நூறு வயது (இருந்தபோதிலும் அவைகள் வீணாகக் கழிகின்றன).

'ஆகையால்' என்பது எல்லாருடைய ஶரீரங்களும் கீழ் நிரூபித்த தோஷங்களையுடைய தாகையினால் என்றபடி. தர்மோத்தரர் - தர்மத்தினால் உயர்ந்தவர்கள். ஸார்வபௌமம் - சக்கரவர்த்தி என்கிற ஸ்தானத்தை, அதாவது பூமிமுழுவதையும் தாங்களே ஆளுகிறதாகிய ஸ்தானத்தை. 'ஆதி' ஶப்தம் துர்யோதநாதிகளைக் குறிக்கிறது. உந்மத்த - பைத்தியம் பிடித்த. இது நளனுடைய அவஸ்தை. க்ருகலாஸ - ஓணான, இது ந்ருகன் அடைந்த ஸ்திதி. ஸர்ப்ப - பாம்பு, இது நஹுஷன் அடைந்தது' துர்யோதநாத்யவஸ்தைகள் - துர்யோதநாதிகள் அடைந்த அவஸ்தை. தாரங்களும்-பத்னிகளும். 'ஸஹமரணம்' இத்யாதி—அவர்களுடன் தாங்களும் உடன்கட்டையேறி மரணம் அடைந்தது. கேட்டால்-பாரதாதிகளில் விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருப்பதைக் கேட்டால் என்றபடி. இன்பு-ஸுகத்தில், அமரும் - அமர்ந்திருக்கிற, செல்வமும் - ஸம்பத்தும், இவ்வரசும் - இந்த ஆதி ராஜ்யமும், யான் - நான், வேண்டேன் - ஆசைப்படமாட்டேன். ராஜ்யாதி ஸுகஸங்கம்-ராஜ்யம் முதலிய ஸுகங்களில் ஆசை, ஸம்ஸஜ்ஜியாது - ஸம்பந்தப்படாது, உண்டாகாது என்றபடி.

---

1. திருவாய்மொழி-1-2-2. 2. திருமாலை-3.
3. பெருமாள் திருமொழி-4-5.

தன்னோடொக்க வொழுகு சங்கிலியிலே கோப்புண்டுழலுகிற தேவர்களுக்கு இறைக்குடிமகனாய் நெடுநேர்த்திகளோடும் நெடுங்காயக்லேஶங்களோடும் நெடுநாள் பண்ணின யஜ்ஞாதி ப்ரயாஸத்துக்கு பலமாக **ஸ்தூலஶரீரம்** விழுந்தால் **ஸம்ஶ்லிஷ்ட ஸர்வகரண**மான **பூதஸூக்ஷ்மஸம்ஸ்த்யாய**த்தோடே கூடி **ப்ராணபவநவேகவிக்ஷிப்த**னாய்க்கொண்டு **தூமராத்ரி க்ருஷ்ணபக்ஷ தக்ஷிணாயந பித்ருலோகாகாஶசந்த்ர க்ரம**த்தாலே **ஸ்வர்க்க**ப் பரணிலே ஏறி, அங்கே தேவஜாதி யென்னும்படி ஒரு தேஹத்தை யெடுத்து, எருது பரதேசம் போன கணக்காய் தனக்கு மேலான தேவர்களுக்கு வஶ்ய வென்னலாம்படி எடுத்துச் சுமந்து திரிந்து, ஏறவிட்ட **கர்மம்** விசை

இதற்குமேல் ஸ்வர்க்காதிகளுக்குப் போகிறவர்களுக்கு ஸம்பவிக்கும் க்லேஶங்களை நிரூபிக்கிறார் - 'தன்னோடொக்க' என்றாரம்பித்து. ஒக்க-ஸமமாக. ஒழுகுசங்கிலி - நீண்டதாய் அனேகம் பெயர்களைச் சேர்த்து கட்டக்கூடிய ஒரு சங்கிலி. கோப்புண்டு - கோர்க்கப்பட்டு, கட்டப்பட்டு என்றபடி. உழலுகிற - திரிகிற, அதாவது ப்ரக்ருதியினால் கட்டப்பட்டவர்களா யிருக்கிற என்றபடி. இறைக்குடிமகனாய் - இறை - கப்பம், கப்பம் கட்டுகிற குடியில் பிறந்தவனாய். நெடுநேர்த்திகள் - வெகுகாலமாகப்பட்ட ஆசைகள். நெடும்-அதிகமான. **காயக்லேஶம்** - தேஹ ஶ்ரமம். '**பல**மாக' என்றது மேல் 'பரணிலேஏறி' என்பதுடன் அந்வயிக்கிறது. **ஸ்தூலஶரீரம்** - இப்பொழுது காணப்படுகிற ஶரீரம், விழுந்தால் - நசித்தால். **ஸம்ஶ்லிஷ்ட** - ஒன்றாகச் சேர்க்கப்பட்ட, **ஸர்வகரண**மான - எல்லா இந்திரியங்களையும் உடையதுமான, அதாவது வாகாதி இந்திரியங்களையும், சக்ஷுராதி இந்திரியங்களையும் ஒன்று சேர்த்து, இவற்றை மனதுடன் சேர்த்து, அதாவது இந்தப் பதினொன்றும் சேர்ந்ததான. **பூதஸூக்ஷ்ம** - பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்மாம்ஶங்களினுடைய, **ஸம்ஸ்த்யாய**த்தோடே - கும்பலோடே. **ப்ராணபவந** - ப்ராணவாயுவின், **வேக** - வேகத்தினால், **விக்ஷிப்த**னாய்-தள்ளப்பட்டவனாய், **க்ருஷ்ணபக்ஷ** - க்ருஷ்ணபக்ஷம். **க்ரம**த்தாலே - இந்த தூமம் முதலியதான பித்ருயான மார்க்கத்தாலே. **ஸ்வர்க்க**ப்பரணிலே - ஸ்வர்க்கமாகிற பரணிலே. 'பரண்' என்பதினால் ஸ்வர்க்கம் இந்த ப்ராக்ருதமான லோகத்திலே கொஞ்சம் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறது என்பது த்யோதிதமாயிற்று. 'எருது' இத்யாதி - எருது தேசாந்திரத்திற்குப் போனால் அங்கும் உழுவது முதலிய முன் செய்துகொண்டிருந்த கார்யங்களைச் செய்ய வேண்டி யிருப்பதைப்போல. எடுத்துச்சுமந்து - அவர்களுடைய சாமரம் முதலியவைகளை எடுத்துக்கொண்டு போய், அதாவது அவர்கள் இட்டவேலையைச்செய்து என்றபடி. ஏறவிட்ட **கர்மம்** - இப்படி ஸ்வர்க்கத்தில் ஏறுவதற்

யற்ற வளவிலே 1 ‘அந்தவத்து ப²லம் தேஷாம்’, 2 ‘ஆப்³ரஹ்மபு⁴வநால்லோகா:’, 3 ‘சுவர்க்க மெய்தியும் மீள்வர்கள்’ இத்யாதிகள்படியே தள்ளுண்டு தகரவிழுந்து, அங்கே தி³வ்யஶரீரத்தையும் இழந்து, அதின் ஸுக்ருதஶேஷஸாசிவ்யத்தோடே கூட சந்த்³ரஸ்தா²நத்தினின்றும் ஆகாஶவாய்வப்⁴ரஜலத³வ்ருஷ்டிவ்ரீஹ்யாதிகளிலே பிரியப் பேரிட வொண்ணாதபடி கலந்து போந்து, அந்நஸம்ஶ்ரிதனாய்க் கொண்டு புருஷஶரீர நரகத்திலே ப்ரவேஶித்து ரேதோரூபபரிணாமத்தாலே ஸ்த்ரீஶரீர ஶோணிதமத்⁴யத்திலே விழுந்து, கலிலபு³த்³பு³தா³த்³யவஸ்தை²களையு மடைந்து, ஸ்ராவபாதாதி விபத்துக்களுக்குத் தப்பினாகில் புண்ணை மறைய வரியுண்டு ஶக்ருந்மூத்ரமஹாபங்கஶாயியாய் ஸம்பீடி³தஸர்வகா³த்ரனாய் முக²ம் புதையுண்டு, அதிது³ஸ்ஸஹங்களான க³ர்ப⁴வாஸ க்லேஶங்களையும்

குக் காரணமாயிருந்த ஜ்யோதிஷ்டோமாதி கர்மம், விசையற்றவளவிலே - வேகம் தளர்ந்தவாறே, அனுபவத்தினால் தன் பலத்தைக் கொடுத்தபிறகு. **தேஷாம்** - அவர்களுக்கு, **ப²லம்** - அந்த ப்ரயோஜனம், **அந்தவத்** - முடிவையுடையது. **ஆப்³ரஹ்மபு⁴வநாத்** - ப்ரும்மலோகம்வரையிலுள்ள, **லோகா:** - லோகங்கள் (திரும்பி வருதலையுடையது). சுவர்க்கம் - ஸ்வர்க்கலோகத்தை, எய்தியும் - அடைந்தபோதிலும், மீள்வர்கள் - திரும்புவார்கள். தகரவிழுந்து - தலைகீழாகவிழுந்து. அங்கே - அந்த ஸ்வர்க்கலோகத்திலேயே. **சந்த்³ரஸ்தா²நம்** - சந்திரமண்டலம். ‘**அப்⁴ர, ஜலத³**’ என்கிற இரண்டு பதங்களும் மேகத்தையே சொல்லுவதா யிருந்தபோதிலும் அந்த மேகத்தின் அவஸ்தா பேதங்களைக் குறிக்கிறபடியினால் புனருக்தியில்லை. அதாவது ‘**அப்⁴ர**’ என்பது ஜலத்தைக் குடித்திருக்கும் மேகம், ‘**ஜலத³ம்**’ என்பது மழை பெய்துகொண்டிருக்கிற மேகம் என்றபடி. **வ்ருஷ்டி** - மழை. **வ்ரீஹ்யாதி**கள் - நெல் முதலிய தான்யங்கள். பிரிய - தனித்து. **அந்நஸம்ஶ்ரித**னாய் - ஆஹாரத்துடன் சேர்ந்தவனாய். **கலில** - குழம்பி இருக்கும் தசை. **பு³த்³பு³த³** - குமிழ். **ஸ்ராவ** - நழுவுதல், அதாவது கர்ப்பம் ஜலமாய்ப்போவது, **பாதம்** - கீழே விழுதல். **விபத்**துக்களுக்கு - ஆபத்துக்களுக்கு. புண்ணை - வ்ரணத்தை, மறைய - மறையும்படி, வரியுண்டு - மூடப்பட்டு. **ஶக்ருத்** - விஷ்டை, **மஹாபங்கஶாயி**யாய் - பெரிய சேற்றில் படுத்துக்கொண்டவனாய். **ஸம்பீடி³த** - நெருக்கப்பட்ட, **ஸர்வகா³த்ர**னாய் - எல்லா அவயவங்களையும் உடையவனாய், **முக²ம்** புதையுண்டு - முகம் மடக்கப்பட்டு. **அதிது³ஸ்ஸஹ**ங்களான - மிக

---

1. கீதை-7-23. 2. கீதை-8-16. 3. திருவாய்மொழி-4-1-9.

அநுபவித்து, உல்பஸம்வேஷ்டிதனாய் பக்நப்ருஷ்டக்ரீவனாய்க் கொண்டு ப்ராஜாபத்யவாயுவாலே தலைகீழாகத் திருப்புண்டு, ப்ரஸூதிமாருதவசத்தாலே யோநியந்த்ரபீடிதனாய்க் கொண்டு மஹாஜவத்தோடே மலாந்தரங்கள் போலே அஶுசிப்ரஸ்தரத்திலே விழுந்து, பாஹ்யவாயுஸ்பர்ஶத்திலே மோஹிநியான பகவந்மாயையாலே அபஹ்ருதப்ரஜ்ஞனாய், ஜந்மாந்தர ஶுபாஶுபகர்மஸ்ம்ருதிகளை யிழந்து, ஐவர் திசை திசை வலித்தெற்ற பால்யாதி வார்த்தகாந்த துர்நிவார துஃகபரம்பரையாலே தப்தனாய், 1 'ஶதோத்தரஶதம் ம்ருத்யூநதர்வாண: ப்ரவக்ஷதே' என்கிறபடியே ஏதேனுமொரு வயஸ்ஸிலே மரணவேதனையோடே தலைக்கட்டி பழைய வட்டத்திலே சூராவளிக் காற்று போலே சுழலும் படிகளைக் கேட்டால் ஸ்வர்க்காதி ஸர்வஸங்கநிவ்ருத்தியுண்டாம்.

வும் பொறுக்க முடியாதவைகளான, கர்ப்பவாஸக்லேஶங்களை - கர்ப்பத்தில் வஸிப்பதினால் உண்டாகும் கஷ்டங்களை. உல்பஸம்வேஷ்டிதனாய் - கர்ப்பப் பையினால் சுற்றப்பட்டவனாய், பக்ந - மடக்கப்பட்ட, ப்ருஷ்டக்ரீவனாய் - பின் கழுத்தை யுடையவனாய். ப்ராஜாபத்யவாயுவாலே - ப்ரஸவத்திற்குக் காரணமான வாயுவினால். ப்ரஸூதிமாருதி - வெளியில் தள்ளக்கூடிய காற்று. யோநியந்த்ரபீடிதனாய் - யோநியினால் பீடிக்கப்பட்டவனாய். மலாந்தரங்கள்போலே - மற்ற மலங்கள் போலவே. அஶுசிப்ரஸ்தரத்திலே - அபரிசுத்தமான கீழே விழும் இடத்தில். பாஹ்யவாயுஸ்பர்ஶ - வெளியில் இருக்கும் ஜடவாயு தொடுகிற. மோஹிநியான - மோஹத்தை உண்டாக்கக்கூடியதான. பகவந்மாயையாலே - பகவானுடைய ஸங்கல்பத்தினாலே. அபஹ்ருதப்ரஜ்ஞனாய் - அபஹரிக்கப்பட்ட ஜ்ஞானத்தை உடையவனாய், ஶுபாஶுபகர்ம - ஶுபங்களும் அஶுபங்களுமான புண்யபாப கர்மங்கள், இவைகளின், ஸ்ம்ருதிகளை-ஜ்ஞாபகத்தை. ஐவர்-பஞ்சேந்திரியங்கள், திசைதிசை - வெவ்வேறு திக்குக்களில், ஶப்தாதி விஷயங்களில் என்றபடி, வலித்து-பலாத்காரமாக இழுத்து, எற்ற-பீடிக்க. பால்யாதி - பால்யம் முதலாக, வார்த்தகாந்த - கிழத்தனம் வரையிலான, துர்நிவார-தடுக்கமுடியாத. தப்தனாய்-தபிக்கப்பட்டவனாய். அதர்வாண:-அதர்வணவேதம் தெரிந்தவர்கள், ஶதோத்தரஶதம் - நூற்றொரு விதமான, ம்ருத்யூம் - மரணத்தை, ப்ரவக்ஷதே - சொல்லுகிறார்கள். தலைக்கட்டி - முடித்து, பழையவட்டத்

1

ராவண ஹிரண்ய வ்ருத்ராதிகள் கையிலே படும் பாட்டைக் கேட்டால் சந்தனக் கழியோடொத்த லோகபாலாதி பதங்களிலும் ஸங்கம் தீரும்.

அவர்களைப் பீடித்த ராவணாதிகள் தாங்களும் கார்த்தவீர்யாதிகள் கையிலே கட்டுண்டும் நெருக்குண்டும் முடிவில் புத்ர பௌத்ராதிகளையும் இழந்து கழுகு நிழலிலே களத்ரங்கள் கதறக் கிடந்த படிகளைக் கேட்டால் திண் கழற் காலசுரர்கள் செல்வங்களிலும் சிந்தை செல்லாது.

இவர்களுக்கு வரம் கொடுத்து வாழ்விக்க வல்லனாய் ஸர்வமேத யஜ்ஞத்தாலே தேவதேவனென்று பேர்பெற்றுத் திரிபுரமெரிக்கும் சேவகமுடையனான வ்யஷ்டிஸம்ஹாராதிகாரிக்கு வ்ருகாந்தகாதி வ்ருத்தாந்

திலே - முன்போல் கர்ப்பவாஸாதி சக்ரத்திலே, சூராவளிக்காற்று - மிகுந்த வேகத்துடன் சுழன்று சுழன்று அடிக்கும் காற்று.

சந்தனக்கழியோடொத்த - சந்தனக்கட்டை தேய்க்கப் படுவதைப் போலத் துக்கப்படும்படியான. லோகபாலரு - திக்பாலகர்கள்.

அவர்களை - அந்தத் திக்பாலகர்களை. நெருக்குண்டும் - ஜயிலில் அடைபட்டும். முடிவில் - மரணகாலத்தில். களத்ரங்கள் - பத்னிகள். திண் - உறுதியான, கழல் - வீரக்கழல்களை அணிந்த கால்களையுடைய, அசுரர்கள் - அஸுரர்களுடைய.

இவர்களுக்கு - இந்த ராவணாதிகளுக்கு. வாழ்விக்க வல்லனாய் - வாழும்படி அனுக்ரஹிக்கக்கூடிய ஶக்தி உடையவனாய். 'ஸர்வமேத' இத்யாதியால் 1 'மஹாதேவஸ் ஸர்வமேதே மஹாத்மா ஹுத்வாத்மானம் தேவதேவோ பபூவ' என்கிற பாரத ஶ்லோகம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. திரிபுரமெரிக்கும் - த்ரிபுரத்தை எரிக்கக்கூடிய. சேவகம் - பராக்ரமத்தை. வ்யஷ்டிஸம்ஹாராதிகாரிக்கு - வ்யஷ்டி ஸம்ஹாரத்திற்கு அதிகாரியான ருத்திரனுக்கு. 'வ்ருகாந்தகாதி வ்ருத்தாந்தங்களில்' இத்யாதி - 'இப்படியே ருத்திரனுக்கு அவனே கொடுத்த வரத்தில் ஶக்தியைப் பரீக்ஷிப்பதற்காக ஆரம்பித்த வ்ருகாஸுரனுடைய துஷ்டத்தனத்தினால் உண்டாக்கப்பட்ட பயத்தை விடுவித்ததும் அறியத்தக்கது' என்றும், 'ருத்திரனுக்கு அஸுரர்களினால் உண்டான பீடையாகிற ஆபத்தை விடுவித்ததும் அந்தகாஸுரனோடு யுத்தம் செய்யும்பொழுது ப்ரஸித்தமாய் இருக்கிறது. அதுவும் மாத்ஸ்ய புராணத்தில் ருத்திரனால் ப்ரயோகிக்கப்பட்ட ஆயுதங்களினால் அடிக்கப்பட்ட அந்தகாஸுரனுடைய இரத்தத் திவலைகளினால் அனேகம் அந்தகாஸுரர்கள் உண்டாக

---

1. ஸர்வமேத யாகத்தில் தன்னை ஹோமம் செய்து தேவதைகளுக்கு எல்லாம் தேவனாக ஆனார்.

ங்களில் பிறந்த விசேஷங்களைக் கேட்டால் ருத்ரபக்ஷத்திலும் ருசி பிறவாது.

சில ஸ்ருஷ்டிவிசேஷங்களிலே ருத்ரனுக்கு ஜ்யேஷ்டப்ராதாவாயும் பிதாவாயும் பிறந்து ஸர்வேஶ்வரனுக்கு ஔரஸபுத்ரனுமாய் ஸாக்ஷாச்சிஷ்யனுமாய்க் கொண்டு க்ஷேத்ரஜ்ஞருடைய ஸ்தானங்களெல்லாவற்றிலும் மேலான ஸ்தானத்தையுடையனான ப்ரஹ்மா தான் பெருவிசும்பின் மீது போயிருக்கும் நெடுவெள்ளமெல்லாம் கணைக்காலளவாம்படி வளர்ந்துவந்த மதுகைடபர்களைக்கண்டு ஶோகாக்ராந்தனாய்த் தனக்குக் கண்களும் தநங்களுமான வேதங்களைப் பறி கொடுத்துச்

'பிறகு அந்த ருத்திரன் அனேகம் அந்தகாஸுரர்களினால் எதிர்க்கப்பட்டவராய் பிறப்பில்லாதவரும் ப்ரபுவுமாகிய வாஸுதேவனைச் சரணமாக அடைந்தார், பிறகு அந்தப் பகவானாகிய விஷ்ணு ஶுஷ்கரேவதியை உண்டாக்கினார், அது அந்தகாஸுரர்களின் இரத்தங்களை உலற்றிவிட்டது' என்று சொல்லப்பட்டிருக்கிறது' என்றும் இவர் தாமே ஸ்ரீ ஸ்தோத்திர பாஷ்யத்தில் அருளிச் செய்திருப்பதை இங்கனுஸந்திக்கவும்.

'சில **ஸ்ருஷ்டிவிசேஷ**ங்களிலே' என்றது 1 'தஸ்மாஜ்ஜாதஶ்சதுர்முகோ பவ: । தஸ்மாத்ருத்ரோऽபவத்தேவி', 'நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான் முகமாய் சங்கரனைத்தான்படைத்தான்' இத்யாதி ப்ரமாணங்களையும், 2 'ப்ரஹ்மணஶ்சாநுஜோ ருத்ரோ லலாடாத்யஸ்ஸமுத்தித:', 3 'ஆவாம் தவாங்கஸம்பூதௌ' இத்யாதிகளையும் அனுஸரித்து சில ஸ்ருஷ்டிகளில் ப்ரும்மாவிற்குப் புத்திரனாகவும், சில ஸ்ருஷ்டிகளில் அனுஜனாகவும் பிறந்தான் என்பதை அருளிச் செய்தபடி. **ஸாக்ஷாச்சிஷ்ய**ன் - ஸாக்ஷாத்தாய்(நேரில்)ஶிஷ்யன். பெருவிசும்பின்மீது-பெரிய ஆகாஶத்தின்மேல், போயிருக்கும் - போய் வ்யாபித்திருக்கும், நெடுவெள்ளம் - அதிகமான வெள்ளம், ப்ரளயகால ஸமுத்திரம் என்றபடி. 'சுருணை சோர்ந்த' இத்யாதி - கணக்குச் சுருணையை இழந்த, அதாவது கிராமத்து நிலங்களின் நஞ்சை புஞ்சை முதலிய விவரங்களைக் காட்டக் கூடிய கணக்குக் கட்டை

---

1. (உத்க்ருஷ்டனாகிய தேவன் நாராயணன்) அவரிடம் இருந்து ப்ரும்மா உண்டானார், ஓ! தேவியே! அந்த ப்ரும்மாவினிடத்தில் இருந்து ருத்திரன் உண்டானார்.

2. எந்த ருத்திரன் பகவானுடைய நெற்றியில் இருந்து உண்டானாரோ இந்த ப்ரும்மாவிற்குத் தம்பியாகிய அவர் (ப்ரும்மாவினால் உத்திரவு கொடுக்கப்பட்டவராய் எல்லோருக்கும் வார்த்தைக் கொடுப்பவராக ஆகப்போகிறார்).

3. (ப்ரும்மருத்திரர்களாகிய) நாங்கள் இருவரும் உம்முடைய ஶரீரத்தில் இருந்து உண்டானோம்.

சுருணை சோர்ந்த கணக்கனைப் போலே நீர்க்கிடை நிலக்கிடை அறியாதே விப்லவம் பண்ண, அப்போது கேட்டருளினனொரு பரமகாருணிகனானவன் விரோதிநிராகரணம் பண்ணி வேதங்களையும் மீட்டுக் கொடுக்க, மீண்டும் ஸ்வஸ்தாயிபதியென்று வீற்றிருந்த படியையும் அநுஸந்தித்து, 1 'ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா:', 2 'கர்மணாம் பரிணாமித்வாதாவிரிஞ்சாதமங்களம்', 3 'ஶக்யா கணயிதும் லோகே ந வ்யதீதா: பிதாமஹா:', 4 'நினைப்பான்புகிற் கடலெக்கலின் நுண் மணலிற் பலர்' இத்யாதிகளையும் நிரூபித்தால் 5 'பதம் அப்ஜஜாநாமைஶ்வர்யம்' இத்யாதிகளில்படியே ஹிரண்யகர்ப்பபதத்தையும் த்ருணீகரித்துக் கூட்டரிய துயரறு சுடரடியே கூடலாமாகில் ஒரு கடம்பாதிஸ்தாவரஜந்மத்தையே ஆகாங்க்ஷிக்கும்படியாம்.

இழந்து போன கணக்குப்பிள்ளைக்கு நிலங்களின் விவரங்கள் எப்படித் தெரியாதோ அதைப்போல என்றபடி. நீர்க்கிடை - ஜலம் தங்கும் இடம். நிலக்கிடை - பூமி இருக்கும் இடம். பரமகாருணிகனானவன் - மிகவும் கருணையுடன் கூடின பகவான் என்றபடி. விரோதிநிராகரணம் பண்ணி - வேதங்களை அபஹரித்துப்போந்த விரோதிகளான மது, கைடபன், என்கிற அஸுரர்களை ஸம்ஹாரம்பண்ணி. வீற்றிருந்தபடியையும் - தன்னுடைய உத்கர்ஷம் தோன்றும்படி உட்கார்ந்திருந்தபடியையும். ஆப்ரஹ்ம - ப்ரும்மாமுதல், ஸ்தம்பபர்யந்தா: - புழுவரையிலான ப்ராணிகள் (ஸம்ஸாரத்திற்கு வசப்பட்டவர்கள்). ஆவிரிஞ்சாத் - ப்ரும்மா வரையிலும், கர்மணாம் - கர்மங்களுடைய, பரிணாமித்வாத் - பலங்களாகையினால், அமங்களம் - மங்களகரமல்ல, அதாவது பாபத்தைப் போக்கடிக்கக் கூடியவையல்ல. லோகே - இந்த லோகத்தில், வ்யதீதா: - இதற்கு முன்சென்ற, பிதாமஹா: - ப்ரும்மாக்கள், கணயிதும் - எண்ணுவதற்கு, ந ஶக்யா: - முடியாதவர்கள். 'நினைப்பான் புகில் - நினைக்கப் புக்கால், (ப்ரும்மாக்கள்) கடல் எக்கலில் - ஸமுத்திரத்தின் எதிர்வாயில் இருக்கும், நுண் - மிகவும் சிறியதான, மணலில் - மணலைக்காட்டிலும், பலர் - அதிகமானவர்கள். அப்ஜஜாநாம் பதம் - ப்ரும்மாவினுடைய, ஐஶ்வர்யம் - ஐஶ்வர்யத்தை (நான் விரும்பவில்லை). ஹிரண்யகர்ப்பபதத்தையும் - ப்ரும்மாவினுடைய ஸ்தானத்தையும். கூட்டரிய-கூடுவதற்கு அஶக்யமான, அதாவது அடையமுடியாததான, இது 'அடி'க்கு விஶேஷணம், துயர் - துக்கங்களை, அறு - போக்கடிக்கிற, சுடர் - காந்தியை உடைய, அடியே - திருவடிகளையே, கூடலாமாகில் - சேரக்கூடுமாகில், அதாவது அனுபவிக்கக் கூடுமாகில். கடம்பாதி - கடப்பை மரம் முதலியதான. ஆகாங்க்ஷிக்கும்படியாம் - ஆசைப்படும்படியாகும்.

---

1. விஷ்ணுதர்மம்-104-23. 2. பாகவதம்-11-19-18. 3. 4. திருவாய்மொழி-4-1-4. 5.

இப்படி வாூஉவஉஸ்ஹாவத்தைக் கேட்டவர்களுக்கு 1 ‘ஸாதெ வெ நிரயாஸ்தத’, 2 ‘தஸ்ாஷாயா மெஊத்ரய’ என்கிறபடியே இமையோர் வாழ் தனி முட்டைக் கோட்டைக்குட்பட்ட குறிச்சிகளெல்லாம் மூவேழு நரகங்களோடொக்க இவையும் ஈரேழு நரகமென்னலாம்படியாயிருக்கும். 3 ‘யம் லுஸ்ா வாவரம் லாஹம் உநூதெ நாயிகம் ததஃ’ என்னும்படி நிஉ-ஃவமான தெரிவரியவளவில்லா சூதஉாதூாநஹவஸவமும் ஷூதிஙாகவிஸெஷத்தாலே வாஉாதூாநஹவத்தோடே கூடாதே சிற்றின்பமாய் 4 ‘இறுக லிறப் பென்னும் ஞானிக்கு மப்பயனில்லையேல்’ என்னும்படி 5 ‘ஸவெ- ஷவநயஉா

‘இப்படி’ என்பது ‘நரகமேன்னலாம்படி யிருக்கும்’ என்பதோடு அந்வயிக்கிறது. ‘வாூஉவஉஸ்ஹாவத்தை’ இத்பாதிக்கு ஶாஸ்திரங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறபடியே பரமபதத்தின் ஸ்வபாவத்தை அறிந்தவர்களுக்கு என்று தாத்பர்யம். ஸாதெவெ - (கீழ்ச் சொல்லிய திவ்யமான விமானம், தடாகங்கள், வாபிகள்) முதலிய இவைகள் எல்லாம், தாத - ஓ! குழந்தாய், (பரமபதத்திற்கு) நிரயாஃ - நரகங்கள். அதாவது அதைப்போல அவ்வளவு ஹேயங்கள் என்றபடி. மெஊத்ரய - ஓ! மைத்ரேயனே, (மற்ற பலங்கள்) தஸ் - அந்த மோக்ஷத்தை அடைவதற்கு, அஷாயாஃ - விக்னங்கள். இமையோர் - தேவதைகள், வாழ் - வாழுகிற, தனி - அத்விதீயமான, முட்டை - அண்டத்தினுடைய, கோட்டைக்கு - ஆவரணத்திற்கு. குறிச்சிகள் - குடிசைகள். யம் - எந்த ஜீவாத்மாவின் ஸாக்ஷாத்காரத்தை, லுஸ்ா - அடைந்து, ததஃ - அதைவிட, அயிகம் - மேல்பட்ட, அவரம் - வேறு, லாஹம் - லாபத்தை, நஉநூதெ - எண்ணுகிறான் இல்லையோ. நிஉ-ஃவமான - துக்கம் இல்லாததான, தெரிவரிய - அறிந்துகொள்ள முடியாததான, அளவில்லா - அளவில்லாததான, ஷூதிஙாகவிஸெஷத்தாலே - பகவானை அனுபவிப்பதற்கு விரோதியான ஒரு விதத் தடங்கலாலே. கூடாதே - சேராமல். சிற்றின்பமாய் - அல்பஸுகமாய், இறுகல் - ஜ்ஞானஸங்கோசத்தை, அதாவது பரமாத்மானுபவ மில்லாமல் ஜ்ஞானத்தை சுருக்கிக்கொள்ளுதலை, இறப்பு-மரணம், அதாவது மோக்ஷத்தைச் சொல்லுகிறது, என்னும் - என்று சொல்லுகிற, ஞானிக்கும் - ஜ்ஞான யோகத்தில் நிஷ்டை யுடையவனுக்கும், அப்பயன்-

1. பாரதம் - ஶாந்திபர்வம் 196-4.
2. விஷ்ணுபுராணம்.
3. கீதை - 6-22.
4. திருவாய்மொழி - 4-1-10.
5. பாரதம் - ஶாந்தி - 350-35.

ணா:' என்று சொல்லும்படி கழிப்பானுகையாலே ஒழிந்தேனென்று உபேக்ஷாவிஷயமாம். போக்த்ருநித்யத்வம்போலே போக்யநித்யத்வமும் போகநித்யதைக்கு வ்யவஸ்தாபகமன்று. 1 'மன்னுறில்' என்னும் வ்யதிரேகோக்தியாலு மிவ்வர்த்தம் ஸித்தம்.

இப்படி ப்ரயோஜநாந்தரவிரக்தி பிறந்தால் 2 'உன்னலல்லால் யாவராலுமொன்றும் குறைவேண்டேன்' என்றும், 3 'உன்னித்து மற்றொரு தெய்வம் தொழா ளவனையல்லால்' என்னும்படி பரிசிதஸஹவாஸ

அந்தப் பரமாத்மாவை அனுபவிப்பதாகிய உயர்ந்த ப்ரயோஜனம், இல்லையேல் - இல்லையாதலால். ஸர்வே - எல்லோரும், ச்யவநஸ்வபாவா: - நழுவுவதையே ஸ்வபாவமாக உடையவர்கள், அதாவது திரும்பி வருவதையே ஸ்வபாவமாக உடையவர்கள். கழிப்பானுகையாலே - கழிக்கக்கூடிய தாகையினுல். ஒழிந்தேன் - விட்டேன், 'ஒழித்தேன்' என்பது ஒழிந்தேன் என்று மெலிந்து கிடக்கிறது. போக்த்ருநித்யத்வம் - ஸுகங்களை அனுபவிக்கிற ஆத்மா நித்யமாயிருக்கை. போக்யநித்யத்வம் - அனுபவிக்கப்படுகிற ஸுகம் நித்யமாயிருக்கை. போகநித்யதைக்கு - அனுபவம் நித்யமாயிருப்பதற்கு, வ்யவஸ்தாபகமன்று -வ்யவஸ்தையை ஏற்படுத்தக்கூடியதல்ல, அதாவது ஆத்மாநித்யமாக இருப்பதினுல் ஸுகானுபவமும் நித்யம் என்று எப்படிச் சொல்ல முடியாதோ, அப்படியே அனுபவிக்கக்கூடிய வஸ்து நித்யமாயிருப்பதினுல் போகம் நித்யம் என்று சொல்லமுடியாது, அவைகளுக்குக் காரணங்கள் கர்மங்களினுல் உண்டாக்கப்பட்ட பகவத் ஸங்கல்பமேயாம் என்றபடி. மன் - ஸ்திரமான (அழியாத) பலத்தை, உறில் - ஆசைப்பட்டாயேயாகில். வ்யதிரேகோக்தியாலும் - கீழ் கைவல்யத்தைச் சொல்லி ஸ்திரமான பலம் வேறு என்று தனித்துச் சொல்லி யிருப்பதினுலும், இவ்வர்த்தம் - கைவல்யமும் அநித்யம் என்னும் இந்த அர்த்தம்.

இப்படி - கீழ்ச் சொல்லிய விதமாக, ப்ரயோஜநாந்தரவிரக்தி - இதர ப்ரயோஜனங்களில் வைராக்யம். உன்னலல்லால் - உன்னைத்தவிர, யாவராலும்-வேறு ஒருவராலும், குறை ஒன்றும் - உன்னைவிட வேறு ஒரு குறையையும், இப்பொழுது அது இல்லாமல் குறைவாக இருந்து இனி அபேக்ஷிக்கவேண்டியதாக இருக்கும் புருஷார்த்தம் ஒன்றையும், வேண்டேன்- விரும்ப மாட்டேன். அவனை யல்லால் - அந்த ஸர்வேஶ்வரனை யல்லது, மற்றொரு தேய்வம் - வேறொரு தெய்வத்தை, உன்னித்து - தெய்வம் என்று நினைத்து, தொழாள் - ஸேவிக்கமாட்டாள். பரிசிதஸஹவாஸ மான -

---

1. திருவாய்மொழி - 1-2-5. 2. திருவாய்மொழி - 5-8-3.
3. திருவாய்மொழி - 4-6-10.

மான மற்றொருதெய்வம் தொழாதே, மற்றுமோர் தெய்வமுளதென்றிருக்கும் பகவத்த்யாநவிமுகஜநத்தோடும் நெருங்காதே, 1 'யூயம் யூயம் வயம் வயம்' என்று வேறுபட்டு, கொள்ளக் குறைவில்லாத வள்ளல் மணி வண்ணன் பக்கலிலும் கூறை சோறென்றாற்போலே தனக்கு மற்றொரு ப்ரயோஜநாந்தரத்தை அபேக்ஷியாதே, மஹாமஹிமமான மந்த்ரரத்நத்தில் உத்தரவாக்யத்திலே ஊற்றமுடையனும்.

தந்திரங்களளவிலராய்த் தனத்தான்மிக்க
    தார்வேந்தர் தொழ வையமாண்டா ரமாண்டார்
சந்திரனும் சூரியனும் வீயுங்காலம்
    தாரகையின் வடமற்றுத் தனிவானுகும்
இந்திரனுமேறுயர்த்த ஈசனுனு
    மீரிரண்டு முகத்தானு மில்லா வந்நாள்
நந் திருமானிலே கண்டார் நாகமெல்லா
    நரகென்று நற்பதமே நாடுவாரே. 7

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ பரமபதஸோபாநே
॥ த்ருதீயம் விரக்திபர்வ ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

அல்ப பலத்தைக் கொடுக்கக்கூடிய. மற்றுமோர்தெய்வம் - வேறு ஒரு தெய்வம், உளது - இருக்கிறது, என்றிருக்கும் - என்று நினைத்துக் கொண்டிருக்கிற, **பகவத்** - பகவானுடைய, **த்யாந** - த்யானத்தில் இருந்து, **விமுக** - பராங்முகர்களான. **யூயம்** - நீங்கள், **யூயம்** - நீங்கள் தான், **வயம்**-நாங்கள், **வயம்** - நாங்கள் தான், அதாவது தேஹாத்மாபிமானிகளாய் இந்திரிய கிங்கரர்களாயிருக்கும் உங்களுக்கும், பகவத்தாஸர்களான எங்களுக்கும் ஸம்பந்தமில்லை என்றபடி. கொள்ள - வாங்கவாங்க, குறைவு-குறைந்து போவது, இல்லாத - இல்லாதவனான, வள்ளல் - பரமோதாரனான, மணிவண்ணன் - நீலமணிபோன்ற வர்ணத்தையுடைய எம்பெருமான், பக்கலிலும் - இடத்திலும், கூறை-துணி, என்றாற்போல - என்னும் இவைகள் போன்ற, மற்றொரு - மோக்ஷத்தைத் தவிர வேறான, **மஹாமஹிமமான** - அதிக மஹிமையையுடையதான, **மந்த்ரரத்நத்தில்**-த்வயத்தில், **உத்தரவாக்யத்திலே** -

---

1.

மேல் வாக்யத்தின் அர்த்தத்திலே, அதாவது பரமபுருஷார்த்தமாகிற கைங்கர்யத்திலே, ஊற்றமுடையனும் - நிஷ்டையை உடையவனும்.

இப்படி மற்ற தேவதைகளும் அவர்களுடைய ஸ்தானங்களும் அழியக் கூடியவைகள் என்று அறிந்தவர்கள் அழியாத பலத்தையே அபேக்ஷிப்பார்கள் என்று ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—'தந்திரங்கள்' என்றாரம்பித்து.

[ப-ம்.] தந்திரங்கள் - தந்திரமென்று சொல்லப்படுகிற காலாள், குதிரை, தேர், யானை, முதலிய பரிஜனங்களினால், அளவிலராய்-அளவில்லாதவர்களாய், எண்ணிறந்த ஸேனை முதலியவைகளை உடையவர்களாய் என்றபடி, தனத்தால் - ஐஶ்வர்யத்தினால், மிக்க-அதிகர்களான, தார்-மாலையைத் தரித்துக்கொண்டிருக்கிற, வேந்தர்-ராஜாக்கள், புஷ்பமாலைகளினால் எப்பொழுதும் அலங்க்ருதர்களாய் விளங்குகிற ராஜாக்கள் என்றபடி, தொழ - ஸேவிக்கும்படி, வையம் ஆண்டார் - இந்த உலகத்தை ஆண்டவர்கள், மனு மாந்தாதா முதலியவர்களும், மாண்டார் - மாண்டு போனார்கள், 'இங்கு பாண்டேன் வண்டறையும் குழலார்கள் பல்லாண்டிசைப்ப ஆண்டாரிவ் வையம் எல்லாம் அரசாகி முன்னாண்டவரே மாண்டாரென்று வந்தார்' என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்திருப்பதை அநுஸந்திக்கவும், அதாவது ராஜாதிராஜனாய் இருக்கும் ஒருவனை ஸ்தோத்திரம்செய்து த்ரவ்யம் ஸம்பாதிக்க வேண்டுமென்று அவன் விஷயமாகக் கவிபாடி எடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருக்கும் வழியிலேயே அந்த ராஜா இறந்துவிட்டான் என்கிற ஸமாசாரத்துடன் இவனுக்கு முன் சென்றவர்கள் திரும்பி வருகிறார்கள் என்றபடி, சந்திரனும் சூரியனும் - தேஜோவான்கள் என்று ப்ரஸித்திபெற்ற சந்திர ஸூர்யர்களும், வீயும்காலம் - நசித்துப்போகும் காலத்தில், தாரகையின்வடம் - நக்ஷத்திரங்களின் வரிசை, அற்று-நசித்து, தனி - அத்விதீயமான, வான்ஆகும் - ஆகாசமாகும், அதாவது ஸூக்ஷ்மமான தமஸ்ஸாகும், ப்ராக்ருத வஸ்துக்கள் எல்லாம் லயித்து ஸூக்ஷ்மாவஸ்தையை அடையும் என்றபடி, 'யதா தம:' இத்யாதிகளை இங்கு அநுஸந்திப்பது, இந்திரனும், ஏறு-வ்ருஷபத்தினால், உயர்த்த - வஹிக்கப்பட்ட, வ்ருஷபாரூடனான என்றபடி, ஈசன்தானும்-ருத்திரனும், ஈரிரண்டுமுகத்தானும் - நான்கு முகங்களை யுடைய ப்ரும்மாவும், இல்லா-இல்லாததான, அந்நாள் - அந்த ஸமயத்தில், நம்-நமக்கு ஸ்வாமியான, திருமால்-ஶ்ரிய:பதியினுடைய, நிலை-ஸ்திதியை, இருப்பை என்றபடி, கண்டார் - அறிந்தவர்கள், 1 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:' இத்யாதி ஶ்ருதியை இங்கநுஸந்திப்பது. இத்தால் மற்ற ஶ்ருதிகளும் ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தினால் இந்த அர்த்தத்தையே சொல்லுகின்றன என்பதும் த்யோதிதம், நாகமெல்லாம் - ஸ்வர்க்க

1 நாராயணன் ஒருவனே இருந்தான், ப்ரும்மாவும் இல்லை, ருத்திரனும் இல்லை.

லோகங்கள் எல்லாம், இது மற்ற ப்ருஹ்மாதி லோகங்களுக்கும் உபலக்ஷணம், நரகு - நரகம், என்று - என்றறிந்து, நற்பதமே - நல்ல ஸ்தானமாகிய பரமபதத்தையே, நாடுவார்-அபேக்ஷிப்பார். 7

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம்
ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

மூன்றுவது விரக்திபர்வம் முற்றிற்று,

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

॥ அத சதுர்த்தம் பீதிபர்வ ॥

துறவறமே துணிவார் துணுக்கற்ற விளந்துணிவோர்
உறவிலராதலில் நாமுயர்ந்தாருட னொன்றி நின்றோம்
மறவழி மாற்றி யெம்மையலைத் தீர்த்தவர் மன்னருளால்
கறவை யுகந்த பிரான் கழல் சூடும் கருத்தினமே. 8

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

நான்காவது பீதிபர்வம்.

இப்படி விவேகம் நிர்வேதம், விரக்தி, இவைகள் உண்டாகும் க்ரமத்தை நிரூபித்தருளி இனி ஸம்ஸாரத்தில் பயத்தினால் உபாயத்தில் த்வரை உண்டாகிறது என்கிற க்ரமத்தை அநுஸரித்து முதலில் அப்படிப்பட்ட பயத்தை ஒருபர்வத்தில் நிரூபிக்கத் திருவுள்ளம் பற்றி இவ்வர்த்தத்தை முதலில் ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—'துறவறமே' என்றாரம்பித்து.

[ப - ம்.] துறவறமே-துறக்கப்படுகிற தர்மமே; அதாவது நிஷித்த கர்மங்களிலே, அப்படிப்பட்ட தர்மங்களிலேயே, துணிவார் - தைர்யத்தை உடையவர்கள், தைர்யத்துடன் அதில் ப்ரவர்த்திக்குமவர்கள் என்றபடி, துணுக்கு - த்வரை, அதாவது பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்தில் த்வரை, அற்ற - இல்லாதவர்களான, இளம் துணிவோர் - இளமையான விஸ்வாஸத்தை உடையவர்கள், அதாவது அல்ப பலங்களில் ஆசையுடையோர் என்றபடி, உறவிலர் - நமக்கு உறவு இல்லாதவர்கள், அதாவது நம்முடன் சேர்க்கையற்றவர்கள் என்றபடி, ஆதலில் - ஆகையினால், நாம் - கீழ்ச்சொல்லியபடி விவேக நிர்வேத விரக்தியை உடைய நாம், உயர்ந்தாருடன் - உயர்ந்தவர்களான முமுக்ஷுக்களுடன், ஒன்றி - சேர்ந்து, நின்றோம் - நிற்கிறோம், மறவழி - மறம் - கோபம், அதாகிற வழி, காமக்ரோதங்களாகிற வழி என்றபடி, இவைகளை, மாற்றி - மாறும்படி செய்து, எம் - நம்முடைய, மையலை - அஜ்ஞானத்தை, தீர்த்தவர் - நிவ்ருத்தி செய்தவர்களான ஆசார்யர்களினுடைய, மன் - த்ருடமான, அருளால் -

இப்படி விவேகவிசேஷத்தாலே ஆத்மாபஹாராதி நிவ்ருத்தியும் நிர்வேதவிசேஷத்தாலே நிஷித்த நிவ்ருத்தியும் விரக்திவிசேஷத்தாலே பந்தககாம்ய நிவ்ருத்தியும் பிறந்தாலும் பூர்வார்ஜிததமுமாய்

க்ருபையினுல், கறவை - பசுக்களை, உகந்த - ஸந்தோஷித்தவனை, அவைகளின் விஷயத்தில் ப்ரீதி உடையவனை என்றபடி, அதாவது 'திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி' என்கிறபடியே பரமபதத்தில் இருப்பைக்காட்டிலும் ஸௌலப்யம் மிகவும் ப்ரகாசிக்கிறதாகையினுல் பசுமேய்த்தலையே மிகவும் ப்ரீதியுடன் அங்கீகரித்த என்றபடி, பிரான் - உபகாரகனை ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, தன்னுடைய ஸௌலப்யத்தினுல் எல்லோரும் தன்னை ஆஸ்ரயிக்கும்படி உபகரித்தருளினவனுடைய என்றபடி, கழல் - திருவடிகளை, சூடும் - ஆஸ்ரயிக்கும், கருத்தினம் - கருத்தை உடையவர்களாக ஆனோம், அதாவது ஸ்ரீ க்ருஷ்ணனை ஆஸ்ரயிக்க வேண்டும் என்கிற கருத்தை உடையவர்களானோம் என்றபடி. 8

இனி ஸம்ஸாரபீதியாலே உபாயத்தில் த்வரை உண்டாகிறதென்பதை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. இப்படி - கீழ் நிரூபித்தபடி. விவேகவிசேஷத்தாலே - ஜீவாத்ம பரமாத்மாக்களுடையவும், சரீராத்மாக்களினுடையவும், ஸ்வரூபம் ஸ்வபாவம் இவைகளைப் பற்றிய விவேகத்தாலே என்றபடி. 'ஆத்மாபஹார' என்றது பகவானுக்கு சேஷபூதமாகிய ஆத்மாவைத் தனக்கு சேஷபூதமென்று எண்ணுகை என்றபடி. 'ஆதி' என்பதினுல் விபூதியையும் விபூதிமானையும் பற்றிய அபஹாரம் சொல்லப்படுகிறது. 'நிர்வேதவிசேஷ'மாவது காமக்ரோதாதிகளினுல் உண்டாகும் நிர்வேதமன்றிக்கே தத்வஜ்ஞானத்தினுல் உண்டான நிர்வேதம். அதாவது காமக்ரோதிகளால் உண்டாகிய நிர்வேதம் நிஷித்தத்திலேயே ப்ரவ்ருத்திக்கும்படி செய்யும் என்று கீழ் நிர்வேதபர்வத்தில் 'ரோஷாத்யாதிகளாலே நிர்வேதம் பிறக்குமாகில் அது மேலும் விபரீதவ்ருத்தங்களிலே கைவளரப் பண்ணும்' என்றருளிச் செய்திருக்கையினுலே இப்படி விவேகத்தினுல் உண்டான நிர்வேதமே நிஷித்த கர்மங்களில் இருந்து நிவ்ருத்தி அடைவதற்குக் காரணமாகும் என்றதாயிற்று. 'விரக்திவிசேஷ'மாவது நிர்வேதத்தால்அவைகள் ஸ்வரூபவிருத்தம் என்கிற ஜ்ஞானத்தினுல் உண்டாகிய விரக்தி. இப்படியன்றிக்கே வேறு ஏதாவது காரணத்தினுல் விரக்தி உண்டாயிற்றாகில் அது ப்ரயோஜனபர்யவஸாயியாகாது. 'பந்தககாம்ய'மாவது ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமான காம்ய கர்மங்கள், அதாவது ஸ்வர்க்காதிகளுக்குக் காரணமான கர்மங்கள் என்றபடி. பூர்வார்ஜித - முன்பு ஸம்பாதிக்கப்பட்ட, அதாவது செய்யப்பட்ட. புக்தபல - அனுபவிக்கப்பட்ட பலத்தை உடை

அபுக்தமுமன்றிக்கே க்ருதப்ராயச்சித்தமுமன்றிக்கே ப்ராரப்தகார்யமுமாய் அநாரப்தகார்யமுமாய்க் கிடக்கிற புண்யபாபத்தைப் பார்த்தால் போகத்தாலேயாதல் ப்ராயச்சித்தத்தாலேயாதல் நிச்சேஷமாகக் கழிக்கவரிதாயிருக்கிறபடியையும், இவற்றின் பலமான அநந்த சராசர சரீரங்களை பரிக்ரஹித்து அகாதமான து:க்கஸாகரத்திலே யழுந்தவேண்டும்படி வரும் கர்ப்பஜந்மஜராமரணாதி சக்ரபரிவ்ருத்தி ப்ரவாஹத்தையும், உயரவேறித் தத்ஸாம்யராய்த் தோற்றினாரை வ்யாஜத்தாலே த்வம்ஸவென்று தகர விழ விடுவார் ஸ்வவிஷய

யவை. க்ருதப்ராயச்சித்த - ப்ராயச்சித்தம் பண்ணப்பட்ட. ப்ராரப்தகார்யம் - தங்களுடைய கார்யமான பலத்தைக் கொடுக்க ஆரம்பிவித்தவைகள். அநாரப்தகார்யம் - அப்படிப்பலம் கொடுக்க ஆரம்பிவிக்காதவைகள். போகத்தாலே - அவைகளின் பலங்களை அனுபவிப்பதினாலே, நிச்சேஷமாக - மிகுதியில்லாமல், கழிக்க - நிவ்ருத்தி செய்துகொள்ள, அரிதாய் - அசக்யமானதாய், அதாவது 1 'அநுக்ஷண ஸமேயுஷி ப்ரதிதவாரிதௌ துஸ்தரே ததி க்வசந நிஷ்க்ருதி: பவதி ஸாபி தோஷாவிலா' என்றிவர் தாமே ஸ்ரீஅபீதிஸ்தவத்தில் அருளிச்செய்திருப்பது இங்கனு ஸந்தேயம். இவற்றின் பலமான - கீழ்ச்சொல்லிய கர்மங்களின் பலமான, அநந்த - முடிவில்லாத, சராசரசரீரங்களை - ஜங்கமம் ஸ்தாவரம் முதலிய சரீரங்களை. அகாதமான - ஆழமான, து:க்கஸாகரத்திலே - துக்கமாகிய ஸமுத்திரத்தில், அழுந்தவேண்டும்படிவரும் - மக்னனாகப்போகும்படியாக நமக்கு வருகிற, கர்ப்ப - கர்ப்பவாஸம், ஜந்ம - பிறப்பு, ஜரா - கிழத்தனம், மரண - இறப்பு, ஆதிபதம் வ்யாதி துக்கம் முதலியவற்றைக்குறிக்கிறது. சக்ரபரிவ்ருத்தி - இவைகளாகிற சக்ரத்தின் சுழலில், அதாவது சக்ரம்போல் சுழன்று வருகிற இவைகளினுடைய, ப்ரவாஹத்தையும் - பரம்பரையையும். உயர - உயர்ந்த ஸ்தானத்தில், அதாவது ஸ்வர்க்கம் முதலிய லோகத்தில். தத்ஸாம்யராய் - தனக்கு ஸமமான ஸ்வபாவத்தை உடையவராய், தோற்றினாரை - தோன்றி நிற்பவர்களை, வ்யாஜத்தாலே - வஞ்சனையினாலே, அதாவது ஒரு வ்யாஜத்தினாலே. த்வம்ஸ - நாசமடை. தகர விழவிடுவார் - கவிழ் தலையாகப் பூமியில் விழும்படி செய்யுமவர்கள், அதாவது மிகவும் சிறந்த புண்ய கர்மங்களை அனுஷ்

---

1 ஒரு க்ஷணந்தோறும் வ்ருத்தி அடைந்துகொண்டிருப்பதாயும் ஒருவராலும் தாண்டமுடியாததுமான பாபமாகிற ஸமுத்திரத்தில் ஏதாவது ஒரு ஸமயத்தில் ப்ராயச்சித்தம் பண்ணும்படி நேரிட்டால் அதுவும் அனேகம் தோஷங்களை உடையதாகிறது.

ஸ்வவிஷயவர்த்திகளை மநுஷ்யமாம்ஸபக்ஷணத்துக்கு கதாகதம் பண்ணி வைப்பார் ஸ்வப்ருத்யவர்க்கமானவரை அவிநீதராக்கிக் கொண்டாள்வாரான தேவதாந்தரங்களினுடைய ப்ராப்தியில் தோஷங்களையும், நமன்றமர் பாசம் விட்டாலலேப்பூணுண்ணு மவ்வல்லல்களையும், வெஞ்சொலாளரான நமன்றமர் செய்யும் வேதனைகளையும், தீரனுன யமபுவநாத்வன் கேட்டு

டித்து அதின் பலத்தினால் இந்திரனுடைய அர்த்தாஸனத்தில் உட்காரும்படியான ப்ரபாவத்தைப் பெற்ற யயாதியை வஞ்சனையாகத் தேவேந்திரன் ஸ்தோத்திரம் செய்பவனைப்போல 'நீ இவ்வளவு விசேஷமான பலம் பெறுகைக்கு என்ன கர்மம் பண்ணினாய்' என்று கேட்க, அப்பொழுது அந்த யயாதி தான் அநுஷ்டித்த கர்மங்களைச் சொல்லிக்கொண்டுவர, 'தப: க்ஷரதி கீர்த்தநாத்' (தபஸ்ஸு சொல்லுவதினால் நாசமடைகிறது) என்கிறபடியே உன்னுடைய புண்ய கர்மங்கள் இப்பொழுது சொல்லப்பட்டபடியினால் நசித்துவிட்டன, இனி உனக்கு இங்கு இருக்கச்சக்தி இல்லை, கீழே விழுந்துவிடு என்று தலைகீழாகத்தள்ளிவிட்டான் என்கிற வ்ருத்தாந்தம் பாரதத்தில் ப்ரஸித்தமிறே. ஸ்வவிஷயவர்த்திகளை - தன் ராஜ்யத்தில் இருப்பவர்களை. மநுஷ்யமாம்ஸபக்ஷணத்துக்கு - மனுஷ்யர்களைக் கொன்று அவர்களுடைய மாம்ஸத்தைப் புஜிப்பதற்காக, கதாகதம்பண்ணிவைப்பார் - போக்கு வரத்துச் செய்யும்படி பண்ணி வைப்பார், அதாவது தன் ஸேனைகளான ப்ரமதகணங்களை மனுஷ்ய மாம்ஸத்தை ஸாப்பிடும்படி நியமிக்கும் ருத்திரன் என்றபடி. ஸ்வப்ருத்யவர்க்கமானவரை - தனக்கு வேலைக்காரர்களானவரை. அவிநீதராக்கிக்கொண்டு - தனக்குள் அடங்காதவர்களாகச் செய்துகொண்டு, ஆள்வார் - ஆளுமவர்கள், அதாவது தனக்கு ப்ருத்யனாயும், சிஷ்யனாயும், புத்ரனாயும் இருக்கும் ருத்திரன் தன் தலையைக் கிள்ளும்படி இடம் கொடுத்துக் கொண்டிருக்கும் ப்ரும்மா என்றபடி. தேவதாந்தரங்களினுடைய-ப்ரும்மா ருத்திரன் இந்திரன் முதலிய மற்ற தேவதைகளினுடைய, ப்ராப்தியில் - அடைவதில். நமன்தமர் - யமதூதர்கள், பாசம் விட்டால் - பாசத்தை ப்ரயோகித்தார்களேயாகில், அலைப்பூண் உண்ணும் - அவர்களால் அலைக்கப்பட்டிருக்கையை அநுபவிப்பதான, அவ்வல்லல்களையும் - அந்தத் துக்கங்களையும், வெஞ்சொலாளரான - க்ரூரமான வார்த்தைகளை உடையவரான, அவர்கள் செய்யும் ஹிம்ஸையைக்காட்டிலும் அவர்களுடைய வார்த்தைகள் அதிக பாதகமாயிருக்குமென்றபடி. 'பாவீதழுவென மொழிவதற்கஞ்சி' என்றாரிறே. 'தீரனுன' இத்யாதி—மஹாதைர்ய ஸாலியான தர்மபுத்திரன் கூட நரக மார்க்கத்தின் கொடுமையைச் சொல்லக்கேட்டு மூர்ச்சித்தான் என்றால் அதை அநுபவிப்பது மிகவும் துஸ்ஸஹமாய் பொறுக்க முடியாமல் இருக்கும் என்பது

மோஹித்துவிழும்படியான நரகஸாகரத்தின் படிகளையும், அதிது:ஸ்ஸஹாநந்த நரகயாதனைகளையும் தாபத்ரயாத்யாயாதிகளிலே பரக்கக் கேட்டு, 1 'அஹம் பீதோஸ்மி', 2 'தெளிதொறும்நன்று மஞ்சுவன் நரகம் நானடைதல்' என்னும் அதீதிவ்ரபீதியாலே காற்றத்திடைப்பட்ட கலவர் மனம் போலேயும் ஆற்றங்கரை வாழ் மரம் போலவும் இருபாடெரி கொள்ளியினுள்ளெறும்பு போலவும் பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போலவும் வெள்ளத்திடைப்பட்ட நரியினம் போலவும் உள்ளந்துளங்கி

சொல்ல முடியுமோ என்றபடி. அதிது:ஸ்ஸஹ - மிகவும் பொறுக்கமுடியாத. அநந்த - எண்ணிறந்த, நரகயாதனைகளையும் - நரகத்தில் உண்டாகும் துக்கங்களையும், தாபத்ரயாத்யாயாதிகளிலே - தாபத்ரயங்களை நிரூபிக்கும் ப்ரகரணங்களிலே, பரக்க-விஸ்தாரமாக. அஹம் - நான், பீத: - பயந்தவனாக. அஸ்மி - ஆகிறேன். தெளிதோறும் - (என்னுடைய ஸ்வரூபத்தை) அறியும் போதெல்லாம், நான், நரகம் - நரகலோகத்தை, அடைதல் - அடைதலைப்பற்றி, நன்று - நன்றாக, அஞ்சுவன் - பயப்படுவேன். அதிதீவ்ரபீதியாலே - மிகவும் அதிகமான வேகமுள்ள பயத்தினால். காற்றத்து-பெருங்காற்றில், இடைப்பட்ட - நடுவிலே அகப்பட்ட, 'அத்து' என்பது சாரிகை. கலவர் - மரக்கலத்தில் இருக்குமவர்கள், மனம்போலேயும் - மனது போலும். ஆற்றங்கரை - ஆற்றின் கரையில், வாழ் - வாழுகிற, மரம்போல - வ்ருக்ஷம்போல், அது ஆற்றின் ப்ரவாஹத்தில் வேர்களையப்பட்டு என்றைக்குக் கீழே விழவேண்டிவருமோ என்று பயந்திருக்குமாப்போலே என்றபடி. இந்த த்ருஷ்டாந்தத்தினால் அந்தப் பயத்தைப் பரிஹரித்துக்கொள்ள ஶக்தி இல்லை என்பது த்யோதிதம். இருபாடு - இரண்டு பக்கங்களிலும், எரி - எரிந்துகொண்டிருக்கிற, கொள்ளியின் - கொள்ளிக்கட்டையினுடைய, உள் எறும்பேபோல - நடுவில் இருக்கும் எறும்பைப்போல, இருந்த இடத்தில் இருக்கமுடியாமலும் மற்று வேறு ஒரு இடத்திற்குப் போகமுடியாமலும் இருக்கும் இருப்புச் சொல்லப்படுகிறது. பாம்போடு - ஸர்ப்பத்துடன், ஒரு கூரையிலே - ஒரு குடிசையிலே, பயின்றாற்போலே - ஸஞ்சரிப்பதைப்போலே, கண்டதெல்லாம் பயத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருக்கும் என்றபடி. வெள்ளத்து - ப்ரவாஹத்தின், இடை - நடுவில், பட்ட - அகப்பட்டுக்கொண்ட, நரியினம்போலவும்-நரிகளின் கூட்டம்போலவும். இந்த த்ருஷ்டாந்தங்கள் எல்லாம் பெரிய திருமொழியில் 11-ம்பத்தில் எட்டாம் திருமொழியான 'மாற்றமுள ஆகிலும்' என்னும் திருமொழியின் ஸங்க்ரஹம் என்றறியத்தக்கது. உள்ளம் - மனது, துளங்கி - சலித்துக்கொண்டு. ஹேயோ

---

1. 2. திருவாய்மொழி-8-1-9.

ப்ரயோஜநாந்தரபரனாதல் தத்ஸங்கிநனாதல் உபயஸாதாரணி யாதல் மோக்ஷஸங்கிநனாதலன்றிக்கே மோக்ஷைகபரனானவன் ஸ்வ-கர்ம ப்ராயஸ்சித்தமுமாய் இட்டபடை கற்படையாய் விக்நவிலம்பரஹிதமான நிவ்ருத்திதர்மத்திலே 1 'மாநுஷ்யம் ப்ராப்ய', 2 'மஹதா புண்யபண்யேந', 3 'கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்' இத்யாதிகள்படியே விலக்கற்ற விரைதலுடையனும்.

ஜநாந்தரபரனாதல் - இதர ப்ரயோஜனத்தையே விரும்பிக்கொண்டிருப்பவனும், **தத்ஸங்கிந**னாதல் - ப்ரயோஜனாந்தரத்திலும் மோக்ஷத்திலும் ஆசை உண்டானபோதிலும் ப்ரயோஜனாந்தரத்தையே முக்யமாக நினைத்துக் கொண்டிருப்பவனும், **உபயஸாதாரணி**யாதல் - ப்ரயோஜனாந்தரத்தையும் மோக்ஷத்தையும் துல்யமாக நினைத்துக்கொண் டிருப்பவனும், **மோக்ஷஸங்கிந**னாதலன்றிக்கே - இரண்டிலும் ஆசையுடையவனா யிருந்தபோதிலும் மோக்ஷத்தை ப்ரதானமாக நினைத்துக்கொண் டிருப்பவனும் இருக்கிறவனா யில்லாமல், **மோக்ஷைகபர**னானவன் - மோக்ஷம் ஒன்றிலேயே ஆசையுடையவன். இட்டபடை - வைக்கப்பட்ட படை, கற்படையாய் - கருங் கல்லால் செய்யப்பட்ட படையாய், அதாவது கருங்கல் படை வைத்தாப் போலே செய்யப்பட்ட அம்ஸத்திற்கு லோபம் இல்லாமல் வெகுகாலம் கழித்து மறுபடியும் செய்யத்துடங்கினலும் முன் செய்ததற்குமேலே தொட்டுக் கொண்டு ஆரம்பிக்கக்கூடியதாய் என்றபடி. விக்ந - தடை, விலம்ப-அவகாசம். **நிவ்ருத்திதர்ம**மாவது கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோக ப்ரபத்திகள். **மாநுஷ்யம்** - மனுஷ்ய ஜன்மத்தை, **ப்ராப்ய** - அடைந்து, ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு ப்ரயத்தினம் செய்யாதவன் பாபியாவான் என்று மேலே சேர்த்துக்கொள்ளவும். **மஹதா** - பெரியதான, **புண்ய பண்யேந** - புண்யமாகிற விலையினால் (இந்த ஶரீரமாகிற தெப்பம் வாங் கப்பட்டது, அது உடைவதற்கு முன்னமேயே ஸம்ஸாரமாகிற ஸமுத்தி ரத்தைக் கடந்து அக்கரை செல்லவேண்டும்). கிளர் - வ்ருத்தியடைந்துகொண் டிருக்கிற, ஒளி - காந்தியை உடைய, இளமை - யௌவனம், கெடுவதன் முன் னம் - நாசமடைவதற்கு முன்பே (பகவானை ஆஶ்ரயிக்க வேண்டும்). விலக் கற்ற - தடங்கல் இல்லாத, விரைதலுடையனும் - த்வரையைஉடையவனாகும்' 'விலக்கத்தவிர்த்தலுடையனும்' என்று பாடாந்தரம். விலக்க்-ப்ரதிபந்தகம், அதை தவிர்த்தல்-நிவ்ருத்திசெய்வது, அதாவது ப்ரதிபந்தகத்தை நிவ்ருத்தி செய்தல் என்றபடி.

---

1. 2. 3. திருவாய்மொழி-2-10-1.

வந்தன போல் வருபனவுமநந்தமாகி
மாளாத துயர் தரு வல் வினை நெருப்புக்
கிந்தனமாயெண்ணிறந்த காலமெல்லா
மின்னமுமிப்பவக் குழிக்கே யிழியா வண்ணம்
வெந்ததொரு குழவியை நற்குமரனுக்கும்
வெறித்துளவ வித்தகனார் விதியே கொண்டார்
பந்தனமாமவை யனைத்தும் பாறுகைக்கு
பழமறையின்பதமொன்றே பயிலுவாரே. 9

இதி ஶ்ரீகவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீ பரமபதஸோபாநே
॥ சதுர்த்தம் பீதிபர்வ ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

இப்படி ஸம்ஸாரத்தில் உண்டான கர்மங்களையும் அதின் பலங்களையும் பார்த்துப் பயத்துடன்கூடினவனுக்கு இன்னும் வரப்போகிற காலங்களிலும் இப்படியே பயத்திற்குக் காரணங்கள் அநேகம் இருப்பதையும் யோசித்தவர்கள் பகவானை அதிசீக்கிரத்தில் ஆஸ்ரயிப்பார்கள் என்று கீழ்ப் பர்வத்தில் அருளிச்செய்த அர்த்தங்களை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்— ‘வந்தனபோல்’ என்றாரம்பித்து.

[ப - ம்.] வந்தனபோல் - கீழே கழிந்த காலங்களைப்போல, வருபனவும் - இனி வரப்போகிற காலங்களும், அநந்தமாகி - முடிவில்லாதவைகளாகி, மாளாத - (அநுபவத்தினாலாவது, ப்ராயஶ்சித்தாதிகளினாலாவது) நசியாத. துயர்தரு - துக்கத்தைக் கொடுக்கிற, வல் - த்ருடமான, வினை - பாப கர்மமாகிற, நெருப்புக்கு, இந்தனமாய் - விறகாய், விறகு அக்னி வ்ருத்தியடைவதற்குக் காரணமாவதைப் போல இந்தக் காலங்களும் பாபம் மேல் மேல் வ்ருத்தியடையக் காரணமாயிருக்கின்றன என்றபடி, இன்னமும் - இதற்கு மேலும், எண்ணிறந்த-கணக்கில்லாத, காலம் எல்லாம் - காலங்கள் எல்லா வற்றிலும், ‘அநாமதாநந்தகாலஸமீக்ஷயாப்யத்ருஷ்டஸந்தாரோபாய:’ என்றருளிச் செய்தாரிறே, இப்பவக்குழிக்கே - இந்த ஸம்ஸாரமாகிற பள்ளத்திலேயே, இழியாவண்ணம் - இறங்காதிருக்கும்படியாக, அதாவது

கீழேயே போய்க்கொண்டிராதபடியாக என்றபடி, 'நிஜஜெதா நஞுஹவாண-ு வாஞு:' என்னப்பட்டதிறே, வேந்தது - (அஸ்வத்தாமாவினுல் ப்ரயோகம் செய்யப்பட்ட அபாண்ட வாஸ்த்ரத்தினுல்) தக்தமான (கொளுத்தப்பட்ட), ஒரு, குழவியை - ஶிசுவை, நல்-நல்ல, குமரனுக்கும் - குழந்தையாகும்படி செய்த, வெறி-நல்ல வாஸனையுடன்கூடிய, துளவவித்தகனுர் - திருத்துழாய் மாலையைத் தரித்துக் கொண்டிருக்கிற ஆஸ்சர்ய பூதனுனவனுடைய, விதியே - விதிக்கிற வாக்யத்தை, 'ஶரணம் வ்ரஜ' (என்னைச் சரணம் அடை), 'ஹஜஸ்வரோ' (என்னிடத்தில் பக்திசெய்) என்றிவை முதலியவைகளை என்றபடி, கோண்டார் - அங்கீகரித்தவர்கள், பந்தனமாமிவை - பந்தகங்களான இந்தக் கர்மங்கள், அனைத்தும்-எல்லாவற்றையும், பாறுகைக்கு - தூளியாகச் செய்வதற்கு, பழைமறையின் - பழையதான வேதங்களினுடைய, பரமநெறி - உத்க்ருஷ்டமான பக்தி ப்ரபத்திகளாகிற மார்க்கத்தை, பயிலுவார் - தங்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி அப்யஸிப்பார்கள். 'பதமொன்றே' என்று பாடாந்தரம், அப்பொழுது அநாதியான வேதங்களில் சொல்லப்படுகிற, பதம் - வழியை, ப்ரபத்தி மார்க்கத்தை என்றபடி. அன்றிக்கே 'பழைமறையின் பதம்' என்று அந்வயமாக்கி அநாதியான வேதங்களினுல் சொல்லப் படுகிற எம்பெருமானுடைய திருவடிகள் ஒன்றையே என்றபடியாகவுமாம். இந்த யோஜனையில் 'வேந்ததோரு குழவி' இத்யாதியுடன் ஆனுகுண்யம் ஏற்படுகிறது. இவ்விடத்தில் 1 'யொஷிஹ்ரூ-ுதஉ்ரஷஞு்வொஊஶகடீ ஷெஸோநி வெரோநிகஷெ்ரா தஸ்விந்ரு-ுவஶம்ஹநாநி ஹஸிதொஉஞுதுஸ்வி க்ஷிஞிவ' என்கிற ஸ்ரீபாதுகாஸஹஸ்ர ஸ்லோகத்தை அனுஸந்திக்கவும். 9

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

நாலாவது பீதிபர்வம் முற்றிற்று.

1 எம்பெருமான் ஸ்ரீராமாவதாரத்தில் மிதிலைக்கெழுந்தருளும்பொழுது வழியில் கல்லாய்க் கிடந்த அஹல்யையைப் பெண்ணுக்கினதும், கிருஷ்ணுவதாரத்தில் குழந்தையாயிருக்கும்பொழுது தொட்டிலின்மேல் சகட்டில் ஆவேசித்திருந்த ஓர் அசுரனை உதைத்துத் தள்ளினதும், ஆகாசத்தையளந்த திருவடியில் ப்ரும்மா தீர்த்தம் சேர்க்க கங்கையை யுண்டாக்கினதும், அஸ்வத்தாமா ப்ரயோகித்த அபாண்டவாஸ்த்ரத்தினுல் உத்தரை வயிற்றில் இருந்தும் கரிக்கட்டையாய் விழுந்ததைப் பரீக்ஷித் என்னும் ஓர் அரசனுக்கினதும்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

॥ பஞ்சமம் ப்ரஸாதநபர்வ ॥

கருமாலையில் வரும் கட்டம் கழிக்கும் கருத்துடையார்
ஒருமால் பெருகிய யோகின் முயன்று மதன்றியு நம்
திருமாலடியிணை திண் சரணுகு மென வரித்தும்
தருமாலினியவை தானே யெனத் தகவெண்ணுவரே. 10

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

ஐந்தாவது ப்ரஸாதந பர்வம்.

இப்படி ஸம்ஸாரத்தில் பயமுண்டானவர்கள் பகவானுடைய திருவடிகளை ஆஶ்ரயிப்பார்கள் என்று கீழ் ப்ரஸ்துதமான அர்த்தத்தை இந்தப் பர்வத்தில் விஸ்தாரமாக நிரூபிக்கக் கோலி முதலில் அதை ஸங்க்ரஹித்தருளிச் செய்கிறார்—'கருமாலையில்' என்றாரம்பித்து.

[ப - ம்.] கருமாலையில் - கர்ப்பங்களினுடைய பரம்பரையில், வரும் - உண்டாகிற, அதாவது தடுக்க முடியாமல் உண்டாகிற, கட்டம் - வ்யாதி, ஜரை, மரணம், முதலிய கஷ்டங்களை, கழிக்கும் - நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டும் என்கிற, கருத்துடையார் - எண்ணம் உடையவர்கள், ஒரு - ஒப்பற்ற, மால் - ப்ரீதி, நிரதிஶயப்ரீதி என்றபடி, பெருகிய - வ்ருத்தி அடைந்து வருகிற, அன்றிக்கே 'ஒரு' என்பதினால் தைலதாரைபோல் இடைவிடாமல் இருப்பது என்பதும், 'மால்' என்பதினால் ப்ரீதிரூபமா யிருப்பது என்பதும், 'பெருகிய' என்பதினால் நாள் செல்லச் செல்ல வளர்ந்து வருவதா யிருப்பதும் அருளிச் செய்யப்பட்டதாகவுமாம், யோகில் - பக்தி யோகத்தில், முயன்றும்- ப்ரயத்தினம் செய்தும், அதன்றியும் - அது இல்லாமல் போன போதிலும், அதாவது அது ஜ்ஞானஶக்தியுடையவர்களுக்கு ஸாத்யமானதென்பதும், அப்படிப்பட்ட அதிகாரம் இல்லாதவர்களுக்கு மேல் சொல்லப்படுகிற ப்ரபத்தியில் அதிகாரம் என்பதும் நிரூபிக்கப்பட்டதாகிறது, நம் - நம்முடைய, திருமால் - ஶ்ரிய:பதியினுடைய, அடியிணை - திருவடிகள் இரண்

இப்படி ஸம்யக்ஜ்ஞாந விவேக நிர்வேத விரக்தி பீதிகள் பிறந்தவனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தத்வாதிவிசேஷங்களுக்கெல்லாம், எருத்துக் கொடி யுடையானும் பிரமனு மிந்திரனும் மற்றுமொருத்தரும் இப்பிறவி யென்னும் நோய்க்கு மருந்தறியாதிருக்க மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணன் 1 'பஜஸ்வ மாம்' என்றும், 2 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றும் விதித்த பேஷஜங்களிரண்டில் பக்தியோகம் கர்மயோகாதிகளை முன்னிட்டுக்கொண்டு மேலும் வர்ணாச்ரமாதி தர்மங்

டையும், திண் - த்ருடமான, சரணாகும் - உபாயமாகும், என - என்று, வரித்தும்-ப்ரார்த்தித்தும், ப்ரார்த்தனா பூர்வகபரந்யாஸத்தைச் செய்தும் என்றபடி, இனி - இதற்குப் பிறகு, அவை - உபாயத்வேன வரிக்கப்பட்ட அந்தத் திருவடிகளையே, தானே, தரும் - கொடுக்கும், 'ஆல்' என்பது ப்ரீத்யதிசயத்தைக் காட்டுகிறது, என - என்று, தகவு - அந்த எம்பெருமானுடைய க்ருபையை, எண்ணுவர் - தங்களுக்குத் தஞ்சமாக நினைத்துக் கொண்டிருப்பார்கள், அன்றிக்கே அந்த க்ருபை வரும் ஸமயம் என்றைக்கோ என்று எண்ணி இருப்பர்கள், அதாவது சாதகவ்ருத்திகளாய் இருப்பார்கள் என்றபடி.

இனி இந்தப் பர்வத்தில் பக்தி ப்ரபத்திகள் என்கிற உபாயங்களினுடைய ஸ்வரூபங்களையும், அதிகாரங்கள் முதலிய விசேஷங்களையும் விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி' என்றது கீழ் நாலு பர்வங்களிலும் நிரூபித்திருக்கிறபடியே என்றபடி. எருத்துக்கோடி - வ்ருஷபத்வஜத்தை, உடையானும் - உடையவனாகிய ருத்திரனும், பிரமனும் - ப்ரும்மாவும், இந்திரனும், மற்றும் ஒருத்தரும் - வேறு எந்தத் தேவதையும், இப்பிறவி - இந்த ஜன்மம், என்னும் - என்று சொல்லப்படுகிற, நோய்க்கு - வ்யாதிக்கு. இருக்க - இருக்கையாலே என்றபடி. மருத்துவனாய் - வைத்தியனாய், நின்ற - நிற்கிற, மாமணிவண்ணன் - ச்லாக்யமான நீலரத்னம் போன்ற வர்ணத்தையுடைய பகவான் என்றபடி. மாம் - என்னைக் குறித்து, பஜஸ்வ - பக்திபண்ணு. மாமேகம் - என்னை ஒருவனையே, சரணம் - சரணமாக, வ்ரஜ - அடை. பேஷஜங்கள் - மருந்துகள், பக்தி ப்ரபத்திகள் என்றபடி. கர்மயோகாதிகளை - ஆதி சப்தம் ஜ்ஞானயோகத்தைச் சொல்லுகிறது, 'முன்னிட்டுக் கொண்டு' என்பதினால் அவைகள் முன் உண்டானால் தான் பின்னால் உண்டாகும் என்பது த்யோதிதம். மேலும் - தான் உண்டான பிறகும், வர்ணாச்ரமாதிதர்மங்களை - இங்கு ஆதி சப்தத்தினால் குலம், தேசம், முதலியது க்ரஹிக்கப்படுகிறது. 'அபேக்ஷித்து' என்பதினால் சோக அவைகள் காரணம் இல்லாமல் போன போதிலும் பக்தி யோகம் வ்ருத்தி அடைவதற்குக் காரணமான மனதின் சுத்திக்கு விரோதியான ரஜஸ் தமஸ்

---

1. கீதை-9-23. 2 கீதை - 18-66.

களை அபேக்ஷித்து ஆரம்பத்திலும் அந்தராயாவஸரங்களிலும் ப்ர பத்தியைக் கைதொடுமானமாகக் கொண்டு ப்ரவ்ருத்தமாய், [illegible] போலே அவிச்சின்னஸ்ம்ருதிஸந்தாநரூபமாய், ஸ்வப்நதீதர்ஸநாதி ஸப்தங்களாலே சொல்லும்படியான வெளிச்சிறப்பையுடைத்தாய், ஆஸ நாதிபரிகரயுக்தமாய்க் கொண்டு ஏகாக்ரதாநுகுணதேச காலங்களிலே அந்வஹமநுவர்த்திக்க வளர்ந்து வருவதாய், அந்திம ப்ரத்யயாந்தமாயிருக்கும். இது 1 'நாநா ஸப்தாதி பேதாத்' என் கிறபடியே அநேகவிதமாயிருக்கும். இவற்றில் அநந்யப்ரயோஜந னுக்கு பலவைஷம்யமில்லாமையாலே யதாருசி விகல்பம். 2 'நாஹ

ஸங்களை வ்ருத்தி செய்கிற பாபங்களை நிவ்ருத்தி செய்வதற்காக அவைகள் வேண்டியிருக்கின்றன என்பது த்யோதிதம். ஆரம்பத்திலும் - பக்தியோ கத்தை ஆரம்பிக்கும் பொழுதும், அந்தராயாவஸரங்களிலும் - விக்னங் கள் ஏற்படும் காலங்களிலும், கைதொடுமானமாக - கையால் பிடித்துக் கொள் ளப்படும் தடி முதலியவையாக, ஹஸ்தாவலம்பனம்பமாக என்றபடி. அதா வது பக்தியோகத்திற்கு அவஸ்யம் அபேக்ஷிதங்களான தர்மங்கள் முழுமை யும் நம்மால் அனுஷ்டிக்க முடியாதவைகளாகையினால் அவைகள் ஸ்தானத் திலே ப்ரபத்தியினால் வசீகரிக்கப்பட்ட பகவான் நின்று அந்தக் கர்மங்களினால் வரக்கூடிய பாப நிவ்ருத்யாதி பலங்களைக் கொடுப்பதற்காக முதலில் அங்கப்ர பத்தி செய்யவேண்டும், நடுவில் விக்னங்கள் ஏற்பட்டால் அவைகளை நிவ்ருத்தி செய்வதற்காகவும் மறுபடியும் ப்ரபத்தி செய்யவேண்டும் என்று தாத்பர்யம். அவிச்சின்ன-இடைவிடாத, ஸ்ம்ருதி - நினைவினுடைய. ஸந்தாநரூபமாய்- பரம்பரையாய். ஸ்வப்நதீ-கனவில் உண்டான புத்தி. தர்ஸந - நேரில் பார்ப் பது. வெளிச்சிறப்பை - விஸதமான ப்ரகாசத்தை. ஆஸநாதி - ஆஸனம் முத லிய, பரிகரயுக்தமாய் - அங்கங்களுடன்கூடியதாய். ஏகாக்ரதா - ஒரே விதமான ஊக்கத்தை உடையதாயிருக்கைக்கு, அநுகுண - தகுந்ததான, தேசகாலங்களிலே - தேசம், காலம், இவைகளில், அந்வஹம் - தினம் தோறும், அநுவர்த்திக்க - தொடர்ச்சியாகச் செய்துகொண்டுவர. அந்திம ப்ரத்யயாந்தமாய் - அந்திமப்ரத்யயத்தை முடிவாக உடையதாய். அந்திம ப்ரத்யயமாவது மரணமடையும் ஸமயத்தில் கடைசியில் உண்டாகும் நினைவு, அது பகவானைப் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று தாத்பர்யம். ஸப்தாதிபேதாத் - ஸப்தம் முதலியவைகள் வெவ்வேறாய் இருப்பதினால், நாநா - (ப்ரும்மவித்யைகள்) வெவ்வேறு. பலவைஷம்யம் - ப்ரயோஜன (பல)த்தில் வ்யத்யாஸம். யதாருசி - அவரவர்கள் புத்திக்குத் தக்கபடி,

---

1. ஸாரீரக ஸூத்திரம்-3-3-56. 2.

उज्झित्वा गोविन्दं अन्यमाराधयामि हो ' என்கிறபடியே அவனை யல்லால் மற்றொரு தெய்வந்தொழாதே 1 '**प्रणमन्ति देवाः**' என்னும் படியே யவர்கள் தொழ நிற்குமிவன் **अनन्यभक्त**ன். **प्रयोजनान्तरपर**னுடைய **भगवत्प्रेम**ம் **गणिकानुरागसदृश**ம். **अनन्यप्रयोजन**னுடைய **भगवत्प्रेम**ம் **पतिव्रतानुरागसदृश**ம். **आत्मगुण**ங்களில்லாதவனுக்கு ஸம்ஸ்காரங்களெல்லா முண்டானாலும் **शक्ति**யில்லை யென்றும், **आत्मगुणवृत्ति**யுடையவன் ஸம்ஸ்காரங்களில் பெற்றது கொண்டு **शक्त**னுமென்றும் **गौतमादि**கள் சொன்ன **वचन**ங்களில் 2 '**मयि चानन्ययोगेन भक्तिरव्यभिचारिणी**'

அதாவது எந்த வித்யையை அனுஷ்டிக்கலாம் என்று தோன்றுகிறதோ அதை அனுஷ்டிக்கலாம் என்றபடி. **अहं** - நான், **गोविन्दं** - கோவிந்தனாகிய பகவானை, **उज्झित्वा** - விட்டுவிட்டு, **अन्यं** - வேறு ஒருவனை, **न आराधयामि** - ஆராதிக்கவில்லை, '**हो**' என்றது ஸம்புத்தி. அவனை யல்லால் - அந்த ஸர்வேச்வரனையன்றி. **देवाः** - தேவதைகள், **प्रणमन्ति** - ஸேவிக்கிறார்கள். அவர்கள் தொழ நிற்கும் - அந்தத் தேவதைகள் ஸேவிக்கும்படி நிற்கிற. இவன் - கீழ்க்குறித்த பக்தி யோகநிஷ்டன். **अनन्यभक्त**ன் - வேறொருவரிடத்திலும் பக்தியைச் செய்யாதவன். **प्रयोजनान्तरपर**ன் - மோக்ஷத்தைத் தவிர மற்றப் புருஷார்த்தங்களில் ஆசை உடையவன். **भगवत्प्रेमं** - பகவானிடத்தில் உண்டான ப்ரீதி, பக்தி என்றபடி. **गणिकानुरागसदृशं** - தாஸிகள் புருஷர்கள் இடத்தில் ஆசைப்படுவதற்கு ஸமமாகும், அதாவது அவர்கள் எப்படித் தங்களுடைய ப்ரயோஜனத்திற்காகப் புருஷர்களிடத்தில் ப்ரீதி பண்ணுகிறார்களோ அதைப்போல இருக்கும் என்றபடி. **अनन्यप्रयोजन**ன் - வேறு ஒரு ப்ரயோஜனத்தில் ஆசை இல்லாதவன். **पतिव्रतानुरागसदृशं** - பதிவ்ரதையான ஸ்திரீ பர்த்தாவினிடத்தில் ப்ரீதி செய்வதற்கு ஸமானமாக இருக்கும், அதாவது அவர்கள் பர்த்தாவினுடைய ப்ரீதியையே முக்ய ப்ரயோஜனமாகக் கருதுவதைப்போல இருக்கும் என்றபடி. **आत्मगुण**ங்கள் - ஆத்மாவிற்கு அவச்யம் வேண்டியதான அமாநித்வம் முதலிய குணங்கள். **संस्कार**ங்கள் - உபநயனம், பஞ்ச ஸம்ஸ்காரம் (ஸமாச்ரயணம்) முதலியவைகள். பெற்றது கொண்டு - கிடைத்ததையே வைத்துக்கொண்டு. **मयि च** - என்னிடத்தில், **अनन्ययोगेन** - வேறு ஒருவரிடத்திலும் ஸம்பந்தப் படாமையினால், **अव्यभिचारिणी** - வ்யபிசார தோஷம் இல்லாத, **भक्तिः च** -

---

1. விஷ்ணுதர்மம்-43-28. 2. கீதை-13-10.

என்கிற பரமாத்மனா வரணீயதா ஹேது குணவிசேஷம் ச்ரேஷ்டதமம்.

இப்படி ஸாங்கமான பக்தியோகத்தில் அதிகாரிக்கைக்கீடான விளம்பாக்ஷமத்வஜ்ஞாநசக்த்யாதிகளன்றிக்கே 1 'நின்னருளே புரிந்திருந்தேன்,' 2 'துணியேனினி நின்னருளல்ல தெனக்கு,' 3 'உன் திருவருளாலன்றிக் காப்பரிதால்' என்றிருக்கு மதிகாரிக்கு அநுஷ்டேயமான சரணவரணம் ஆநுகூல்யஸங்கல்பாதிவிசிஷ்டமாய், 4 'அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே' இத்யாதிகள்படியே உபாயத்வாந்விதஸ்தத்விஷ

பக்தியும். பரமாத்மனா - பரமாத்மாவினால், வரணீயதா - வேண்ட (வரிக்கப்)படக் கூடியவனா யிருக்கைக்கு, ஹேது - காரணமான, குணவிசேஷம் - பகவானிடத்தில் மிகவும் அதிகமான ப்ரீதியாகிற குணம்.

இப்படி - கீழ் நிரூபித்தருளிய ப்ராகாரமாக. ஸாங்கமான - அங்கங்களுடன் கூடிய. அதிகாரிக்கைக்கீடான - அதிகாரியாவதற்குத் தகுந்ததான, விளம்பாக்ஷமத்வம் - பலத்தில் ஸாவகாசத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கை, ஜ்ஞாந - அதை அறியக்கூடிய ஜ்ஞானம், சக்தி - அதை அனுஷ்டிக்கக் கூடிய சக்தி, 'ஆதி' சப்தம் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் வர்ணாச்ரமங்களை உடையவனா யிருக்கையைச் சொல்லுகிறது, அன்றிக்கே - இல்லாமல். நின் - உன்னுடைய, அருளே - க்ருபையையே, புரிந்து இருந்தேன் - எனக்கு ரக்ஷகமாக அங்கீகரித்துக் கொண்டிருந்தேன். எனக்கு நின் அருள் அல்லது - உன்னுடைய க்ருபையைத் தவிர மற்றொன்றை, துணியேன் - ரக்ஷகமாக விச்வாஸம் செய்யமாட்டேன். உன் திருவருளாலன்றி - உன்னுடைய க்ருபையைத் தவிர வேறு ஒன்றினால், காப்பு - ரக்ஷிப்பது, அரிது - அசக்யம், 'ஆல்' என்பது துக்கத்தைக் காட்டும் அவ்யயம். அநுஷ்டேயமான - அனுஷ்டிக்கத்தக்கதான, சரணவரணம் - சரணமாக வரித்தல், சரணாகதி என்றபடி. ஆநுகூல்யஸங்கல்பாதிவிசிஷ்டமாய் - ஆனுகூல்ய ஸங்கல்பம் முதலிய அங்கங்களோடு கூடினதாய். ஸ்வாபீஷ்டே - தனக்கு இஷ்டமான பலம், அநந்யஸாத்யே - வேறு ஒன்றினாலும் ஸாதிக்க முடியாமல் இருக்கும் பொழுது (மஹா விச்வாஸத்துடன் கூடினவனாய்க் கொண்டு பகவான் ஒருவனே உபாயமாகவேண்டுமென்று யாசிப்பது ப்ரபத்தி, அது தான் சரணாகதி). உபாயத்வாந்வித - உபாயத்வ ப்ரார்த்தனையுடன் சேர்ந்த, அவ்விஷயத்தில் - எதற்காகப் பரந்யாஸம் செய்யப்பட்டதோ அந்த

---

1. பெரியாழ்வார் திருமொழி - 5-4-1. 2. பெரிய திருமொழி - 11-8-8.
3. திருவிருத்தம் - 62. 4. பாதமுனி வாக்யம்.

ஸந்ந்யாஸஸாம்யமாயிருக்கும். அஜ்ஞாகிஞ்சநனுடைய ஸந்ந்யாஸத்திற்குமவ்விஷயத்தில் அதஊர்த்வசேஷமில்லை. ஸர்வசக்தியினுடைய ஸங்கல்பத்துக் கவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமமில்லை. இரண்டுமிப்படி ஸக்ருத்தாயிருக்கும். ஆசார்யனாலே தன்னை ந்யஸ்தனாகவறிந்த சிஷ்யன் தான் ஸந்ந்யாஸம் பண்ணான். இவனுக்கு மத்யத்தில் சங்காதிகள் வந்தாலும் ஆசார்யனுடைய ஸந்ந்யாஸம் பலாவிநாபூதம். அவன் தனக்காகப் பண்ணின ஸந்ந்யாஸம் தனக்கு விதிதமல்லாதபோது தானும் ஸந்ந்யாஸம் பண்ணினால் பூர்வஸந்ந்யாஸம் பலித்தே விடும். பின்பிலிது மிகுதியான ஸுக்ருதத்தின்படியாம். உயர்ந்த திடர்க்கடைத்தேற்றலாம்படி தாழ்ச்சியுடைய விஷயத்தில் தானே ப்ரவஹிக்கும்படியான க்ருபாகுணத்தாலே ஸ்வதந்த்ர சேஷி தன் கூறாகவும் தன் பேறாகவும் மேலுள்ள நன்மைகளை யெல்லாம்

விஷயத்தில், அதஊர்த்வசேஷம் - இதற்குப் பிறகு செய்யவேண்டிய பாகம். ஸர்வசக்தியினுடைய - எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஸாமர்த்தியமுடைய பகவானுடைய. அவாந்தரவ்யாபாராபேக்ஷாநியமம் - நடுவில் ஒரு வ்யாபாரத்தை அபேக்ஷிக்கவேண்டும் என்கிற நியமம். இரண்டும் - பரந்யாஸமும், பகவானுடைய ஸங்கல்பமும், ஸக்ருத்தாயிருக்கும் - ஒருதரம் செய்யக்கூடியதாயிருக்கும். ந்யஸ்தனாக - பரந்யாஸம் செய்யப்பட்டவனாக. சங்காதிகள் - ஸந்தேஹம் முதலியவைகள், பலாவிநாபூதம் - பலத்தை விட்டுப் பிரியாதது. அவன் - அந்த ஆசார்யன், தனக்காக - சிஷ்யனாகிய தனக்காக. விதிதமல்லாதபோது - அறியப்படாமல் இருக்கும் காலத்தில், பூர்வஸந்ந்யாஸம் - முன்பு ஆசார்யனால் செய்யப்பட்ட பரந்யாஸம். பின்பிலிது - தன்னால் செய்யப்பட்ட இந்தப் பரந்யாஸம். ஸுக்ருதத்தின்படியாம் - இவனால் செய்யப்படும் ப்ரதக்ஷிணம், அஞ்ஜலி, நமஸ்காரம் முதலியவைகளைப் போலாய்விடும், அதாவது மோக்ஷத்திற்குக் காரணமாகவன்றிக்கே பகவத் ப்ரீதிக்குக் காரணமாகும் என்றபடி. உயர்ந்த - உந்நதமான, திடர்க்கு - மேட்டு நிலத்திற்கு, அடைத்து - தடுத்து, ஏற்றலாம்படி - ஏறும்படி செய்யலாம் என்னும்படியாக. தாழ்ச்சியுடைய - தாழ்ந்திருக்கையை உடைய, அன்றிக்கே தன்னிடத்தில் ப்ராவண்யத்தையுடைய, தானே ப்ரவஹிக்கும்படியான - ஒருவருடைய ப்ரயத்னமன்றிக்கே தானே ப்ரவஹிக்கக்கூடிய. க்ருபாகுணத்தாலே - க்ருபை என்கிற குணத்தினாலே. ஸ்வதந்த்ர சேஷி - ஸ்வதந்த்ரனும் சேஷியாயும் இருக்கிற எம்பெருமான், தன்கூறாகவும் - தன்னுடைய பாகமாகவும், அதாவது தன்னால் செய்யவேண்டிய கார்யமாகவும், தன்பேறாகவும் - தன்னுடைய ப்ரயோஜனமாகவும், மேல் உள்ள - ப்ரபத்திகாலத்திற்குப்

விளக்கும். இந்த ப்ரபத்தி 1 'தாவதார்த்தி:' இத்யாதிகள்படியே அங்கமாயும் ஸ்வதந்த்ரமாயும் நின்று ஸகலபலஸாதநமாகையாலும், ஸ்வேஷ்டஸித்திக்குக் கை முதலற்று ஶரண்யஸ்வபாவாதிவிஜ்ஞாநமுடையாரெல்லாருக்கும் அதிகரிக்கலாமாகையாலும், தன் பலம் போலே தேஶகாலாதி நியமமில்லாமையாலும், ஸபரிகரமாக ஸக்ருதநுஷ்டேயமாகையாலும், ஸுகரமாகையாலும், 2 'உபாயஸ்ஸுகரஸ்ஸோऽயம் துஷ்கரஶ்ச மதோ மம' என்னும்படியான வ்யவஸாயகௌரவத்தை யுடைத்தாகையாலும், ப்ரஹ்மாஸ்த்ரதுல்ய

பிறகு உண்டாகக்கூடிய, நன்மைகளை - ஹிதங்களை, விளக்கும் - உண்டாக்கும். **ஆர்த்தி:** - ஆர்த்தியானது, **தாவத்** - அவ்வளவே (அதாவது எது வரையில் ஸர்வ பாபங்களையும் போக்கடிக்கக் கூடிய பகவானை சரணமாக அடையவில்லையோ அதுவரையில்). **அங்க**மாயும் - பக்தி யோகத்திற்கு அங்கமாயும். **ஸகலபலஸாதந**மாகையாலும் - எல்லாப் பலங்களையும் கொடுக்கக்கூடிய தாகையினாலும். **ஸ்வேஷ்டஸித்திக்கு** - தன்னுடைய இஷ்டபலம் ஸித்திப்பதற்கு, கைமுதலற்று - தன் கையில் ஒரு உபாயமுமில்லாமல். **ஶரண்ய** - நம்மால் ஶரணமாக அடையத் தகுந்தவனாகிய பகவானுடைய, **ஸ்வபாவ** - கருணை முதலிய குணங்களை உடையவனாயிருக்கை. **ஆதி** பதம் ப்ரபத்தி விஷயமான அங்காங்கி ஜ்ஞானத்தைக் குறிக்கிறது. **விஜ்ஞாநம்** - நிஶ்சய ரூபமான ஜ்ஞானம். **அதிகரி**க்கலாமாகையாலும் - அனுஷ்டிக்கக்கூடு மாகையினாலும், தன்**பலம்** - ப்ரபத்தியின் பலமான மோக்ஷம். **தேஶகாலாதிநியமம்** - இன்ன காலத்தில் இந்த இடத்தில் தான் அனுஷ்டிக்கலாம் என்கிற நியமம். மோக்ஷமாகிற பலத்திற்கு இந்தத்தேஹம் விட்டபிறகு என்கிற காலநியமமும், நித்யவிபூதி என்கிற தேஶ விஶேஷத்தில் சென்றால்தான் என்கிற தேஶநியமமும் உண்டு, அது இங்கில்லை என்றபடி. **ஸபரிகர**மாக - அங்கங்களுடன் கூடியதாக. **ஸுகர**மாகையாலும் - ஸுலபமாய் அனுஷ்டிக்கக்கூடிய தாகையினாலும். **ஸோऽயம்**- அப்படிப்பட்ட இந்த, **உபாய:**-ப்ரபத்தியாகிற உபாயம், **ஸுகர:** - ஸுலபமாய்ச் செய்யக்கூடியதாயும், **துஷ்கரஶ்ச**-ஸுலபமாய்ச் செய்யக்கூடாததாயும், **மம**-எனக்கு, (என்னுடைய), **மத:**-அபிப்ராயத்தில்கொள்ளப்பட்டது. **வ்யவஸாய கௌரவம்**-மஹாவிஶ்வாஸத்தில் உண்டான ப்ரயாஸம். **ப்ரஹ்மாஸ்த்ரதுல்ய**த்தையாலும் - ப்ரும்மாஸ்திரத்திற்கு ஸமமாக இருக்கிறபடியினாலும், அதாவது வேறொரு உபாயத்தைத் தனக்கு ஸஹாயமாக அனுஷ்டிப்பதைப் பொறாத

---

1. விஷ்ணு புராணம்-1-9-73. 2. லக்ஷ்மீ தந்திரம்-17-104.

தையாலும், யஜ்ஞாதிஸத்ருஶங்களைப்போலே நாஶப்ரதிபந்தார்ஹ-மல்லாமையாலும், ஶரண்யோபநிஷத்துக்களுக்கெல்லாம் ஶிரோபூஷணமென்னும்படி மேலாய் நிற்கையாலும், இதின் ப்ரபாவம் 1 'ஸத்கர்மநிரதா:' இத்யாதிகளாலே பரக்கப் பேசப்பட்டது.

மற்றுள்ள ஸாத்யோபாயங்கள்போலே அதிகாரிக்ருத்யமான ப்ரபதநத்தில் சிலருடைய அதிகாரிவிஶேஷணத்வாதி வ்யபதேஶம் ஸித்தோபாய ப்ராதாந்யபரம். ஶ்ருதியில் ந்யாஸஶப்தஸ்ஸ

தாகையினாலும் என்றபடி. நாஶ - நாஶம் செய்வது, ப்ரதிபந்த - தடுப்பது, இவைகளைச் செய்வதற்கு, அர்ஹ-மல்லாமையாலும் - தக்கதல்லவாகையாலும், அதாவது வேறு ஒரு கர்மங்களின் பலத்தினால் இதின் பலம் நாசமடையவாவது தடுக்கப்படவாவது செய்யமுடியாதது என்றபடி. ஶரண்யோபநிஷத் - ஶரண்யனாகிய பகவானால் உபதேஶம் செய்யப்பட்ட ஸ்ரீ கீதை என்கிற உபநிஷத், மேலாய் உத்க்ருஷ்டமாய். ஸத்கர்மநிரதா:- கர்மயோகத்தில் நிஷ்டையுடையவர்கள் 1 'ஸத்கர்மநிரதாஶ்ஶுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா। நார்ஹந்தி ஶரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி॥' என்று பூர்ணஸ்லோகம். பரக்க - விஸ்தாரமாக.

இப்படி பக்தி ப்ரபத்திகளாகிற உபாயங்களை நிரூபித்தருளி இவைகளில் சிலருக்கு உண்டாகும் ஶங்கைகளைஸங்க்ரஹமாகப் பரிஹரித்தருளுகிறார்-'மற்றுள்ள' என்றாரம்பித்து. மற்றுள்ள-ப்ரபத்தியைக் காட்டிலும் வேறான, ஸாத்யோபாயங்கள்-ஜ்யோதிஷ்டோமாதியஜ்ஞங்கள், பக்தியோகம், முதலியவைகள் அதிகாரிக்ருத்யமான-தான் அதிகாரியாக இருந்த பிறகு தன்னால் செய்யப் படக்கூடியதான. அதிகாரிவிஶேஷணத்வாதி வ்யபதேஶம் - அதிகாரி விஶேஷணம் என்று சொல்லியிருப்பது, ஸித்தோபாய ப்ராதாந்யபரம்-ஸித்தோபாயமான எம்பெருமானே மோக்ஷம் கொடுப்பதற்கு அவ்யவஹித காரணமாகையினால் அவனே ப்ரதானோபாயம் என்று சொல்லுவதில் தாத்பர்யத்தை உடையது. அதாவது இவ்வுபாயங்கள் ஸித்தோபாயமான எம்பெருமானுக்கு ஸ்வாபாவிகமான ஸஹஜ காருண்யத்தைத் தடுத்துக்கொண்டிருக்கிற நம்முடைய கர்மங்களினால் உண்டான நிக்ரஹ ஸங்கல்பத்தை நிவ்ருத்தி செய்வதற்குக் காரணமாகையினால் பரம்பரையாக உபாயங்கள், இப்படி நிக்ரஹ ஸங்கல்பம் நிவ்ருத்தித்தால் தன் ஸஹஜ காருண்யத்தினால் எம்பெருமான் தானே

---

1. லக்ஷ்மீ தந்திரம்-17-62.

1. நல்ல கர்மங்களில் நிஷ்டையை யுடையவர்களும் அப்படியே ஜ்ஞான யோகம் பக்தி யோகம் இவைகளை அறிந்தவர்களும் ஶரணாகதி செய்தவனுடைய கோடியில் ஒன்றாகிய பாகத்தையும் பெறுகிறதில்லை.

ஸாதநாதிகாரணாம் அந்யபரம். பகவதநந்யார்ஹசேஷ பூதனுக்கு பகவதநிஷ்டமில்லாத விஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் கைங்கர்யமும் ஸ்வரூபவிருத்தமென்னலாயிருக்க பக்தியோகத்தை விசேஷித்து ஸ்வரூபவிருத்தமென்றவர்களுக்கு அபி

பலப்ரதனுய் நிற்கிறுன் என்கிற அவனுடைய ப்ராதான்யத்தைச் சொல்லுவதில் தாத்பர்யம் என்றபடி. இப்படிக்கில்லாவிடில் அதிகாரியானபிறகு செய்ய வேண்டிய கார்யமாக விதிக்கப்பட்டிருக்கும் ப்ரபத்தியை அந்த உபாயத்தை அனுஷ்டிப்பதற்கு முன்னமேயே உண்டா யிருக்க வேண்டியதான அதிகாரி விஶேஷணம் என்று சொல்லுவது உசிதமல்ல என்று தாத்பர்யம். அதிகாரி விஶேஷணமா யிருந்தால் அதற்கு விதிக்கப்படும் தன்மை (விதேயத்வம்) கூடா திறே. ஶ்ருதியில் ந்யாஸமே ப்ரும்மம் என்று சொல்லி யிருப்பதினுல் பரமாத்மாவே உபாயம், பரந்யாஸம் என்று தனித்தொரு உபாயம் இல்லை என்று ஏற்படுகிறதே என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறுர் - 'ஶ்ருதியில்' என்றுரம்பித்து. 'ந்யாஸ ப்ரஹ்மஸாதநாதிகாரணாம் - ந்யாஸ, ப்ரும்ம என்னும் பதங்களை ஒன்றுசேர்த்து ந்யாஸமே ப்ரும்மம் என்று சொல்லி யிருப்பது, அந்யபரம் - வேறு தாத்பர்யத்தை உடையது, அதாவது கீழ் இவனுல் செய்யப்படக் கூடிய ஸத்யம், தபஸ், சாந்தி, தாந்தி, தானம் முதலியவைகளை நிரூபித்துக் கொண்டுவந்து 'ந்யாஸ இதி ப்ரஹ்ம' என்று சொல்லி யிருப்பதுவும் கீழ் நிரூபிக்கப்பட்டவைகளைப் போல இவனுல் செய்யப்படக் கூடிய தொன்றுய் இருக்க வேண்டும், ஆதலால் அந்தப் பரமாத்மாவைச் சீக்கிரத்தில் அடைவதற்கு ஸாதனமாகையினுல் அது பரமாத்மாவைப் போல் ஸர்வோத்க்ருஷ்டமானது என்று சொல்லுவதில் தாத்பர்யம். மேல் அனுவாகத்திலும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் ந்யாஸமே ப்ரதானம் என்று சொல்லி அதை அனுஷ்டிக்கும் ப்ரகாரத்தையும், கரண மந்திரத்தையும் நிரூபித்திருக்கிறபடியினுலும் இதுவே அர்த்தமாகக் கடவது. உபாயாந்தரம் ஸ்வரூபவிருத்தம் என்று சொல்லி யிருப்பதற்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறுர் - 'பகவதநந்யார்ஹ' என்றுரம்பித்து. இது ஹேதுகர்ப்ப விஶேஷணம், அதாவது பகவானுக்கு அநங்யார்ஹஶேஷ பூதனுகையாலே அவனுக்கு இஷ்டம் இல்லாத விஷயத்தில் பக்தியும் ப்ரபத்தியும் கைங்கர்யமும் இவனுக்கு ஸ்வரூப விருத்த மென்றபடி. இத்தால் பக்தி ஸ்வரூப விருத்தம் என்பது எத்தாலே? பகவானுடைய இஷ்டத்திற்கு விருத்தமாகையினுல் என்னில், மோக்ஷார்த்தமாகப் பண்ணுகிற பக்தி பகவானுடைய இஷ்டத்திற்கு விருத்தம் என்ன ஒண்ணுது, அப்படியாகில் மோக்ஷார்த்தமாகச் செய்யப்படும் ப்ரபத்தியும் ஸ்வரூப விருத்தமாக ப்ரஸங்கிக்கும். ப்ரயோஜனுந்தரத்திற்காகச் செய்யப்படும் பக்தி ஸ்வரூப விருத்தம் என்னில், அது ப்ரபத்தியிலும் துல்யம். ஆதலால் ஶாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்

காரிவிஶேஷஸாபேக்ஷவிஷயத்திலே தாத்பர்யம். தேஶகாலாதிகாரிபேதத்தாலே ஶ்ரமாஶ்ரமவிகல்பம் ப்ராயஶ்சித்தாதிகளெல்லாவற்றிலும் ப்ரஸித்தம்.

இப்படி யதாதிகாரம் ஸர்வப்ராயஶ்சித்தமாக விஹித பக்திப்ரபத்திகளி லொரு வழியிலே யிழிந்தவனுக்கு அப்போதே உத்தர

குமவற்றில் ஒன்றை ஒரு காரணமும் இல்லாமல் ஸ்வரூப விருத்தமென்பது உசிதமல்ல. ஆதலால் அப்படிச் சொல்லி யிருப்பதற்குத் தாத்பர்யம் வேறு கல்பிக்கவேண்டும் என்று திருவுள்ளம். அதாவது அகிஞ்சனனான இவ்வதிகாரிக்கு பக்தியோகம் ஸ்வரூப விருத்தம் என்று சொல்லுவதில் தாத்பர்யம் கொள்ளவேண்டும் என்றபடி. 'அதிகாரிவிஶேஷ' என்பதுடன் அகிஞ்சனனான என்று ஒரு பதம் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று திருவுள்ளம். அதிக ஶ்ரமப்பட்டுச் செய்யவேண்டிய கார்யத்திற்கும் ஸுலபமாகச் செய்யக்கூடிய கார்யத்திற்கும் ஒரே பலம் என்று சொல்லில் ஶ்ரமப்பட்டுச் செய்ய வேண்டிய கார்யத்திற்கு அதிகாரிகள் ஒருவரும் ஏற்படமாட்டார்க ளாகையினால் அதை விதிக்கிற ஶாஸ்திரங்கள் வ்யர்த்தங்களாக வேண்டிவருமே என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்— 'தேஶகால' என்றாரம்பித்து. 'தேஶபேத' என்றது விந்த்ய பர்வதத்திற்கு வடக்கில் சில தர்மங்களும், அதற்குத் தெற்கு தேசத்தில் வேறு சில தர்மங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன என்றபடி. 'காலபேத' என்றது 'த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேऽர்ச்சயந் । யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேஶவம் ॥' இத்யாதிகளிற்படியே க்ருதயுகத்தில் த்யானயோகத்தினாலும், த்ரேதாயுகத்தில் யஜ்ஞங்களினாலும், த்வாபரயுகத்தில் பகவானை ஆராதிப்பதினாலும், எந்தப்பலம் அடையலாமோ அதைக் கலியுகத்தில் பகவந்நாம ஸங்கீர்த்தனத்தினால் அடையலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றபடி. 'அதிகாரிபேத' மாவது ஶக்தன் அசக்தன் என்கிற பேதத்தினால் ஸ்நானாதிகள் விதிக்கப்பட்டிருக்கிறது என்றபடி. ஶ்ரமாஶ்ரமவிகல்பம் - ஶ்ரமப்பட்டுச் செய்கிற கார்யத்தையும் ஶ்ரமம் இல்லாமல் செய்கிற கார்யத்தையும் ஒரே பலத்திற்குக் காரணமாக விகல்பித்துச் சொல்லி யிருப்பது.

இப்படி பக்தி ப்ரபத்திகளில் தன் அதிகாரத்திற்குத் தக்கபடி ஒன்றை அனுஷ்டிப்பவனுடைய கர்மங்கள் விநாசமாகும் ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. யதாதிகாரம் - அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி. வழியிலே - உபாயத்திலே. இழிந்தவனுக்கு - இறங்கினவனுக்கு, அனுஷ்டிக்க ஆரம்பித்தவனுக்கு என்றபடி. அப்போதே -

பூர்வாகாஶ்லேஷ விநாஶங்களுண்டாம். உத்தராகாஶ்லேஷம் ப்ராமாதிகவிஷயம். விவேகாதி ஸம்பத்தியுடையாருக்கு புத்திபூர்வோத்தராகம் அநாபத்தில் புகாது. அல்பவிவேகருக்கு மின்னொளி போலே தோற்றி ப்ராயஶ்சித்தாந்தமாய் மறையும். ஶமாதி

உபாயாநுஷ்டான ஆரம்பகாலத்திலேயே. 'உத்தர' இத்யாதி - உத்தராகங்களுக்கு அஸ்லேஷமும், பூர்வாகங்களுக்கு விநாஶமும் உண்டாம் என்று யதாக்ரமம் அந்வயித்துக் கொள்ளவேண்டும். உத்தராகங்கள் என்றது உபாயாநுஷ்டானத்திற்குப் பிறகு செய்யப்படும் பாபகர்மங்கள். அவைகளுக்கு அஸ்லேஷமாவது இவனுக்கு அவற்றின் பலத்தைக் கொடுப்பதில்லை என்று ஸங்கல்பிப்பது. பூர்வாகங்கள் என்றது உபாயம் அநுஷ்டிப்பதற்கு முன்பே செய்த பாபங்கள். அவைகளுக்கு விநாஶமாவது அவற்றின் பலம் இவன் அடையவேண்டும் என்று முன்பு செய்த ஸங்கல்பத்தை மாற்றி விடுதல். இப்படிப் பின்னுல் செய்யப்படும் பாபங்களின் பலத்தையும் இவன் அடைகிறதில்லை என்னில், உபாயாநுஷ்டானத்திற்குப் பிறகு தன் இஷ்டப்படி நடக்கலாமே என்கிற ஶங்கைக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறுர் - 'உத்தராகாஶ்லேஷம்' என்றுரம்பித்து. ப்ராமாதிகவிஷயம் - புத்திபூர்வகமாக வல்லாமல் செய்யப்படும் அவற்றைப் பற்றியது. புத்திபூர்வகமான உத்தராகங்களைப் பற்றி நிரூபித்தருளுகிறுர்-'விவேகாதி' என்றுரம்பித்து. 'விவேகாதிஸம்பத்தியுடையாருக்கு' என்றது கீழ்ப் பர்வங்களில் நிரூபித்தபடியே தத்வ விவேகத்தினுல் இதுவரையில் செய்யப்பட்டவைகளைப் பற்றி நிர்வேதமும், ப்ரயோஜனுந்தரங்களில் வைராக்யமும், நரகாதிகள் உண்டானுல் என்செய்வோம் என்கிற பயமும் பூர்ணமாக உடைய அதிகாரிகளுக்கு என்றபடி. புத்திபூர்வோத்தராகம் - இது பாபம் என்று தெரிந்து செய்யப்படும் பாபம், அநாபத்தில் - ஆபத்து இல்லாத ஸமயத்தில். இத்தால் ஆபத்காலத்தில் புத்தி பூர்வோத்தராகம் உண்டானுல் அதுவும் அஸ்லேஷ விஷயமாகும் என்பது த்யோதிதம். 'ப்ராரப்தகர்மவிஶேஷவஶத்தாலே தேஶகாலாவஸ்தாவைகுண்ய ஹேதுகமாகவும் ப்ராமாதிகமாகவும் ஸூக்ஷ்மாஸூக்ஷ்மாவஸ்தைகளிலும் வரும் அபராதலேஶங்களுள்ளவை அஶ்லேஷ விஷயமாய்க் கழிந்துபோம்' என்று ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச் செய்யப்பட்டதிறே. அல்பவிவேகருக்கு - குறைந்த விவேகமுடையவர்களுக்கு. மின்னொளிபோலே - மின்னலின் ப்ரகாசத்தைப்போல. தோற்றி - உண்டாகி, ப்ராயஶ்சித்தாந்தமாய் - ப்ராயஸ்சித்தத்தை முடிவாக உடையதாய், அதாவது புத்தி பூர்வோத்தராகம் உண்டாயிற்று என்று அறிந்து, அதற்குத் தன் அதிகாரத்திற்கு அநுகுணமாக ப்ராயஸ்சித்தாதிகளை அநுஷ்டிக்க அத்தாலே நாசமடையும் என்றபடி. மறையும் - நிவ்ருத்தியடையும்.

காடிந்யமுடையாருக்கு ஶிக்ஷாவிஶேஷங்களாலே பிரித்தலுண்டாம் ஸர்வபூர்வவிநாஶம் ப்ராரப்தவ்யதிரிக்தவிஷயம். ஸ்வதந்த்ரப்ரபத்திநிஷ்டனை செய்த வேள்வியனானவனுக்கு ப்ராரப்தகார்யமான ஸுக்ருததுஷ்க்ருதத்திலும் ஆர்த்தியினளவுக்கிடாக தேஹாந்தராஸ்ருதி

ப்ராயஶ்சித்தம் செய்யாதவர்களுக்கும் அது நிவ்ருத்தியாகும் ப்ரகாரத்தை அருளிச் செய்கிறார் - 'காமாதி' என்றாரம்பித்து. காம - ஆசை. 'ஆதி' என்பதினால் க்ரோதம் அஸூயை முதலியவைகள் க்ரஹிக்கப்படுகின்றன. காடிந்யம் - கடினமாயிருக்கை, அதாவது உறுதியா யிருக்கை. இத்தால் ப்ராயஶ்சித்தாதிகளில் மூளாதவர்கள் இவர்கள் என்பது த்யோதிதம். உறுதியான காமக்ரோதம் முதலியவைகளை உடையவர்களுக்கு அனுதாபாதிகள் உண்டாகாமையினாலே ப்ராயஶ்சித்தத்தில் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்பதும் இத்தால் விவக்ஷிதம். ஶிக்ஷாவிஶேஷங்களாலே - சில தண்டனைகளாலே, அதாவது அந்தந்தக் கர்மங்களுக்குத் தக்கபடி ஏற்பட்ட சிக்ஷைகளன்றிக்கே 1 'இஹைவ கைஶ்சித் க்லேஶா பவந்தி', 2 'ஏவம் தண்ட: ப்ரபன்னஸ்ய ராஜபுத்ராபராதவத்' இத்யாதிகளிற்படியே லகுஶிக்ஷைகளினாலே என்றபடி. பிரித்தல் - அபராதத்தை விட்டு வேறாக்குதல், அதாவது அபராத நிவ்ருத்தி என்றபடி. இவ்வளவாக உத்தராகத்தின் நிவ்ருத்தி க்ரமத்தை நிரூபித்தருளி மேல்பூர்வாகங்கள் விநாசமாகும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் - 'ஸர்வபூர்வ' என்றாரம்பித்து. ப்ராரப்தவ்யதிரிக்தவிஷயம் - பலம் கொடுக்க ஆரம்பித்த கர்மங்களைத் தவிர மற்றவைகளைப் பற்றியது, அதாவது பலம் கொடுக்க ஆரம்பித்திருக்கும் கர்மங்களைத் தவிர மற்றக் கர்மங்கள் நசித்துவிடும் என்றபடி. ஸ்வதந்த்ரப்ரபத்திநிஷ்டனை - பக்திக்கு அங்கமாக வல்லாமல் மோக்ஷார்த்தமாக ப்ரபத்தியை அனுஷ்டித்தவனை. செய்த - செய்யப்பட்ட, வேள்வியன் - யஜ்ஞங்களை உடையவன், அதாவது ப்ரபன்னன் எல்லா யஜ்ஞங்களையும் செய்தவனுக்குத் துல்யன் என்றபடி. அன்றிக்கே ஆத்மஸமர்ப்பண ரூபமான யஜ்ஞத்தைச் செய்தவன் என்றாகவுமாம். ப்ராரப்தகார்யமான - தன்னுடைய கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தவைகளான. அளவுக்கு - தாரதம்யத்திற்கு. தேஹாந்தர - மற்றொரு தேஹம். 'ஆஸ்ருதி' பதம் அடுத்த க்ஷணம் முதலாக இவனுக்கு எந்த க்ஷணத்தில் மோக்ஷமடைய வேண்டும் என்றிருக்கிறதோ அதுவரையில் உள்ளகாலம் எல்லாவற்றையும் குறிக்கிறது. இப்படி ஸர்வபாப நிவ்ருத்தியா

---

1. இந்த லோகத்திலேயே சில கஷ்டங்கள் உண்டாகின்றன.

2. ராஜபுத்திரர்களுடைய அபராதத்திற்குப் போல ப்ரபன்னனுக்கு லகுவான தண்டனை உண்டாகிறது.

ஹேதுவான ஸம்ஸாரம் கழியும். 1 'யஸ்ய ப்ரஸாதே ஸகலா:', 2 'ப்ரஸந்நோऽபவத்தஸ்ய' இத்யாதிகளின்படியே இவனளவில் ஸத்வஸ்தரானவர்களெல்லாரும் ஸுப்ரஸந்நராவார்கள். பகவத்ஸ்வீக்ருதனுக்கு யமவஸ்யதாதிகளில்லையென்னுமிடம் 3 'பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்', 4 'தேவம் ஸார்ங்கதரம் விஷ்ணும்', 5 'நலியு நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை', 6 'நமன்கூறு செய்துகொண்டிறந்த குற்றமெண்ண வல்லனே', 7 'நாவலிட்டுழிதருகின்றோம் நமன்றமர் தலைகண்மீதே', 8 'நரகமே சுவர்க்கமாகு நாமங்க

கிற பலத்தை நிரூபித்தருளி, ஆநுஷங்கிகமாக வரும் பலத்தை அருளிச்செய்கிறார் - 'யஸ்ய' என்றாரம்பித்து. யஸ்ய - எந்தப் பகவானுடைய, ப்ரஸாதே - அநுக்ரஹம் இருக்கும் பொழுது, ஸகலா: - எல்லா ப்ராஜைகளும்(ஸந்தோஷத்தை உடையதாகுமோ). (பகவான் ப்ரஸந்நமாயிருக்கும்பொழுது ஸ்தாவரம் ஜங்கமம் ஆகிய எல்லாம்) ப்ரஸந்நம்-ப்ரஸந்நமாக, தஸ்ய-அவனுக்கு, அபவத்-ஆயிற்று. இவனளவில்-இவன் விஷயத்தில். ஸத்வஸ்தரானவர்கள் எல்லோரும் - ஸத்வகுணத்தில் நிஷ்டையுடையவர்கள் எல்லோரும். பகவத்ஸ்வீக்ருதனுக்கு - பகவானால் அங்கீகரிக்கப்பட்டவனுக்கு. யமவஸ்யதை - யமனுக்கு வசப்பட்டவனா யிருக்கை. 'ஆதி' பதம் நரகவாஸத்தைச் சொல்லுகிறது. மதுஸூதந ப்ரபந்நாந் - மதுவைக் கொன்றவனாகிய பகவானை ஆஸ்ரயித்தவர்களை, பரிஹர - விட்டுவிடு. ஸார்ங்கதரம் - ஸார்ங்கத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற, விஷ்ணும்-விஷ்ணு என்கிற, தேவம்-தேவனை, ('யே ப்ரபந்நா: வராஹம் । ந தேஷாம் யமஸாலோக்யம் ந வை தே நரகௌகஸ:' என்று மேல் ஸ்லோகம்,எவர்கள் ஆஸ்ரயித்திருக்கிறார்களோ அவர்களுக்கு நரகம் முதலியதில்லை). நலியும் - ப்ராணிகளை ஹிம்ஸிக்கிற, நரகமும் - நரகலோகமும், நைந்த - நசித்துவிட்டது, இங்கு - இவ்வுலகத்தில், நமனுக்கு - யமனுக்கு, யாதொன்றுமில்லை - ஒரு கார்யமுமில்லை. நமன் - யமன், கூறுசெய்துகொண்டு - தன்னுடைய பாகமாக நம்மை வைத்துக்கொண்டு, இறந்தகுற்றம் - இதற்குமுன் செய்யப்பட்டதாய் (பகவத் ஸம்பந்தத்தினால்) நசித்தவைகளான குற்றங்களை, எண்ணவல்லனே - எண்ணுவதற்கு ஸாமர்த்திய முடையவனோ நமன்தமர் - யமபடர்களினுடைய, தலைகள்மீதே - தலைகளின்மேல், நாவல் இட்டு - ஜயகோஷத்தைச் சொல்லிக்கொண்டு, நாவல் - ஜயித்தார் சொல்லும் பாசுரம், உழிதருகின்றோம் - ஸஞ்சரிக்கிறோம். நரகமே - நரக லோகமே, சுவர்க்கமாகும் - ஸ்வர்க்கமாகக்

---

1. 2. 3. வாமனபுராணம்-94-31. 4. வாமனபுராணம்-94-43.
5. திருவாய்மொழி-5-2-1. 6. திருச்சந்தவிருத்தம்-116.
7. திருமாலை-1. 8. திருமாலை-12.

ஞுடையநம்பி' ஐத்யாதிகளாலே அறியலாம். ஆகையால் இப்படி நிஸ்ஸம்ஶயனுன இவன் [1] 'ஆள்கின்ருனுழியான் யாரால் குறைவுடையம்', [2] 'எத்திஞலிடர்க்கடல்கிடத்தி யேழை நெஞ்சமே', [3] 'திருமால் தலைக்கொண்ட நங்கட் கெங்கே வரும் தீ வி னை யே' ஐத்யாதிகளின் படியே நிரபெக்ஷனுய் நிஹ்பரனுய் நிஹ்பயனும். அங்கும் அவ்வவஸ்தையில்லாதபோது மடலூருமவஸ்தையாய் மாக வைகுந்தங் காண்பதற்கு மன மேக மெண்ணியிருக்கும்.

கூடியதான, நாமங்கள் - திருநாமங்களை, உடைய - உடையவனுகிய, நம்பி - பூர்ணன், நரகத்தில் இருப்பவர்கள் பகவந் நாமத்தைச் சொன்னுல் அந்த நரகமே ஸ்வர்க்கமாகும் என்று கருத்து. ஆழியான் - சக்ராயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டிருக்கும் பகவான், ஆள்கின்ருன் - ரக்ஷிக்கிருன், யாரால், குறைவு - குறையை, உடையம் - உடையவராவோம். ஏழை - சபலமாகிய, நெஞ்சமே, எத்திஞல்-எந்தக் காரணத்திஞல், இடர்க்கடல்-துக்கமாகிற ஸமுத்திரத்தில், கிடத்தி - கிடக்கிருய். திருமால் - ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரனை, தலைக்கொண்ட-ஶிரஸால் வஹித்த, அதாவது ஆஶ்ரயித்த, நங்கட்கு-நமக்கு, தீவினை - பாபம், எங்கேவரும் - எப்படி வரும்? **நிரபெக்ஷனுய்**-வேறு ஒருவராலும் ஒருவிதமான கார்யத்தை எதிர் பாராதவனுய், **நிஹ்பரனுய்** - தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டிய பரம் இல்லாதவனுய், **நிஹ்பயனும்**-நரகாதிகள் அனுபவிக்கும்படி வருமோ என்கிற பயம் இல்லாதவனுகும். அங்கும்-இந்தத் தேஹத்தோடிருக்கும் ஸமயத்திலும், அவ்**வவஸ்தை** - கீழ்ச் சொல்லியபடி நைர்ப்பர்யாதிகளை உடைய அவஸ்தை, அதாவது க்ஷண காலமும் ஶரீரத்தின் ஸ்திதி அஸஹ்யமாய் அத்தால் பலம்வரும் வரையில் ஆறியிருக்கும் அவஸ்தை. மடலூரும் - மடலூருகையாவது தனக்கு விஶேஷமாக ப்ரீதியுள்ள விஷயத்தை அடைய முடியாமையினுல் உண்டான துக்கம் அஸஹ்யமாயிருக்கும் தசையில் அதை அடைவதற்காக மடலூருவதென்று ஒரு கர்த்தவ்யம் உண்டு. அத்தால் மிகவும் தயைபண்ணக்கூடிய தசை உண்டாயிற்றென்று லோகத்தாருக்குத் தெரிவித்து, அவர்களினுடைய உதவியினுல் தன் மனேபீஷ்டத்தைப் பெறுதல். இதினுடைய விஸ்தாரங்களை 'மாசறு சோதி' என்னும் திருவாய்மொழியிலும், பெரிய திருமடல், சிறிய திருமடல் இவற்றிலும் காணலாம். மனம் - மனதானது, மா - பெரியதான, க - ஆகாசம் என்று சொல்லப்படுகிற, பரமவ்யோமம் என்றபடி, வைகுந்தம்-வைகுந்தத்தை, காண - காண்பதற்கு, ஏகம் - ஒரே விதமாக, கார்யாந்தரங்களில் அலையாமல் என்றபடி, எண்ணியிருக்கும் - நினைத்துக்கொண்டிருக்கும்.

---

1. திருவாய்மொழி-10-4-3. 2. திருச்சந்தவிருத்தம்-115. 3. திருவிருத்தம்-88.

முன் செய்த வினைத்திரளின் முளைத்ததன்றி
    மற்றுள்ள முதலரிந்து முளைத்த கூற்றில்
தன்செய்ய திருவருளா லிசைவு பார்த்துத்
    தழல் சேர்ந்த தூலமெனத் தானே தீர்த்துப்
பின்செய்யும் வினையி னினைவொன்றுதொன்றும்
    பிழைபொறுத்து வேறுளது விரகான் மாற்றும்
என்செய்ய தாமரைக்கட் பெருமானெண்ண
    மெண்ணுதாரெட்டிரண்டு மெண்ணுதாரே. 11

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ பரமபதஸோபாநே
|| பஞ்சமம் ப்ரஸாதநபர்வ ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ||

இப்படி க்ருதக்ருத்யனாகும் தசையை அருளிச்செய்து இவனுக்கு பூர்வோத்தர கர்மங்களைக் கழிக்கும் ப்ரகாரத்தை நிரூபித்து இவன் கோலின காலத்தில் பலம் அவிநாபூதம் என்றருளிச்செய்கிறார்—'முன்' என்றாரம்பித்து.

[ப - ம்.] முன்செய்த - ப்ரபத்தி செய்வதற்கு முன்பு செய்யப்பட்ட, வினை - கர்மங்களின், திரளில் - கூட்டங்களில், முளைத்ததன்றி-பலம் கொடுக்க ஆரம்பித்திருக்கும் கர்மங்களைத் தவிர, மற்றுள்ள - வேறாக இருக்கிற, முதல்-முதல்களை, அதாவது ஜன்மஸஹஸ்ர துக்காதிகளுக்குக் காரணமானவைகளை, அரிந்து - போக்கடித்து, அன்றிக்கே முதல் - முதலிலேயே, என்றாகவுமாம், முளைத்த கூற்றில் - பலம் கொடுக்க ஆரம்பித்திருக்கும் கர்மங்களின் பாகத்திலும், தன் - தன்னுடையதான, செய்ய - ஆர்ஜவத்தை உடைய, திருவருளால்-க்ருபையினால், இசைவு - (ப்ரபன்னனுடைய) அங்கீகாரத்தை, பார்த்து-அபேக்ஷித்து, அதாவது இவன் எவ்வளவு கர்மத்தை அபேக்ஷிக்கிறானோ அதைத் தவிர மற்றதை என்றபடி, தழல்-அக்னியோடு சேர்ந்த-சேர்ந்ததான, தூலம் - பஞ்சு, என - என்று சொல்லும்படி, தானே தீர்த்து - பரமக்ருபையோடு கூடினதானேதீர்த்து, 'தீயினில் தூசாகும்' இத்யாதிகளை நினைத்து அருளிச்செய்தபடி, பின் செய்யும்வினையில்-ப்ரபத்திக்குப் பிறகு செய்யப்படும் கர்மங்களில், நினைவு ஒன்றாது-புத்தியுடன் ஸம்பந்தப்படாமல்,அதாவது புத்தி பூர்வகமாக வல்லாமல், ஒன்றும் - சேருகிற, பிழை-அபராதத்தை, பொறுத்து-

க்ஷமித்துக்கொண்டு, வேறு - அப்படிக்கில்லாமல் புத்தி பூர்வகமாக, உளது- உண்டான கர்மத்தை, விரகால் - உபாயத்தினுல், அதாவது ப்ராயஶ்சித்தம், லகுஶிக்ஷை இவைகளினுல், மாற்றும் - நஶிப்பிக்கிற, என் - எனக்கு ஸ்வாமி யாகிய, செய்ய - சிவந்ததான, தாமரைக்கண் - தாமரைப் புஷ்பங்கள் போன்ற திருக்கண்களை உடைய, பெருமான் - ஸர்வேஶ்வரனுன எம்பெருமானுடைய, எண்ணம் - அபிப்ராயத்தை, ஆஶ்ரிதர்கள் திறத்தில் இருக்கும் ப்ரீதிவிஶே ஷத்தை என்றபடி, எண்ணுதார் - அனுஸந்தியாதவர்கள், எட்டிரண்டும்- எட்டையும் இரண்டையும் சேர்த்தால் என்னுகும் என்பதையும், எண்ணு தாரே - எண்ணுதவர்கள், அதாவது இவ்வளவு ஸாமாந்ய ஜ்ஞானம்கூட இல்லா தவர்கள் என்றபடி. அன்றிக்கே எட்டு - திருவஷ்டாக்ஷரத்தையும், இரண்டும்- த்வயத்தையும், எண்ணுதார்-பராமர்சியாதவர்கள். அதுவுமன்றிக்கே, இரண் டும் - த்வயத்தையும் சரமஶ்லோகத்தையும் என்ருகவுமாம், அதாவது ரஹஸ் யார்த்த ஜ்ஞானம் இல்லாதவர்கள் என்றபடி. இங்கு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அபராத பரிஹாராதிகாரத்தில் அருளிச் செய்திருக்கும்

1 ‘ப்ராரப்3தேதரபூர்வபாபமகி2லம் ப்ராமாதி3கம் சோத்தரம் ந்யாஸேந க்ஷபயந்நநுத்தரமத:ப்ராரப்3த4மம்ஶேந ந: । தீ4பூர்வோத்தரமம்ஹஸாம் ஜாதே து நிஷ்க்ருதிபி: க்லேஶயந் ஶிக்ஷயாவா நயந்நநுக்ரோஶீகரோதி ப்ரபு4: ॥’ என்கிற ஶ்லோகத் தை அனுஸந்திக்கவும். 11

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

ஐந்தாவது ப்ரஸாதந பர்வம் முற்றிற்று.

---

1. ஸர்வஶக்தனுன பகவான் ப்ரபத்திக்கு முன்பு செய்யப்பட்ட நம்முடைய எல்லா ப்ராரப்தபாபங்களைத் தவிர மற்றெல்லாப்பாபங்களையும், ப்ரபத்திக்குப் பிறகு செய்யப்படு கிற புத்தி பூர்வகம் இல்லாத பாபங்களையும், தேசகாலாதி வைகுண்யத்தினுல் உண்டா கும் புத்தி பூர்வகபாபங்களையும் (இது சகாரத்தின் அர்த்தம்), நம்மால் ஒப்புக்கொள்ளப் படாத ப்ராரப்தத்தின் ஒரு பாகத்தையும் ப்ரபத்தியினுலேயே போக்கடித்துக்கொண்டு புத்தி பூர்வகமான உத்தராகங்கள் உண்டாகாமையினுலும், அப்படி உண்டான போதிலும் அவைகளுக்கு ப்ராயஶ்சித்தம் செய்வதினுலும், க்ரூரமான ஸ்வபாவம் இருந்ததே யாகில், அதாவது ப்ராயஶ்சித்தத்தில் ப்ரவ்ருத்திக்காதபடியான கடின ஸ்வபாவம் இருந்ததேயாகில், லகுஶிக்ஷையினுலும் தோஷம் இல்லாதவனுகச் செய்துகொண்டு அங்கீகரிக்கிருன்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

॥ ஷஷ்𑌠𑌂 உ𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌣𑌪𑌰𑍍𑌵 ॥

உறையிட்ட வாளென வூனுளுறைகின்ற யோகிகளை
நறு மட்டொழி வற்ற நற்றுள வேந்திய நாயகனுர்
நிறை மட்டிலாத நெடும் பயன் காட்ட நினைத்துடலச்
சிறை வெட்டி விட்டு வழிப்படுத்தும் வகை செப்புவமே. 12

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீ 𑌮𑌤𑍇 ஸ்ரீ𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஆருவது உத்க்ரமண பர்வம்.

இனி ஶரீரத்தைவிட்டு உத்க்ராந்தி நடக்கும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளப் போகிறவராய் அதை முதலில் ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிருர்—'உறையிட்ட' என்ருரம்பித்து.

[ப. ம்.] உறையிட்ட - உறையிலே போடப்பட்ட, வாளேன - வாளுக்கு ஸத்ருஶமான, அன்றிக்கே வாள் என்று சொல்லும்படியான, ஊன்-மாம்ஸத்திற்கு, உள் - உள்ளே, அதாவது மாம்ஸமயமான ஶரீரத்திற்குள்ளே என்றபடி, உறைகின்ற - வஸிக்கிற, யோகிகளை - அஷ்டாங்க யோகத்தையாவது ஷடங்கயோகத்தையாவது அனுஷ்டித்த பக்த ப்ரபன்னர்களை, நறு - வாஸனையோடு கூடிய, மட்டு - தேன், ஒழிவற்ற - ஒழிவில்லாத, எப்பொழுதும் பரிமளத்துடன் கூடிய மதுவைப் பெருக்காநின்ற என்றபடி, நல்துளவு - நல்ல திருத்துழாய் மாலையை, ஏந்திய - ஶிரஸா தரிக்கிற, நாயகனுர் - நாதனுன ஸர்வேஶ்வரன், நிறை - பூர்த்திக்கு, மட்டு - அளவு, இலாத - இல்லாததான, எல்லையில்லாத பூர்த்தியை உடைய என்றபடி, நெடும் - ஶ்லாக்யமான, பயன் - புருஷார்த்தத்தை, காட்ட - அனுபவிப்பிக்க, நினைத்து - ஸங்கல்பித்து, உடல - ஶரீரமாகிற, சிறை - காராக்ருஹத்தை, வெட்டிவிட்டு - நஶிப்பித்து, சேதித்து என்றபடி, வழிப்படுத்தும் - அர்ச்சிராதி வழியில் நடத்துகிற, வகை - ப்ரகாரத்தை, செப்புவம் - நிரூபிப்போம், இந்தப் பர்வத்தில் என்றபடி. 12

இப்படி முன்பு பண்ணின ஸங்கங்களுக்கெல்லாம் தத்ஸ்வாதிகாராநுரூபமாக ப்ரபத்த்யாதி ப்ராயஶ்சித்தம் பண்ணி மேல் ஸங்கங்களில் முயலாதபடி உள்ளமுரை செயலுள்ள விம்மூன்றையு முள்ளிக் கெடுத்துக் குன்ற மெடுத்த பிரானடியாரொடு மொன்றி நின்று நாட்டாரோடியல் வொழிந்து, ஸூரிஸுலபமான பரிபூர்ணாநுபவம் பெறுமையாலே வாய்க் கட்டுண்டு திருப்பாற்கடலிலே முழுகினவனைப்போலே தன்னவஸ்தையைக் கண்டு, இரக்க மனத்தோடெரி

இந்த ஶரீரத்தைவிட்டு இவன் கிளம்பும் ப்ரகாரத்தை விஸ்தாரமாக நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. இப்படி - கீழ்ப் பர்வங்களில் நிரூபித்தருளினபடி. **ஸங்கங்களுக்கு** - ஸம்ஸார பந்தகமான கர்மங்களுக்கு. **தத்ஸ்வாதிகாராநுரூபமாக** - அவரவர்களின் அதிகாரத்திற்குத் தக்கபடி, அதாவது அகிஞ்சனரா யிருக்கை, ஜ்ஞான ஶக்த்யாதிகளை உடையரா யிருக்கை, முதலிய அதிகாரத்திற்குத் தக்கபடி. '**ப்ரபத்த்யாதி**' என்கிற இடத்தில் '**ஆதி**' பதம் பக்தியைக் குறிக்கிறது. பக்தியை முதலில் எடுக்காமல் ப்ரபத்தியை முதலில் நிரூபித்தருளி இருப்பது அந்தப் பக்தியோகத்திற்கும் அங்கமாக இந்த ப்ரபத்தி அனுஷ்டிக்கவேண்டிய தாகையினாலே என்றறியத்தக்கது. **முயலாதபடி** - ப்ரயத்தினம் செய்யாமல். **உள்ளம்**-மனது, **உரை** - வார்த்தையைச் சொல்லி அத்தால் வாக் என்னும் இந்திரியத்தைச் சொல்லுகிறது, **செயல்** - கர்மத்தைச் சொல்லி அதற்குக் காரணமான ஶரீரத்தைச் சொல்லுகிறது, ஆக மனோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களையும் சொன்னபடி, **உள்ள** - இப்படி ஏற்கனவே இருக்கிறவைகளான, **இம்மூன்றையும்**, **உள்ளி** - சிந்தித்து, இவை பகவதாராதனத்திற்காக ஏற்பட்டவை என்பதைச் சிந்தித்து என்றபடி, **கெடுத்து**-விஷயாந்தரங்களில் இருந்து நிவ்ருத்திப்பித்து, **குன்றம்** - கோவர்த்தன கிரியை, **எடுத்த** - தூக்கினவனான, **பிரான்** - உபகாரகனான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய, **அடியாரோடும்** - தாஸர்களோடும், **ஒன்றி நின்று** - சேர்ந்து நின்று, **நாட்டாரோடு** - உலகத்தில் இருக்கும் ஸாமாந்ய ஜனங்களோடு, **இயல்வு**-ஸஹவாஸத்தை,**ஒழிந்து**-நிவ்ருத்திசெய்து.'**ஒழித்து**'என்பது வல்லொத்து மெல்லொத்தாய்த்திரிந்து ஒழிந்து என்றிருக்கிறது என்றபடி, **ஸூரி** - நித்யஸூரிகளுக்கு, **ஸுலப**மான- ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதான, **பரிபூர்ணாநுபவம்** - குணம் முதலியவைகளினால் பரிபூர்ணமாகப்பகவானை அனுபவிக்கையை,**பெறுமையாலே**-அடையாமையாலே. **வாய்க் கட்டுண்டு**-வாய்கட்டப்பட்டு. இத்தால் விஷயம் போக்யமாயும் பரிபூர்ணமாயும் இருக்கத்தன்னுடைய அஜ்ஞானம் அஶக்திமுதலியவைகளினால் அவற்றைஅனுபவிக்கப் பெறுமையால் உண்டான சோகம் இவனுக்கு உண்டாகிறது என்பது தெரிவிக்கப்பட்டதாயிற்று. **தன் அவஸ்தையை** - இப்படித் தன் இஷ்டப்படி அனுபவிக்கப்பெறாத தன்னுடையஅவஸ்தையை.**இரக்கமனத்தோடு**-துக்கத்

யனை யரக்கும் மெழுகு மொத்துக் கரிய நாழிகை யூழியில் பெரிய தாய், கங்குலும் பகலும் கண்டுயிலறியாதே, என் சொல்லியுய்வ னிங்க வனை விட்டென்னும்படி ஸம்ஸாரத்திலடி தெரியாதே, 1 'மருளொழி', 2 'மங்கவொட்டுன்மாமாயை', 3 'மாயஞ்செய்யேல்' என்று வளைத்து ப்ரபத்திவாக்யோச்சாரணமே ப்ரஸ்தானசங்கநாதமாம்படி அவாவற்று வீடுபெறுமதிகாரிக்கு வைத்த நாள் வரை யெல்லை குறுகி யோக ஶாஸ்த்ரங்களிற் சொல்லும் ஆயுரவஸானங்களாலும் அதிஸந்தோ ஷத்தை யுண்டாக்கி, ஒன்பது வாசல் தானுடைக் குரம்பை பிரியும்

துடன்கூடியமனதுடன், எரி-அக்னியை, அணை-சேர்ந்திருக்கிற, அரக்கும்-அரக் குக்கும், மெழுகும - மெழுகுக்கும், ஒத்து - ஸத்ருஶனாய், அதைப்போல் உருகி நின்றுஎன்றபடி,கரிய-க்ரூரமான,நாழிகை-ஒவ்வொருநாழிகையும், ஊழியில்-கல் பகாலத்தைக்காட்டிலும், பெரியதாய், கங்குலும்-ராத்திரியிலும், பகலும்-மத்யா னத்திலும், கண்டுயில்-கண் துயிலுவதை, அதாவது தூக்கத்தை. இங்கு-இந்த ஸம்ஸாரத்தில், அவனைவிட்டு - அந்தப் பகவானைத் தவிர்த்து, என்சொல்லி - வேறு எதைச்சொல்லி, உய்வன் - உஜ்ஜீவிப்பேன், என்னும்படி - என்று தான் அலற்றும்படி, அடிதெரியாதே -அடிவைக்க வேண்டும் இடம் தெரியாமல். மருள் - அஜ்ஞானத்தை, ஒழி-நிவ்ருத்திசெய். உன்-உன்னுடையதான, உனக்கு ஶேஷபூதமான என்றபடி, மா-பெரியதான, மாயை-ப்ரக்ருதியை, ப்ராக்ருத மான ஶரீரத்தை என்றபடி, மங்கஒட்டு - நசிக்கும்படி செய். மாயம் செய்யேல்- வஞ்சனை செய்யாதே, என்று-இப்படி ப்ரார்த்தித்து, வளைத்து - நிர்ப்பந்தித்து என்றபடி. ப்ரபத்திவாக்யோச்சாரணமே-ப்ரபத்தி வாக்யத்தைச் சொல் லுவதையே, ப்ரஸ்தானசங்கநாதமாம்படி - ப்ரயாணம் புறப்படும்பொழுது ஊதும் சங்க த்வனியாகும்படி, அதாவது ப்ரபத்தி வாக்யோச்சாரணமே இவன் புறப்படுவது நிஶ்சயம் என்று காட்டும்படி. அவா-ப்ரதிபந்தகங்கள், அற்று-நிவ்ருத்தங்களாய், அவா-ஆசை, இங்கு எல்லா ப்ரதிபந்தகங்களையும் குறிக்கிறது என்றபடி, வீடுபேறும்-மோக்ஷத்தைப் பெறுகிற. வைத்த-இவ னுக்கு விஹிதமான, நாள்-ஆயுஸ்ஸின், வரை-கடைசி எல்லை (வரை-முடிவு), குறுகி-ஸமீபித்து, ஆயுரவஸானங்களாலும் - ஆயுஸ்ஸு முடிவதைத் தெரிவிக்கும் அடையாளங்களாலும், அதிஸந்தோஷத்தை-மிகுந்த ஸந்தோ ஷத்தை. 'ப்ரத்யாஸீததி முக்திவாஸர இதி ப்ரீதி: ப்ரதிஷ்டாப்யதே' என்றிவர் தாமே ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் அருளிச் செய்திருக்கிற படியே பரம புருஷார்த்தத்தை அடையும் தினம் கிட்டிவிட்டது என்கிற காரணத்தினால் உண்டாகும் அதிகமான ஸந்தோஷத்தை என்றபடி. ஒன்பது வாசல்தானுடை - ஒன்பது வாசல்களை (த்வாரங்களை) உடைய, 'தான்'

---

1. திருவாய்மொழி-10-6-1. 2. திருவாய்மொழி-10-7-10. 3. திருவாய்மொழி-10-10-2.

போது உத்தராயணம் தக்ஷிணாயநம் ஶுக்லபக்ஷம் க்ருஷ்ணபக்ஷம் பகல் இரவு ஶுபாஶுபதேஶவிஶேஷ நிமித்தவிஶேஷங்களென்கிற வாசியற சரணமாகும் தன தாளடைந்தார்க் கெல்லாம் மரணமானல் இருள் தரு மா ஞாலத்துளி னிப்பிறவி வேண்டாதபடி வைகுந்தம் கொடுக்கும் பிரான் இவனுக்கு அடியிலே அஶ்லேஷவிநாஶோபதேஶவிஷயங்களாய்க் கொண்டு மாற நினைப்பிட்டுக் கிடந்த உத்தரபூர்வபுண்யபாபங்களை மாற்றி, 1 'ப்ரியேஷு ஸ்வேஷு

என்பது ஸ்வார்த்தே அனுப்ரயோகம், குரம்பை - ஶரீரத்தை விட்டு, **ஶுக்லபக்ஷம்**-சுக்லபக்ஷம். **க்ருஷ்ணபக்ஷம்**-க்ருஷ்ணபக்ஷம். '**ஶுபாஶுப**' இத்யாதி - நல்ல இடம் கெட்ட இடம் என்கிற வ்யத்யாஸம். **நிமித்தவிஶேஷம்**-நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்கிற வ்யத்யாஸம். வாசியற - வ்யத்யாஸம் இல்லாமல், அதாவது நல்ல இடம், காலம், சகுனம், இவைகளில் மரித்தவர்களுக்கு நல்லகதி என்றும், அப்படி இல்லாதவர்களுக்கு கெட்டகதி என்றும் மற்றவர்கள் விஷயத்தில் சொன்ன வ்யத்யாஸம் இல்லாமல் என்றபடி. தனதாளடைந்தார்க்கு - தன்னுடைய திருவடிகளை ஆஶ்ரயித்தவர்களுக்கு, எல்லாம் - எல்லாவிதமான, சரணமாகும் - ரக்ஷகனாய் நிற்குமவனாய், மரணமானல் - (அவர்கள்) மரணமடைந்தால், அதாவது அவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் இந்த ப்ராரப்த ஶரீரத்திற்கு விநாசம்வந்த அளவிலே என்றபடி, இருள்தரு - அஜ்ஞானந்தகாரத்தை உண்டாக்குகிற, மா - விசாலமான, ஞாலத்துள் - ஜகத்திலே, இனி-இதற்கப்புறம், பிறவி-ஜன்மம், வேண்டாதபடி - உண்டாக வேண்டியது அவஶ்யம் இல்லாதபடி. வைகுந்தம் - மோக்ஷத்தை, கொடுக்கும், பிரான் - உபகாரகன். 'பிரான்' என்பது இந்தப் பர்வத்தின் கடைசியில் இருக்கும் 'வழிப்படுத்தும்' என்பதுடன் அந்வயிக்கிறது. அடியிலே-உபாயாரம்பகாலத்திலே. '**அஶ்லேஷ**' இத்யாதி-உபாயானுஷ்டானத்திற்குப் பிறகு செய்யப்படும் கர்மங்களில் அபுத்தி பூர்வகமாகச் செய்யப்படுமவைக்கு அஶ்லேஷமும்,அதற்கு முன்பு பண்ணின கர்மங்களுக்கு விநாஶமும்,என்று கீழ்பர்வத்தில் நிரூபித்தருளி இருக்கிறபடியே அஶ்லேஷம், விநாஶம் என்கிற பதங்களினல் சொல்லப்படுகிற என்றபடி. மாறநினைப்பிட்டு-மாறும்படி ஸங்கல்பித்து, அதாவது இவனைவிட்டு மாறும்படி ஸங்கல்பித்து என்றபடி. கிடந்த-அத்யந்த விநாசம் பண்ணி வைக்காமல் இவனைவிட்டு மாத்திரம் நிவர்த்திப்பித்து வைத்திருந்த. **உத்தரபூர்வபுண்யபாபங்களை** - உபாயானுஷ்டானத்திற்கு முன்பும் பின்பும் செய்யப்பட்டவைகளாகிய புண்ய பாபங்களை. 'மாற்றி' என்று முன்பே மாற்றி வைத்ததை அனுவதித்தபடி. **ஸ்வேஷு**-தன்னுடையவர்களான, **ப்ரியேஷு**-இஷ்டர்களிடங்

---

1. மனுஸ்ம்ருதி-6-79.

ஸுக்ருதம் த்விஷத்ஸு துஷ்க்ருதம்' இத்யாதிகளின்படியே [1] 'நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனுதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே' என்னும்படி அநுகூலப்ரதிகூலருடைய அநுகூல்ய ப்ராதிகூல்யங்களுக்குப் பலங்கொடுத்து [2] 'சாமிடத் தென்னைக் குறிக்கொள்கண்டாய்', [3] 'அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்' என்றும் அவன் க்ருபாவிசேஷத்தாலே [4] 'யம் யோகிந: ப்ராணவியோககாலே யத்நேந சித்தே விநிவேசயந்தி' என்னும் அவஸ்தையில்லையாய் காஷ்டபாஷாண ஸந்நிப

களில், ஸுக்ருதம்- புண்யத்தையும், த்விஷத்ஸு - சத்ருக்கள் இடங்களில், துஷ்க்ருதம் பாபத்தையும் (கொடுத்துவிட்டு மோக்ஷம் அடைகிறான்). நாட்டில்உள்ள-இந்த தேசத்தில் இருந்தவைகளான, அதாவதுசாஸ்திரங்களில் சொல்லப்பட்டவைகளாய் இந்த லோகத்தில் ப்ரஸித்தமான, பாவமெல்லாம் - பாபங்கள் எல்லாம், 'ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி' என்கிறபடியே தன்னால் செய்யப்படாதவைகள் ஒன்றுமில்லை என்கிற அபிப்பிராயத்தினுல் இப்படி அருளிச் செய்தபடி, சும்மெனுதே - சும் என்கிற சப்தத்தைக் கூடச்செய்யாமல், கைவிட்டோடி - என்னை விட்டுக் கழிந்து ஓடி, தூறுகள் - தூறுகளை, பாய்ந்தனவே - பாய்ந்தது கள். 'தூறுகள்' என்றது சத்ருமித்ரர்களை. இப்படி ஒருவர் செய்த கர்மபலத்தை மற்றொருவர் அனுபவிக்கும்படி நேரிட்டால் அதிப்ரஸங்கம் வருமே என்கிற சங்கைக்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார் - 'அநுகூல' என்றாரம்பித்து. அநுகூலர் - இஷ்டர்கள். ப்ரதிகூலர் - சத்ருக்கள். ஆநுகூல்யம் - பாகவதனுகிய இவன் விஷயத்தில் செய்யப்பட்ட அனுகூலமான கார்யம். பலம் கொடுத்து-பலமாகக்கொடுத்து. சாமிடத்து-மரணம் அடையும் ஸமயத்தில், என்னை, குறிக்கோள்-ஸாவதானமாக அங்கீகரிக்கவேணும், 'கண்டாய்' என்பது இது அவஸ்யம் செய்யவேண்டும் என்பதைக் குறிக்கிறது. அப்போதைக்கு - மரணமடையும் ஸமயத்திற்காக, இப்போதே-இந்த ஸமயத்திலேயே, சொல்லிவைத்தேன் - சொன்னேன். அவன் க்ருபாவிசேஷத்தாலே - அவனுடைய ஸுக்ருதம் முதலிய கர்மங்களினுலே, இது பக்தியோக நிஷ்டன் விஷயமானது என்றறியத்தக்கது. ப்ராணவியோககாலே-ப்ராணனை விடும் ஸமயத்தில், யம் - எந்தப்பகவானை, யத்நேந - தங்களுடைய ப்ரயத்தினத்தினுலே, சித்தே - மனதில், விநிவேசயந்தி - வைத்துக் கொள்ளுகிறார்களோ. என்னும் அவஸ்தையில்லையாய் - என்கிறபடியே

---

1. பெரியாழ்வார் திருமொழி-5-4-3. 2. பெரியாழ்வார் திருமொழி-4-10-2.
3. பெரியாழ்வார் திருமொழி-4-10-1. 4. பாரதம்-சாந்தி-46-139.

னாய்க் கிடக்கிலும் [1] 'அஹம் ஸ்மராமி' என்கிறபடியே தன்நினைவை இவனுக்கு நினைவாக்கி, [2] 'கேவலம் மதீயயைவ தயயா அதிப்ரபுத்தஸ்ஸந்' என்கிறபடியே அயத்நமாக ஸ்வவிஷயத்தில் வெளிச்சிறப்பாலே அப்ரச்யுத பூர்வ ஸம்ஸ்காரரதிமானனும்படி ப்ரஹ்ம ருத்ரேந்த்ர யமாதிகளுக்குப் போலே யமகிங்கர நிரபேக்ஷமாகத் தானே உத்க்ரமண நிமித்தமாக நின்று, வாகாதீந்த்ரியங்கள் பத்தையும் மநஸ்ஸிலும், இவற்றோடே கூடின மநஸ்ஸை ப்ராணவாயுவிலும், இந்த்ரியங்கள் பதினொன்றோடும் கூடின ப்ராணனை ஜீவாத்மாவிலும், இப்படி சேர்ந்த திரளை இச்சரீரைகதேசமான ஸூக்ஷ்ம பஞ்சபூதங்களிலும்,

---

பக்தியோக நிஷ்டர்கள் அந்திம ஸ்மரணத்தைத் தங்களுடைய ப்ரயத்தினத்தினால் ஸாதித்துக்கொள்ளவேண்டும் மென்கிற அவஸ்தை இல்லாமல். **காஷ்ட பாஷாண ஸந்நிபனாய்** - கட்டை, கல்லு, இவைகளுக்கு துல்யனாய், ஜ்ஞானம் இல்லாமல் என்றபடி. கிடக்கிலும் - கிடந்தபோதிலும். **அஹம்** - நான், **ஸ்மராமி** - நினைத்துக் கொள்ளுகிறேன். இவனுக்கு நினைவாக்கி - இவனுக்கு வேண்டியதான அந்திம ப்ரத்யயத்தின் ஸ்தானத்தில் வைத்து, அன்றிக்கே ப்ரபன்னனுக்கும் அந்திம ப்ரத்யயம் அவஶ்யம்வேண்டும் என்கிற பக்ஷத்தில் இவனுக்கு நினைவாக்கி - இவனுடைய அப்படிப்பட்ட நினைவுக்குக் காரணமாக்கி, அதாவது காரணே கார்யோபசாரம் என்றபடி. **மதீயயா** - என்னுடையதாகிய, **தயயைவகேவலம்** - தயையினாலே மாத்திரம், **அதிப்ரபுத்தஸ்ஸந்** - மிகுந்த ஜ்ஞானத்தை உடையவனாய். **அயத்நமாக** - இவனுடைய ப்ரயத்னம் இல்லாமலே, **ஸ்வவிஷயத்தில்** - தன் விஷயத்திலே, வெளிச்சிறப்பாலே - ஜ்ஞான வைஶத்யத்தினாலே, **அப்ரச்யுத** - நழுவிப்போகாததான, **பூர்வ** - முன்னால் உண்டான, **ஸம்ஸ்காரரதிமானனும்படி** - வாஸனை, ஆசை இவைகளை உடையவனும்படி, **யமகிங்கர நிரபேக்ஷ**மாக - யமகிங்கரர்களை அபேக்ஷிக்காமலே. இப்படி யமதூதர்கள் இல்லாமல் உத்க்ரமணம் உண்டோ என்னில், அதற்கு உதாஹரணம் 'ப்ரஹ்ம' இத்யாதி. ப்ருஹ்மா, ருத்திரன், யமன் முதலியவர்கள் யமகிங்கரர்களுக்கு வசப்பட்டவர்கள் இல்லையல்லவா. தானே - ஸர்வேஶ்வரனாகிய தானே. **உத்க்ரமண நிமித்த**மாக - உத்க்ராந்திக்குக் காரணமாக. **வாகாதீந்த்ரி**யங்கள் - வாய் முதலிய இந்திரியங்கள். பத்தையும் - வாக், கை, கால், குதம், உபஸ்தம் என்று சொல்லப்படுகிற கர்மேந்திரியங்கள் ஐந்து, காது, தோல், கண், மூக்கு, நாக்கு என்கிற ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்து, ஆகப்பத்து இந்திரியங்களையும் என்றபடி. இவற்றோடே கூடின - இந்தப்பத்து இந்திரியங்களோடு கூடின, திரளை - ஸமூஹத்தை,

---

1. வராஹ சரமஶ்லோகம். 2. பெரியகத்யம்.

இவையெல்லாவற்றையும் கூட ஹ்ருதயஸ்தனை தன் பக்கலிலே சேர்த்து, இவனை இளைப்பாற்றி, இப்படிப் பொதுவான உத்க்ராந்தியும் நடந்தால், ஸர்வஸாக்ஷியான இவனை லோகாந்தரங்களுக்கும் வழிகளான ஹ்ருதயநாடி நூற்றிலும் ப்ரவேஶிப்பியாதே, ஸுஷும்நை என்றும் ப்ரஹ்மநாடி என்றும் மூர்த்தந்யநாடி என்றும் பேர்பெற்ற ஹ்ருதயமத்யநாடியில் முக்திமார்க்காரம்பமான அக்ரம் வெளிச்செறிக்கப்பண்ணி, அதிலே ப்ராணேந்த்ரியஸம்யுக்தஸூக்ஷ்மஶரீரத்தோடே கூட ப்ரவேஶிப்பித்து, பத்மகோஶஸ்தநகதளீபுஷ்பத்ருஷ்டாந்தநிதர்ஶிதமாய்க் கொண்டு அவலம்பிக்கிற ஹ்ருத்புண்டரீகமத்யத்திலே ஸூக்ஷ்மஸுஷிரத்தினின்றும் மேலே கொண்டேறி ஏகாதஶ

இதரஶரீரைகதேஶமான - இந்த ஸ்தூல ஶரீரத்தில் ஒருபாகத்தில் இருந்து எடுக்கப்பட்ட, ஸூக்ஷ்மபஞ்சபூதங்களிலும் - ஸாராம்ஶமான ஐந்து பூதங்களிலும். ஹ்ருதயஸ்தனை - ஹ்ருதயகமலத்தில் இருக்கிற. தன்பக்கலிலே - ஹார்த்தனை தன்னிடத்திலே என்றபடி. இளைப்பாற்றி - ஶ்ரமபரிஹாரம் செய்து, அதாவது உத்க்ரமணத்தினால் உண்டான ஶ்ரமத்தைத் தீர்த்து, பொதுவான - மோக்ஷத்திற்குப் போகிறவர்களுக்கும், மற்ற இடங்களுக்குப் போகிறவர்களுக்கும் இதுவரையில் ஸமமான, அதாவது ஒருவித வ்யத்யாஸமு மில்லாத என்றபடி. உத்க்ராந்தி - ஶரீரத்தைவிட்டு வெளியில் கிளம்புதல். லோகாந்தரங்களுக்கும் - ஸ்வர்க்காதி லோகங்களுக்கும். ஹ்ருதயநாடி - ஹ்ருதயத்தில் இருந்து புறப்படும் நாடிகள். ஹ்ருதயமத்யநாடியில் - ஹ்ருதயத்தில் இருந்து புறப்படும் நாடிகளின் நடுவில் இருக்கும் நாடியில். முக்திமார்க்காரம்பமான - மோக்ஷத்திற்குப் போகிற வழிக்கு வாசல்படிபோல் ஆரம்பமான. அக்ரம் - அக்ரம், நுனி என்றபடி. வெளிச் செறிக்கப்பண்ணி - ப்ரகாசிக்கும்படி செய்து. 1 'தஸ்யப்ரகாஶிதத்வார:' என்றது இங்கு விவக்ஷிதம். பத்மகோஶ - தாமரைமொக்கு, ஸ்தந - ஸ்தனம், கதலீபுஷ்ப - த்ருஷ்டாந்த - வாழைப்பூ, இவைகளாகிற உதாஹரணங்களாலே, நிதர்ஶிதமாய் - காண்பிக்கப்பட்டதாய். அவலம்பிக்கிற - தொங்கிக்கொண்டிருக்கிற, ஹ்ருத்புண்டரீகமத்யத்திலே - தாமரைப் புஷ்பம்போன்ற ஹ்ருதயத்தின் நடுவிலே. ஸூக்ஷ்மஸுஷிரத்தினின்றும் - அல்பமான த்வாரத்தில் இருந்து, மேலே கொண்டேறி - ஜீவாத்மாவை எடுத்துக்கொண்டு மேலே புறப்பட்டு, ஏகாதஶத்வாரமான - பதினோரு வாசல்களையுடையதான, அதாவது இரண்டு கண், இரண்டு காது, இரண்டு மூக்கு, வாய், குதம், ஶிஶ்நம், நாபீ,

---

1. அந்தப் பகவானால் ப்ரகாசம் செய்யப்பட்ட வழியை உடையவனாய்.

ஸாரமான ப்ரஹ்மபுரமென்று பேர்பெற்ற ஸ்தூலசரீரத்தில் ப்ரஹ்மரந்த்ரமென்கிற தலை வாசலைத் திறந்து கொண்டு புறப்பட்டு நாடிகளோடே சங்கிலித் துவக்குப் போலே பிணைத்து வைத்த ஸூர்யகிரணங்களை அவலம்பமாக்கி வைகுந்தம் புக வழிப்படுத்தும்.

முன் கருவி யீரைந்து மனத்திற்கூட்டி
முக்கிய மா மருத்திலவை சேர்த்ததெல்லாம்
நன்குணரு முயிரிற் சேர்த்தைம்பூதத்தை
நண்ணுவித்துத் தான்றன்பால் வைக்குநாதன்
ஒன்பதுடன்வாச லிரண்டுடைத்தா யுள்ளே
யொருகோடி துயர்விளைக்கு முடம்பாயொன்றும்
வன்சிறையின்றலைவாசற் றிறந்து நம்மை
வானேறு வழிப்படுத்த மனமுற்றானே. 13

இதி ஸ்ரீகவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ பரமபதஸோபாநே

॥ ஷஷ்டமுத்க்ரமணபர்வ ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

ப்ரும்ம ரந்திரம் என்கிற பதினொரு த்வாரங்களையுடைய, ப்ரஹ்மபுரம் - பரமாத்மா வஸிக்கும்படியான இடம். ஸ்தூலசரீரத்தில் - ஸ்தூலமாய் பார்க்கப்படும் இந்த சரீரத்தில். ப்ரஹ்மரந்த்ரமென்கிற - ப்ரும்மரந்திரம் என்கிற பெயரை உடைய, தலைவாசலை - முக்யமான வாசல்படியை, அன்றிக்கே தலையில் இருக்கும் வாசல்படியை. நாடிகளோடே - நரம்புகளோடே, சங்கிலித்துவக்குப்போலே - சங்கிலி ஒன்றோடொன்று சேர்ந்திருக்குமாப்போலே, பிணைத்துவைத்த-ஸம்பந்தப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிற,அதாவது சாந்தோக்யோபநிஷத்தில் 'இந்த நாடிகளில் இருந்து புறப்பட்டு ஸூர்யன் இடத்தில் சேர்ந்தும், ஸூர்யன் இடத்தில் இருந்து புறப்பட்டு நாடியில் சேர்ந்தும், எப்படி ஒரு ஊரில் இருந்து ஒரு ஊருக்குப்போகும் வழி இரண்டு ஊர்களையும் ஸம்பந்தப்படுத்தி யிருக்குமோ அதைப்போல' என்று சொல்லப்பட்டிருக்கிறது இங்கு விவக்ஷிதம். அவலம்பமாக்கி-பிடித்துக் கொள்ளுவதற்கு ஆதார

மாகச் செய்து, வைகுந்தம்புக - வைகுண்ட லோகத்தில் ப்ரவேசிப்பதற்காக, **வழிப்படுத்தும்** - அர்ச்சிராதி மார்க்கத்திலே போகும்படி செய்வான்.

இப்படிக்கீழ் விஸ்தாரமாக அருளிச்செய்த உத்க்ரமண க்ரமத்தை ஸங்க்ஷேப மாய் அநுஸந்திக்கும் பொருட்டு ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்— **'முன்கருவி'** என்றாரம்பித்து.

[ப - ம்.] **முன்** - முதலிலே, **கருவி** - இந்திரியங்கள், **ஈரைந்தும்** - இரண்டு ஐந்துகளையும், கர்மேந்திரியங்கள் ஐந்து, ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்து ஆகிய பத்து இந்திரியங்களையும், **மனத்தில் கூட்டி** - மனதிலே சேர்த்து, **முக்கியமாம்**-முகத்திலே ஸஞ்சரிக்குமதான, **மருத்தில்** - வாயுவில், ப்ராணவாயுவில் என்றபடி, **அவை** - அவைகளை, **சேர்த்து** - சேரும்படி செய்து, **அது எல்லாம்** - அவை எல்லாவற்றையும், **நன்கு** - நன்றாக, **உணரும்** - அறிகிற, ஜ்ஞாதாவாகிய என்றபடி, **உயிரில்**-ஜீவாத்மாவின் இடத்தில், **சேர்த்து**, **'அதை'** என்று ஒரு பதம் சேர்த்துக்கொள்ள வேண்டும், அந்த ஜீவாத்மாவை, **ஐம் பூதத்தை** - ஸூக்ஷ்மமான பஞ்சபூதத்தை, **நண்ணுவித்து** - கிட்டும்படி செய்து, அதாவது பஞ்சபூதங்களோடே சேர்த்து, **தான்**-ஹார்த்தனான தான், **தன்பால்** - தன் இடத்தில், **வைக்கும்** - இளைப்பாறுவதற்காக வைத்துக் கொள்ளும், **நாதன்** - ஸர்வஸ்வாமியானவன், இப்படி இவனுக்கு உத்க்ராந்தியை நடத்தி, அத்தால் உண்டான ச்ரமத்தைத் தீர்ப்பதற்காகத் தன்னிடத்தில் விச்ரமிக்கும்படி செய்வதற்குக் காரணம் ஸ்வாமித்வமாகிற ஸம்பந்தம் என்றறியத்தக்கது, **ஒன்பதுடன்** - ஒன்பதோடுகூட, **இரண்டு**-இரண்டான, அதாவது பதினொன்றுகளான, ஒன்பது வாசல்களும் எப்பொழுதும் திறந்திருக்கின்றன, நாபியும், ப்ரும்மரந்திரமும் மூடப்பட்டிருக்கின்றன என்கிற வ்யத்யாஸத்தைத் தெரிவிக்கும் பொருட்டு இப்படிப் பிரித்து நிரூபித்தருளினபடி, **வாசல் உடைத்தாய்** - வாசல்களை உடையதாய், **உள்ளே** - உள்ளுக்குள்ளே, **ஒரு**-அத்விதீயமான, **கோடி**-கோடிக் கணக்கான, இது உபலக்ஷணம், எண்ணிறந்த என்றபடி, **துயர்**-துக்கத்தை, **விளைக்கும்** - உண்டாக்குகிற, **உடம்பாய்**-சரீரமாகி, **ஒன்றும்**-ஸம்பந்தப்பட்டு நிற்கிற, இவனோடு பிரியாமல் ஸம்பந்தப்பட்டிருக்கிற என்றபடி, **வன்**-த்ருடமான, தன்னால் போக்கடித்துக்கொள்ள முடியாததான, **சிறையில்**-ஜயிலில், **தலைவாசல்**-தலையில் இருக்கும் வாசலை, **திறந்து**, **நம்மை** - ஆச்ரிதர்களான நம்மை, **வானேறுவழி** - பரமபதத்திற்குப் போகிற அர்ச்சிராதி மார்க்கத்தில், **படுத்த**-நடத்துவதற்கு, **மனமுற்றான்** - ஸங்கல்பத்தைச் செய்தான். இங்கு

1 ‘மநஸி கரணக்ராமம் ப்ராணே மந: புருஷே ச தம் ஜடிதி கடயந் பூதேஷ்வேநம் பரே ச ததாத்மநி । ஸ்வவிதவிதாம்ஷோர்மி த்ரும் ஸாதாரணே ஸரணே புந: பதயதி பரதோ நாடீபேதே யதோசித ஸீமா: ॥’ என்றும், ‘நன்னிலமாவது நற்பகலாமது நன்னிமித்தம் என்னலு மாமதி யாதாமரங்கரடியவர்க்கு மின்னிலே மேனிவிடும் பயணத்து விலக்கிலதோர் நன்னிலேயா நடுநாடி வழிக்கு நடைபெறவே’ என்றும், 2 ‘யதீஹ நஸ்தஸ்மிந் காலே ஸ ஹரஹ ஶதாதிகைகாம் கமலபுரஸ்ய ப்ரஸ்தாநாய ப்ரவேஶயதி ப்ரபு:’ என்றும் இவர்தாமே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் நிர்யாணாதிகாரத்தில் அருளிச்செய்திருப்பதை அநுஸந்திக்கவும். 13

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபதஸோபாந வ்யாக்யானத்தில்

ஆறுவது உத்க்ரமண பர்வம் முற்றிற்று.

---

1. இந்திரியங்களின் ஸமூஹத்தை மனதிலும், (அப்படிப்பட்ட) மனதை ப்ராண வாயுவிலும், அந்த ப்ராணவாயுவை ஜீவாத்மாவிடத்திலும், இந்த ஜீவாத்மாவை ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களிலும், இந்திரியங்களோடு சேர்ந்த ஜீவாத்மாவை எல்லாரையும் விடமேற்பட்டவனான ஹார்த்தனை தன்னிடத்திலும் சீக்கிரத்தில் சேர்த்துக்கொண்டு, இவ்விதமாக தன்னை அறிந்தவன் அதாவது பக்திப்ரபத்திகளாகிற உபாயத்தை அனுஷ்டித்தவன், அதைச் செய்யாதவன் இவர்களுக்கு ஶரீரத்தைவிட்டு வெளிக்கிளம்புகிற மார்க்கத்தினுடைய ஆரம்பம் பொதுவாயிருக்கும்பொழுது அதாவது ஹார்த்தனிடத்தில் விஶ்ரமிக்குமளவும் எல்லா ஜீவாத்மாக்களுக்கும் நிர்யாணம் பொதுவாயிருக்கும், பிறகு அவரவர்களுக்குத் தகுந்தபடி பகவான் வெவ்வேறு நாடிகளாலே அழைத்துக் கொண்டு போகிறான்.

2. அந்த நிர்யாண காலத்தில் நம்மை ஒருவராலும் செய்யப்படாததான திவ்ய நகரமான வைகுண்டத்திற்கு ப்ரயாணம் புறப்படுவதற்காக நூறுக்கு மேல்பட்டதான நூற்றொன்றாவது நாடியை ப்ரவேசிக்கும்படி செய்கிறான்.

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ॥

॥ [illegible] ॥

தெருளார்பிரமபுரத்திறை சேர்ந்திடர் தீர்ந்தவர் தாம்
இருளார் பிரமபுரச்சிறை தீர்ந்தபின் வந்தெதிர்கொண்டு
அருளாலமரர் நடத்த விம்மாயை கடந்ததற் பின்
சுருளார் பவ நரகச்சுழலாற்றின் சுழற்சியிலே. 14

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜமஹாதேசிகாய நம: ॥

ஏழாவது அர்ச்சிராதி பர்வம்.

இனி அர்ச்சிராதிகதியின் க்ரமத்தை, நிரூபித்தருளக் கோலி, இப்படி அர்ச்சிராதிகதியால் ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டிச் சென்றவர்களுக்குப் புனராவ்ருத்தியில்லை என்றருளிச் செய்கிறார்—'தெருளார்' என்றாரம்பித்து.

[ப-ம்.] தெருள் - ஜ்ஞானத்தினால், ஆர் - பூர்ணனான, ஸர்வஜ்ஞனான என்றபடி, பிரம புரத்திறை - ப்ரும்மபுரம் என்று சொல்லப்படும் இந்த ஶரீரத்திற்கு ஸ்வாமியான பகவானை, சேர்ந்து - ஆஶ்ரயித்து, இடர் தீர்ந்தவர் - துக்கங்கள் நிவ்ருத்தி அடைந்தவர், அன்றிக்கே 'சேர்ந்து' என்று ஹார்த்தனிடத்தில் விஶ்ரமத்தைச் சொல்லி, 'இடர் தீர்ந்தவர்' என்று உத்க்ராந்தி ஸமயத்தில் உண்டான ஶ்ரமத்தைத் தீர்த்துக் கொண்டவர் என்று கீழ் பர்வத்தில் நிரூபித்தருளின அர்த்தத்தை அனுவதிக்கிறதாகவுமாம், இருளார் - அஜ்ஞானத்தினால் நிறைந்த, அதாவது அந்தகாரம் நிறைந்த பிரமபுரச்சிறை - ஶரீரமாகிற ஜயில், தீர்ந்தபின் - நிவ்ருத்தமான பிறகு, ஶரீரத்தை விட்டு வெளிக் கிளம்பின பிறகு என்றபடி, வந்து எதிர்கொண்டு - எதிர்கொண்டுவந்து என்றந்வயம், அதாவது தம் தாமுடைய எல்லைகளின் ஆரம்பத்திலேயே முன்வந்திருந்து அழைத்துக் கொண்டுபோக, அருளால் - பகவானுடைய க்ருபையினால், அமரர் - ஆதிவாஹிகர்களான தேவதைகள், நடத்த - இவனை வழி நடத்த, இம்மாயை - இந்த ப்ரக்ருதியை, கடந்ததற்பின் - தாண்டினபிறகு, பவ - பிறப்பு, நரக - நரகம்,

இப்படி புண்யபாபங்களாகிற பொன்னுமிரும்புமான விலங்குகளைக் கழித்து ஸூக்ஷ்மசரீரமாகிற சிறையினின்றும் ஸௌஹார்த்த ப்ரஸந்நனான ஹார்த்தன் நயிப்பிக்கப் புறப்பட்டவனை பண்டிறைகொண்ட தேவர்கள் பரவஶராய் அதிபீதராய் ப்ரணதிபரராய்க் காணிக்கையிட்டுக் காண, முற்பட அர்ச்சிஸ்ஸென்றும் அக்நி என்றும் பெயரையுடைய ஆதிவாஹிகன் வந்தெதிர்கொண்டு தன் வைபவமெல்லாவற்றையும் ஸம்பாவித்து 1 'சூழ் விசும்பணி முகி'லில் சொன்ன ஸத்காரத்தோடே தனக்கடைத்த வெல்லை நடத்தும்.

இவைகளாகிற, சுழலாற்றின் - சுழன்று சுழன்று ப்ரவஹிக்கும் நதியின், சுழற்சியில்-சுழலில், சுருளார் - சுருண்டுவர மாட்டார்கள், அதின் ப்ரவாஹத்திலே போய்க்கொண்டு அதின்படி சுழன்று கொண்டிருக்க மாட்டார்கள் என்றபடி. 14

இனி அர்ச்சிராதிகதியின் வரிசை க்ரமத்தையும் அங்கு செய்யப்படும் ஸத்காராதிகளின் க்ரமத்தையும் நிரூபித்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. பொன்னும் இரும்புமான விலங்குகள் - மோக்ஷ கதிக்கு விரோதியான பலங்களைக் கொடுக்கிறபடியினால் புண்யங்களும் ஒருவகை விலங்கு தான், ஆனாலும் அவைகள் பாபங்களைப்போல நரகவேதனை முதலிய அதிகத் துக்கங்களுக்குக் காரணமல்லாமையினாலே பொன் விலங்கு என்னப்படுகிறது. ஸௌஹார்த்த - ப்ரீதி. நயிப்பிக்க - அழைத்துக் கொண்டுபோக. பண்டு - முன்னால், இறைகொண்ட - காணிக்கைகளை அங்கீகரித்தவர்களான, அதாவது வர்ணாஶ்ரம தர்மானுஷ்டானங்களினால் ஆராதிக்கப்பட்டவர்களான. பரவஶராய் - இவனுடைய பகவத் பக்த்யாதிகளுக்கு வஶப்பட்டவர்களாய், அன்றிக்கே பகவதாஜ்ஞைக்கு வஶப்பட்டவர்களாய், அதிபீதராய் - மிகவும் பயந்தவர்களாய், ப்ரணதிபரராய் - ப்ரணமம் செய்பவர்களாய், காணிக்கையிட்டு - உபஹாரங்களை ஸமர்ப்பிவித்து, காண - ஸேவித்து நிற்க. 'அர்ச்சிஸ்ஸென்றும்' என்றது 'தே அர்ச்சிஷமபிஸம்பவந்தி' (அவர்கள் அக்னியை அடைகிறார்கள்) என்று நிரூபிக்கப்பட்டதை அனுஸரித்து அருளிச்செய்தபடி. 'அக்நி என்றும்' என்றது 'அக்நிர்ஜ்யோதிஃ' (அக்னி என்கிற ஜ்யோதிஸ்ஸு) என்றதை அனுஸரித்து அருளிச் செய்தபடி. இப்படி இரண்டிடத்திலும் சொல்லப்பட்டவன் ஒருவனே என்று நிர்த்தாரணம் பண்ணியருளினாராயிற்று. ஆதிவாஹிகன் - அதிவஹனம் பண்ணுமவன், வழிநடத்தி வைக்குமவன் என்றபடி. தன்வைபவம் - தன்னுடைய ஐஶ்வர்யாதிகள். 'சூழ் விசும்பணி முகி'லில் - 'சூழ் விசும்பணி முகில்' என்கிற திருவாய்மொழியில். ஸத்காரம் - பஹுமானம், அதாவது பூர்ணகும்பம் கொண்டுவந்து

---

1. திருவாய்மொழி-10-9-1.

அநந்தரம் பகலும் ஶுக்லபக்ஷமும் உத்தராயணமும் ஸம்வத்ஸரமும் அடைவே எதிர்கொண்டு வழி நடத்துவார்கள். காலவாசி ஶப்தங்களுக்குக் காலாபிமாநி தேவதைகளைச் சொல்லுகின்றன. ஶாகடாயநஸம்ஹிதையில் 1 'அக்நி: அஹ: ஜ்யோத்ஸ்நீ ஶுக்லபக்ஷ:' என்று பகலுக்கும் ஶுக்லபக்ஷத்திற்கும் நடுவே ஜ்யோத்ஸ்நீ என்றொன்றைச் சொன்னது ஶ்ருதிஸித்தமான க்ரமத்திற்கு அநுகுணமாக ஶுக்லபக்ஷார்த்தமாகக் கொள்ளலாம். ஶாகாவிஶேஷாத் ப்ருதிவ்யாதிகளுக்கும் அநேகஶாகாநுகுணமாக நிர்வாஹம் கண்டுகொள்வது.

அழைத்துப்போவது, திருவிளக்குகள் ஸமர்ப்பிப்பது, ப்ரணாமாதிகள் செய்வது, இருப்பிடம் வகுப்பது, கீதங்கள் பாடுவது, புஷ்பமாரி பொழிவது முதலிய பஹுமானங்கள் என்றபடி. **தனக்கடைத்த எல்லை** - தனக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எல்லை வரையில், **நடத்தும்** - வழி நடத்தி வைக்கும்.

அநந்தரம் - பிறகு, **அடைவே**-க்ரமமாக. பகல் ஶுக்லபக்ஷம் இத்யாதிகள் காலத்தையன்றோ குறிக்கின்றன, இப்படி இருக்க அவர்கள் வழிநடத்துவதும் ஸத்காராதிகளைப் பண்ணுவதும் எப்படி என்னில், அதை நிரூபித்தருளுகிறார்—**'காலவாசி'** என்றாரம்பித்து. இங்கு - இந்த அர்ச்சிராதி கதியைச் சொல்லுமிடத்தில். 2 'ஶுக்லக்ருஷ்ணே கதீ ஹ்யேதே', 3 'நைதே ஸ்ருதீ' இத்யாதிகளில் இவைகளை மார்க்கங்களாகச் சொல்லியிருப்பதினாலும் காலங்கள் மார்க்கமாகாதாகையினாலும் கதியைச் சொல்லும் இடத்தில் இருக்கிற காலத்தைச் சொல்லும் ஶுக்லபக்ஷாதி பதங்கள் அந்தந்தக் காலாபிமானி தேவதைகளைச் சொல்லுகின்றன என்றபடி. சில இடங்களில் வேறு க்ரமம் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் - **'ஶாகடாயந'** என்றாரம்பித்து. **அக்நி:** - அக்னி, **அஹ:** - மத்யானம், **ஜ்யோத்ஸ்நீ** - நிலவு. **ஶுக்லபக்ஷார்த்தமாக**-ஶுக்ல பக்ஷத்தில் நிலவு அவஶ்யம் இருக்குமாகையினால் நிலவுடன் கூடிய ஶுக்ல பக்ஷம் என்று சொல்லுவதில் தாத்பர்யம் என்றபடி. அனேகம் ஶ்ருதிகளுக்கும் ஆனுகுண்யம் ஏற்படுவதற்காக இப்படியே அர்த்தம் சொல்லவேண்டும் என்று திருவுள்ளம். **ஶாகாவிஶேஷாத்** - ஒருவித ஶாகையில் சொல்லப்பட்ட. **ப்ருதிவ்யாதிகளுக்கும்** - ப்ருதிவியைத் தாண்டுகிறான், ஜலத்தைத் தாண்டுகிறான் என்று சொல்லப்படும் ப்ருதிவீ முதலியவைகளுக்கும். **அநேகஶாகாநுகுணமாக** - அனேகம் ஶாகைகளில் சொல்லியிருப்பதை அனுஸரித்து. 'பூயஸாம் பலீயஸ்த்வம்' என்கிற ந்யாயத்தினால் அனேகம் ஶ்ருதிகளில் சொல்லியிருப்பதற்கு விரோதம்

---

1. 2. இந்த ப்ரகாசத்தோடு கூடியதும் இருண்டதுமான வழிகள். 3. இந்த வழிகளை.

ஸம்வத்ஸரதேவதைக்கநந்தரம் வாயுதேவதை வந்தெதிர் கொண்டு வழி நடத்தும். இந்த வாயு தன்னை தேவர்களுக்கு இருப்பிடமாகையாலே ஶாஸ்த்ரங்கள் தேவலோகசப்தத்தாலும் வாயுலோகசப்தத்தாலும் சொல்லும். வாயுவுக்கநந்தரம் ரத சக்ரரந்த்ரம் போலே இருப்பதொரு வழியாலே மேலேபோய் ஸூர்ய னைக் கிட்டும். 1 'தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு' என்றும், 2 'மன்னுங்கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடு

வராமல் நிர்வஹித்துக் கொள்ளவேண்டியது, அதாவது ஶரீரத்தில் இருக்கும் பஞ்சபூதங்களை விட்டுப் புறப்படுவதையோ, அல்லது அண்டங்களுக்கு ஆவரணமான ப்ருதிவ்யாதி தத்வங்களைத் தாண்டுவதையோ சொல்லுகிறது என்று அறியத்தக்கது.

சில ஶ்ருதிகளில் 'ஸம்வத்ஸராதாதித்யம்' என்று ஸம்வத்ஸரதேவதைக்கு அப்புறம் ஸூர்யனைச் சொல்லியிருந்தபோதிலும் மற்றும் சிலஶ்ருதிகளில்வாயு வைச் சொல்லியிருப்பதினாலும், 3 'வாயுமப்தாதவிஶேஷவிஶேஷாப்யாம்' என்றுஸூத்ரகாரரும்நிர்ணயித்திருக்கிறபடியினாலும் வாயுவைநிரூபித்தருளு கிறார்—'ஸம்வத்ஸர' என்றாரம்பித்து. சில ஶ்ருதிகளில் ஸம்வத்ஸரத்திற்குப் பிறகு தேவலோகத்தையும், சில ஶ்ருதிகளில் வாயு லோகத்தையும் சொல்லி யிருக்கிறபடியினாலே வாயு என்று நிர்ணயிப்பது எப்படி என்னில், அந்த இரண்டும் வாயுவையே சொல்லுகின்றன என்று ஸமாதானம் அருளிச்செய் கிறார்—'இந்த' என்றாரம்பித்து. 'தேவர்களுக்கு' இத்யாதி - வாயுமண்டலத் திலேயே ஸ்வர்க்காதி லோகங்கள் இருக்கிறபடியினால் வாயுலோகமே தேவதை களுக்கு இருப்பிடம் என்றபடி. 'வாயுலோகம்' என்றது வாயுவாகிற லோகம் என்றபடி. ரதசக்ரரந்த்ரம்போலே - தேர் சக்ரத்திலிருக்கும் த்வாரம் போல. ப்ராக்ருத ப்ரளயத்தில் தேவலோகங்களும் தேவதைகளும் நசித்த பிறகு நசிக்கிற ப்ரும்மா முதலியவர்கள் மோக்ஷத்திற்குப் போகும்பொழுது இந்த வாயு முதலிய மார்க்கங்கள் இல்லையே, அப்படி யிருக்க மோக்ஷத்திற்கு ஸூர்யனே வழி என்று சொல்லி யிருப்பது எப்படிப்பொருந்தும் என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்—'தேரார்' என்றாரம்பித்து. தேரார்- தேரில் நிறைந்திருக்கிற, நிறைகதிரோன் - பூர்ணமான கிரணங்களையுடைய ஸூர்யனுடைய, மண்டலத்தை, கீண்டு - த்வாரம் செய்துகொண்டு, புக்கு-ப்ர வேசித்து. மன்னும் - ஸ்திரமான, கடும்கதிரோன் - க்ரூரமான கிரணங்களை

---

1. சிறியதிருமடல். 2. பெரியதிருமடல்.

3. ஸம்வத்ஸரத்தில் இருந்து வாயுவை அடைகிறான், ஒரு இடத்தில் பொதுவாக தேவலோகம் என்றும், மற்றோர் இடத்தில் வாயு என்றும் விசேஷித்துச் சொல்லி யிருப்பதினால்.

வுளன்னதோ ரில்லியி னூடுபோய்' என்றும், 1 'சண்டமண்டலத்தி னூடு சென்று' என்றும், 2 'இருளகற்று மெரிகதிரோன் மண்டலத் தூடேற்றிவைத்து' என்றும், 3 'ஸூரித்வாரமுச்யதே' என்றும், 4 'யோ பித்வா ஸூர்யமண்டலம்' என்றும், 5 'மமைஷ மண்டலம் பித்வா' என்றும் சொல்லுகிற ஸூர்யமண்டலபேதாதிகள் ப்ராக்ருதப்ரளயாதிகளில் அண்டாதிபதி முதலானோர் மந்த்ராம்போது அஸத்ப்ராயங்களாகையாலே இவை இங்குள்ளார்க்காகக் கடவன. ஸூர்யத்வாரத்தாலே போவார்களென்றது ஸாவகாசங்களிலே ஆடம்பரத்தினுடைய த்வாரம்போலே யென்று விசேஷிதமாயிற்று.

உடைய ஸூர்யனுடைய, **மண்டலத்தின், நன்நடுவுள்** - நல்ல மத்யப்ரதேசத்தில், **அன்னதோர்** - அப்படிப்பட்டதொரு, **இல்லியின்** - த்வாரத்தின், **ஊடு போய்** - நடுவாலே சென்று. **சண்டமண்டலத்தின்** - க்ரூரமான ஸூர்யமண்டலத்தின், **ஊடுசென்று, இருள் அகற்றும்** - இருட்டைப் போக்கடிக்கிற, **எரிகதிரோன்** - எரிகிற கிரணங்களை உடைய ஸூர்யனுடைய, **மண்டலத்தூடு** - மண்டலத்தின் நடுவில், **ஏற்றிவைத்து** - ஏறும்படி செய்து. **ஸூரி:** - ஸூர்யன், **த்வாரம்** - வழியாக, **உச்யதே** - சொல்லப்படுகிறான். **ய:** - எந்த வழி, **ஸூர்யமண்டலம்** - ஸூர்யனுடைய மண்டலத்தை, **பித்வா** - பிளந்து கொண்டு (மேலே போகிறதோ). **ஏஷ:** - இவன், **மம** - என்னுடைய, **மண்டலம்** - மண்டலத்தை, **பித்வா** - பிளந்து கொண்டு (போகப்போகிறான்). **ஸூர்யமண்டலபேதாதிகள்** - ஸூர்யமண்டலத்தைப் பிளப்பது முதலியவைகள். **'ஸூரி'** பதம் சந்திரனைக்கிட்டுவதைக் குறிக்கிறது. **ப்ராக்ருதப்ரளயாதிகளில்** - ப்ரக்ருதியைச் சேர்ந்த எல்லா வஸ்துக்களுக்கும் லயம் ஏற்படும் ஸமயத்தில். **அண்டாதிபதி** - அண்டத்திற்கு யஜமானனாகிய ப்ரும்மா, **முதலானோர்** - முதலியவர்கள், அதாவது அந்த ஸூர்யன் சந்திரன் முதலியவர்கள் என்றபடி. **அஸத்ப்ராயங்களாகையாலே** - வஸ்துக்கள் இல்லாமல் போய் விட்டபடியால், ஸூர்யன் முதலியவர்கள் அப்பொழுது இல்லாமையினால் என்றபடி. **இங்குள்ளார்க்கு**-இந்தப்பூலோகம் முதலியவற்றில் இருக்குமவர்களுக்கு, **ஆகக்கடவன** - உண்டாகக் கூடியவைகள் என்றபடி. **ஸூர்யத்வாரத்தாலே** - ஸூர்யன் இடத்தில் இருக்கிற வழியாலே. **ஆடம்பரத்தினுடைய**-ஆடம்பரம் என்கிற வாத்ய விசேஷத்தினுடைய, **த்வாரம்போலே** - த்வாரம்போலே, அதாவது ஸூர்யமண்டலத்தில் இருக்கும் த்வாரம் ஆடம்பரத்தி

---

1. திருச்சந்தவிருத்தம்-67. 2. பெரியாழ்வார் திருமொழி-4-9-3.
3. 4. யாஜ்ஞவல்க்யஸம்ரு-4-167. 5.

அவ்வழியாலே **ஆதிவாஹிகனுல்** நடத்தப் போய் **சந்த்ர**னைக் கிட்டும். **தூமாதிமார்க்க**த்தில் சொன்ன **சந்த்ர ப்ராப்தி ஸ்வர்க்க**த்தில் **ஶரீர விஶேஷ ப்ராப்தி**க்காகச் சொல்லிற்று. **தக்ஷிணாயநம்ருதனான முமுக்ஷு**வுக்கு **ந்யாஸவித்யை**யில் சொன்ன **சந்த்ர ஸாயுஜ்ய**மும் **உத்தராயணம்ருதனுடைய ஸூர்யஸாயுஜ்ய**ம்போலே **விஶ்ரம**

னுடைய த்வாரம்போலே இருக்கும் என்றபடி. **விஶேஷித**மாயிற்று - விஶே ஷித்துச் சொல்லப்பட்டதாயிற்று.

'அவ்வழியாலே' என்றது மேல் 'போய்' என்பதுடன் அந்வயிக்கிறது. **கிட்டும்** - சேருவன். தூமாதி மார்க்கத்திலும் சந்திரனை அடைவது சொல்லப் பட்டிருப்பதினுல் இந்த இரண்டு மார்க்கங்களும் கடைசியில் ஒரே இடத் தில் சேருவதைப்போல் இருக்கிறதே என்கிற சங்கையைப் பரிஹரித்தருளு கிறுர்—'**தூமாதி**' என்றுரம்பித்து. '**தூமாதிமார்க்**'மாவது தூமம் (புகை), ராத்திரி, க்ருஷ்ணபக்ஷம், முதலியவைகளின் வழியாக ஸ்வர்க்கம் முத லிய மற்ற இடங்களுக்குப் போகும் மார்க்கம். **ஸ்வர்க்கத்தில் ஶரீரவிஶே ஷப்ராப்தி**க்காக - இந்த ஸ்தூல ஶரீரத்தில் நின்றும் புறப்படும்பொழுது இவனேடு சேர்ந்திருக்கிற பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்மாம்ஶங்கள் சந்திரனு டைய கிரணங்களினுல் வ்ருத்தி செய்யப்பட்டு தேவாதிஶரீரங்கள் ஆகின் றன, அப்படி ஆவதற்காக என்றபடி. அர்ச்சிராதிகதியில் செல்லுமவனுக்கு அப்படிப்பட்ட விஶேஷ ஶரீரத்தை அடைவதற்காகவல்ல என்றறியத் தக் கது. மோக்ஷத்திற்குப்போகும் எல்லோருக்கும் சந்திரனை அடைவது துல்ய மாக இருக்கும் பக்ஷத்தில் தைத்திரீயத்தில் ந்யாஸவித்யையின் பலத்தை நிரூபிக்கும் இடத்தில் 'எவன் தக்ஷிணுயனத்தில் மரணமடைகிறுனே அவன் பித்ருக்களின் மஹிமையை அடைந்து சந்திரனுடைய ஸாயுஜ்யத்தை அடை கிறுன்' என்று தக்ஷிணுயனத்தில் மரணமடைந்தவனைப்பற்றித் தனித்துச் சொல்லியிருப்பதற்குத் தாத்பர்யம் என்ன என்னில், அருளிச் செய்கிறுர்— '**தக்ஷிணாயந**' என்றுரம்பித்து. **ம்ருதனான** - மரண மடைந்தவனுன. **ந்யாஸவித்யை**யில் சொன்ன - ந்யாஸவித்யையின் பலத்தை நிரூபிக்கும் இடத்தில் சொல்லி யிருக்கிற. '**ஸாயுஜ்ய**'மாவது இருவரும் ஒரே வித மான ஸுகத்தை அனுபவிக்கை. கீழ் நிரூபித்த ப்ரமாணங்களினுல் மோக்ஷத் திற்குப்போகிற எல்லோருக்கும் ஸூர்யன் வழியாகவே போகவேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் பொழுது உத்தராயணத்தில் மரணமடைந்தவன் ஸூர்ய ஸாயுஜ்யம் அடைகிறுன் என்று சொல்லியிருப்பது அங்கு கொஞ்சகாலம் இளைப்பாறுகிறுன் என்பதைச் சொல்லுகிறது என்பதைப்போல சந்திர ஸாயுஜ்யமும் அங்கு விஶ்ரமத்தை அடைவதற்காகச் சொல்லப்பட் டிருக்கிறது என்றறியத்தக்கது. **விஶ்ரமம்** - இளைப்பாறுதல். **ஆதிவாஹி**

விஶேஷாய-ம். இங்கு ஆதிவாஹிகரிலொருவரான வருணனுடைய ப்ராப்தியைச் சொல்லுகிறது.

வருணன் வழி நடத்த துந்துபிரந்த்ரம்போலே யிருப்பதொரு வழியாலே மேலே போமளவில் வித்யுதபிமாநி தேவதை வந்தெதிர் கொண்டு வழி நடத்தும். வைத்யுதன் தன்னையே அமாநவனென்றும், அவன் தானே ப்ரஹ்மத்தை ப்ராபிக்குமென்றும் ஶ்ருதிகள் சொல்லுகையாலே வித்யுத்தோடு உண்டான துவக்கையும் தன்னுடைய மத்யபாவத்தையு மிடமாகக் கொண்டு வந்த வருணனும், அவன் பின்னே அடையுண்ட இந்திரனும், ப்ரஜாபதியும் அமாநவன் நடத்து

கரில் ஒருவரான - அக்னிமுதல் நிரூபிக்கப்பட்ட ஆதிவாஹிகர்களுள் ஒருவனான.

துந்துபிரந்த்ரம்போலே - துந்துபி வாத்யத்தின் த்வாரம்போல. வித்யுதபிமாநிதேவதை - மின்னலுக்கு அபிமானியான தேவதை. ப்ராபிக்கும் - அடைவிக்கும். சில ஶ்ருதிகளில் அமானவனுக்குப் பிறகு வருணன், இந்திரன், ப்ரஜாபதி இவர்கள் வழி நடத்தி வைக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறதே என்னில், அதற்கு ஸமாதானம் அருளிச்செய்கிறார்— 'வைத்யுதன்' என்றாரம்பித்து. 'ஶ்ருதிகள்' என்றது சாந்தோக்யத்தில் சொல்லப்படும் 'சந்திரன் இடத்தில் இருந்து வைத்யுதனை அடைகிறான், அந்தப் புருஷன் தான் அமானவன், அவன் இவனை ப்ரும்மத்தை அடைவிக்கிறான்' என்றிவை முதலியவைகள் என்றபடி. துவக்கு - ஸம்பந்தம், மின்னலுக்கும் வருணனுக்கும் உண்டான ஸம்பந்தம் என்றபடி. மின்னலுக்கும், மழைக்கு அபிமானிதேவதையான வருணனுக்கும் ஸம்பந்தம் ப்ரஸித்தமிறே. இத்தால் [1]'தடிதோதிவருண: ஸம்பந்தாத்' என்கிற ஸூத்ரம் ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. 'தன்னுடைய மத்யபாவத்தையும்' என்றது ஸம்பந்தம் மாத்திரம் காரணமாகில் மின்னலுக்கு முன்பு ஏன் வருணன் வரக்கூடாது என்னில் 'ஆகந்துகாநாமந்தே நிவேஶ:' (நடுவில் வருகிறவர்களுக்குக் கடைசியில் இடம் கொடுக்கவேண்டும்) என்கிற ந்யாயத்தினால் தனக்கு வேறு இடத்தில் இடம் கொடுக்க அவகாசம் இல்லாமையினாலே அமானவனுக்குப் பிறகு வருணன் இருக்கவேண்டும் என்று நிஶ்சயிக்கப்படுகிறது என்றபடி. அடையுண்ட - அடைக்கப்பட்ட, அதாவது இந்திரனுக்கும் ப்ரஜாபதிக்கும் வேறு இடம் இல்லாமையினால் அமானவன் தான் நடத்துகிற வழியில் வருணனுக்கு இடம் கொடுத்தமையினால் அவன் பின்னோடுவந்த மற்ற இருவர்களுக்கும் இடம் கொடுக்கிறான் என்றபடி. 'நடத்துகிறவழியில்' என்பதினால் அமான

1. மின்னலுக்குப் பிறகு வருணன் அழைத்துக் கொண்டு போகிறான், மின்னலுக்கும் வருணனுக்கும் மேகத்தில் வஸிக்கும் ஸம்பந்தம் இருக்கிறபடியினால்.

கிற வழியில் தந்த மெல்லை யளவே **ஸஹகாரி**களாய்க் கொண்டு வழி நடத்துவார்கள். **அமாநவனுடைய ப்ராதாந்யமும் வ்யவதாநஸஹ**மென்கிற **பாஷ்யமும் வருணாதிகள் அநுக்ராஹக**ரென்கையாலே **அநுக்ராஹகாந்வயாநுஸாரத்திலே தாத்பர்யம்.** ஒரு **ஶ்ருதியிலே அமா நவ**னென்றும் வேறொரு **ஶ்ருதியில் மாநவ**னென்றும் சொல்லப்பட்டவர்களில் முற்பட **அமாநவ**னும் பிற்பட **மாநவ**னும் வழி நடத்துவார்களென்றும் சிலர் சொல்லுவார்கள். **க்ரமநியாமகம் துர்லப**மாகையாலே **விகல்ப**மாதல் **ஸமுச்சய**மாதலென்றுஞ் சிலர் கொள்ளப் பார்ப்பார்கள். **விகல்பதோஷாதி**களைப் பார்த்து ஒருவருக்கிரண்டு பேரென்று

வனே ப்ரதானனாயிருந்து ப்ரும்ம ப்ராப்திவரையில் வழி நடத்துகிறான், வருணன், இந்திரன், ப்ரஜாபதி, இவர்கள் தங்கள் தங்கள் எல்லைகள் வரையில் அமானவனுடன்கூட இருந்து வழி நடத்துகிறார்கள் என்பது தெரிவிக்கப்படுகிறது. **ஸஹகாரி**களாய் - ஒத்தாசை செய்யுமவர்களாய். 1 'ததஶ்சாமாநவஸ்ய ப்ராதாந்யம் வ்யவதாநஸஹிஷ்ணுத்வமவஸீயதே' என்று ஸ்ரீபாஷ்யத்தில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்க இங்கு அமானவனே நேரில் வழி நடத்துகிறான் என்று அருளிச் செய்திருப்பது அத்துடன் விரோதியாதோ என்ன ஸமாதானம் அருளிச்செய்கிறார்- '**அமாநவ**னுடைய'என்றாரம்பித்து. '**அநுக்ராஹகர்** என்கையாலே' என்றது இதற்குமேல் ஆதிவாஹிகாதிகரணத்தில் 2 '**வருணாதயஸ்த்வநுக்ராஹகா:** இதி தேஷாமப்யாதிவாஹிகத்வேந நாமதேயோ விருத்த **ஏவ**' என்று அமானவனே ப்ரும்மப்ராப்தி வரையில் நடத்துகிறான், இவர்கள் ஒத்தாசை செய்கிறவர்கள் என்றும், 'வைத்யுதேநைவ தத: தச்ச்ருதே:' என்கிற ஸூத்திரத்தின் பாஷ்யத்தில் நிர்ணயிக்கப்பட்டிருப்பதினாலே '**வ்யவதாநஸஹம்**' என்பதற்கு ஒத்தாசை செய்யும் வருணாதிகளின் வ்யவதானத்தை மாத்திரம் பொறுத்துக் கொள்ளுவது என்று அர்த்தம் சொல்லவேண்டுமே ஒழிய அமானவன் இல்லாமல் வருணாதிகள் வழி நடத்துகிறார்கள் என்பதில் தாத்பர்யம் இல்லை என்றபடி. 'ஒரு **ஶ்ருதியிலே**' என்றது சாந்தோக்யத்திலே என்றபடி. 'வேறு ஒரு **ஶ்ருதியிலே**' என்றது ப்ருஹதாரண்யகத்திலே என்றபடி. **க்ரமநியாமகம்**- முன்பின் என்கிற க்ரமம் சொல்லுவதற்கு காரணமான ப்ரமாணம். **ஸமுச்சய**- சேர்த்துச் சொல்லுதல். **விகல்பதோஷாதிகளை** - மீமாம்ஸகர்களினால்

---

1. ஆகையினால் அமானவன் அழைத்துக் கொண்டு போகிறான் என்பது மற்றவர்களையும் ஸஹாயமாய் வைத்துக்கொண்டு போவதையும் பொறுத்துக் கொள்ளுகிறது என்றறியப்படுகிறது.

2. வருணன் முதலியவர்கள் அமானவனுக்கு ஒத்தாசை செய்கிறவர்களாகையினால் ஆதிவாஹிகர்கள் என்கிற ஆகாரத்தில் ஸம்பந்தம் உண்டு.

சிலர் சொல்லுவார்கள். இங்கே பாஷ்யாதிகளையும் 1 ‘அர்சிஷம் அஹ: அஹ்ந ஆபூர்யமாணபக்ஷம்’, 2 ‘அர்சிஷோ அஹர் அஹ்ந ஆபூர்யமாணபக்ஷாத்’ இத்யாதிகளான அதிவாஹிகஸ்தலங்களையும் அமாநவனையும் ஸாமான்ய பூர்வ பக்ஷமாக்கி உபந்யஸிப்பது. அமாநவனான வைத்யுதன் பக்கலினின்றும் ப்ரஹ்மலோகம் ஏறக்கொண்டு போமென்று ஸ்ருதி சொன்னது 3 ‘வைத்யுதேநைவ ததஸ்தச்ச்ருதே:’ என்கிற ஸூத்ராநுஸாரமாக ஸ்தாநத்ரயகல்பநாதிகளாலே நிர்வஹிக்கலாம். இதனால் அக்கரையில் அமாநவனைச் சொன்ன ஸம்ஹிதைக்கும் விரோதமில்லை. இவ் வஹ்ந்யாதி தேவதைகளெல்லாம் கர்மவிசேஷங்களாலே பதம் பெற்ற ப்ரஹ்மாத்யாதி தேவதைகளென்றும், அமாநவனை நித்ய ஸூரிகளிலே ஒருவனாக விசைத்துக் கீழுள்ளாரை கர்மவஸ்யரென்

விகல்பத்திற்கு நிரூபிக்கப்பட்டிருக்கும் எட்டுவிதமான தோஷங்களை. இங்கே- இரண்டுவிதமாக நிர்வாஹம் செய்யும் இடத்தில். அர்சி: - அக்னி, அஹ: - பகல், ஸுக்லபக்ஷ - சுக்லபக்ஷம். அர்சி: - அக்னி, அஹ: - பகல், ஆபூர்யமாணபக்ஷாத் - ஸுக்லபக்ஷம். அதிவாஹிக - பூர்வர்களினுடைய. தத: - அந்த அமானவனுக்கு மேல், வைத்யுதேநைவ - வைத்யுதன் என்கிற பெயரையுடைய அந்தஅமானவனாலேயே ப்ருஹ்மப்ராப்தி வரையில்அழைத்துக் கொண்டு போகப்படுகிறான், தச்ச்ருதே: - அப்படியே ஸ்ருதியில் சொல்லப் பட்டிருப்பதினால். ஸ்தாநத்ரயகல்பநாதிகளாலே - பரமபதத்தில் கொஞ்சம் தூரம் வரையில் அமானவனும் அதற்குப் பிறகு மாநஸன் என்றும் கல்பிப்ப தினாலே. இதனால் - பரமபதத்திலேயே இருவர்களுக்கும் வழி நடத்துவார் கள் என்பதினால். அக்கரையில் - விரஜாநதியின் அந்தப் பக்கத்துக் கரையில். அமாநவனைச் சொன்ன-அமானவன் தொடுகிறான் என்று சொன்ன. கர்ம விசேஷங்களாலே - ஸுக்ருத கர்மங்களின் பலமாக. பதம் - அந்த அக்னி இந்திரன் முதலிய ஸ்தானங்களை. ‘எல்லாம்’ என்பதினால் அமானவ னும் கர்மவஸ்யனாய் ஒரு ஸுக்ருத விசேஷத்தாலே ப்ருஹ்மத்தை அடையும் வரையில் அழைத்துப் போகும்படியான பதவியைப் பெற்றான் என்பது த்யோதிதம். ‘அமாநவனை’ இத்யாதி - அமானவன் ப்ருஹ்மத்தை அடை விக்கிறான் என்று சொல்லி இருப்பதினாலே பரமபதத்தளவும் செல்லவேண்டி யது அவஸ்யமாகையினாலும், கர்மவஸ்யருக்குப் பரமபதத்திற்குப் போகை அஸம்பாவிதமாகையினாலும் அமானவன் மாத்திரம் நித்யஸூரிகளில் ஒருவ ராய் இருக்கவேண்டும் என்று அபிப்ராயம். ‘இவர்கள்’ இத்யாதி - இப்படி

1. 2.
3. ஸாரீரக ஸூத்திரம்-4-4.

றும், இவர்களெல்லோரும் அமாநவனைப் போலே ஸ்ரீபகவதாஜ்ஞராய் அக்ந்யாதி விபூதிகளுக்கு அபிமாநிதேவதைகளான சில நித்யஸூரிகளென்றும் மதபேதங்கள் நடக்கும். இவ்வபிப்ராயபேதம் ஸ்ருதிகளுந்தோறு முண்டாயிருக்கும். உபகோஸலனுக்கு ப்ரஹ்மகாய நிஷேவணாதிகள் சொல்லுமிடங்கள் மதுவித்யாந்யாயத்தாலே விசேஷவிஷயம். விபவவ்யூஹலோகாதி ப்ராப்திக்ரமங்கள் சொல்லுமிடங்களுக்கும், சிசுபாலாயோத்யாதி முக்திக்ரமங்கள் சொன்னதுக்கும் இதுவே நிர்வாஹம்.

அமானவன் நித்யஸூரி என்று ஏற்பட்டால் அவனோடு சேர்த்துச் சொல்லி யிருக்கிறபடியினாலே அக்னி முதலியவர்களும் நித்யஸூரிகளாய் இருக்கலாம் என்று சிலர் அநுஸந்திப்பார்கள் என்றபடி. **பகவதாஜ்ஞராய்** - பகவானாலே ஆஜ்ஞாபிக்கப்பட்டவராய். **அக்ந்யாதிவிபூதிகளுக்கு** - அக்னி முதலிய தேவதைகளுக்கும் அவர்களால் அதிஷ்டானம் செய்யப்படும் வஸ்துக் களுக்கும், **அபிமாநிதேவதைகளான** - அபிமானிதேவதைகளான. **மதபேதங் கள்** - வெவ்வேறு விதமான மதங்கள். சில ஶ்ருதிகளிலும் புராணங்களிலும் ப்ரும்மாவினுடைய ஶரீரத்தில் இருந்து ப்ரும்மாவுடன் கூட மோக்ஷமடை கிறார்கள் என்று சொல்லியிருப்பதற்கு தாத்பர்யம் அருளிச்செய்கிறார்- 'உபகோஸலனுக்கு' என்றாரம்பித்து. **ப்ரஹ்மகாய நிஷேவணாதிகள்** - ப்ரும்மாவினுடைய ஶரீரத்துடன் சேர்ந்திருப்பது. '**ஆதி**' ஶப்தம் அவ ருடன்கூட மோக்ஷம் அடைவதை ஸங்க்ரஹிக்கிறது. **மதுவித்யாந்யாயத் தாலே** - மதுவித்யாநிஷ்டர்களுக்கு அஷ்ட வஸுக்களில் ஒருவனாக இருந்து பிறகு மோக்ஷம் கிடைக்கிறது என்று சொல்லியிருப்பதைப்போல. அதா வது அப்படிச்சொல்லியிருப்பது எப்படி அந்தவித்யையை அநுஷ்டிப்பவனைமாத் திரம் பற்றியதோ அதைப் போல ப்ரும்ம காய நிஷேவணாதிகளும் ஒரு வித் யா நிஷ்டன் விஷயமாக விஹிதமானது என்றபடி. **விசேஷவிஷயம்**- அவ்வித்யையை அநுஷ்டிப்பவனைப் பற்றியது. '**விபவ**' இத்யாதி - விபவ லோகத்தில் இருந்து விபவாவதாரங்களை உபாஸனம் செய்து, அங்கிருந்து வ்யூஹலோகம் போய், வ்யூஹ மூர்த்திகளை உபாஸனம் செய்து அங்கிருந்து பரமபதம் போகிறான் என்று க்ரமங்கள் சொல்லும் ஸம்ஹிதைகள் முதலிய வைகளுக்கும். '**அயோத்யாதி**' - அயோத்யாவாஸிகளுக்கு. ஶிசுபா லன் ஶரீரத்தில் இருந்து அவனுடைய ஆத்மா கிளம்பி ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருவடிகளை அடைந்தது என்றும், அயோத்யாவாஸிகள் ஸாந்தானிக லோக மடைந்து அங்கிருந்து மோக்ஷம் போனார்கள் என்றும் ப்ரஸித்தமிறே, இதுவே **நிர்வாஹம்** - வித்யா விஶேஷம் என்றும், வ்யக்திவிஶேஷம் என் றும் ஸமாதானம் அறியத்தக்கது என்றபடி.

நிவ்ருத்தியஸேவமானன் பஞ்சபூதங்களையும் அதிக்ரமிக்குமென்று மனுசொன்னது ஶீர்ஷகபாலமும் முதலாகத் தொடங்கி அண்டாந்தர்வர்த்திலோகங்களையும், அண்டகடாஹத்தையும், தசகுணிதோத்தரங்களான ஆவரணங்களையும், இவையெல்லா முள்ளாம்படியான பரந்த தமஸ்தத்வத்தையும் பேதிக்குமென்று ஶ்ருதிகள் சொன்ன த்வாரங்களுக்கு உபலக்ஷணம். இவ்வர்சிராதி கதியாகப் போனவர்கள் ஆவர்த்தியார்களென்கிறது ஸர்வலோககாமாநுஸஞ்சரணஶ்ருதிபலத்தாலே ஸம்ஸரியார்களென்றதா மத்தனை. வைதிகன் புத்ராதிக ளிவ்வர்சிராதிகதியாலே தேஶவிஶேஷப்ராப்தி பெற்றவர்களல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்தமன்று. இவ்

ஶீர்ஷகபாலமும் - மண்டை ஓடு. அண்டாந்தர்வர்த்திலோகங்களையும் - அண்டத்திற்குள் இருக்கும் லோகங்களையும், அண்டகடாஹத்தையும் - அண்டத்தினுடைய சேர்க்கையையும், தசகுணிதோத்தரங்களான - ஒன்றைவிட ஒன்று பத்துமடங்கு அதிகம் என்று சொல்லப்பட்ட, அதாவது ப்ருதிவியைவிட பத்து மடங்கு அதிகமானது ஜலம், ஜலத்தைவிட பத்து மடங்கு அதிகமானது தேஜஸ்ஸு, என்றிப்படி மேல் மேல் பத்து மடங்கு அதிகமாக இருக்கிற என்றபடி. ஆவரணங்களையும் - அண்டத்திற்கு மேல் இருக்கும் ஆவரணங்களையும், உள்ளாம்படியான - தனக்குள் அடங்கும்படியான, பரந்த - விசாலமான, தமஸ்தத்வத்தை - தமஸ் என்கிற தத்வத்தை, பேதிக்கும் - பிளக்கும். ஆவர்த்தியார்கள் - இந்த லோகத்திற்குத் திரும்பி வரமாட்டார்கள். ஸர்வலோககாமாநுஸஞ்சரணஶ்ருதி - எல்லா லோகங்களிலும் தன் இஷ்டப்படி ரூபங்களை எடுத்துக்கொண்டு பகவானுடன் ஸஞ்சரிக்கிறான் என்று சொல்லுகிற ஶ்ருதி. ஸம்ஸரியார்கள் - புண்யபாப ரூபகர்மங்களுக்கு வசப்பட்ட ஜன்மத்தையும் ஸுகதுக்காதிகளையும் அனுபவிக்கமாட்டார்கள். இப்படியாகில் பரமபதத்திற்கு சென்றிருந்த வைதிக புத்ரர்களை உடலுடன் கொண்டு கொடுத்தவன் என்றிவை முதலியது அருளிச் செய்திருப்பதற்கு ஸமாதானம் அருளிச் செய்கிறார் - 'வைதிகன்' என்றாரம்பித்து. தேஶவிஶேஷப்ராப்தி - பரமபதத்தை அடைவது. ஆகையினால் அவர்கள் மார்க்காந்தரத்தாலே பரமபதம் சென்றவர்கள் என்பது ஸித்தமாயிற்று. பரமபதத்திற்கு அர்ச்சிராதி கதியைத்தவிர மார்க்காந்தரங்களும் இருக்கின்றன என்பதுகீழ் 'ஊர்த்வக்ஷேபவுக்கு' என்றாரம்பிக்கும் வாக்யத்திலும், ஶ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. இவ்விடத்தில் பதினெண்ணாயிரப்படியில் 'இங்கு தசரதாதிகளுக்குப் பரதாதிகள் புத்ரரானபடியே வைதிகனுக்கு நித்யரைப் பகவான் தன் ஸங்கல்ப விசேஷத்தினால் புத்திரர்களாக்கி

வழியாலே த்ரிகுணகாந்தாரத்தைக்கடந்தவன் ஹ்ராஸவ்ருத்த்யபாவத்தாலே ஸதைகரூபமாக ப்ரவஹிக்கிற விரஜையென்கிற அம்ருத நதியைக் கிட்டும். 1 'வைகுண்டஸீம்நி விரஜாம் ஸ்ரோதஸாம் உத்தமாம் நதீம்' என்கையாலும், 2 'கத்வா விரஜாம் விஸ்ருஜதி தநும் ஸூக்ஷ்மாம்' என்று ச்ருதியர்த்தர் ஸங்க்ரஹிக்கையாலும், விரஜையைச் சிலர் த்ரிகுணஸாமஸவங்களுக் கெல்லை

ஞல் ஒருவித விரோதமுமில்லை' என்று அருளிச்செய்திருப்பது பராமர்சிக்கத்தக்கது. ஏனெனில் ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் 'ப்ராக்ருதாப்ராக்ருதஸம்ஸர்கோபி நாநுபபந்ந:, அந்யதா ப்ராக்ருதலோகேஷு பகவதவதாரா: பரமபதேபி அர்ச்சிராதிமார்கேண ஸூக்ஷ்மசரீரஸ்ய வைதிகபுத்ராதேச்ச ப்ராப்தி: கதம் கடேத' (ப்ராக்ருத வஸ்துவும் அப்ராக்ருதவஸ்துவும் ஸம்பந்தப்படலாம், அப்படிக் கில்லாவிடில் ப்ராக்ருத லோகங்களில் பகவானுடைய அவதாரமும் பரமபதத்திலும் அர்ச்சிராதிகதியினுல் விரஜை வரையில் ஸூக்ஷ்ம சரீரம் இருப்பதும் வைதிகபுத்ரர்கள் பரமபதத்தில் போய் இருந்ததும் எப்படிப் பொருந்தும்) என்று அருளிச் செய்யப்பட் டிருப்பதினுலே அப்ராக்ருத லோகத்தில் ப்ராக்ருத ஸம்பந்தத்திற்கு இந்த வைதிக புத்திரர்களை த்ருஷ்டாந்தமாக எடுத்து நிரூபித்திருப்பதினுல் அவர்கள் நித்ய ஸூரிகள் அல்ல என்பது ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. இந்த வாக்யத்திலும் அப்படி இவர்கள் நித்யஸூரிகள் என்பது நிரூபிக்கப்படவில்லை யல்லவா. 'ஏதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே' என்று இந்த அர்ச்சிராதிகதியினுல் சென்றவர்கள் திரும்பி வருவதில்லை என்றிறே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குமேல்வரும் க்ரமத்தை நிரூபித்தருளுகிருர் - 'இவ்வழியாலே' என்றாரம்பித்து. இவ்வழியாலே-இந்த அர்ச்சிராதி மார்க்கத்தாலே, த்ரிகுண-ஸத்வரஜஸ்தமஸ்ஸாகிய மூன்று குணங்களையுடையப்ரக்ருதியாகிற, காந்தாரத்தை - பாலைவனத்தை, கடந்தவன் - தாண்டினவன். ஸதைகரூபமாக - குறைவு, வ்ருத்தி, இவைகள் இல்லாமல் ஒரே மாதிரியாக, ப்ரவஹிக்கிற - ஓடுகிற, அம்ருத நதியை - அம்ருதமயமான ஆற்றை. வைகுண்டஸீம்நி - வைகுண்டத்தின் எல்லையில், ஸ்ரோதஸாம் - பெருகுகிற, விரஜாம் - விரஜை என்கிற, மஹாநதீம் - பெரிய நதியை. அத - பிறகு, விரஜாம் - விரஜாநதியை, கத்வா - அடைந்து, ஸூக்ஷ்மாம் - ஸூக்ஷ்மமான, தநும் - சரீரத்தை, விஸ்ருஜதி - விடுகிறான். த்ரிகுணஸாமஸவங்களுக்கு - ப்ராக்ருத லோகத்திற்கும், அப்ராக்ருத லோகத்

1. 2.

யென்னப் பார்ப்பார்கள். வைகுண்டஶப்தம் பொதுவாகையாலே ப்ரஹ்மலோகத்தில் அரம் என்கிற ஹ்ரதாதிகளுக்கநந்தரம் விரஜையைக் கிட்டுமென்றும் ஶ்ருதி சொல்லுகையாலும், திவ்யநகரத்துக் கெல்லையென்றும் சிலர் சொல்லுவார்கள். விரஜையை மநஸ்ஸாலே கடக்குமென்றது தன் ஸங்கல்பத்தாலே கடக்குமென்றபடி. ஶாந்த

திற்கும், எல்லை - மத்யத்தில் இரண்டுக்கும் எல்லையாய், அதாவது ஒன்றுக்கு முடிவாய் மற்றென்றுக்கு ஆரம்பமாய் இருப்பது. என்னப்பார்ப்பார்கள் - என்று நிஷ்கர்ஷிக்க யோசிப்பார்கள். கல்பாந்தரம் அருளிச்செய்கிறார்— 'வைகுண்ட' என்றாரம்பித்து. பொது - திவ்ய நகரத்திற்கும், தேசத்திற்கும், லோகத்திற்கும் ஸாமாந்யம். இத்தால் திவ்யதேசத்தின் எல்லை என்று 'வைகுண்டஸீமா' என்பதற்கு அர்த்தமாகச் சொல்லலாம் என்பது த்யோதிதம். அரம் ஹ்ரதாதிகளுக்கு - அரம் என்று சொல்லப்படுகிற திவ்ய ஸரஸ்ஸுக்கு. ஸ்ரீ கௌஷீதகீ உபநிஷத்தில் 'ப்ரும்மலோகத்தை அடைகிறான், அதற்கு ஸமீபத்தில் அரம் என்கிற ஸரஸ்ஸு இருக்கிறது, அதற்கப்புறம் முஹூர்த்தர்கள் என்று பெயருடைய தடியைக் கையில் வைத்துக்கொண்டிருக்கும் சிலர் இருக்கிறார்கள், அதற்குப் பிறகு விரஜை என்கிற நதி இருக்கிறது' என்றர்த்தமுள்ள வாக்யங்கள் சொல்லப்பட்டிருப்பது இங்கு அநுஸந்தேயம். திவ்யநகரத்துக்கு-வைகுண்டம் என்னும் திவ்யதேசத்திற்கு. கடக்கும் - தாண்டும். 'மநஸ்ஸாலே' என்றது மனம் என்கிற பதம் இங்கு மனதினால் செய்யப்படுகிற ஸங்கல்பத்தைச் சொல்லுகிறது என்றபடி. ஏனெனில் மனது நடப்பதற்கு ஸாதனமாகாதல்லவா. இப்படியே மற்றோரிடத்தில் இருக்கும் 'மந:' என்னும் பதத்திற்கும் அர்த்தம் என்று அருளிச்செய்கிறார் - 'ஶாந்தன்' என்றாரம்பித்து. ஸர்வகாமங்களையும் - எல்லா இஷ்டங்களையும், அதாவது இஷ்டமான எல்லா வஸ்துக்களையும் முக்தனுக்கு எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாக அறிய ஶக்தி இருக்கிறபடியாலும், வேறு ஶ்ருதிகளில் 'ஸங்கல்பாதேவாஸ்ய' என்று இவனுடைய இஷ்டங்கள் எல்லாம் ஸங்கல்பத்தினால் உண்டாகின்றன என்று சொல்லியிருப்பதை அநுஸரித்தும் இங்கும் ஸங்கல்பத்தினாலேயே கடந்து என்று அர்த்தம் சொல்லவேண்டும் என்றபடி. இப்படிக் கீழ்ப்பர்வத்தில் விஸ்தாரமாக அருளிச்செய்திருக்கும் க்ரமத்தையே ஸங்க்ஷேபமாக அநுஸந்திக்கும் பொருட்டு ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் கதிவிஶேஷாதிகாரத்தில் 1 'ஜ்வலந திவஸ ஜ்யோத்ஸ்நா பக்ஷோத்தராயண வத்ஸராந் பவந தபந ப்ராலேயாம்ஶூந் க்ஷணருசிபதிம் । ஜலதர

---

1. அக்னி, மத்யாஹ்நம், நிலவோடு கூடின (ஶுக்ல) பக்ஷம், உத்தராயணம், வருஷம், அதாவது இவைகளின் அபிமானி தேவதைகள் என்றபடி, வாயு, ஸூர்யன், பனி நிறைந்த கிரணங்களையுடைய சந்திரன், இவர்களையும், க்ரமமாக மின்னலையும், மேகங்க

உந்ஸாலே ஸம்பூகாரங்களையும் கண்டு ஸந்தோஷிக்குமென்பதற்கும் இதுவே நிர்வாஹம்.

விழியல்லால் வேலில்லை விண்ணின்மாதர்
மேனியல்லால் வில்லில்லை மீனவர்க்கு
மொழியல்லாலமுதில்லை யென்று முன்னாள்
முத்திவழி முனிந்தடைந்த மோகந்தீர்ந்தோம்
கழியல்லாற்கடலில்லை யென்பார் போலக்
காரியமே காரணமென்றுரைப்பார் காட்டும்
வழியல்லாவழியெல்லாங் கடந்தோமற்று
வானேறும் வழிகண்டோ மகிழ்ந்திட்டோமே. 15

இதி ஸ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஸ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஸ்ரீ பரமபதஸோபாநே
॥ ஸப்தமோ(அ)ர்ச்சிராதிபர்வ ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

பதிம் தேவாநீஶம் ப்ரஜாபதிமாமநந்த்யஸ்மாதி விரஜாம் அதிக்ரமே வாசஸ்த: பரஸ்தாத்॥" என்று இவர் தாமே அருளிச்செய்தாரிறே.

இப்படி அர்ச்சிராதி கதியாலே சென்றவனுக்கு இந்த மார்க்கம் உபக்ரமமே துடங்கி ஸந்தோஷமே உண்டாகிறது என்று ஒரு பாட்டாலே அருளிச்செய்கிறார் - 'விழியல்லால்' என்றாரம்பித்து.

[ப - ம்.] விண்ணில் - ஆகாசத்தில், அதாவது ஸ்வர்க்கலோகத்தில் இருக்கிற, மாதர் - ஸ்திரீகளினுடைய, விழியல்லால் - பார்வைகளைத் தவிர, மீனவர்க்கு - மீனைத்தனக்கு நிரூபகமாக உடைய மன்மதனுக்கு, மன்மதன் மத்ஸ்யத்வஜன் என்பது ப்ரஸித்தமிறே, வேல் - வேலாயுதம், இல்லை- மேனியல்லால் - அவர்களுடைய ஶரீரத்தைத் தவிர, வில் - தனுஸ்ஸு,

---

ளுக்கு யஜமானனான வருணனையும், தேவேந்திரனையும் ப்ரஜாபதியையும் அடைந்தவனைக் கொண்டு விரஜாநதியைத் தாண்டுகிறான். அதற்கப்புறம் உண்டான ஆச்சர்யம் வாக்குக்குத் தூரத்தில் இருக்கிறது, அன்றிக்கே அதற்குப் பிறகு வாக்குக்குத்தூரத்தில் இருக்கிற குணவிபூத்யாதிகளினால் ஆச்சர்யமான பரமாத்மாவை அடைகிறான்.

இல்லை, மொழியல்லால் - அவர்களுடைய வார்த்தையைத் தவிர, அமுது - அம்ருதம், இல்லை, என்று, முன்னாள் - இதற்கு முன்புள்ள காலம் எல்லாம், முத்திவழி - மோக்ஷ மார்க்கத்தை, விவேகம் முதலிய மோக்ஷத்திற்குப் போகும் மார்க்கத்தை, முனிந்து - கோபித்துக்கொண்டு, அதாவது அவற்றை அநாதரம்செய்து நின்ற, மோகம் தீர்ந்தோம் - அஜ்ஞானத்தின் நிவ்ருத்தியை அடைந்தோம், அன்றிக்கே தீர்த்தோம் என்கிற வல்லொத்து மெல்லொத்தாய்க் கிடக்கிறதாகவுமாம், அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்துகொண்டோம், சழி - ஸமுத்திரத்தின் ஜலம் எதிர்த்து ஓடிவரும் சிறிய ஆற்றை, அல்லால் - தவிர, கடல் - ஸமுத்திரம், இல்லை, என்பார்போல - என்று சொல்லுமவர்களைப்போல, காரியமே - பரமாத்மாவினுல் ஸ்ருஷ்டிக்கப்படுகிற சேதனுசேதன வஸ்துக்களே, காரணம் - ஜகத்திற்குக் காரணம், என்று உரைப்பார் - என்று சொல்லுகிற ஸாங்க்யாதிகள், காட்டும் - காட்டுகிற, அதாவது ஈஶ்வரனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ப்ரக்ருதி காரணம் என்பார் சிலரும், பரமாணு காரணம் என்பார் சிலரும், ஜீவனே காரணம் என்பார் சிலருமாயிறே அவர்கள் இருப்பது, அப்படிப்பட்ட, வழியல்லா வழி - மோக்ஷத்திற்கு வழியல்லாதவைகளான வழிகள், அதாவது மோக்ஷமார்க்கம் அல்லாதவைகளை மோக்ஷமார்க்கமாகச் சொல்லுகிறுர்கள் என்றபடி, எல்லாம் - எல்லாவற்றையும், கடந்தோம் - தாண்டினேம், மற்று - இதற்குமேலும், வானேறும் வழி - பரமபதத்திற்குப் போகும் மார்க்கத்தை, கண்டோம் - அறிந்தோம், மகிழ்ந்திட்டோம் - ஸந்தோஷத்தை அடைந்தோம். 15

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

ஏழாவது அர்ச்சிராதி பர்வம் முற்றிற்று.

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

॥ அஷ்டமம் திவ்யதேஶப்ராப்திபர்வ ॥

வன்பற்றுடன் மயல்பூண்டு மற்ருேர் கதியாலின நாள்
என் பெற்றது பெறுந்தானமு மெத்தனைபோதுளதாம்
துன்பற்றதன் துணிவாற்றுயர் தீர்க்கும் துழாய் முடியான்
இன்புற்றநல்வழியாலேற்று நற்பதமெண்ணுவமே. 16

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

எட்டாவது திவ்யதேஶ ப்ராப்தி பர்வம்.

இனி பரமபதத்தை அடைவதை விஸ்தாரமாக நிரூபித்தருளப்போகிறவராய் இவ்வளவு நாள் வ்யர்த்தங்களான சிந்தைகளைப் பண்ணின நாம் ஸ்வயம் ப்ரயோஜனமான பரம புருஷார்த்த லாபத்தைச் சிந்திப்போம், இவ்வனுஸந்தானமே நமக்கு ப்ரயோஜனமாகும் என்றருளிச் செய்கிருர் —‘வன்’ என்றுரம்பித்து.

[ப - ம்] வன் - த்ருடமான, பற்றுடன் - வாஸனையுடன், மயல்-அஜ்ஞானத்தை, பூண்டு-அடைந்து,ப்ராக்ருதமான விஷயானுபவத்தையேமேலென்று இவ்வளவு நாள் எண்ணியிருந்த வாஸனையினுல் அப்படியே மேல் மேல் ப்ரமித்துக்கொண்டு என்றபடி, மற்ருேர் கதியால் - உபாயாந்தரங்களினுல், அவைகளுக்கு ஸாதனமாக அனுஷ்டிக்கப்பட்ட மற்ற உபாயங்களினுல் என்றபடி, இனநாள் - இவ்வளவு காலமாக, என் பெற்றது - நாம் பெற்ற ப்ரயோஜனம் என்ன, அதாவது துக்கம் முழுமையும் நிவ்ருத்தி யடையவில்லையே, ஜன்ம ஜரா மரணுதிகள் இன்னும் தொடர்ந்து வருகின்றனவே என்றபடி, பெறும் - அப்படி அந்த உபாயங்களினுல் பலனுக அடையப்படும், தானமும் - பதங்களும், எத்தனைபோது - எவ்வளவு காலம், உளதாம் - இருக்கின்றன, ‘[illegible]’, ‘வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை’ இத்யாதிகளும் இங்கு அனுஸந்தேயம், இத்தால் இப்படி நிரர்த்தகமான சிந்தையை விட்டுவிடவேண்டும் என்பது அர்த்தாத்ஸித்தம், துன்பற்ற - துக்கம் இல்லாத, தன் - தன்னுடைய, துணிவால் - விஶ்வாஸத்தினுல், அதாவது

இப்படி அநாதிகாலாநுவ்ருத்த அநுசித விஷயாந்தர ஸங்கத்தாலே அடிக்கடியும் அநந்த து:கப்ராசுர்யமான ஸம்ஸாரபத்ததியிலே யோடின விடாயெல்லாந்தீர அத்யாஹ்லாதையான அர்ச்சிராதிபத்ததியில் அமரரோடுயர்விற்சென்று, விமல ஸ்வாது ஸுரபி ஶீதளமான விரஜா ப்ரவாஹத்தை அவகாஹித்து, அழுக்கற்று, பவித்ரபாணியான அமாநவனுடைய கரஸ்பர்ஶத்தாலே வாஸநாவிஶேஷம்கழிந்தவன் திவ்யதேஶப்ராப்தியாலே ஸர்வேஶ்வரனோடு ஸலோகனாய், அப்ராக்ருத திவ்ய விலக்ஷண விக்ரஹயோகத்தாலே ஸரூபனாய்,

---

நிர்ப்பயனாய் நிர்ப்பரனாய் நிஸ்ஸம்ஶயனாய் இருப்பதற்கே காரணமான மஹாவிஶ்வாஸத்தை அங்கமாக உடைய ப்ரபத்தியினால், துயர்தீர்க்கும் - நம்முடைய துக்கத்தை போக்குகிற, துழாய் முடியான் - திருத்துழாயை முடியில் தரித்துக்கொண்டிருக்கும் எம்பெருமான், இன்புற்ற - ஸுகத்துடன் கூடிய, நல்வழியால் - நல்லதான அர்ச்சிராதி மார்கத்தினாலே, 'ஶீதீபூதோ நிராமய:' என்கிறபடியே ஆரம்பம் முதல் ஸுகமாயிருக்கிற வழியினால் என்றபடி, ஏற்றும் - ஏற்றுகிற, நற்பதம் - நல்ல ஸ்தானத்தை பரமபதத்தை என்றபடி, எண்ணுவம் - எண்ணுவோம், வருகிற கல்யாணத்திற்கு நாள் எண்ணிக்கொண் டிருக்குமாப்போல எண்ணிக்கொண் டிருப்போம் என்றபடி. 16

இனி பரமபதத்தை அடையும் ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'இப்படி' என்றது மேல் 'அர்ச்சிராதிபத்ததியில்' என்பதுடன் அந்வயிக்கிறது. அநுசித - நம்முடைய ஸ்வரூபத்திற்குத் தகுந்ததல்லாத, விஷயாந்தர - ப்ரயோஜனங்களில், ஸங்கத்தாலே - ஆசையினாலே, அநந்த - முடிவு இல்லாத, து:கப்ராசுர்யமான - துக்கம் நிறைந்ததான, ஸம்ஸாரபத்ததியிலே - ஸம்ஸார மார்க்கத்திலே, விடாய் - ஶ்ரமம். அமரரோடு - ஆதிவாஹிகர்களான தேவதைகளுடன், உயர்வில் - உயர்ந்ததான பரமபதத்தில், சென்று-போய், விமல - அழுக்கில்லாததாயும், ஸ்வாது - ருசியுள்ளதாயும், ஸுரபி - நல்ல வாஸனையை யுடையதாயும், ஶீதளமான - குளிர்ந்ததாயும் இருக்கிற, அவகாஹித்து - முழுகி, அழுக்கற்று - தன்னோடு சேர்ந்த பூத ஸூக்ஷ்மங்கள் நிவ்ருத்தியடைந்து. பவித்ரபாணியான - மிகவும் பரிசுத்தத்தைக் கொடுக்கக்கூடிய கையை உடையவனான. கரஸ்பர்ஶத்தாலே - கையினால் தொடுவதினால் வாஸநாவிஶேஷம் - முன்னால் ப்ராக்ருத ஸுகங்களை அனுபவித்ததினால் உண்டான வாஸனையும். திவ்யதேஶப்ராப்தியாலே - பரமபதம் என்கிற திவ்ய தேசத்தை அடைந்தபடியினால், ஸலோகனாய் - ஸாலோக்யம் (பகவானோடு

கீழ்ச்சொன்ன யோக்யதைகளில்லாதார்க்கு 1 'ந தத்ர மூடா: கச்சந்தி' இத்யாதிகளின்படியே கிட்டவரிதாய், பதிவ்ரதாதர்மநிஷ்டரான பரமைகாந்திகளுக்கு ப்ராப்யமாய், அயர்வறுமமரர்களுக்கு அநவரததர்சநீயமாய், அகாலகால்யமாய், அத்யர்காநலதீப்தமாய், அநந்யநிரபேக்ஷப்ரகாசமாய், பரமயோகிவாங்மநஸாபரிச்சேத்யமான நித்யநிரவத்யநிரதிசயபோக்யதாதி ப்ரகர்ஷத்தையுடையதாய், சுத்தஸத்வமயமாய், 2 'கொழுஞ்சோதி யுயரம்'

ஒரே லோகத்தில் இருப்பதை) பெற்றவனாய், அப்ராக்ருத - ப்ரக்ருதியின் பரிணாமம் இல்லாத, அம்ருதமய - அம்ருதம்போல் போக்யமான சுத்த ஸத்வமயமான, விலக்ஷண விக்ரஹயோகத்தாலே - விலக்ஷணமான திவ்ய சரீரத்தை அடைகையாலே, ஸாரூப்யவானாய் - (பகவானுடைய ரூபம் போன்ற ரூபத்தை உடையவனாயிருக்கையாகிற)ஸாரூப்யம் பெற்றவனாய். கீழ்ச் சொன்ன - கீழ் பர்வங்களில் நிரூபிக்கப்பட்ட விவேகம் முதலிய. தத்ர - அவ் விடத்தில், மூடா:-மூடர்கள், கச்சந்தி - போகிறதில்லை. கிட்ட - அடைவதற்கு, அரிதாய் - அசக்யமாய். பதிவ்ரதாதர்மநிஷ்டரான - பதிவ்ரதையான ஸ்திரீயினுடைய தர்மம் போன்ற தர்மத்தில் நிஷ்டை உடையவரான அதாவதுபதிவ்ரதா ஸ்திரீ எப்படி பர புருஷனை கண்ணெடுத்துப்பார்க்க மாட்டாளோ அதைப்போல இவனும் இதர தேவதைகளைப் பார்க்க மாட்டான் என்றபடி. ப்ராப்யமாய் - அடையக்கூடியதாய். அயர்வு - மறந்து போதல், அறு - அற்றவர்களான, ஜ்ஞான ஸங்கோசம் இல்லாதவர்களான என்றபடி, அமரர்களுக்கு - நித்ய ஸூரிகளுக்கு, அநவரத - எப்பொழுதும், தர்சநீயமாய் - பார்க்கத்தக்கதாய், அகாலகால்யமாய் - காலத்தினால் அழிக்கப்படாததாய் அத்யர்காநல - ஸூர்யன் அக்னி இவைகளைவிட அதிகமாக, தீப்தமாய் - ப்ரகாசிக்குமதாய், அநந்யநிரபேக்ஷ ப்ரகாசமாய் - வேறு ஒரு ப்ரகாசத்தை அபேக்ஷிக்காமல் தானே ப்ரகாசிக்கக்கூடியதாய், பரமயோகி - யோகிச்ரேஷ்டர்களுக்கும், வாங்மநஸ - வாக்கினாலும் மனதினாலும், அபரிச்சேத்யமான - அளவிட முடியாததான, நித்ய - எப்பொழுதும் இருக்கிற, நிரவத்ய - ஒருவிதத் தோஷமும் இல்லாத, நிரதிசய - எல்லை இல்லாத, போக்யதாதி - போக்யமாயிருக்கை முதலிய குணங்களினுடைய, ப்ரகர்ஷத்தை - மேன்மையை. சுத்தஸத்வமயமாய் - சுத்த ஸத்வமான த்ரவ்யத்தினால் உண்டானதாய். கொழும் - ச்லாக்யமான, சோதி - ஜ்யோதிர் மயமான, உயரம் - உயர்ந்த லோகம். சேண்-

---

1. பாரதம் 2. திருவாய்மொழி

என்றும், 1 'சேணுயர்வானம்' என்றும், 2 'தெளிவிசும்பு' என்றும் சொல்லப்பட்ட நலமந்தமில்லதோர் நாட்டுக்குள்ளே சென்று அங்கே அரமென்றும் ண்யமென்றும் பேருடைய அம்ருதஜலஸரஸ்ஸுக்களையும் திவ்யோத்யாந மணிபர்வதஸரித்தடாகாதி விசேஷங்களெல்லாவற்றையும் உபநிஷத்துக்களிலும் பாஞ்சராத்ரஸம்ஹிதைகளிலும் ஸ்ரீ வைகுண்டகத்யாதிகளிலும் பண்டு பரக்க அநுஸந்தித்தபடியே ஸவிசேஷமாக ஸாக்ஷாத்கரித்து அந்தமில்பேரின்பத்தில் ஆநந்தவெள்ளம் சூழ்ந்தாற்போலேயிருக்கிற ஐரம்மதீயமென்கிற அம்ருதஸரஸ்ஸைக் கிட்டும். அநந்தரம் ஸர்வசரீரி

என்பதும், உயர் என்பதும் உயர்ந்திருப்பதைச் சொல்லும் பதங்கள், மிகவும் உயர்ந்ததான என்றபடி, வானம் - ஆகாசம். தெளி - தெளிந்ததான, விசும்பு-ஆகாசம், அன்றிக்கே தெளி-தெளிவை (ஜ்ஞானத்தின் ப்ரகாசத்தை) கொடுக்கக்கூடிய என்றாகவுமாம், நலம் - ஆநந்தத்திற்கு, அந்தம் -முடிவு, இல்லது-இல்லாததான, அளவில்லாததான என்றபடி, ஓர்-அத்விதீயமான, நாட்டுக்குள்ளே - தேசத்திற்குள்ளே. அங்கே - அந்த லோகத்திலே 'அரம்' இத்யாதியால் சாந்தோக்யத்தில் பரமபதத்தில் அரம் என்றும் ண்யம் என்றும் சொல்லப்படுகிற ஸரஸ்ஸுக்கள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருப்பது ஸூசிதமாகிறது, **திவ்யோத்யாந** - அப்ராக்ருதமான புஷ்பத்தோட்டங்கள், **மணிபர்வத** - ரத்னமயமான பர்வதம், **ஸரித்**-நதி, **தடாக**-குளம், **ஆதி** பதத்தினால் வாபிகள் குறிக்கப்படுகின்றன, **பாஞ்சராத்ரம்**- ஸ்ரீபாஞ்சராத்ரம், பண்டு - முன்னால், பரக்க - விஸ்தாரமாக, **ஸவிசேஷமாக** - அவைகளின் விசேஷங்களோடு கூட, **ஸாக்ஷாத்கரித்து** - ப்ரத்யக்ஷமாகப் பார்த்து, அதாவது முன்பு சாஸ்திரத்தினால் அறிந்த விசேஷங்கள் எல்லாம் இப்பொழுது ப்ரத்யக்ஷத்தில் அனுபவிக்கப்படுகிறது என்றபடி. அந்தம் - அளவு, இல்-இல்லாத, பேர் இன்பத்தில் - பெரிய ஆநந்தத்தில், ஆநந்தமயமான லோகத்தில் என்றபடி. **ஆநந்த**வெள்ளம் - ஆநந்தமாகிற நதியின் ப்ரவாஹம். **'ஐரம்மதீயம்'** - என்றது இரா என்று அம்ருதத்திற்குப் பெயர், அந்த அம்ருதத்தினால் எந்த ஸரஸ்ஸில் முழுகுகிறவர்கள் த்ருப்தி அடைகிறார்களோ அது ஐரம்மதீயம் என்றபடி. 'இரயா மாத்யந்தி யஸ்மிந்' என்று வ்யுத்பத்தி. **ஸர்வசரீரி**யினுடைய - எல்லாவற்றையும் தனக்கு சரீரமாக உடைய பகவானுடைய, **ஸ்தாவராவதாரம்** - ஸ்தாவரரூபமான அவ

1. திருவாய்மொழி- 2. திருவாய்மொழி.

னுடைய ஸ்தாவராவதாரம் போலே ஸுந்தரமாய் ஸௌரிஸேவ்யமான ஸோமஸவநமென்கிற அஶ்வத்தத்தையணுகும்.

இவனை அபராஜிதையான திவ்யநகரியினின்றும் ஸ்ரீவைகுண்டநாயகன் எதிர்கொள்ள வரவிட்ட ஐந்நூறு திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் நூறுநூறாக ஒருதிரளாய் திவ்யங்களான மால்யாஞ்ஜந சூர்ண வாஸ: ஆபரணாதிகளை ஏந்திக்கொண்டு காளங்கள் வலம்புரி கலந்தெங்குமிசைத்தனர் ஆண்மின்கள் வானகமாழியான் தமரென்று உத்கோஷ ஶாஸநம் பண்ணி, ஸார்வபௌமகுமாரனை ராஜமஹிஷீபரிஜநங்களெதிர்கொண்டு உபசரிக்குமாப்போலே ஸ்ரீவைகுண்டநாயகனை ஸேவிப்பார்க்கு நிகராக [1] ‘உடுத்துக்களைந்த’ இத்யாதிகளின்

தாரம், ஸுந்தரமாய் - அழகாய், ஸௌரிஸேவ்யமான - நித்யஸூரிகளினால் ஸேவிக்கத் தகுந்ததான, ‘ஸோமஸவநம்’ என்றது சந்திரனைப் போல ஸந்தோஷத்தை உண்டாக்குகிறபடியினால் ஸோமஸவனம் என்கிறது என்றபடி.

அபராஜிதையான - ப்ரும்மவித்துக்கள் அல்லாதவர்களால் அடையப்படாததான, ‘அபராஜிதா’ என்பதற்குத் தோற்கடிக்கப்பட்டது, அதாவது தங்கள் வஶமாக்கிக் கொள்ளப்பட்டது என்றர்த்தம். இது ப்ரும்ம வித்துக்கள் அல்லாதவர்களினால் தங்கள் வசமாக்கிக்கொள்ளப் படாதது என்றபடி. திவ்யநகரி - அப்ராக்ருதமான பட்டணம், எதிர்கொள்ள வரவிட்ட - எதிர்கொண்டு அழைத்து வரும்படி அனுப்பிய, ஒரு திரளாய் - ஒரு கூட்டமாய், மால்ய - புஷ்பமாலை, அஞ்ஜந - மை, சூர்ண - வாஸனைப்பொடி, வாஸ: -வஸ்திரங்கள், ‘ஆபரணாதி’ ஶப்தம் ஆபரணத்தைக் குறிக்கிறது, அதாவது நூறு அப்ஸரஸ்ஸுக்கள் மாலைகளையும், நூறு அப்ஸரஸ்ஸுக்கள் மையையும் என்றிப்படியே மேலே அந்வயித்துக்கொள்ளவும், ஏந்திக்கொண்டு- கையில் வஹித்துக்கொண்டு, காளங்கள் - காஹளவாத்யங்கள், திருச்சின்ன வாத்யம் என்றபடி, வலம்புரி-சங்கம் இவைகளை, கலந்து-ஏககாலத்தில், எங்கும்-எல்லா இடத்திலும், இசைத்தனர் - உத்கோஷித்தார்கள், ஆழியான்தமர்- சக்ராயுதத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் பகவானுக்குத் தாஸபூதரான நீங்கள், வானகம் - பரமபதமாகிற க்ருஹத்தை, பரமபதலோகத்தின் மத்யத்தை, ஆண்மின்கள் - ஆளுங்கள். ஸார்வபௌமகுமாரனை - மஹாராஜாவினுடைய பிள்ளையை, ராஜமஹிஷீபரிஜநங்கள் - அந்த ராஜபத்னியின் வேலைக்காரிகள், ஸேவிப்பார்க்கு- ஸேவித்துக்கொண்டிருக்கும் நித்யமுக்தர்களுக்கு,

---

1. திருப்பல்லாண்டு-

படியே ஸர்வாலங்காரமான ஸ்வாலங்காரத்தாலே அலங்கரிப்பார்கள்.

அநந்தரம் திவ்யவ்ருக்ஷஸாலஜ்யஸம்ஸ்தாநவாராஜிதாயத நங்களை யணுகினவளவே ஸர்வகந்தனாய் ஸர்வரஸனாய்ச்சிறந்தவான் சுடரான ஸ்ரீவைகுண்டநாயனுடைய திவ்யகந்தரஸதேஜஸ்ஸுக் கள் வந்து ப்ரவேசிக்க பாரிஜாதபரிமளமும் அம்ருதமும் ஸூர்யனுமுருகியொன்றினப்போலே உஜ்ஜ்வலிதவிக்ரஹ ஸௌந்தர்யமாய்க் கொண்டு ஸூர்யோதயசந்த்ரோதயங்களைக்காட்டில் அதிசயிதவை

'உடுத்து' இத்யாதி. 'உடுத்துக்களைந்த நின்பீதகவாடை உடுத்துக் கலத்த துண்டு தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடும்இத்தொண்டர்களோம்' என்கிற பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறபடியே பகவான் உடுத்துக்களைந்த திருப் பரிவட்டத்தைத் தாங்கள் தரித்துக்கொண்டும், அவனால் ஸிரஸில் சூடப்பட்ட திருத்துழாய் மாலையைத் தாங்களும் தரித்துக் கொண்டிருக்கும் தாஸர்கள் என்றாப்போலே என்றபடி. ஸ்வாலங்காரத்தாலே - பரமாத்மாவின் அலங்காரம்போன்ற அலங்காரத்தாலே. அன்றிக்கே பரமாத்மாவிற்கு அலங்காரமாய் அவன் களைந்ததாகிய பீதகவாடை முதலிய அலங்காரத்தினாலே என்றபடி யாகவுமாம். இது 'உடுத்துக்களைந்த' என்று உதாஹரித்த ப்ரமாணத்திற்கு அனுகுணமாய் இருக்கும்.

திவ்யவ்ருக்ஷ - தில்யம் என்கிற மரம். இத்தைத்தான் ஸோமஸவனம் என்கிற அச்வத்தம் என்று சொல்லியிருக்கிறது என்று பூர்வர்களின் நிர்வாஹம். ஸாலஜ்யஸம்ஸ்தாநம் - ஸாலஜ்யம் என்று சொல்லப்படுகிற ஒரு ஆஸ்தான மண்டபம் ஸால - மதில்களில், ஜ்ய - நாண் கயிறு, முதலான யுத்தம் செய்யும் கருவிகள் வைக்கப்பட்டிருப்பதினால் அந்த இடத்திற்கு ஸாலஜ்ய ஸமஸ்தானம் என்று பெயர் என்று அர்த்தம் சொல்லப்பட் டிருக்கிறது. ஆயதநம் - வைகுண்டத்தில் இருக்கும் திவ்ய ஸ்தானம் ஸர்வகந்தனாய்-எல்லா வாஸனைகளையும் உடையவனாய், ஸர்வரஸனாய் - எல்லா ரஸங்களையும் உடையவனாய், சிறந்த - உத்க்ருஷ்டமான, வான் - பரமபதத்தில் இருக்கிற, சுடரான - தேஜஸ்ஸான, திவ்ய - அப்ராக்ருதமான. பாரிஜாதபரிமளமும் - பாரிஜாத புஷ்பத்தின் வாஸனையும், ஸூர்யனும் - ஸூர்யனும். ஒன்றினப்போலே - ஒன்று சேர்ந்தாப்போலே. இது நல்ல வாஸனை, ரஸம், தேஜஸ்ஸு இவை மூன்றும் ஒன்று சேர்ந்திருப்பதற்கு த்ருஷ்டாந்தம், உஜ்ஜ்வலித-ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற, விக்ரஹ- திவ்யவிக்

பவமாய் 'யாயோத்யேத்யபராஜிதேதி விஜ்ஞாதா' என்கிறபடியுள்ள ஸ்ரீவைகுண்டநகரத்தையணுகி, குடியடியாரிவர் கோவிந்தன் தனக்கென்று, முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள, கொடியணிநெடுமதில் கோபுரம் குறுகி, ஐந்த்ரனென்றும் ஹ்ரஜாவதியென்றும் பேருடைய வாசலில் வானவரைச் சென்றுகிட்ட, அவர்களும் இடையநின்று வைகுந்தன்றமரெமரெமதிடம்புகுகென்ன, ஆஶ்ரிதருக்கு நித்யாபாவ்ருதமான ஸ்ரீவைகுண்டநகரத்வாரகவாடத்தைக் கடந்துபுக்கு, இரண்டு சிறகும் மணிபர்வதங்களை நிரைத்தாற்போலே யிருக்கிற மாளிகைப் பெருந்திருவீதியின் நடுவே செல்லும். அப்போது விதிவகை புகுந்

ரஹத்தை உடைய, **குண**மாய்க்கொண்டு- குணத்தை உடையவனாய்க்கொண்டு. **'ஸூரோஷ'** இத்யாதி - ப்ரக்ருதி மண்டலத்திற்குள்ளே இருக்கும் விஷ்ணுலோகங்களுக்குப் பெயர். **அதிஶயித** -மேல்பட்ட, **வைபவ**மாய்-வைபவத்தையுடையதாய். **யா** - எந்தப் பட்டணம், **அயோத்யேதி** - அயோத்தியை என்றும், **அபராஜிதேதி** - அபராஜிதை என்றும், **விஜ்ஞாதா**- (ப்ரமாணங்களைக்கொண்டு) அறியப்பட்டிருக்கிறதோ. இவர் - இவர்கள், கோவிந்தன் தனக்கு - ஸ்ரீ கோவிந்தனுக்கு, குடியடியார் - குலபரம்பரையாக தாஸர்கள், என்று - என்று சொல்லிக்கொண்டு, முடியுடை - கிரீடத்தைத் தரித்துக்கொண்டிருக்கிற, வானவர் - நித்யஸூரிகள், முறை முறை - வரிசை வரிசையாக, எதிர்கொள்ள, கோடி - த்வஜங்களினால், அணி - அலங்கரிக்கப்பட்ட, நெடு - நீளமான, மதிள் - மதிள்களை உடைய, கோபுரம் - கோபுரத்தை, குறுகி, வாசலில் வானவரை - கோபுரவாசலில் இருக்கும் த்வார பாலகர்களான நித்யஸூரிகளை, சென்றுகிட்ட - கிட்ட அணுக, இடைய - விலகி, வழியில் நிற்குமவர்கள் நாம் உள்ளே போகும்படி வழிவிட என்றபடி. வைகுந்தன் தமர் - வைகுண்டனான பகவானுடைய தாஸர்கள், எமர் - எங்களுக்கு ஸ்வாமிகள், (ஆதலால்) எமதிடம் - எங்களுடைய இடமாகிய இந்த திவ்ய நகரத்தை, புகுக - ப்ரவேசியுங்கள், என்ன - என்று சொல்ல, **ஆஶ்ரிதருக்கு** - பகவானை ஆஶ்ரயித்தவர்களுக்கு, **நித்யாபாவ்ருத**மான - எப்பொழுதும் திறந்து வைக்கப்பட்டதான, **த்வாரகவாட**த்தை - வாசற்கதவை, கடந்து - தாண்டி, புக்கு-ப்ரவேசித்து, இரண்டு சிறகும்- இரண்டு பக்கங்களிலும், **மணிபர்வத**ங்களை - ரத்ன மயங்களான மலைகளை, நிரைத்தாற்போல் - வரிசையாக வைத்தாப்போலே, மாளிகைப்பெரும் திருவீதி - நித்யஸூரிகளினுடைய திருமாளிகைகள் நிறைந்ததான பெரிய திருவீதி. அப்போது - அப்படிப் போகும் ஸம

தனரென்று நல்வேதியர் பதியினிற் பாங்கினில் பாதங்கள் கழுவ நிதியுநற் சுண்ணமும் நிறைகுடவிளக்கும் மதிமுகமடந்தையர் ஏந்தி எதிர்கொள்ள, ஹிரண்மயமான திவ்யவிமாநத்தைக் கிட்டினவளவிலே ப்ரஹ்மயசஸ்ஸுக்கள் வந்து ப்ரவேசிக்க நிகரில் புகழானுக்கு நிகரென்னலாம்படியாய் ப்ரஜாபதியினுடைய ஸபையென்கிற வாக்யத்திலும், 'ஸபாந்த்ருவஸாயாரண' என்கிற ச்லோகத்திலும், நிருக்தத்திலும் சொல்லுகிற ஆநந்தமயமான திருமாமணி மண்டபத்தைச் சேர்ந்து, அங்கே குமுதாதிகளான திவ்ய பாரிஷதேச்வரர்களும் சண்டாதிகளான திவ்ய த்வாரபாலர்களும் ஸஸ்நேஹபஹுமாநாவலோகநம்பண்ண

யத்தில், நல்வேதியர் - நல்லவர்களாய் வேத ப்ரதிபாத்யர்களான நித்ய ஸூரிகள், விதிவகை - நம்முடைய பாக்யவசத்தினால், புகுந்தனர் - இவர்கள் இங்கே ப்ரவேசித்தார்கள், என்று - என்று சொல்லிக்கொண்டு, பதியினில் - தங்கள் தங்கள் க்ருஹங்களில், பாங்கினில் - உசிதமான க்ரமத்தில், அதாவது அதிதிகளை ஆராதிக்கும்படி ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் க்ரமமாக, பாதங்கள் - திருவடிகளை, கழுவ, நிதியும் - தங்களுக்கு நிதியான ஸ்ரீ சடகோபனையும், நற்சுண்ணமும் - நல்லதான சூர்ணத்தையும், பகவத் ப்ரஸாதமான ஹரித்ரா சூர்ணத்தையும் என்றபடி, நிறைகுட - பூர்ணகும்பங்களுடன் சேர்ந்த, விளக்கும் - தீபங்களையும், மதி - சந்திரன்போலே இருக்கிற, முகமுகத்தை உடைய, மடந்தையர் - பெரிய பிராட்டியார் துடக்கமானவர்கள், ஏந்தி - தரித்துக்கொண்டு, ஹிரண்மயமான - ஸ்வர்ணமயமான, திவ்யவிமாநத்தை - வைகுண்டநாதன் எழுந்தருளி இருக்கும் திவ்ய விமானத்தை, ப்ரஹ்மயஶஸ்ஸுக்கள் - பரமாத்மாவினுடைய மற்ற எல்லா குணங்களும், நிகரில்-ஸத்ருசம் இல்லாத, புகழானுக்கு-கல்யாண குணங்களை உடையவனுக்கு, நிகர் - ஸத்ருஶன், என்னலாம்படி - என்று சொல்லலாம்படியாய். 'ப்ரஜாபதியினுடைய' இத்யாதி - சாந்தோக்யத்தில் 'பரமாத்மாவினுடைய ஸ்தானமாகிய ஸபையை ப்ரவேசிக்கிறேன்' என்றர்த்தமுள்ள வாக்யத்தில் என்றபடி. 'பாரிஷத' என்றால் ஸபையில் இருக்கும் பரிஜனங்கள், அவர்களுக்கு ஈஶ்வரர் (யஜமானர்) 'பாரிஷதேச்வரர்' என்றபடி. 'குமுதாதிகள்' என்றது குமுதன், குமுதாக்ஷன், சங்குகர்ணன், ஸர்ப்ப நேத்ரன், புண்டரீகன், வாமனன், ஸுமுகன், ஸுப்ரதிஷ்டிதன் என்னப்பட்ட எண்வர்கள் என்றபடி. 'சண்டாதிகள்' என்றது சண்டன், ப்ரசண்டன், தாதா, விதாதா, ஜயன், விஜயன், பத்ரன், ஸுபத்ரன் என்னப்பட்ட எண்வர்கள்என்றபடி. ஸஸ்நேஹ

ஸேநேஶ்வர நியுக்தரான ஸபாநிர்வாஹகர் அருளப்பாடிட, அடிக்கடியும் தொழுவதெழுவதாய்க் கொண்டு திருமாமணி மண்டபத்தின் முகப்பிலே சென்றேறி, அங்கே சிறகுடைய மஹாமேருவைப் போலே சிறந்த திருமேனியுடையனாய் த்ரயீமயனாய் திருமகள்சேர் மார்பனுக்குத் திருக்கண்ணாடி போலே ஸம்முகவனாய் நிற்கிற காலார்ந்த கதிக் கருடனைக் கண்டு, கழல் பணிந்து, 1 ‘பிணங்கி அமரர் பிதற்றும் குணம்’ என்கிறபடியே ஓரொரு ஸ்வாமி குணத்தைப்பற்றி வாதிப்ரதிவாதிகளைப் போல வாசி வகுப்பதும் ஸதிஸ்நேஹத்தாலே ஸபஹுமாநாவலோகநம் பண்ண - ப்ரீதி, பஹுமானம் இவைகளுடன் கடாக்ஷிக்க, ஸேநேஶ்வர - ஸ்ரீ ஸேநாபதியாழ்வானால், நியுக்த - ஆஜ்ஞாபிக்கப்பட்ட, ஸபாநிர்வாஹகர் - ஸபா மண்டபத்தை நிர்வஹிக்கக் கூடியவரான நித்யஸூரி, அருளப்பாடிட - பகவான் அவரவர்கள் அந்தந்தக் கைங்கர்யத்தில் அந்வயிக்கும்படி க்ருபை செய்திருக்கும் நியமனத்தைத் தெரிவிக்க, ‘அடிக்கடியும்’ இத்யாதியால் ‘உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய’ இத்யாதி ஸ்ரீ வைகுண்டகத்யத்தில் அருளிச்செய்திருப்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. தொழுவது - ப்ரணாமம் செய்வது, எழுவது - எழுந்திருப்பது, மா - மஹத்துக்களான, மணி - மணிகளினால் செய்யப்பட்ட, மண்டபம் - அநர்கங்களான மணிகளால் செய்யப்பட்ட திருமா மணி மண்டபம் என்றபடி. முகப்பிலே - முன்பக்கத்திலே, சிறகுடைய - இறக்கைகளை உடைய, சிறந்த- ஶ்லாக்யமான, த்ரயீமயனாய் - ஸகல வேதஸ்வரூபனாய். ‘வேதாத்மா விஹகேஶ்வர:’ -‘நேத்ரும் மாய த்ரயீமயே’ என்றிவை முதலியவைகளையும், இவற்றிற்கு மூலங்களான ஶ்ருதிகளையும் அநுஸந்திப்பது. வேதங்களைத் தனக்குத் திருமேனியாக உடையவன் என்றபடி. திருமகள் - லக்ஷ்மியினால், சேர் - சேரப்பட்ட, மார்பனுக்கு - திருமார்பை உடையவனான எம்பெருமானுக்கு, ‘திருக்கண்ணாடிபோலே’ என்பதினால் பகவானுடைய திருமேனி இவருடைய திவ்ய தேஜோமயமான திருமேனியில் ப்ரதிபலிக்கிறது என்பது த்யோதிதம். ஸம்முகவனாய் நிற்கிற - எதிரே இருக்கிற. கால் - காற்றினுடைய, ஆர்ந்த - பரிபூர்ணமான, கதி - வேகம்போன்ற வேகத்தை உடைய. கழல் பணிந்து - திருவடிகளை ஸேவித்து, அமரர் - நித்யஸூரிகள் பிணங்கி - விவாதப்பட்டுக்கொண்டு, பிதற்றும் - முறை தப்பிச்சொல்லுகிற, குணம் - கல்யாண குணம், ஓரோரு ஸ்வாமி குணத்தை - ஸ்வாமியினுடைய ஒரொரு குணத்தை என்றபடி. வாசிவகுப்பதும் - வ்யத்யாஸங்களை

1 திருவாய்மொழி-1-6-4.

நே பயஶங்கையுடையாரைப் போலே ஸம்ப்ரமம் பண்ணுவதுமாய்க் கொண்டு ரஸிக்கிற நித்யஸூரிகள் நிரையாக இருக்கிற அழகோலத்தின் நடுவே சென்று, அடியார்கள் குழாங்களுடன் கூடுவதென்றுகொலோ என்று ஆசை நிறைந்து, திவ்யபரிஜநபரிச்சதாயுதாபரணாழ்வார்கள் ஸ்வாஸாதாரணலக்ஷணவிஶிஷ்டவிக்ரஹங்களோடே யதாஸ்தாநம் ஸேவித்து நிற்கிற நிலைகளைக் கண்டு, ஸர்வவிதகைங்கர்யமநோரதராயிருக்கிறவனைக் கொண்டு கிட்டச்சென்று, பர்யங்கபரிஸரத்திலே முன்பு தங்களைக் கொண்டு எம்பிரான் நடத்தின க்ருஷிபலித்ததென்று பரிபூர்ணமநோரதரான ப

நிரூபிப்பதும், அதிஸ்நேஹத்தாலே - அதிக ப்ரீதியினாலே. அஸ்தாநே - இடம் இல்லாத இடத்தில். பயஶங்கை - பயம் வருகிறதோ என்கிற ஸந்தேஹத்தை, ஸம்ப்ரமம் - பரபரப்பு ரஸிக்கிற - ஆநந்தத்தை அநுபவிக்கிற நிரையாக - வரிசையாக, அழகோலக்கத்தின் - அழகுபொருந்திய கோஷ்டியின். அடியார்கள் - பாகவதர்களுடைய, குழாங்களுடன் - ஸமூஹங்களுடன், கூடுவது - நாம் சேருவது, என்று கொலோ - என்றைக்கோ. பரிஜந - கைங்கர்யம் பண்ணுமவர்கள், பரிச்சத - சத்ரம் சாமரம் முதலியவைகள், ஆயுத - சக்ரம் முதலியவைகள், ஆபரண - கௌஸ்துபம் முதலியவைகள், இவர்களை 'ஆழ்வார்கள்' என்றருளிச்செய்தது இவர்கள் எல்லோரும் நித்யஸூரிகள் என்று தெரிவிப்பதற்காக, ஸ்வாஸாதாரணலக்ஷணவிஶிஷ்ட - தங்கள தங்களுக்கு அஸாதாரணங்களான அடையாளங்களுடன் கூடிய, விக்ரஹங்களோடே - திருமேனியுடன், யதாஸ்தாநம் - அவர்கள் இருக்க வேண்டிய இடங்களில். அதாவது சக்ரத்தாழ்வான் என்னும் நித்திய ஸூரி சக்ரத்தை சிரஸாவஹித்துக்கொண்டு பகவானுடைய வலது திருக்கையில் எழுந்தருளி இருக்கிறார். இப்படியே மற்ற எல்லோரும் அந்தந்த ஆபரணம், ஆயுதம் முதலியவைகளை ஶிரஸா தரித்துக்கொண்டு பகவானுடைய திருமேனியில் அந்தந்த ஸ்தானங்களில் இருக்கிறார்கள் என்றபடி. 'ஸர்வவித' இத்யாதி - இப்படியே எல்லாவிதக் கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்கிற ஆசை உடையவனை. பர்யங்கபரிஸரத்திலே - எம்பெருமான் எழுந்தருளி இருக்கும் திவ்யஸிம்மாஸனத்தில். முன்பு - இந்த முக்தன் ஸம்ஸாரியாய் இருந்த தசையில், தங்களைக்கொண்டு - தங்களை வழியாகக்கொண்டு, நடத்தின - பண்ணிவைத்த, க்ருஷி - ப்ரயத்தினம், அறியாதன - தெரியாத அர்த்தங்களை, அறிவித்து - தெரியப்படுத்தி, என்னை, தீமனம் - கெட்டமனதை,

ஸதாசார்யர்களைக் கண்டு, அறியாதன அறிவித்து என்னைத் தீமனம் கெடுத்த நும் கால்கள் என் தலைமேல்கெழுமீர் என்று க்ருதஜ்ஞதை தோற்றப் பணிந்து, உபயவிபூதியும் தனிக்கோல் செல்ல வானிளவரசு மன்னிவீற்றிருக்கிற அமிததேஜஸ்ஸான திவ்யஸிம்ஹாஸநரூபதிவ்யபர்யங்கத்தையணுகி, விபூதித்வயாந்தர்வர்த்திகளான ஆதாரதத்வங்களும் பர்யங்கவித்யையில் சொன்ன பூதபவிஷ்யத் தத்வங்களென்றாற்போலவும், பகவச்சாஸ்த்ரங்களில் தர்மா தர்மாதிகளென்றாற்போலவும், பரக்கவும் சுருங்கவும் பலவகையாகச் சொல்லுகிற பாதம் முதலான அவயவங்களுமெல்லாம் அவ்வவ்வபிமாநிதேவதாவிஶேஷங்களாயிருக்கும்படியைத் தெளியக்காணும்.

இப்படி ஸர்வதத்வங்களையும் போகார்த்தமாக ஏகதளமாக்கினாற்போலே அப்ராக்ருதமான திவ்யஸிம்ஹாஸநத்தின்மேலே ஆயிரங்

தமிழ்பாஷையில் இப்படி இரண்டு செயப்படுபொருள்வருவது ஸஹஜம், கெடுத்த - நிவ்ருத்திசெய்த, ஶப்தாதிவிஷயங்களில் சாஞ்சல்யத்தை உடைய எனது மனதை அவைகளின் நின்றும் நிவ்ருத்திப்பித்த நும் - உங்களுடைய, கால்களை, திருவடிகளை, என் - அடியேனுடைய, தலை - ஶிரஸின், மேல் - மேலே, கெழுமீர் - வைத்தருளக்கடவீர், பணிந்து - நமஸ்காரம் செய்து, தனிக்கோல் செல்ல - அத்விதீயமான செங்கோல் செல்லும்படி, தன்னுடைய ஆஜ்ஞை செல்லும்படி என்றபடி. வான் - பரமபதத்திற்கு, இளவரசு - யுவராஜாவான ஸர்வேஶ்வரன், மன்னி - ஸ்திரமாயிருந்து, வீற்றிருக்கிற - தன்னுடைய உத்கர்ஷம் தெரியும்படி இருக்கிற, அமிததேஜஸ்ஸான, அளவிடப் படாததான காந்தியை உடைய, திவ்யஸிம்ஹாஸநரூப - திவ்யஸிம்மாஸனஸ்வரூபமான திவ்யபர்யங்கத்தை - திவ்யாஸனத்தை, அணுகி - கிட்டி, விபூதித்வயாந்தர்வர்த்திகளான - இரண்டு விபூதிகளையும் சேர்ந்தவைகளான, ஆதாரதத்வங்களும் - எல்லாவற்றிற்கும் ஆதாரமான ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம் முதலிய தத்வங்களும். 'பூதபவிஷ்யத்' இத்யாதி - முன் இருந்ததும் இனிவரப்போகிறதுமான தத்வங்கள் எல்லாமும், பகவச்சாஸ்த்ரங்களில் - ஸ்ரீபாஞ்சராத்ர ஶாஸ்திரங்களில், பரக்கவும் - விஸ்தாரமாகவும், சுருங்கவும் - சுருக்கமாகவும், அவ்வவ்வபிமாநிதேவதாவிஶேஷங்களாய் - அந்தந்தத் தத்வங்களுக்கு அபிமானி தேவதைகளின் ரூபமாய்.

போகார்த்தமாக - தான் ஸுகத்தை அநுபவிப்பதற்காக, ஏகதளமாக்கினாற்போலே - ஒன்றாயாக்கினாற்போல, தளங்களிலே - இதழ்களிலே-

கோடி பா⁴நுஸஹஸ்ரமூர்கள் உதித்தாப்போலே யிருப்பதொரு தி³வ்ய பத்³மத்தில் எட்டுத்திக்கிலும் எட்டு த³ளங்களிலே அடைவே விமலாதி³க ளெண்மரும், கர்ணிகையின் பூர்வபா⁴க³த்திலே அநுக்³ரஹை யும் ஷட்கலைகள் வடிவுகொண்டு சந்த்³ரிகையை வகுத்தெடுத்தாற் போலே சாமரஹஸ்தைகளாய்க்கொண்டு ஸேவித்திருக்கும் படியைக் கண்டு, 'சாமரவ்யக்³ரஹஸ்தாபி⁴: ஸேவ்யம் கார்யம் இதி வக்ஷ்யதி' என்னும் இஷ்டார்த²ஸித்³தி கைபுகுமென்று காணும், அப்பத்³மத்தின் நடுவிலே லக்ஷமேருஸமஹஸ்ரங்களைச் சேர்த்தால் பரமாணுலக³ மாத்ருக்கும் போராதென்னும்படி அதித³ஸூக்ஷ்மவிஸ்தாரமான தி³ வ்யகர்ணிகையின் மேலே ப்³ரஹ்மாண்டங்கள் தோறுமுள்ள திருப் பாற்கடல்களை யெல்லாமடுக்கி விரித்தாற் போலே நிர்மலவிஸ்தாரமான த³ந்தமான தி³வ்யயோக³பர்யங்கவிசேஷத்தினுடைய நிர்மோகமென்று ஸங்கிக்கலாம்படி நித்யஸுக்லனாய், ஸர்வாதா⁴ரபூ⁴தனையும் நித்யமாக த⁴ரிக்கும்படி ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநப³லனாய், 1 'சென்றாற்

'விமலாதி³கள்' என்றது விமலை, உத்கர்ஷணீ, ஜ்ஞானா, க்ரியா, யோகா, ஸத்யா, ப்ரஹ்வீ, ஈஸானா என்கிறவர்கள் என்றபடி. கர்ணிகையின் - நடுவில் இருக்கும் காயின், பூர்வபா⁴க³த்தில் - முன்பக்கத்தில், வடிவுகொண்டு - ஸரீரத்தை எடுத்துக்கொண்டு சந்த்³ரிகையை - நிலாவை. வகுத்து - பிரித்து, எடுத்தாற்போலே - கையில் தரித்துக் கொண்டிருக்கிறப் போலே, சாமரஹஸ்தைகளாய் - சாமரத்தைக் கையில் வைத்துக்கொண் டிருப்பவர்களாய் சாமரவ்யக்³ரஹஸ்தாபி⁴: - சாமரத்தை வீசிக்கொண் டிருக்கும் கையை உடையவளாக, ஸேவ்யம்-என்னை, ஏவம் - இப்படி, கார்யம் - செய், இதி-என்று வக்ஷ்யதி - சொல்லப்போகிறார். இஷ்டார்த² - இஷ்டம், கைபுகும் - கையில் கிடைக்கும், என்று காணும் - என்று நினைத்துக்கொண்டு பார்ப்பன். அப்பத்³மத்தின் - கீழ்க்கூறிய அஷ்டதளபத்மத்தின், லக்ஷமேருஸமஹஸ்ரங்களை - லக்ஷம் மேருபர்வதங்களை, பரமாணுலக³மாத்ரத்திற்கும்-பரமாணுவின் அல்பபாகத்திற்கும் அதித³ஸூக்ஷ்ம - மிகவும் உந்நதமாய். விஸ்தாரமான - விசாலமான நிர்மல - அழுக்கில்லாததும். நிர்மோகமென்று - பாம்புத்தோல் என்று. நித்யஸுக்லனாய் - எப்பொழுதும் வெளுத்த நிற முடையவனாய், ஸர்வாதா⁴ரபூ⁴தனையும் - எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமான பகவானையும், ப்ரக்ருஷ்ட - அதிகமான, விஜ்ஞாநப³லனாய் - ஜ்ஞானம் பலம் இவைகளை உடையவனாய், சென்றால் -

1 முதல் திருவந்தாதி - 53.

குடையாமிருந்தாற் சிங்காதனமாம்', 1 'நிவாஸ ஶய்யாஸந' என்கிறபடியே அவஸரோசித விக்ரஹங்களைக்கொண்டு அஶேஷவ்ருத்திகளைப் பண்ணுகையாலே ஶேஷனென்றும், த்ரிவிதபரிச்சேதரஹிதனையும் தன் மடியில் ஏகதேஶத்திலே வைக்கும்படியான வைபவத்தை யுடையவனாகையாலே அநந்தனென்றும் திருநாமத்தையுடையவனாய், ஸர்வகந்தவஸ்துவுக்கும் வாஸனையுண்டாம்படியான திவ்யபரிமளத்தையுடையனாய், வேரி மாறாத பூமேலிருப்பாளுடனே புஷ்பஹாஸஸௌகுமார்யனானவன் மூவுலகுந் தொழ வீற்றிருக்கும்படி ஸௌகுமார்யதனாய் அம்ருதப்ரவாஹஞ் சுழியாறு பட்டாற் போலே அவதாதஶீதலமான போகவேஷ்டநத்தையுடையனாய், ஶ்வேதச்சத்ரபங்க்தியை போலவும் பணாரத்நஸஹஸ்ரங்களை

(பகவான்) ஸஞ்சரித்தால், குடையாம் - குடையாவன், இருந்தால்- வீற்றிருந்தால், சிங்காதனமாம் - ஸிம்மாஸனமாவன், **நிவாஸ**-குடி இருக்கும் இடம், **ஶய்யா** - படுக்கை, **ஆஸந** - உட்காரும் ஆஸனம், என்கிறபடியே - என்றாரம்பிக்கும் பாட்டிலும், ஶ்லோகத்திலும் சொல்லுகிறபடியே, **அவஸரோசித** - அந்தந்த அவஸரங்களுக்குத் தகுந்ததான, **விக்ரஹ**ங்களை - ஶரீரங்களை, **த்ரிவிதபரிச்சேதரஹிதனை**யும் - தேசம், காலம், வஸ்து, இவைகளினால் ஏற்படும் மூன்றுவிதமான அளவுகளும் இல்லாதவனான பகவானையும், **ஏகதேஶ**த்திலே - ஒரு பாகத்திலே, **அநந்த**ன் - அளவில்லாதவன். **ஸர்வகந்தவஸ்து**வுக்கும் - எல்லா விதமான வாஸனைகளையுமுடைய எம்பெருமானாகிய வஸ்துவுக்கும், வேரி - பரிமளம், மாறாத - நசியாத, எப்பொழுதும் ஒரேவிதமாக வாஸனையுடன் கூடிய, பூமேல் - புஷ்பத்தின்மேல், இருப்பாளுடனே - வஸிக்கும் லக்ஷ்மீயுடன், '**புஷ்பஹாஸ**' இத்யாதி - அப்பொழுதுதான் அலர்ந்ததான புஷ்பத்தைப்போன்ற திருமேனியை உடையவன். மூவுலகும் - மூன்று லோகமும். தொழ - ஸேவிக்கும்படி, வீற்றிருக்கும்படி - எழுந்தருளியிருக்கும்படி, **ஸௌகுமார்யதனாய்** - மிகவும் ம்ருதுவான ஸுகுமாரமான திருமேனியை உடையவனாய், **அம்ருதப்ரவாஹம்** - அம்ருத வெள்ளம், சுழியாறு பட்டாப்போலே - சுழித்துக்கொண்டு ஆறாக ப்ரவஹிக்குமாப்போலே, **அவதாத**-வெளுத்ததாயும், **ஶீதல**மான-குளிர்ந்ததாயும், **போகவேஷ்டந**த்தை - உடல் சுற்றியிருப்பதை, **ஶ்வேதச்சத்ரபங்க்தி** -. வெள்ளைக் குடைகளின் வரிசை. **பணாரத்நஸஹஸ்ர**

---

1. ஆளவந்தார் ஸ்தோத்திரம் - 40

நிரைத்தாப் போலவும் பரந்துயர்ந்த ஃபணாஸஹஸ்ரத்தின் மணி கிரணகணருசிராதபத்தாலே வைகாஸிகமென்னும் பேரையுடைத்தான ஸரஸிஜவநமெல்லாம் உல்லஸிதமாம்படி பண்ணக்கடவனான திருவனந்தாழ்வானைக்கண்டு அவனோடொக்க ஒருமிடறாய் அநேகரூபமான போகஸாம்யத்தை யாசைப்பட்டு, அவனுடைய ஸஹஸ்ரதவஷிகளான இரண்டாயிரந் திருக்கண்களுக்கும் தான் ஸமலக்ஷ்யமாய் அவன் மேலே அமர்ந்திருக்கிற மேலாத்தேவர்கள் மேவித் தொழும் மாலாரைக் கண்டு தானும் அநந்தசக்ஷுஸ்ஸாய் அத்யந்த ஸாமீப்யம் பெறும்.

ஸஹஸ்ரங்களை - பரிபூர்ணனான சந்திரமண்டலங்களின் ஆயிரத்தை, நிரைத்தாப்போலவும் - வரிசையாக வைத்தாப் போலவும், பரந்து - விசாலமாய், உயர்ந்த - உந்நதமான, ஃபணாஸஹஸ்ரத்தின் - படங்களின் ஆயிரங்களினுடைய, மணி - மாணிக்கங்களினுடைய, கிரண - காந்திகளினுடைய, கண - ஸமூஹம் என்கிற, ருசிராதபத்தாலே - இளம் வெய்யிலாலே, 'வைகாஸிக' என்பதினால் ஸூர்ய கிரணத்தினால் தாமரைப் புஷ்பம் மலருகிறது என்பதும் த்யோதிதம். உல்லஸிதமாம்படி - ப்ரகாசமாகும்படி, மலரும்படி என்றாகவுமாம். அவனோடொக்க - அந்த ஆதிசேஷனுக்கு ஸமமாக. ஒருமிடறாய் - ஏககண்டமாய், அநேகரூபபோகஸாம்யத்தை - (ஆதிசேஷன் அனுபவிக்கிறதான) அனேகவிதங்களான கைங்கர்யமாகிற போகத்தில் ஸாம்யத்தை, முகம் அனேகமாய் இருப்பதில் ஸாம்யத்தை என்றாகவுமாம். ஸமலக்ஷ்யமாய்-ஒரே குறிப்பாய், அமர்ந்திருக்கிற - ஸ்திரப்ரதிஷ்டிதனாயிருக்கிற, மேலாத்தேவர்கள் - மேலான தேவதைகள், நித்யஸூரிகள் என்றபடி. மேவி - ப்ரீதி பண்ணி, தொழும் - ஸேவிக்கிற, மாலாரை - ஸர்வோத்க்ருஷ்டனான ஸ்ரிய: பதியை, அநந்தசக்ஷுஸ்ஸாய்-அளவில்லாத ஜ்ஞானத்தை உடையவனாய், அந்த ஆதிசேஷனைப்போலப் பகவானைப் பார்ப்பதினாலே அனேகம் கண்களையுடையவனாய்என்றாகவுமாம். அத்யந்த ஸாமீப்யம்-மிகவும் ஸமீபத்தில் இருக்கையை.

இப்படி அர்ச்சிராதி மார்க்கத்தை தாம் அனுஸந்தானம் பண்ணவும், அத்தை இப்படி அயலாருக்குச் சொல்லவும் பெற்றோம் என்று தம்முடைய க்ருதார்த்ததையை அனுஸந்திக்கிறார்—'பண்டை' என்றாரம்பித்து.

பண்டையிருவினையாற்றிற் படிந்து பாரங்
காணுதேயொழுகிய நாம்பாக்கியத்தால்
வண்டமருமலர்மாதுமின்னுய் மன்ன
வைசயந்தி மணிவில்லாய் விளங்க வான்சேர்
கொண்டலருண்மழை பொழிய வந்த தொப்பாங்
குளிர்ந்து தெளிந்தமுதாய விரசையாற்றைக்
கண்டணுகித் கருத்தாலே கடந்து மீளாக்
கரைகண்டோர் கதியெல்லாங் கதித்திட்டோமே. 17

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீ பரமபதஸோபாநே
॥ அஷ்டமம் திவ்யதேஶப்ராப்திபர்வ ॥

[ப - ம்] பண்டை - அநாதியான, இருவினை - இருவகையான கர்மங்களாகிற, ஆற்றில் - நதியிலே, படிந்து - முழுகி, பாரம் - கரையை, காணுதே - அறியாமல், ஒழுகிய - அதின் ப்ரவாஹத்தின் வழியே போய்க்கொண்டிருக்கிற, நாம், பாக்கியத்தால் - அத்ருஷ்டவசத்தினுல், இதுமேல் 'கதித்திட்டோமே' என்பதுடன் அந்வயிக்கிறது, வண்டமரும் - வண்டு ஸ்திரமாக வஸிக்கிற, அதாவது தேன் மிகுத்திருப்பதினுலே அதைப் பானம் பண்ணிக்கொண்டு அசையாமல் எப்பொழுதும் அதிலேயே இருக்கிறது என்றபடி, மலர்மாது - புஷ்பத்தில் வஸிக்கிற லக்ஷ்மீ, மின்னுய் - மின்னலாய், மன்ன - ஸ்திரமாக வஸிக்க, வைசயந்தி - வைஜயந்தி என்கிற வனமாலை, மணிவில்லாய் - ரத்னங்கள் இழைத்த தனுஸ்ஸாக, விளங்க - ப்ரகாசிக்க, வான் - பரமபதத்தை, ஆகாசத்தை என்றுகவுமாம், சேர் - அடைந்திருக்கிற, கோண்டல் - மேகம், இங்கு வைகுண்டநாதனை மேகமாக நிரூபித்தருளினபடி, அருள் - க்ருபையாகிற, மழை - மழையை, பொழிய - வர்ஷிக்க, வந்ததோப்பாம் - வந்ததற்கு ஸத்ருஶமாக, குளிர்ந்து, தெளிந்து, அமுதாய - அம்ருதமயமான, விரசையாற்றை - விரஜாநதியை, கண்டு - பார்த்து, அணுகி - கிட்டி, கருத்தாலே - ஸங்கல்பத்தினுலே, கடந்து - தாண்டி, மீளா-

திரும்பிவருவது இல்லாத, கரை - அக்கரையை, பரமபதத்தை, கண்டோர்-கண்டவர்களினுடைய, கதியெல்லாம் - போகிற ப்ரகாரங்களையெல்லாம், அர்ச்சிராதிகதியை எல்லாம் என்றபடி, கதித்திட்டோம் - சொன்னோம். 17

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

எட்டாவது திவ்ய தேஶ ப்ராப்தி பர்வம் முற்றிற்று.

॥ ஸ்ரீ: ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

॥ 𑌨𑌵𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑌣𑌂 ॥

பூவளரும் திருமாது புணர்ந்த நம் புண்ணியனார்
தாவளமான தனித்திவம் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெரு நான்மறையோதிய கீதமெல்லாம்
பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவமே. 18

॥ ஸ்ரீ: ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஒன்பதாவது பராப்தி பர்வம்.

இப்படிக் கீழ் நிரூபிக்கப்பட்ட அர்ச்சிராதி மார்க்கத்தால் பரமபதம் அடைந்தவனுக்கு உண்டாகிற பரிபூர்ண பகவதனுபவத்தையும் அதன் பரீவாஹமான கைங்கர்யங்களையும் இந்தப் பர்வத்தில் நிரூபிக்க ஆரம்பித்து முதலில் அதை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளுகிறார்—'பூவளரும்' என்றாரம்பித்து.

[ப - ம்.] பூவளரும் - புஷ்பத்திலே வளருகிற, திருமாது - லக்ஷ்மீ என்று சொல்லப்படுகிற பெண்ணால், புணர்ந்த - ஆலிங்கனம் செய்யப்பட்ட, நம் - நம்முடைய, புண்ணியனார் - புண்யமாகிய ஸ்ரிய:பதி, ஸித்தோபாய பூதனான ஸர்வேஸ்வரன் என்றபடி, இத்தால் பரந்யாஸம் செய்தபொழுது நம்முடைய பரத்தை அங்கீகரித்துக்கொண்டு தான் உபாயாந்தர ஸ்தானத்திலே நின்று இப்படி ஸர்வ ப்ரகாரமாகவும் உதவிபுரிந்த ஸ்ரிய:பதி வீடு திருத்துவானாய்க்கொண்டு அங்கே போய் இருக்கிறான் என்றபடி, தாவளமான - நித்யவாஸ ஸ்தானமான, தனி - ஒப்பற்ற, திவம் - ஆகாசத்தை, பரமபதத்தை என்றபடி, சேர்ந்து - அடைந்து, தமருடனே - அங்கிருக்கும் நித்ய முக்தர்களோடு, இதுமேல் 'பாடுவமே' என்பதுடன் அந்வயிக்கிறது, 'அடியார்கள் குழாங்களுடன் கூடுவது என்று கொலோ' என்று ப்ரார்த்தித்தபடியே நித்ய முக்தர்களுடன் கூடி என்று தாத்பர்யம், அன்றிக்கே 'தமருடனே சேர்ந்து' என்றந்வயித்து நித்ய ஸூரியான அமானவனுடன் கூடச் சென்று பரமபதமடைந்து என்றர்த்தமாகவுமாம், நா - நாக்கில், வளரும் - வளருகிற, நாவினால் உச்சரிக்கப்பட்டு ஸம்ரக்ஷிக்கப்பட்டு வருகிற என்றபடி, பெரு - பெருத்த

இப்படி அதிஶோபநமான அநந்தபோக பர்யங்கத்திலே ரஜதகிரியின்மேலே மரகதகிரியிருந்தாற்போலே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருந்து விண்ணோர் தலைவனாய், ஸுகுமாரயௌவனாவாய், 1 'சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு' என்னும்படி ஸூர்யஶதஸஹஸ்ர ஸங்காஶம்போலே அநவதிக தேஜஸ்ஸையுடையனாய், 2 'விஶ்வமாப்யாயயந் காந்த்யா பூர்ணேந்த்வயுத துல்யயா' என்னும்படி அநவதிக ஆப்யாயநத்தையுடையவனாய்,

---

வைகளான, நான்மறை - நாலு வேதங்களில், ஓதிய - சொல்லப்படுகிற, கீதமெல்லாம் - கானங்களையெல்லாம், ஶ்ருதிகளில் சொல்லப்படுகிற ஸாம கானங்களையெல்லாம் என்றபடி, பாவளரும் - பாட்டுக்களினால் வளர்ந்திருக்கிற, தமிழ் - தமிழ் பாஷாரூபமான, பல்லாண்டு - 'பல்லாண்டு' என்றாரம்பிக்கும் திவ்ய ஸூக்தியை, இசையுடன் - கானத்துடன், பாவேம் - பாடப்போகிறோம், நாம் என்று சேர்த்துக்கொள்ளவும், அன்றிக்கே பாடும்படி ஆகக்கடவோம் என்றாகவுமாம். 18

இனி பரிபூர்ணமான ப்ரும்மானுபவ ப்ரகாரத்தை நிரூபித்தருளுகிறார் - 'இப்படி' என்றாரம்பித்து. அதிஶோபநமான - மிகவும் அழகான, அநந்த - ஆதிசேஷனுடைய, போக - உடலாகிற, பர்யங்கத்திலே - ஸிம்மாஸனத்திலே, ரஜதகிரி - வெள்ளிமலை, மரகதகிரி - பச்சைக்கல் மயமான மலை. ஏழுலகும் - ஸப்தலோகங்களிலும், தனி - அத்விதீயமான, கோல் - செங்கோல், ஆஜ்ஞை என்றபடி, செல்ல - செல்லும்படி (நடக்கும்படி), வீற்றிருந்து - தன்னுடைய மேன்மை தோன்றும்படி இருந்து, விண்ணோர் - நித்யஸூரிகளுக்கு, தலைவனாய் - நிர்வாஹகனாய், ஸுகுமாரயௌவனாவாய் - கௌமாரம் என்கிற நிலை உண்டாகிப் பிறகு யௌவனம் உண்டாயிற்றென்பதில்லாமல் எப்பொழுதும் யௌவனத்தை உடையவனாய், சோதி - ஜ்யோதிஸ்ஸினுடைய, வெள்ளத்தினுள்ளே - ப்ரவாஹத்தின் நடுவிலே, எழுவது - ஆவிர்ப்பவிக்கிற, ஓர் - அத்விதீயமான, உரு - ரூபம். ஸூர்யஶதஸஹஸ்ர - லக்ஷம் ஸூர்யன்களுடைய, ஸங்காஶம் - சேர்க்கை, அநவதிக - எல்லையில்லாத. பூர்ணேந்த்வயுத - பூர்ண சந்திரன்களுடைய லக்ஷங்களுக்கு, துல்யயா - ஸமானமான, காந்த்யா - காந்தியினால், விஶ்வம் - ப்ரபஞ்சத்தை, ஆப்யாயயந் - த்ருப்தி செய்வித்துக் கொண்டு, 'ஆப்யாயந' மாவது விசேஷமான ப்ரகாசத்தில் அதிகக்குளிர்ச்சியிருப்பது. 'ஹர்யயம் தேஜ ஏவாஸ்ய ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம் । ஸஹஸ்ரா

---

1 திருவாய்மொழி-5-5-10. 2 ராமாயணம்-

ஸர்வ ஶேஷியான தன்னுடைய க்ருபையும் க்ஷமையும் வண்மையும் வடிவுகொண்டாற்போலே யிருக்கிற நாச்சிமார்களில் ஸ்வாபிமத நித்ய நிரவத்ய அநுரூப ஸ்வரூபாதிகளை யுடையவளாய், ஸ்வே ஸ்வரூபத்தாலே ஸதாநுபவம் பண்ணா நின்றாலும் இன்றனுபவிக்கத் தொடங்கினாற்போலே ஆஶ்சர்யரஸாவஹையாய், 1 'ஶாந்தாநந்த' இத்யாதிகளின்படியே ஸர்வப்ரகாரஸம்ஶ்லேஷத்தையுடைய

நந்தநம் ஶ்ராவண்யமிதி கத்யதே॥' என்னப்பட்டதிறே. அன்றிக்கே முத்தில் இருக்கும் பளபளப்புப்போன்ற பளபளப்பை உடைய என்றாகவுமாம். 'க்ருபைவ' இத்யாதி—க்ருபையே வடிவுகொண்டாப்போலே பெரிய பிராட்டியும், பொறுமையே வடிவுகொண்டாப் போலே பூமிப் பிராட்டியும், ஔதார்யமே வடிவுகொண்டாப் போலே நீளாதேவியும் இருக்கிறார்கள் என்றபடி ஸ்வாபிமத - தனக்கு மிகவும் இஷ்டமாய், நித்ய - அழிவில்லாததாய், நிரவத்ய - தோஷங்கள் ஒன்றும் இல்லாததாய், அநுரூப - தனக்கு மிகவும் அனுகுணமான, ஸ்வரூபாதிகளை - ஸ்வரூபம், ரூபம், குணம், ஐஸ்வர்யம் முதலியவைகளை, ஸ்வேஸ்வரூபத்தாலே - தான் ப்ரபஞ்சத்திற்கெல்லாம் அந்தர்யாமியாக இருக்கும் ரூபத்தாலே, ஸதாநுபவம் - எப்பொழுதும் பிரியாமல் அனுபவித்துக்கொண் டிருந்தாலும், இன்று - இப்பொழுது. ஆஶ்சர்யரஸாவஹையாய் - ஆஶ்சர்யமான ரஸானுபவத்தைக் கொடுக்கக்கூடியவளாய், 'ஶாந்தாநந்த' இத்யாதி— * 'ஶாந்தாநந்தமஹாவிபூதிபரமம் யத்ப்ரஹ்ம ரூபம் ஹரே: மூர்த்தம் ப்ரஹ்ம ததோபி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம் । யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்யாஹு: ஸ்வைரநுரூபரூபவிபவைர்காடோபகூடாநி தே॥' என்கிற ஶ்லோகத்தில்

---

* விகாரங்கள் ஒன்றும் இல்லாத அளவில்லாத பெரிய விபூதிகளையுடைய எல்லா வஸ்துக்களையும்விட மேலான ப்ரும்மமென்று சொல்லப்படுகிற எந்த விஷ்ணுவினுடைய ஸ்வரூபமோ, அந்த ஸ்வரூபத்தைவிட அந்தப் பகவானுக்கு மிகவும் ப்ரியமாகிய மிகவும் ஆஶ்சர்யமான அவயவங்களோடு கூடிய ப்ரும்மமென்று சொல்லப்படுகிற எந்தப் பரவாஸுதேவ விக்ரஹமோ, ஸுகமாக விளையாடுகிற அந்தப் பகவானுடைய வேறு எந்த அவதார விக்ரஹங்களோ, அவைகள் எல்லாம் உன்னுடைய அஸாதாரணங்களாகிய அனுகுணங்களாகிய ஸ்வரூபம் முதலியவைகளாகிய ஸம்பத்துக்களினால் நெருக்கமாகச் சேர்ந்திருக்கின்றன.

---

1 ஸ்ரீசதுஶ்லோகீ-4.

ளாய், மார்பத்து மாலே நங்கையாய், அமுதில் வரும் பெண்ணமு தாய், வேரிமாருத பூமேலிருந்து வினைதீர்க்குமவளாய், தன் கடாக்ஷ லேசத்தாலே ப்ரஹ்மாதிவைபவத்தையும் கொடுக்குமவளாய், தேவதேவதிவ்யமஹிஷீ என்னும்படியான மேன்மையும், 'கருணாஸ்ரநதமுகீ'' என்னும்படியான நீர்மையுமுடையவளான பெரிய பிராட்டியார் தாக்ஷிண்யஸீமாவென்று தோற்றும்படி தக்ஷிண பார்ச்வத்திலே நீருதைவத்தை யணைந்த நிலேமின்போலே ஸேவித் திருந்து தன்னுடைய ஸேஷிகஹோத்ருகைங்கர்ய ப்ரதிபந்த கங்களைப் பூரித்துக்கொண்டு கவிருவசிஜநங்களை கவல

சொல்லப்பட்டபடியே என்றபடி. ஸ்வரூபாகாரஸம்ச்லேஷத்தை - ஸ்வரூபத்தில் தன் ஸ்வரூபத்தாலும், விக்ரஹத்தில் தன் விக்ரஹத்தினாலும், அவதாரங்களிலும் தன்னுடைய அவதாரங்களினாலும் சேர்ந்திருப்பதை என்ற படி. மார்பத்து - மார்பிலே இருக்கிற, மாலே - மாலேபோல் போக்யையான, நங்கை - நல்ல குணங்கள் நிறைந்தவளான ஸ்திரீ, அமுதில் - அம்ருதத்தில், வரும்-ஆவிர்ப்பவித்த, பெண்ணமுதாய்-ஸ்திரீ ரூபமான அம்ருதமாய், அதாவது அம்ருதம் கோதாகும்படி அதின் ஸாராம்சமாய் ஆவிர்ப்பவித்தவளான பெண் ணமுது என்றபடி, வேரி - வாஸனை, மாருத - அழியாத, பூமேல் - புஷ்பத் தின்மேல்,இருந்து, வினை - பாபங்களை, தீர்க்குமவளாய் - போக்கடிக்குமவளாய், கடாக்ஷலேசத்தாலே - கடாக்ஷத்தின் ஒருபாகத்தாலே (ஏகதேசத்தாலே) ப்ரஹ்மாதி - ப்ரும்மா முதலியவர்களினுடைய, வைபவத்தையும் - ஐஶ்வர்யத்தையும், தேவதேவ - தேவதைகளுக்கு எல்லாம் தேவதையான பகவானுடைய, திவ்யமஹிஷீ - பட்டத்து ஸ்திரீ, என்னும்படியான - என்று சொல்லக்கூடியதான, மேன்மை-உத்கர்ஷம், பரத்வம் என்றபடி. கருணா - தயையினல் உண்டான, ஸ்ரா - கண் ஜலத்தை உடையதாயும், நத - வணங்கியும் இருக்கிற, முகீ - முகத்தை உடையவள், நீர்மை - ஸௌலப் யம். தாக்ஷிண்யஸீமா - ஸாமர்த்யத்திற்கு எல்லே, தெற்கு திக்குக்கு எல்லே என்றும் ஒரு அர்த்தம் த்வனிக்கிறது. தக்ஷிணபார்ச்வத்திலே - தெற்குப் பக்கத்திலே அணைந்த - தழுவிக்கொண்டிருக்கிற, நிலேமின் - ஸ்திர மான மின்னல், மின்னல் க்ஷணம் தோன்றி அழிந்துவிடுமாதலால் அது ஸரியான த்ருஷ்டாந்தமாகாதென்று திருவுள்ளம்பற்றி ஸ்திரமான மின் னலுடன் கூடின என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸேவித்திருந்து - ஆஶ்ரயித்துக் கொண்டிருந்து. கைங்கர்யப்ரதிபந்தகங்கள் - கைங்

ரோசிதாஶேஷஶேஷவ்ருத்திகளிலும் ஸநாதயிக்க, 1 ‘ஏவம்பூத பூமிநீளாநாயக’ என்கிறபடியே பெரியபிராட்டியாருடைய அந்யாவதாரமென்னலாம்படி அநவரதபஹுமாந விஷயையாய், பச்சைமாமலைபோல் மேனிக்கும் படிமாவான நிறத்தையுடையளான பாரென்னும் மடந்தையும், அல்லிமலர்மகள்போக மயக்குகள் அத்யல்பமென்னும்படி நித்யஜ்ஞாநம் நின்றவிடந்தெரியாதே 2 ‘நீளாதுங்க ஸ்தநகிரிதடீ ஸுப்தம்’ என்னப் பண்ணுமவளாய், நீலோத்பலஶ்யாமளையான ஶ்ரீநீளைப் பிராட்டியும், அடியார் இடத்திலே ஸேவித்திருக்கும்படி தாங்களுமிடத்திலே ஸேவித்திருக்க, 3 ‘ஸேவ்ய: ஶ்ரீ

கர்யத்திற்கு உத்தேஶ்யர்களாய் இருக்கை,பூரித்துக்கோண்டு - பூர்த்திசெய்வித்துக் கொண்டு, இந்தப் பெரிய பிராட்டியாரில்லாவிடில் கைங்கர்யோத்தேஶ்யத்வத்திற்குப் பூர்த்தியில்லை என்றபடி. **அவஸரோசித** - அந்தந்த ஸமயங்களுக்குத் தகுந்த, **அஶேஷ** - எல்லா, **ஶேஷவ்ருத்தி**கள் - கைங்கர்யங்கள். **ஏவம்பூத** - இப்படிப்பட்டவர்களான, அதாவது கீழ் நிரூபித்தருளின பெரிய பிராட்டியாருக்கு ஸத்ருஶமான, **பூமிநீளாநாயக**-பூமிப்பிராட்டி, நீளாதேவி, இவர்களுக்கு நாயகனே. **அந்யாவதாரம்** - மற்றொரு விதமான அவதாரம். **அநவரத** - ஒழிவில்லாமல், அதாவது எப்பொழுதும், **பஹுமாநவிஷயையாய்** - பஹுமானத்திற்குப் பாத்திர பூதையாய், பச்சை - பச்சைநிறமான, மா - பெரிய, மலைபோல் - பர்வதம் போன்ற, மேனிக்கும் - திருமேனிக்கும், படிமாவான - ஸத்ருஶமான, பார் என்னும் - பூமி என்று சொல்லப்படுகிற, மடந்தையும் - ஸ்திரீ, பூமிப்பிராட்டியும் என்றபடி, அல்லி - குளிர்ந்த, மலர் - புஷ்பத்திலே வஸிக்கிற, மகள் - பெரிய பிராட்டியாருடைய, போக - அனுபவத்தினுல் உண்டான, மயக்குகள் - மயக்கங்கள், **நித்யஜ்ஞாநம்** - நித்தியமான ஜ்ஞானம், **நீளா** - நீளாதேவியினுடைய, **துங்க** - உன்னதங்களான, **ஸ்தநகிரிதடீ** - ஸ்தனங்களாகிற மலையின் தாழ்வரையில், **ஸுப்தம்** - தூங்கிக்கொண்டிருக்கிற. **நீலோத்பல** - கருநெய்தல் புஷ்பம்போல், **ஶ்யாமளையான** - கறுத்த நிறமுள்ளவளான, அடியார் - தாஸர்கள், இடத்திலே - அவரவர்கள் கைங்கர்யம் பண்ணும் ஸ்தானங்களில், தாங்களும், இடத்திலே - இடது பக்கத்திலே, **ஶ்ரீ:** - பெரிய பிராட்டியார், **பூ** - பூமிப் பிராட்டியார், **நீளாபி:** - நீளாதேவி, இவர்களினுல், **ஸேவ்ய:** - ஸேவிக்கத் தகுந்தவன். உடன் -

---

1 கத்யம். 2 திருப்பாவை தனியன் 3

பத்நீபி:', 1 'உடனமர் காதன்மகளிர் திருமகள் மண்மகளாயர் மடமகளென்றிவர் மூவர்' இத்யாதிகளில் சொன்ன சேர்த்தியிலே அடிமை செய்யுமவர்களுக்கு ஸ்வமென்றும் ஸ்வாமியென்றும் சொல்லும்படியான நிரதிஶயபோக்யத்தை யுடையனான நிருபாதிகஶேஷியை நிருபாதிகஜ்ஞாநவிகாஸத்தாலே 2 'அவாவறச் சூழ்ந்தாய்' என்னும்படி அநுபவித்து, 3 'தத்தாவதி தத்ப்ரியதரம் ரூபம் யதத்யத்புதம்' என்றும், 4 'நாற்றோளமுது' என்றும் பேசப்பட்டு குன்றாடுகொழுமுகில்போல் குவளைகள்போல் குரைகடல்போல் நின்றாடு

தன்னுடன் கூட, அமர் - அமர்ந்திருக்கிற, ஏகாஸனத்திலே இருக்கிற என்றபடி. காதல் - ப்ரீதிக்குப் பாத்திரமான, மகளிர் - தேவிகள், திருமகள் - பெரிய பிராட்டியார், மண்மகள் - மண் என்னப்படும் மகள், மண்ணுக்கு (பூமிக்கு) நிர்வாஹகை யென்னவுமாம், பூமிப்பிராட்டி என்றபடி, ஆயர் - இடையர்களுடைய, மட - மௌக்த்யத்தை உடையவளான, மகள் - பெண், நப்பின்னைப்பிராட்டி என்றபடி, இவள் நீளாதேவியின் அவதாரமாகையினால் அவளைச் சொல்லியபடி என்றறியத்தக்கது, என்றிவர் மூவர் - என்று சொல்லப்பட்ட இந்த மூன்று பேர்களும், 'சேர்த்தியிலே' என்றது மேல் 'அநுபவித்து' என்பதோடு அந்வயிக்கிறது. நிருபாதிக-ஒரு காரணத்தினால் அல்லாமல் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்ட, ஜ்ஞாநவிகாஸத்தாலே - ஜ்ஞானத்தின் பரவுதலாலே, அவா - ஆசை, அற - தீரும்படி, சூழ்ந்தாய் - வ்யாபித்தாய், வந்து நிறைந்தாய் என்றபடி, தத்தாவதி - அந்த ஸ்வரூபத்தைக் காட்டிலும், தத்ப்ரியதரம் - அந்தப் பகவானுக்கு மிகவும் ப்ரியமாய், அத்யத்புதம் - மிகவும் ஆஶ்சர்யமான, யத் - எந்த, ரூபம் - திவ்யமங்கள விக்ரஹமோ. நாற்றோள் - நான்கு தோளுடைய, அமுது - அம்ருதம், அதைப் போல் போக்யம் என்றபடி, குன்று - பர்வதத்தில், ஆடு - ஸஞ்சரிக்கிற, கொழு- ஶ்லாக்யமான, முகில்போல் - மேகம்போலும், குவளைகள்போல் - கரு நெய்தல் புஷ்பங்கள் போலவும், குரை - ஶப்திக்கிற, கடல்போல் - ஸமுத்திரம் போலவும், நின்றாடு - நின்றுகொண்டு நர்த்தனம் பண்ணுகிற, கண்மயில் போல்-கண்களால் நிறைந்த மயிலைப்போலவும், இங்கு கண்கள் என்றது மயில் தோகையில் இருக்கும் கண்கள் போன்ற ரேகா விஶேஷத்தைச் சொல்லுகிறது, நிறமுடைய - வர்ணத்தையுடைய, பொன்னின் வண்ணம் - ஸ்வர்

---

1 திருவாய்மொழி-1-9-4. 2 திருவாய்மொழி-10-10-10.
3 ஸ்ரீசதுஶ்லோகீ-4. 4 திருவாய்மொழி-5-8-7.

கண் மயில்போல் நிறமுடைய பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையுந் திருமேனியில் அவயவசோபையிலும் ஆபரணச் சேர்த்தியழகிலும் ஆழங்கால்பட்டு, பகவதநுபவப்ரீதிபரவஶரான முமுக்ஷுக்கள் பண்ணும் பகவத்ப்ரீதிகரங்களைக் கொண்டு ‘விபந்யவ:’ என்கிற ஶ்ருதியின்படியே விவிதஸ்தோத்ரங்களைப் பண்ணத் தொடங்கி, ஶிரோருஹஸம்ஹதியாகிற ராத்ரியோடே அகடிதகடநாஸாமர்த்யத்தாலே சேர்ந்ததென்னலாம்படி கதிராயிரமிரவி

ணத்தினுடைய நிறத்திற்கும், மணியின் வண்ணம் - நீலரத்னத்தின் வர்ணத்திற்கும், புரையும் - ஸத்ருஶமான. ஆபரணச் சேர்த்தி - ஆபரணங்கள் அந்தந்த அவயவங்களில் பொருந்தியிருப்பது. ஆழங்கால்பட்டு - ஈடுபட்டு, மக்னராகி என்றபடி, **பகவதநுபவ** - பகவானை அனுபவிப்பதினால் உண்டான, **ப்ரீதி** - ப்ரீதிக்கு, **பரவஶரான** - பராதீனர்களான, **முமுக்ஷுக்கள்** - மோக்ஷம் அடையவேண்டும் என்கிற ஆசையை உடையவர்கள், **பகவத்ப்ரீதிகரங்களை** - பகவானுக்கு ப்ரீதியை உண்டாக்கக்கூடிய வ்யாபாரங்களை, **விபந்யவ:** - விஶேஷமாக ஸ்தோத்திரம்பண்ணுகிறவர்களாய், **ஶிரோருஹஸம்ஹதி**- தலைமயிரின் வரிசை, **அகடிதகடநாஸாமர்த்யம்** - மற்றவர்களினால் ஒன்று சேர்க்க முடியாதவைகளை ஒன்று சேர்க்கும் ஸாமர்த்தியம். கதிர் - பூர்ணகிரணங்களை உடைய, ஆயிரம் இரவு - ஆயிரம் ஸூர்யன், கலந்து எரித்தால் - ஏககாலத்தில் ப்ரகாசித்தால், ஒத்த - அதற்கு ஸத்ருஶமான, நீண் - நீண்ட, முடியை - கிரீடத்தை. * ‘முகேந்துஶோ ஜிஜிணகரஸ்ஸி ஏதாம்ஸிதமஹாரஜாஸோ । அவலிஅவணாஸ்திம் ஸ்வம் ராஜேவ ஜாதஸத்வஸமக்ரம்’ (முகேந்துகிரீடதிநகரயோர்மத்யஸ்தித: தவ சிகுரஸந்ததிரந்தகார: । அகடிதகடநாஶக்திம் ஸத்யம் ஶ்ராவயதி தாஸஸத்யஸங்க ॥’ என்றும், † ‘ஸங்கீக்ருதத்யுமணிபிம்பஸஹஸ்ரதாம்ந:’

---

* ஓ! அடியவர்க்கு மெய்யனே! திருமுகமண்டலமாகிற சந்திரன் கிரீடமாகிற ஸூர்யன் இவைகளின் நடுவில் இருக்கிற திருக்குழல்களாகிற இருட்டானது தேவரீருக்கு அகடிதகடநாஶக்தியை ஸ்தாபனம் செய்கிறது. அதாவது ஸூர்யனாவது சந்திரனாவது இருக்கும் இடத்தில் இருட்டு இருக்காது. அப்படி அவை இரண்டும் ஏககாலத்தில் இருந்தும் தேவரீருடைய திருக்குழல்கற்றைகளாகிற இருட்டு இருக்கிறது அகடிதகடநாசக்தியை ப்ரகாசம் செய்கிறது என்றபடி.

† ஒன்று சேர்க்கப்பட்ட ஆயிரம் ஸூர்யன்களுடைய காந்தியைப்போல.

கலந்தெரித்தாலொத்த நீண்முடியைப் பார்த்து 1 'முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ' என்பது. வதநாரவிந்த மகரந்தரஸா ஸ்வாதத்துக்காக வண்டொழுங்கு படிந்தாற்போலே அசைகிற திருக்குழற் கற்றைகளைப் பார்த்து 2 'கொள்கின்ற கோளிருளைச் சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளினுள்கொண்ட நீலநன்னூற்றழைகொலன்றுமாயன்குழல்' என்பது. அத்திருக்குழற் சேர்த்தியாலே ஒரு பார்ஶ்வமிருளோடே சேர்ந்த அஷ்டமீ

என்றும் இவர்தாமே அருளிச்செய்திருப்பது இங்கனுஸந்திக்கத்தக்கது. உனது - உன்னுடையதான, முகச்சோதி - முகத்தினுடைய ஜ்யோதிஸ்ஸானது, முடிச்சோதியாய் - கிரீடத்தின் காந்தியாக, மலர்ந்ததுவோ - விகஸித்ததோ, முடிச்சோதி முகச்சோதியாய் மலர்ந்ததுவோ என்று அந்வயித்துக் கொள்ளவுமாம். என்பது - என்று சொல்லுவது. வதநாரவிந்த - முகமாகிற தாமரைப் புஷ்பத்தினுடைய, மகரந்தரஸ - தேனை, ஆஸ்வாதத்துக்காக - ஸாப்பிடுவதற்காக, வண்டொழுங்கு - வண்டுகளின் வரிசை, திருக்குழல்கற்றைகள் - சுருண்ட மயிர்களின் ஸமூஹங்கள், கொள்கின்ற - பூமி முழுவதும் வ்யாபித்துக் கொண்டிருக்கிற, கோள் இருளை - காடாந்தகாரத்தை, சுகிர்ந்து - பன்னி, கோதுகளைக் கழித்து என்றபடி, இட்ட - போடப்பட்ட, கொழும் - ஶ்லாக்யமான, சுருளின் - சுருள்களினுடைய, உள்கொண்ட - உள்ளிருந்து இழுக்கப்பட்ட, நீல-கறுத்ததான, நல்நூல்-நல்ல நூல்களினுடைய, தழைகொல்-ஸமூஹங்களோ, அன்று-அவைகள் அல்ல. அவைகளுக்கு இப்படிப்பட்ட மேன்மை இல்லை என்றபடி, மாயன் - ஆஶ்சர்யபூதனான எம்பெருமானுடைய, குழல்-திருக்குழல்கள். சேர்த்தியாலே - ஸம்பந்தத்தாலே, ஒருபார்ஶ்வம் - ஒருபக்கம், இருளோடே சேர்ந்த - இருட்டுடன் கூடியிருக்கிற. இத்தால் * 'ஸ்மிதஸ்புதாம்ருததமேந முகேந்துநா தே ஸந்த்ருஷ்ட ஸம்ஸரண ஸம்ஜ்வரஶாந்தயே ந: । ஸம்பத்ஸ்யதே விபாவநாய ஸமாதியோக்யா ஶ்யாமாயமாந வதிந கசஸங்கா ஶர்வரீவ ॥' என்பது ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. அநுகரிக்கிற - அநுஸரித்திருக்கிற, அதாவது அதற்குஸத்ருஶமாய் இருக்கிற என்றபடி. நாள் - ஒரு நாளில், அஷ்டமிதிதியில் என்றபடி, மன்னு-

---

1 திருவாய்மொழி-3-1-1. 2 திருவாய்மொழி-7-7-9

* ஓ! தேவநாதனே! புன்சிரிப்பாகிய அம்ருதத்தாலே மிகவும் அழகாய் இருக்கிற தேவரீருடைய முகமாகிற சந்திரனோடு சேர்ந்து இருக்கிற திருக்குழல்களாகிற இந்த ராத்திரியானது த்யானத்திற்கு உசிதமானதாய் எங்களுடைய ஸம்ஸாரதாபம் நிவ்ருத்தி யடைவதற்குக் காரணமாகிறது.

அர்த்தசந்த்ரனை ஸந்தர்ஜிக்கிற திருநெற்றியை ஸந்தர்ஶித்து, 1 'நாள்மன்னு வெண்திங்கள் கொல் நயந்தார்கட்கு நச்சிலைகொல்' என்பது. அத்திரு நெற்றியில் அழகுக்குக் கீற்றெடுக்கலாம்படி யிருக்கிற திருப்புருவங்களை ஸந்தர்ஶித்து 2 'இன்னுயிர்க்கேழையர்மேல் வளையு மிணைநீல விற்கொல் மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைகொல்' என்பது, ஸ்வதந்த்ரோऽஹம் மென்றிருப்பாரைத் தோற்பித்து நமஸ்தே என்று திருவடிகளிலே விழப் பண்ணும் கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி நீண்ட வப் பெரியவாய கண்களைக் கண்டு 3 'ஏழையராவியுண்ணு மிணைக்கூற்

ஸ்திரமாய் இருக்கிற, வெண் - வெளுத்த நிறமுள்ள, திங்கள் கொல் - சந்திரனோ, (அன்றிக்கே) நயந்தார்கட்கு - தன்னை ஆசைப்பட்ட ஸ்திரீகளுக்கு, நச்சிலை கோல் - ஆசையில்லையோ, அதாவது அவர்களுக்கு ஆசை யில்லாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கிறதோ என்றபடி. * 'ஸுராதிப ஸ்வீயம் ரஜநீகரேண ஸக்ருஷ்டஸ்திரா ஸாரவதே ஹவதோ ஸுராதே' என்றிறே இவர் தாமும் இந்த அழகை ஸ்ரீதேவநாதன் திருமேனி யில் அனுபவித்தது. அழகுக்குக் கீற்று எடுக்கலாம்படி - அழகு என்பதற்கு ரேகை எடுக்கலாம்படி, ஏழையர் மேல் - அபலைகளான ஸ்திரீகளின் மேல், இன்-போக்யமான, (அவர்களுடைய) உயிர்க்கு - ப்ராணனுக்காக, ப்ராணனை அப ஹரிக்கைக்காக என்றபடி, வளையும் - வளைந்திருக்கிற, இணை - இரண்டான, நீல - நீலரத்நங்களினால் செய்யப்பட்ட, விற்கோல் - வில்லுகளோ, மன்னிய - ஸ்திரமான, சீர்-குணத்தை உடையதான, இது 'சிலைக்கு' விசேஷணம், மதனன் - மன்மதனுடைய, கருப்புச் சிலைகொல் - கரும்பு மயமான தனுஸ்ஸோ, ஸ்வதந்த்ரோஹம் - நான் ஸ்வதந்திரன், என்றிருப்பாரை - என்று எண்ணியிருக் கும் ஸம்ஸாரிகளை, நமஸ்தே - உன் பொருட்டு ஸேவிக்கிறேன். கரியவாகி - கறுத்த நிறம் உடையவகளாகி, புடைபரந்து - இரண்டு பக்கங்களிலும் வைசால்யத்தை உடையவைகளாய், மிளிர்ந்து - ஸ்நிக்தங்களாய், காந்தியை யுடையவைகளாய் என்றபடி, செவ்வரியோடி - சிவந்த கோடுகள் ஓடி, நீண்ட, அப்பெரியவாய - அப்படிப்பட்ட பெரியவைகளான. ஏழையர் - பகவானிடத்

---

1 திருவாய்மொழி-7-7-7 2 திருவாய்மொழி-7-7-4. 3 திருவாய்மொழி-7-7-1

* ஓ ! தேவர்களுக்கு அதிபதியே ! (தேவரீருடைய லலாடத்தில் இருந்து உண்டான வியர்வைத்துளியில் இருந்து ருத்திரன் உண்டானரோ) அந்த லலாடத்தில் சந்திரனால் ஏதோ ஒரு தினத்தில் (அஷ்டமீ திதியில்) அடை யப்பட்டிருக்கும் ஶோபை ஸ்திரமாக இருக்கிறது.

றங்கொலோ அறியேன் ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள் கொலோ' என்பது. ஶ்ருதிஸூக்தி நிஶ்வாஸமான திவ்ய நாஸாவம்ஶத்தைப் பார்த்து [1] 'மாட்டுயர் கற்பகத்தின் வல்லியோகொழுந்தோ' என்பது. நாச்சிமாருக்கு லீலாமணி தர்ப்பணங்கள்போலேயிருக்கிற திவ்யகபோலயுங்களைப் பார்த்து, வர்ணிக்கைக்கு நிலமன்றென்று [2] 'கண்கள்

தில் ஆசையாகிய சாபல்யத்தையுடைய ஸ்திரீகளின், ஆவி-ப்ராணன்களை, உண்ணும் - புஜிக்கிற, இணை-இரண்டுகளான, கூற்றங்கோலோ - ம்ருத்யுக்களோ, ஆழி-ஸமுத்திரம்போன்ற, அம்அழகான, கண்ணபிரான் - திருக்கண்களையுடைய எம்பெருமானுடைய, திருக்கண்கள்கோலோ - திருக்கண்களோ, அறியேன். * 'ஸமந்தஸ்ஸத்வோத்ரேக த்விகுணிததரங்காஸ்திருபராஸ்ததர்த்தி வாதாநாஹ்ருத்யா பிருவஸா ப்ருதவ்யா விஸ்தாரம்பாயமாதா விலோகநம்' என்றிவர்தாமே அநுஸந்தித்தருளினாரிறே. ஶ்ருதிஸூக்தி - வேதங்களின் வாஸனைகளை யுடையவைகளான, நிஶ்வாஸ - மூச்சுக்காற்றுகளை உடைய, நாஸாவம்ஶத்தை- மூங்கில்போல் இருக்கும் திருமூக்குகளை, மாடு - ஸமீபத்தில், அதாவது கீழ் இரண்டு க்ஷீர ஸமுத்திரங்களாக நிரூபித்தருளின திருக்கண்களின் மத்யத்திலே, உயர் - வளர்ந்து கொண்டிருக்கிற, மாடு, உயர் என்று இரண்டும் சேர்ந்து மாட்டுயர் என்றாயிருக்கிறது என்றறியத்தக்கது, கற்பகத்தின் - கற்பக வ்ருக்ஷத்தினுடைய, வல்லியோ - கொடியோ, கொழுந்தோ-துளிரோ என்றபடி. †'நித்யாதிதே நிஜமநிஶ்வஸிதே ஸ்வவேத்ர நாஸா நஸேத்ருவநே நய நாப்திஸேதுः' என்றிறே இவருடைய அநுபவம் நின்றபடி. நாச்சிமாருக்கு - பிராட்டிகளுக்கு, லீலாமணிதர்ப்பணங்கள்போலே - விளையாட்டுக்காக ஏற்பட்ட ரத்னமயமான திருக்கண்ணாடிகள் போலே, கபோலயுங்கள்- திருக்கபோலங்கள், நிலமன்றென்று-விஷயமாகாது என்று, அதாவது வர்ணிக்க முடியாது என்று எண்ணி, கண்கள் - திருக்கண்கள், சிவந்து-சிவந்தவை

---

1 திருவாய்மொழி-7-7-2 2 திருவாய்மொழி-8-8-1

* ஓ! தேவநாதனே! எல்லாப்பக்கங்களிலும் காணப்படுகிற ஸத்வ குணத்தையுடைய கரையைத் தாண்டி வருகிற தயையாகிற உயரங்களான அலைகளையுடையதாயும் யாசகர்களுடைய விருப்பத்தைக் கொடுக்கக் கூடியதாயும், பளபளப்பை யுடையதாயும், நீண்டதாயும், அகலமாயும் இருக்கிற தேவரீருடைய திருகண்கள் திருப்பாற்கடலை ஒத்திருக்கின்றன.

† ஓ! தேவநாதனே! கண்களாகிற இரண்டு ஸமுத்திரங்களின் நடுவிலுள்ள ஸேது போன்ற தேவரீருடைய திருமூக்கு எப்பொழுதும் உண்டாகிய வேதங்களாகிற மூச்சுக காற்றுகளாலே எனக்குதேறுதலை உண்டாக்குகிறது.

சிவந்து பெரியவாய்வாயுஞ் சிவந்து கனிந்துள்ளே வெண்பலிலகு சுடரிலகு விலகுமகர குண்டலத்தன்' என்று சுற்றடிக்கொள்வது. செம்பவளத் திரள்போலே யிருக்கிற ஶ்ரீவஂ்ராயஜாவழூவத்தைப் பார்த்து [1] 'வாலியதோர் கனிகொல்? வினையாட்டியேன் வல்வினைகொல்? கோலம் திரள் பவளக்கொழுந்துண்டங்கொலோ', [2] 'கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறு

களாய், பெரியவாய் - பெரியவைகளாய், வைஶால்யத்தை யுடையவைகளாய், வாயும், சிவந்து, கனிந்து-பழுத்து, அதாவது பழுத்தபழம்போல் அதிக ம்ருது வாய் என்றபடி, உள்ளே - திருவதரங்களுக்குள், வெண் - வெளுத்த, பல் - தந்தங்களினுடைய, இலகு - ப்ரகாசிக்கிற, சுடர் - தேஜஸ்ஸை யுடைத்தாய், இலகு - ப்ரகாசிக்கிற, விலகு - சலித்துக் கொண்டிருக்கிற, மகர குண்டலத்தன் - மகர குண்டலங்களை உடையவன், சுற்றடிக்கொள்வது - நேரில் வர்ணிக்க முடியாமையாலே சுற்றி இருக்குமவைகளை வர்ணிப்பது. *'஬ிஂவா யஜஂ விகஸ வஜஜஸொவநஂ தெ ஶஂபாஊகஂஶஸிதகுண்டஶஷிஶஊநீயஂ। காஹஂ உவஂ கநகசகெதகககணஊவஹாஂ ஶாஹஂ விஹஷயதி ஜெவவதெ உஜீயஂ॥' என்று ப்ரதேஶாந்தரத்தில் இவர் வர்ணித்தாரிறே. செம்பவளத்திரள்போலே - சிவந்த நிறமுள்ள பவளங்களுடைய கூட்டம்போலே, ஶ்ரீவஂ்ராயஜாவழூவத்தை - தளிர்போல் இருக்கும் திவ்யாதரத்தை, வாலியது - வலியது என்பது நீண்டு வாலியது என்றுயிருக்கிறது, பரிபக்வமான, ஓர் - அத்விதீயமான, கனிகோல் - பழமோ? வினையாட்டியேன் - இப்பழத்தை இப்பொழுதே அநுபவிக்கப் பெறாத பாபத்தை உடைய என்னுடைய, வல் - உறுதியான, வினைகோல் - பாபமோ? கோல - ஸௌந்தர்யம், அழகு என்றபடி, திரள் - திரண்டிருக்கிற, ஸௌந்தர்யமே திரண்டு வடிவுகொண்டாப் போலே இருக்கிற, பவள-பவழத்தினுடைய, கோழும் - கொழுத்ததான, துண்டங்கோலோ - கண்டங்களோ. கருப்பூரம் நாறுமோ - கற்பூரம்போல் வாஸனை வீசுமோ, கமலப்பூ நாறுமோ - தாமரைப் புஷ்பம்போல் வாஸிக்குமோ, திருப்

1 திருவாய்மொழி-7-7-3

2 நாச்சியார் திருமொழி-7-1

* ஓ! தேவநாதனே! கோவைப்பழம் போன்ற சிவந்த கீழ் உதட்டையுடையதாயும், மலர்ந்த தாமரை மடல்போன்ற நேத்திரங்களையுடையதாயும் தொங்கிக்கொண்டிருக்கிற குந்தளங்களை (தலைமயிர்களை) உடையதாயும் மனோஜ்ஞமாயிருக்கிற குண்டலங்களாலே அழகாயிருக்கிறதாயும், பொன்னிறமான தாழம்பூவாகிற கர்ணபூரத்தை உடையதாயும் அழகாயும் இருக்கிற தேவரீருடைய மனது என்னுடைய மனதை அலங்கரிக்கிறது.

மோ திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ' என்பது. ஸ்மயமாநமுகவனைக் கொண்டு தோற்றின தூமுறுவற்றொண்டைவாய்ப் பிரானுடைய தூமுறுவலைப்பார்த்து, [1] 'என்று நின்றே திகழுஞ் செய்ய வீன்சுடர்வெண் மின்னுக்கொலன்றி யென்னுவியடுமணிமுத்தங் கொலோ' என்பது. காந்திக்கு லீலாதோலைகள்போலே யிருக்கிற திவ்யகர்ணபாசங்களைப்பார்த்து [2] 'மகரந் தழைக்குந் தளிர்கொல்' என்பது. சுற்றுமொளிவட்டஞ் சூழ்ந்து சோதி பரந்த ஸம்பூர்ணசந்த்ரனும் நேரொவ்வானென்னும்படியான திருமுகத்திலழகைத்திரள அநுபவித்து [3] 'கோளிழைத்தாமரையும் கொடியும் பவளமும் வில்லும் கோளி

பவளச்செவ்வாய் - அழகுபொருந்திய பவளம்போன்றசிவந்தவாய், தான்தித்திருக்குமோ - இவை எல்லாவற்றையும் விட இதுவே அதிகபோக்யமாய் இருக்குமோ. ஸ்மயமான - சிரித்துக் கொண்டிருக்கிற, முகவனை - முகத்தை உடையவனைக் கொண்டு, தோற்றின - ப்ரகாசித்த, தூ - பரிசுத்தமான, அதாவது வெளுத்த நிறமான, முறுவல் - புன்சிரிப்பை உடைய, தொண்டை - கோவைப்பழம் போன்ற, வாய் - வாயை உடைய, பிரானுடைய - உபகாரகனான எம்பெருமானுடைய, என்றும் - எப்பொழுதும், நின்றே - ஸ்திரமாக இருந்துகொண்டே, திகழும் - ப்ரகாசிக்கிற, செய்ய - சிவந்த, சுடர் - காந்தியை, ஈன் - உண்டாக்குகிற, வெண் - வெளுத்த நிறமுள்ள, மின்னுக்கோல் - மின்னலோ, அன்றி - அதுவல்லாமல், என்னுவி - என்னுடைய ஆத்மாவை, அடும் - ஹிம்ஸிக்கிற, அணி - வரிசையாய் இருக்கிற, முத்தங்கோலோ - முத்துக்களோ. லீலாதோலைகள்போன்ற - விளையாட்டிற்காக ஏற்பட்ட ஊஞ்சல்போல. கர்ணபாசங்கள் - திருக்காதுகள். மகரம் - மகரமாக, தழைக்கும் - துளிர்விட்டு ஓடுகிற, தளிர்கோல் - துளிர்கொலோ, அதாவது மகர குண்டலங்களோடு சேர்ந்த திருக்காதுகளை இப்படி அநுஸந்தித்தபடி, சுற்றும் - நான்கு பக்கத்திலும், ஒளிவட்டம் - காந்தியினுடைய ஸமூஹம், சூழ்ந்து - வ்யாபித்து, சோதி - ப்ரகாசம், பரந்த - விஸ்தாரமாய் இருக்கிற. நேரொவ்வான் - ஸத்ருசனாகமாட்டான். திரள - கும்பலாகச்சேர்த்து, கோள் இழை - தன் காந்தியையே ஆபரணமாக உடைய, கோள் - காந்தி, இழை - ஆபரணம், தாமரையும் - தாமரைப் புஷ்பங்களும், கொடியும் - கற்பகக் கொடியும், பவளமும், வில்லும், கோள் இழை, தண் - குளிர்ந்தவைகளான, முத்தமும் - முத்துக்களும், தளிரும் - துளிர்களும், குளிர் - குளிர்ந்ததாய், வான் - பெரிதான, பிறையும் - சந்திர கலையும், இவைகள் எல்லாம்

---

1 திருவாய்மொழி-7-7-5 2 திருவாய்மொழி-7 7-6 3 திருவாய்மொழி-7-7-8.

ழைத்தண் முத்தமுந்தளிரும் குளிர்வான் பிறையும் கோளிழையாவுடைய கொழும்சோதி வட்டங்கொல்' என்பது. 1 'குருஷ்வ மாம் அநுசரம்' என்றிருப்பாரைக் கூவிக்கொள்ளும்போது ஸ்நிக்த கம்பீர மதுர நாதமாய் நாச்சிமாருடைய வளைத் தழும்போடு வாசியில்லாத ரேகாத்ரயத்தை யுடைத்தாய் திருமேனியொளியாலேபசுத்த ஸ்ரீ பாஞ்சஜந்யம்போலே யிருக்கிற திருக்கழுத்தைப் பார்த்து [2] 'முற்றுமுண்டகண்டம் கண்டீரடியேனை யுய்யக்கொண்டது' என்பது. சதுர்வித புருஷார்த்தங்களையும் வழங்குமளவன்றிக்கே ஏதேனுமொரு கிஞ்சித்காரம் பண்ணின

சேர்ந்த, கோளிழையாவுடைய, கொழும் - ஶ்லாக்யமான, சோதிவட்டம்கொல்- ஜ்யோதிஸ்ஸின் மண்டலமோ. இங்கு 'தாமரை' என்று திருக்கண்களையும், 'கோடி' என்று திருமூக்குக்களையும், 'பவளமும்' என்று திவ்யாதரத்தையும், 'வில்லும்' என்று திருப்புருவங்களையும், 'முத்தமும்' என்று திருமுற்றுக்களின் வரிசைகளையும், 'தளிரும்' என்று திருக்காதுகளையும், 'வான்பிறை' என்று திருநெற்றியையும் நிகீர்யாத்யவஸானமாக நிரூபித்திருக்கிறது என்றறியத் தக்கது. மாம் - என்னை, அநுசரம் - பின்தொடர்ந்து வருபவனாக, குருஷ்வ - செய்துகொள், என்றிருப்பாரை - என்று ப்ரார்த்தித்துக்கொண்டிருப்பாரை, கூவி - அழைத்து, கொள்ளும்போது - அங்கீகரிக்கும்பொழுது, ஸ்நிக்த - மழமழப்பை யுடையதாய், கம்பீர - அகாதமாயும், மதுர - இனிமையாயும் இருக்கிற. நாதமாய் - ஶப்தத்தை உடையதாய், வளைத்தழும்போடு - வளைகள் அழுந்துவதினால் உண்டான ரேகைகளுடன், ரேகாத்ரயத்தை-மூன்று கோடுகளை, பசுத்த-பசுமை நிறமுடையதான, இத்தால் * 'பத்மாலயாபத்மகராக்ர ஜாதரேகேவ ஸுஸ்தாஞ்சி ஏஷ வஹதி ஸ்வநிஹே ஶதிரேஷ' என்றிவர் ஸ்ரீ தேவ நாயகனை அநுஸந்தித்திருப்பது விவக்ஷிக்கப்பட்டதாகிறது. முற்றுமுண்ட - உலகங்கள் எல்லாவற்றையும் பக்ஷித்த, கண்டம் - கழுத்தானது, அடியேனை - அதின் அழகில் ஈடுபட்ட அடியேனை, உய்யக்கொண்டது - உஜ்ஜீவிக்கும்படி செய்தது, 'கண்டீர்' என்பது நிஶ்சய த்யோதகம். சதுர்வித - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்கிற நான்குவிதமான.

---

1 ராமா அயோ 2 அமலனாதிப்பிரான்-6

* ஓ! தேவநாதனே! தாமரைப் புஷ்பத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக உடைய லக்ஷ்மியினுடைய கைவளையல்களினால் உண்டாக்கப்பட்டிருக்கிற ரேகைகளை உடையதும், உம்முடைய காந்தியினாலே, நீல நிறமாக்கப்பட்டிருக்கிற பாஞ்சஜந்யத்திற்கு ஸமமான தேவரீருடைய திருச்கழுத்து.

ருக்கு ஸர்வஸ்வதாநமான மாஜவரிஷ்வஜத்தைக் கொடுக்கக்கடவவான திருத்தோள்களைப் பார்த்து 1 'கற்பகக்காவன நற்பல தோள்கள்' என்பது. மரதகமணிமயதடஸமாநமாய் மௌக்திக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வநமாலா விராஜிதமாய் அலர்மேல்மங்கை இறையுமகல கில்லேன் என்றுறையும்படி அதஸ்ரீலோலமான திருமார்பை யநுபவித்து 2 'ஆரமார்பதன்றோ வடியேனை யாட்கொண்டது' என்பது. ஆபத்துக்கள் வந்தால் ஜகத்தையெல்லாம் உள்ளே வைத்து ரக்ஷிக்கும்படியான திருவுதரத்தைப் பார்த்து 3 'காரேழ் கடலேழ் மலையே ழுலகுண்டு மாராவயிற்றோன்' என்பது. மரகதக்குன்றமொத்த திருமேனியிலே

வழங்குமளவன்றிக்கே - கொடுக்கிற மாத்திரமன்றிக்கே. கிஞ்சித்காரம் - அஞ்சலி முதலிய வ்யாபாரம். ஸர்வஸ்வதாநமான - தனக்கு எல்லாவித ஸம்பத்துமான. மாஜவரிஷ்வஜத்தை - கெட்டியாகத் தழுவிக்கொள்ளுவதை. இத்தால் 'ஸர்வஸ்வதாநே பரிஷ்வங்கோ ஹநூமத:' என்றது ஜ்ஞாபகப்படுத்தப்பட்டதாகிறது. கற்பகக் காவன - கற்பகமரங்களின் தோப்புக்களுக்கு ஸத்ருசங்களான, நல் - நல்லவைகளான, பல - அனேகங்களான, தோள்கள் - திருத்தோள்கள், மரதகமணிமயதட - மரதகக்கல்லினால் செய்யப்பட்ட ப்ரதேசம்போல, ஸமாநமாய் - மனதை இழுக்கக்கூடிய, மௌக்திக - முத்துக்கள், ஸ்ரீவத்ஸ - ஸ்ரீவத்ஸம் என்கிற மறு, கௌஸ்துப - கௌஸ்துபம், வநமாலா - வைஜயந்தி என்கிற வனமாலை, இவைகளினால் விராஜிதமாய் - ப்ரகாசம் செய்யப்பட்டதாய், அலர்மேல் - புஷ்பத்தின் மேல் வஸிக்கிற, மங்கை - யுவதியான பிராட்டி, இறையும் - க்ஷணகாலமும், அகல - இதைவிட்டுப்பிரிய, கில்லேன் - ஶக்தியுடையவளாகிறேனில்லை, என்று - என்று சொல்லிக்கொண்டு, உறையும்படி - வஸிக்கும்படி. அது - அந்த, ஆரமார்பு - ஹாரத்தோடுகூடிய திருமார்பு, அன்றோ, அடியேனை, ஆட்கொண்டது - தாஸனாக அங்கீகரித்தது. *'ஸ்ரீவத்ஸகௌஸ்துபவநமாலா விராஜிதம் வக்ஷோஹ்ருதயம் மே பரிதாபம் நய:' என்றிறே இவர் தாமும் அனுஸந்தித்துப் போந்தது. ஆபத்துக்கள் - ப்ரளயமாகிற ஆபத்துக்கள், ஏழ் - ஏழு மேகங்களையும், கடலேழ் - ஏழு ஸமுத்திரங்களையும், மலையேழ் - ஸப்தபர்வதங்களையும், உலகு - மற்ற எல்லா லோகங்களையும்,

---

1 திருவாய்மொழி-6-6-5 2 அமலனாதிபிரான்.5 3 திருவாய்மொழி-10-8-2.

* ஸ்ரீவத்ஸம் என்கிற மறுவும், கௌஸ்துபமணியும், லக்ஷ்மீ, வனமாலை, இவைகளை ஆபரணங்களா யுடையதான தேவரீருடைய திருமார்பை அடியேனுடைய மனது அநுபவித்துக்க்ருதார்த்தனாயிருக்கும் தன்மையை அடைகிறது.

மாணிக்கவொளி சூழ்ந்தாற்போலே பொருந்தின பொன்னேற்ற வாடையைப்பார்த்து [1] 'படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின் பைம்பொற் கடிச்சோதி கலந்ததுவோ' என்பது. ஜநநவஜவீ ஜவராயுரை முன்னோடிவந்து விலக்கக்கடவனவான நிவ்ருத்திகாரணங்களைக்கண்டு கந்தர்வகாஹளகளாசி தூணீரசாதுரகை என்னலாம்படி கணைக்காலிருந்தவா என்பது. வேதங்களுக்கெல்லாம் மேற்சாற்றாய் ஸர்வாதிக்

~~~~~~

உண்டும் - புஜித்தும், ஆரா-நிறையாத, வயிற்றான் - திருவயிற்றை உடையான்' *'விஶ்வம் நிகீர்ய விஸ்ரப்தோ யஶ்ச ஜாதகார்ஶ்யம்' என்றாரிறே இவர் தாமும். மரதகக்குன்றமொத்த - மரதகக்கல்மயமான மலைக்கு ஸத்ருஶமான, மாணிக்கவொளி - மாணிக்கத்தின் காந்தி, சூழ்ந்தாற்போலே - பரவி இருப்பதைப்போல, பொருந்தின - சேர்ந்திருக்கிற, பொன்னேற்ற - பொன்னுக்கு ஸத்ருஶமான, ஆடையை - பீதாம்பரத்தை என்றபடி. படிச்சோதி - திருமேனியினுடைய காந்தியும், நின் - உம்முடைய, பைம்-பசுமை நிறமுள்ள, பொன் - பொன் போன்ற, கடிச்சோதி - இடுப்பின் காந்தியும், ஆடையோடும் - வஸ்திரத்தோடு, பல்கலனாய் - அனேகவித ஆபரணங்களாய், கலந்ததுவோ - ஒன்று சேர்ந்ததுவோ, ஜநநவஜவீ - ஸம்ஸார மார்க்கத்தில், ஜவராயுரை - வேகமாக நடக்கிறவர்களை, விலக்கக்கடவனவான - அந்த வழியிலிருந்து நிவ்ருத்தி செய்யக் கூடியவைகளான, ஜவகாரணங்களை - கணுக்கால்களை, கந்தர்வ - மன்மதனுடைய, காஹள - காஹளவாத்யம், களாசி - காளாஞ்சி என்னும் பாத்திரம், அதாவது அடி சிறுத்து நுனியில் அகன்றதாய் தீர்த்த ப்ரதிக்ரஹத்திற்காக உபயோகிக்கும் ஒரு பாத்திர விஶேஷம் என்றபடி, தூணீர - பாணப்பை, சாதுரகை - மூலம், அதாவது இந்தக்கணுக்கால்களைப் பார்த்து அவைகளைச் செய்யும்படி இருந்ததோ என்று சொல்லக்கூடியது என்றபடி. கணைக்காலிருந்தவா - கணைக்கால்கள் இருந்தபடி என்? †'கந்தர்வகாஹள நிஷங்க களாசிகாஹம் ஜவாயஸம் ஜயதி தேவ தவ கவீயம்' என்றாரிறே. மேல் சாற்றாய் - மேலே ஸமர்ப்பிக்கக்கூடியதாய், அதாவது ஶிரஸ்ஸுக்கு அலங்கார

---

1 திருவாய்மொழி-3-1-1

* ஓ! தேவநாதனே! எல்லா லோகங்களையும் (ப்ரளய காலத்தில்) திருவயிற்றுக்குள் வைத்திருந்தாலும் இளைப்பை அடைந்திருக்கிற.

† ஓ! தேவநாதனே! மன்மதனுடைய காஹள வாத்யமென்ன, அம்பராத்தூணி யென்ன, காளாஞ்சி என்னும் பாத்திரமென்ன, இவைகளைப் போன்ற தேவரீருடைய (கணைக்கால்கள் இரண்டும் எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கின்றன.)
~~~~~~

களுக்கும் ஸாதாரணதைவதமான பொதுநின்ற பொன்னங் கழல்களைப் பார்த்து 1 'ஒருகாலிற் சங்கு ஒரு காலிற் சக்கரம்', 'பத்துவிரலும் மணி வண்ணன் பாதங்களொத்திட் டிருந்தவா' என்பது. திருவடிகளுக்கும் ஆதாரபத்மத்துக்கும் உண்டான சேர்த்தியைப்பார்த்து 2 'அடிச்சோதி நீ நின்ற தாமரையாயலர்ந்ததுவோ' என்பது. இப்படி பரஸ்பரஶோபாகாரணங்களான திவ்யாவயவங்களைப் பேசத்தொடங்கி 3 'கருமாணிக்கமலை மேல் மணித்தடந்தாமரைக் காடுகள்போல் திருமார்பு வாய் கண் கை யுந்தி காலுடையாடைகள் செய்யபிரான்' என்பது. நீருஜைவ நிஹ

மாய், ஸாதாரணதைவதமான - பொதுவாகிய தேவதையாகிய, பொதுநின்ற - பொதுவாக நிற்கிற, பொன் - பொன்போல் ஸ்ப்ருஹணீயமான, அம் - அழகிய, கழல்களை - திருவடிகளை, ஒருகாலில் சங்கு - ஒரு திருவடியில் சங்காகாரமான ரேகை, ஒருகாலில் சக்கரம் - ஒரு திருவடியில் சக்ராகாரமான ரேகை, மணி வண்ணன் பாதங்கள் - மணிபோன்ற வர்ணத்தையுடைய எம்பெருமானுடைய திருவடிகள், பத்துவிரலும், ஒத்திட்டிருந்தவா - அநுகுணங்களாக இருந்தபடி. அவைகள் இருக்கவேண்டிய ஸந்நிவேசங்களை அநுஸரித்து ஒன்றோடொன்று அநுரூபமாகச்சேர்ந்திருந்ததுஎன்றபடி. *'ஸாதாரண்யதைவதம் ஶ்ருதி வத: ஸ்வகீயம்' என்று அருளிச்செய்திருப்பதை இங்கு அநுஸந்திப்பது. ஆதார பத்மத்துக்கும் - திருவடிகளுக்கு ஆதாரமாக இருக்கும் ஆதார பத்மத்திற்கும், சேர்த்தி - ஒன்றுக்கு ஒன்று அநுரூபமாயிருக்கை. அடிச்சோதி - உன்னுடைய திருவடிகளின் ஜ்யோதிஸ்ஸு, நீ நின்ற - நீ நிற்கிற, தாமரையாய் - தாமரைப் புஷ்பமாய், அலர்ந்ததுவோ- விகஸித்ததுவோ, தாமரைப் புஷ்பம் உன்னுடைய அடிச்சோதியாய் அலர்ந்ததுவோ என்றும் அந்வயிக்கவுமாம். பரஸ்பரஶோபாகாரணங்களான - ஒன்றுக்கொன்று சோபையைக் கொடுக்கக்கூடியவைகளான, கருமாணிக்க - கறுத்த மாணிக்க மயமான, மலைமேல் - மலையின்மேல் இருக்கிற, மணித்தடம் - நிர்மலமான தடாகத்தில் இருக்கும், தாமரைக்காடுகள் போல் - தாமரைப் புஷ்பங்களின் காடுகள்போல், திருமார்பு - திருமார்பில் கௌஸ்துபம் லக்ஷ்மீ இவர்கள் வஸிக்கிறபடியினால் அதுவும் சிவந்த காந்தியை உடையது என்றபடி, வாய், கண், கை, உந்தி - திருநாபீகமலம் இருக்கிறபடியினால் இத்தையும் சிவந்ததாக நிரூபித்தருளினபடி, உடையாடை - உடுத்திக் கொண்டிருக்கும் பீதாம்பரம், இவைகள். ஒவ்வொன்றுமே ஒரு தாமரைப் புஷ்பக்காட்டுக்கு ஸத்ருஶமா யிருக்கிறதென்று பஹு

---

1 பெரியாழ்வார் திருமொழி-1-7-6, 1-2-2 2 திருவாய்மொழி-3-1-1.

3 திருவாய்மொழி-8-9-1.

* உம்முடைய திருவடிகளை எல்லோருக்கும் பொதுவான தெய்வம் என்று சொல்லுகிறார்கள்.

மான திருமேனியிலே நிலைமின்கள்போலே விளங்குகிற ஜகத3தி4ஷ்டா2நதே3வதாத்மாக்களாகிற தி3வ்யாப4ரணங்களைப் பார்த்து [1] 'அந்தாமத்தன்பு செய் தென்னாவிசேரம்மானுக்கந்தாம வாண்முடி சங்காழிநூலாரமுள' என்பது. அஞ்ஜநகி3ரியை யணைந்த சந்த்3ராதி3த்யர்கள் போலே பரஸ்பர பரபா4க3த்தையுடையரான திருக்கையி லாழ்வார்களைப்பார்த்து [2] 'சங்குசக்கரங்களென்று கைகூப்பும்' என்பது. பரந்த திருப்பாற் கடலிலே கா3ம்பீ4ர்ய மாது4ர்யாதி3கள்போலே தி3வ்யாத்மஸ்வரூபத்திலே பரத்வஸௌலப்

வசனத்திற்குத் தாத்பர்யம், செய்ய - சிவந்த நிறமுள்ள, பிரான். நீரத3ஸந்நிப4மான - கறுத்த மேகத்திற்கு ஸத்ருசமான நிறத்தைஉடைய, நிலைமின்கள் - ஸ்திரமாய் இருக்கும் மின்னல்கள். ஜகத3தி4ஷ்டா2நதே3வதாத்மாக்களாகிற - உலகத்தில் இருக்கும் தத்வங்களுக்கு எல்லாம் அபிமானி தேவதைகளான ஆத்மாக்களாயிருக்கிற. அந்தாமத்து - அழகிய ஸ்தானமாகிய பரமபதத்தில் செய்கிற, அன்பு - ப்ரீதியை, செய்து - என்னிடத்தில் பண்ணி, என் ஆவி - என்னுடைய ஆத்மாவின் இடத்தில், சேர் - சேர்ந்திருக்கிற, அம்மானுக்கு - ஸ்வாமிக்கு, அம் - அழகிய, தாம - மாலையினால் அலங்கரிக்கப்பட்ட, வாள் - காந்தியையுடைய, முடி - கிரீடம், சங்கு - சங்கம், ஆழி - சக்ரம், நூல் - யஜ்ஞோபவீதம், ஆரம் - முக்தாஹாரங்கள், இவைகள், உள - இருக்கின்றன. அஞ்ஜநகி3ரியை - மைமலையை, அணைந்த - சேர்ந்திருக்கிற, சந்த்3ராதி3த்யர்கள் - சந்திர ஸூர்யர்களைப்போல, பரஸ்பர பரபா4க3த்தை - ஒருவர்க்கொருவரால் உண்டாகும் விசேஷ ப்ரகாசத்தை, ஆழ்வார்களை - சங்கசக்ரங்களை என்றபடி. சங்கு சக்கரங்கள், என்று - என்று சொல்லி, கைகூப்பும் - * 'நீலாசலோதித நிஶாகர பா4ஸ்கராபே4 ஶத்ருக்ஷயாஹிதே ஸுரபதே தவ ஶங்க2சக்ரே' என்னப் பட்டதிறே. பரந்த - விஸ்தாரமான. கா3ம்பீ4ர்ய மாது4ர்யாதி3கள் - கம்பீரமாக இருக்கையும், மதுரமாக இருக்கையும். தி3வ்யாத்மஸ்வரூபத்திலே - பரமாத்மாவின் ஸ்வரூபத்திலே 'பரத்வஸௌலப்யங்களுக்கு வகுத்த' என்றது பரத்வத்திற்கு உபயுக்தமானவைகள் 'கா3ம்பீ4ர்ய' என்றும், ஸௌலப்யத்திற்கு உபயுக்தமானவைகள் 'மாது4ர்ய' என்றும் ஸங்க்ரஹிக்கப்பட்டன என்றபடி.

1 திருவாய்மொழி-2-5-1. 2 திருவாய்மொழி-7-2-1.

* ஓ! தேவநாதனே! இந்திர நீல மலையில் உண்டாயிருக்கும் சந்திரனையும் ஸூர்யனையும் போன்ற காந்தியை யுடையவைகளாயும், ஶத்ருக்களை நாசம் செய்கிறவைகளாயும் இருக்கிற தேவரீருடைய திருவாழியும் திருச்சக்கரமும்.

ஸூங்களுக்கு வகுத்த குணவர்க்கங்களைப் பார்த்து [1] 'உயர்வறவுயர் நலமுடையவன்', [2] 'வல்வினையேனையீர்கின்ற குணங்களையுடையாய்' என்பதாய் அஸங்க்யேய ஸௌசீல்யாதி குணங்களாலும் ஸ்மிதங்களான தூதுசெய் கண்களாலும் ஸத்க்ருதனாய்க்கொண்டு ஸ்ரீ ஸடகோபன் நிற்கிற பாதபீடத்தளவுஞ் சென்று [3] 'வானுயரின்பம் மன்னிவீற்றிருந்தாயருளு நின்றாள்களைஎனக்கே' என்ன, அவனுமிரங்கி வாசஞ்செய் பூங்குழலாளும் ஸுகந்தவதியுமான நாச்சிமார் கரதலங்களுக்குப் பரிமளம் கொடுக்கும் பொற்றாமரையடிகளாலே இவனைப் பூமுடிசூட்டி, [4] 'தேஷாம்ஹவி நஸோ

வகுத்த - பிரிக்கப்பட்ட, வர்க்கங்கள் - ஸமூஹங்கள், உயர்வு - மற்ற வஸ்துக்களுக்கு, உத்கர்ஷம், அற - இல்லாதபடி, உயர் - உயர்ந்துகொண் டிருக்கிற, நலம் - கல்யாண குணங்களை, உடையவன் - இது பரத்வோப யுக்தங்களான குணங்களைச் சொல்லுகிறது என்று திருவுள்ளம். வல் - த்ருடமான, வினையேனை - பாபங்களையுடைய என்னை, ஈர்கின்ற - ஹிம்ஸிக்கிற, குணங்களை உடையாய் - குணங்களை உடையவன். என்பதாய் - என்று சொல்லுவதாய். அஸங்க்யேய - அளவில்லாத, ஸௌசீல்யாதி - ஸௌசீல்யம் முதலிய, தூதுசெய் - தூத்யத்தைச் செய்கிற, அதாவது தன் அபிப்ராயத்தைத் தெரிவிக்கிற என்றபடி. ஸத்க்ருதனாய் - இழுக்கப்பட்டவனாய், ஸ்ரீ ஸடகோபன் நிற்கிற - ஸ்ரீஸடகோபனை (ஸ்ரீபாதுகைகளை) எழுந்தருளப் பண்ணியிருக்கிற, பாதபீடத்தளவும் - திருவடிகள் வைத்துக்கொள்ளும் ஆஸனம் வரையில், வான் - பரமபதத்தில், உயர் - மிகவும் உயர்ந்ததான, இன்பம் - ஆநந்தத்தில், மன்னி - ஸ்திரமாக இருந்து, ஆநந்தானுபவத்திலேயே ஸ்திரமாக இருந்து என்றபடி. வீற்றிருந்தாய் - எழுந்தருளி இருக்கும் எம்பெருமானே, நின்தாள்களை - உன்னுடைய திருவடிகளை, எனக்கு, அருளு - க்ருபை பண்ணவேணும். இரங்கி - க்ருபைசெய்து, வாசம் செய் - வாஸனையைக் கொடுக்கக்கூடிய, பூம் - அழகான, அன்றிக்கே புஷ்பங்களினால் அலங்கரிக்கப்பட்ட, குழலாளும் - திருக்குழல்களை உடையவளான பெரிய பிராட்டியாரும், ஸுகந்தவதியுமான - வாஸனை உடையவளான பூமிப்பிராட்டியுமான, நாச்சிமார் - இவ்விரண்டு பிராட்டிமார்களுடைய, கரதலங்களுக்கு - உள்ளங்கைகளுக்கு பொற்றாமரையடிகளாலே - பொன்னால் செய்யப்பட்ட தாமரைப் புஷ்பங்கள் போன்ற திருவடிகளினாலே, இவனை - இந்த முக்தனை. பூமுடிசூட்டி - புஷ்ப மயமான கிரீடத்தை ஸிரஸ்ஸில் தரிக்கும்படி செய்து, அன்றிக்கே புஷ்பத்தைத் திருமுடியிலே சூட்டி என்றாகவுமாம். தேஷாம்ஹவி - (அந்த யஜ்ஞ

---

1 திருவாய்மொழி-1-1-1
2 திருவாய்மொழி-8-1-8
3 திருவாய்மொழி-8-1-9
4 பாரதம்-ஸாந்-46-130

நம:’ என்று எல்லையுள்ளவளவுஞ்செல்ல அடிப்பட்ட கைங்கர்ய ஸாம்ரா ஜ்யத்துக்குக் கடவனுக்க, இவனும் [1] ‘தாழ்ச்சிமற்றெங்குந் தவிர்த்து நின் தாளிணைக் கீழ்வாழ்ச்சி யான் சேரும்வகையருள்’என்ற மநோரதந்தலைக் கட்டி [2] ‘தன்னுருவா யென்னுருவினின்ற வெந்தைதளிர்புரையுந் திருவடி யென்றலை மேலவே’, [3] ‘கூட்டரிய திருவடிக்கள் கூட்டினைநான் கண்டே னே’, [4] ‘திருப்பொலிந்த சேவடியென் சென்னியின்மேல் பொறித்தாய்’ என்று அம்ருதஸாகரத்திலே அழுந்தினாற்போலே ஆநந்தநிர்பரனாய் அநுபவராகம் ப்ரேரிக்க, பற்றிலார்பற்றநின்ற திருவடிகளையே அவ லம்பநமாகக்கொண்டு வைகுண்டத்தின் மேலே யேற, இவனை தாயுந் தந்

வராஹாவதாரம் செய்தருளின எம்பெருமானை யார் ஸேவிக்கிறார்களோ) அவர்களுக்கும், நமோநம: - ஸேவிக்கிறேன். எல்லையுள்ளவளவும் - எல்லை இருக்கும் வரையிலும், செல்ல - போகும்படி, அடிப்பட்ட - காரணத்துடன் கூடிய, அன்றிக்கே கீழ் வரிசைகளில் இறங்கி வருகிற, கடவனுக்க - ப்ராப்த னுகச் செய்ய, மற்று எங்கும். மற்ற எல்லா விஷயங்களிலும், தாழ்ச்சி - தாழ்ந்திருப்பதை, அதாவது ஆஶ்ரயிப்பதை, தவிர்த்து - நிவ்ருத்தி செய்து, விட்டு விட்டு என்றபடி, யான் - நான், நின் - உன்னுடைய, தாளிணைக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழே, வாழ்ச்சி - வாழ்வை (கைங்கர்ய ஸாம்ராஜ் யத்தை), சேரும் - அடையும்படியான, வகை - ப்ரகாரத்தை, அருள் - க்ருபை செய்யவேணும், என்ற - என்று ப்ரார்த்தித்த, மநோரதம் - இஷ்டம், தலைக்கட்டி - பூர்த்தி அடைந்து, தன்னுருவாய் - தனக்கு ஶரீரமாய் இருக் கிற, என்னுருவில் - என்னுடைய ஸ்வரூபத்திற்குள், நின்ற - நிற்கிற, எந்தை- எனக்கு ஸ்வாமியான எம்பெருமானுடைய, தளிர்புரையும் - துளிருக்கு ஸமானமான, திருவடி, என் தலைமேலவே - என்னுடைய ஶிரஸ்ஸின்மேல் இருக்கிறது. கூட்டரிய - கூட்டுவதற்கு அஶக்யங்களான, மற்றவரால் அடைய முடியாதவைகளான என்றபடி, திருவடிக்கள் - திருவடிகளினுடைய, கூட்டினை - இரண்டையும், நான் கண்டேன். திருப்பொலிந்த - அழகு ஸ்திர மாய் இருக்கிற, சேவடி - திருவடிகள், என் சென்னியின்மேல் - என்னுடைய ஶிரஸ்ஸின்மேலே, பொறித்தாய் - அலங்காரமாகச் செய்தாய், அம்ருதஸாக ரத்திலே - அம்ருத மயமான ஸமுத்திரத்திலே, ஆநந்தநிர்பரனாய் - ஆநந்தத்தால் பரிபூர்ணனாய், அநுபவராகம் - அனுபவத்தில் உண்டான ஆசை, ப்ரேரிக்க - தூண்ட, பற்றிலார்-வேறு அவலம்பனம் இல்லாதவர்கள்,

1 திருவாய்மொழி-3-2-4 2 திருநெடுந்தாண்டகம்-1.
3 திருவாய்மொழி-4-9-9 4 பெரியாழ்வார் திருமொழி-5-4-7

தையுமாயளிக்குந் தண்டாமரைக் கண்ணன் அங்காகதகுமாரந்யாயத் தாலே ஸந்தோஷித்து, இவனை ஸஹஜஸௌஹார்த்தத்தாலே தன்மை பெறுத்தித் தன் தாளிணைக்கீழ்க்கொண்டு, ஸர்வஶேஷியான தான் பெற்ற பேற்றை யிவனை யிட்டுப்பேசுவிக்கத் திருவுள்ளமாய், நீராராயிருக் கிறீரென்று கேட்க, இவனும் தனக்கு அவனெவ்விடத்தான் யானாரென்ற நிலையைக்கழித்து நித்யஸம்ஸாரிகள் நிலையினின்றும் நித்யஸூரிகள் நிலையிலே சேர்த்த உபகாரத்திற்கு உதவிக் கைமாறற்றுத் தான் தெளிந்தபடியை விண்ணப்பஞ்செய்யத் தொடங்கி, அநாதிகாலம் ஸம் ஸாரார்ணவத்திலே அழுந்தின அடியேன் தேவரீருடைய திவ்யாத்ம

அதாவது உபாயாந்தர ஶூந்யர்கள், பற்ற - ஆஶ்ரயிக்கும்படி, நின்ற - நிற் கிற, அவலம்பநமாக - பிடித்துக்கொள்ளுவதற்கு ஆதாரமாக, இவனை - இந்த முக்தாத்மாவை. தாயும் - தாயும், தந்தையுமாய் - பிதாவாயும், அளிக் கும் - ரக்ஷிக்கிற, தண் - சீதளமான, தாமரைக் கண்ணன் - தாமரைப் புஷ் பம் போன்ற திருக்கண்களையுடைய பகவான், அங்காகத - மடியில் வந்து உட்கார்ந்த, குமாரந்யாயத்தாலே-குமாரனைப்போலே, ஸந்தோஷித்து - ஸந்தோஷித்து, ஸஹஜ - ஸ்வபாவத்தில் ஏற்பட்ட, ஸௌஹார்த்தத்தாலே - ப்ரீதியினாலே, தன்மை பெறுத்தி - தன்னுடைய ஸ்வபவங்கள் எல்லாம் வரும்படி செய்து, அதாவது பரம ஸாம்யத்தைக் கொடுத்தருளி, தன் - தன் னுடைய, தாளிணைக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழ், கொண்டு - அங்கீ கரித்து, 'ஸர்வஶேஷியான' என்றது ஹேதுகர்ப்ப விஶேஷணம், ஸர்வ ஶேஷியாகையாலே இவன் பெற்ற மோக்ஷாநந்தத்தினால் வரும் ப்ரீதியாகிற ப்ரயோஜனம் தன்னுடைய பேறு என்று நினைக்கிறான் என்றபடி, பேற்றை - ப்ரயோஜனத்தை; இந்த ஜீவாத்மா ஸம்ஸாரத்தில் இருந்து விடுபட்டு மோக்ஷத்தை அடைந்ததாகிய ப்ரயோஜனத்தை என்றபடி, இவனையிட்டு - இவனைக்கொண்டு, திருவுள்ளமாய் - திருவுள்ளம் கொண்டவனாய், நீர் யாரா யிருக்கிறீர் - நீர் எப்படிப்பட்டவராய் இருக்கிறீர். அவன் எவ்விடத்தான் - அப்படிப்பட்ட ஸர்வேஶ்வரன் எங்கே இருக்கிறான், யானார் - நான் எப் படிப்பட்டவன், என்ற நிலையை - என்று சொல்லும்படியாய் இருந்த நிலையை, கழித்து - நிவ்ருத்தி செய்து, நித்யஸம்ஸாரிகள் - அநாதியாக ஸம் ஸாரத்திலேயே இருக்கிறவர்களுடைய, நிலையில் நின்றும் - ஸ்திதியில் இருந்தும், கைம்மாறு - ப்ரத்யுபகாரம் என்றபடி, அற்று - இல்லாமல், அதாவது இப்படி விண்ணப்பம் செய்வதைத்தவிர வேறு உபகாரம் செய்ய முடியாதவனாய் என்றபடி, அளப்பரிய - அளப்பதற்கு அஶக்யமான,

ஸ்வரூபமாகிற அளப்பரிய வாரமுதக்கடலிலே [1] 'அவிபாகேந த்ருஷ்டத்வாத்' என்னும்படி அப்ருதக்ஸித்தவிசேஷணமாய்க்கொண்டு அழுந்தினேன்; உலகங்களுக்கெல்லா மோருயிரான தேவரீருடைய ஸ்வரூபத்தாலே ஸ்வரூபமும், ஸங்கல்பத்தாலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும், போகத்தாலே போகமுமாம்படியான உண்மை தெளிந்தேன்; தனித்தெனக்கொரு பேரிட வொண்ணாதபடி மகாரவிவரணத்தில் சொன்ன தாஸபூதனென்கிற பேரில் நிலை நின்று ஸ்வரூபப்ராப்த கைங்கர்யத்துக்கு விலக்கில்லாத ஸூரிஸாதர்ம்ய ஸ்வாதந்த்ர்யமும் பெற்றேன்; வானுளார் பெருமானான தேவரீரோடே தேனும் பாலும் நெய்

ஆர் - பூர்ணமான, அமுதக்கடலிலே - அம்ருத ஸமுத்திரத்தில், **அவிபாகேந** - பிரிவில்லாமல், அதாவது அப்ருதக்ஸித்த விசேஷணமாக (அனுபவிக்கிறான்). **த்ருஷ்டத்வாத்** - அப்படியே ஸ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினால். **அப்ருதக்ஸித்தவிசேஷணம்** - விட்டுப்பிரியாத விசேஷணம். ஓர் - அத்விதீயமான, உயிரான - அந்தராத்மாவான, **ஸ்வரூபத்தாலே ஸ்வரூப**மும் - பகவானுடைய ஸ்வரூபம் இருக்கிறபடியினாலே இவனுடைய ஸ்வரூபமும் ஸித்திக்கிறது என்றபடி, 'ஸங்கல்ப' இத்யாதி—ஸங்கல்பத்திற்கு அதீனமான ப்ரவ்ருத்திகளும் (ஒரு கார்யத்தை செய்வதும்), நிவ்ருத்திகளும் (செய்யாமல் இருப்பதும்) உண்டாகின்றன என்றபடி. **போகத்தாலே போகமும்** - பகவானுடைய ப்ரீதியே தனக்கு ப்ரயோஜனமாகவும், தனக்கு என்று தனித்து ஒரு போகம் இல்லாமையும் என்றபடி. இந்த மூன்றாலும் ஆதேயத்வ விதேயத்வ சேஷத்வங்கள் பலிதங்கள். உண்மை - யதார்த்தமான ஆகாரத்தை, தெளிந்தேன் - விசதமாக அறிந்து கொண்டேன். **மகாரவிவரணத்தில்** - மகாரத்தின் அர்த்தத்தை விவரிக்கும் கடஸ்ருதி வாக்யத்தில், 'மகாரம் அந்தப்பகவானும் பிராட்டியுமாகிய இருவருக்கும் தாஸபூதன் என்பதைத் தெரிவிக்கிறது' என்றிறே அந்தஸ்ருதி வாக்யம் இருப்பது. விலக்கில்லாத - தடையொன்றும் இல்லாததான. இது மேல் 'ஸ்வாதந்த்ர்யம்' என்பதுடன் அந்வயிக்கிறது. **ஸூரிஸாதர்ம்ய** - நித்யஸூரிகளுக்கு ஸத்ருசனான. இத்தால் முக்தனுக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டாகும் என்கிற ஸ்ருதிகர்மவஸ்யனன்றிக்கே கைங்கர்யத்தில் தன் இஷ்டப்படி செய்கிற விஷயத்தில் ஸ்வாதந்த்ர்யம் உண்டென்பது மாத்திரத்தைச் சொல்லுகிறதேயன்றிப் பகவானுக்குப் பாதந்திரனாயிருப்பதைத் விலக்கிறதில்லை என்பது த்யோதிதம். வானுளார் - பரமபதத்தில் இருக்கிற நித்ய ஸூரிகளுக்கு,

---

1 சாரீரகஸூத்திரம் -4-4-4

யும் கன்னலுமமுதும் ஒத்துக்கலந்து ஒருபடிப்பட்ட ஜ்ஞாநவிகாஸத்தாலே உள்ள உலகளவும் யானுமுளனாய் நின்று பொன்னுலகும்புவனி முழுதும் கைங்கர்யோபகரணமாகக் கைக்கொள்ளப் பெற்றேன்; லோகத்தில் ஸம்ஸாரிகளுடைய ஐச்வர்யகைவல்யஸுகங்களெல்லாம் என் அநுபவரஸத்தில் திவலையென்னும்படி தெவிட்டாத அநுபவம் பெற்று போக்தாவுமாய் போக்யனுமானேன்; 1 'வானக் கோனைக் கவிசொல்லவல்லேர்க்கினி மாறு' இல்லை என்னும்படி வேதங்கள் மீண்ட நிலமெல்லாம் மெய்யுணர்ந்து கவிபாடுங் கருத்துடையேனானேன்; மேலினிமீளாவடிமைப் பணிகொண்டருளவேண்டும்; என்று விண்ணப்

பெருமானான - ஸ்வாமியான, கன்னல் - சர்க்கரை, ஒத்து - இவைகளுக்கு ஸத்ருசமாய், கலந்து- ஒன்றோடொன்று கலந்தாப்போலே இருந்து, ஒருபடிப் பட்ட-ஏகரூபமான, பின்பொருகாலும் ஸங்கோசம் இல்லாத என்றபடி.உள்ள-வித்யமானங்களான (இருக்கிறவைகளான), உலகளவும் - எல்லா உலகங்களிலும், யானும் - நானும், உளனாய் - தர்மபூதஜ்ஞானத்தினால் வ்யாபித்திருப்பவனாய். இத்தால் 'முக்தன் ஆநந்த்யத்தை (அளவிட முடியாமையை) அடைகிறான்' என்றர்த்தமுள்ள ஸ்ருதி விவரிக்கப்பட்டதாயிற்று, பொன்னுலகும் - ஸ்வர்ணம் போலப்ரகாசமான பரமபதத்தையும், புவனி முழுதும் - இந்த லீலாவிபூதி முழுவதையும், கைங்கர்யோபகரணமாக - கைங்கர்யம் செய்வதற்குக் கருவிகளாக, கைக்கொள்ள - அங்கீகரிக்க, ஐச்வர்ய கைவல்யஸுகங்கள் எல்லாம் - ஐச்வர்யம் கைவல்யம் இவைகளை அநுபவிப்பதினால் உண்டாகும் ஆநந்தம் எல்லாம், தெவிட்டாத - போதும் என்கிறபுத்தி உண்டாகாத, போக்தாவுமாய் - இப்படிப்பட்ட ஆநந்தத்தை அநுபவிப்பதினாலே போக்தாவாய். இப்படிப்பட்ட இவன் மோக்ஷ பூதனுகையினாலே பகவானுக்கு போக்யமாகையினால் 'போக்யனும்' என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. வானக் கோனை - பரமபதநாதனைப்பற்றி (வான - பரமபதத்துக்கு கோனை-ராஜாவை,கவிசொல்லவல்லேர்க்கு- கவிகள் சொல்ல சக்தியுடைய எனக்கு, இனி - இதற்குப் பிறகு, மாறு - வேறு ஸத்ருசமான வஸ்து, இல்லை - 'என்னும்படி' என்பது மேல் 'கவிபாடும்' என்பதுடன் அந்வயிக்கிறது, மீண்ட - சொல்லமுடியாமல் திரும்பின, நிலமெல்லாம் - இடங்கள் எல்லாவற்றையும், மெய்யுணர்ந்து - மெய்யாக உணர்ந்து, கருத்துடையேனானேன் - மனதை உடையவனானேன், மேலினி - இதற்கப்புறம், மீளா - திரும்பிவருவது இல்லாத, அடிமைப்பணி - தாஸனாய் இருக்கைக்கு

---

1 திருவாய்மொழி-4-5-9

பம் செய்ய, இப்பாசுரங்களைக் கேட்டருளின ஸ்ரீய:பதி, முலைபிரியமாட்டாத ஸ்தநந்தயனான வத்ஸனுடைய முதல் வார்த்தையைக் கேட்டாற்போலே உகந்து 1 'யஸ்யாபாங்கஸம்ச்ரயம்', 2 'யஸ்யா வீக்ஷ்ய முகம்', 3 'யஸ்ய ப்ரூவிப்ரமலீலத:' என்னும்படியாயிருக்கிற 4 'அஸ்து தே' என்னும் அகிலஜகந்மாதாவின் திருமுகத்தைப் பார்க்க, இருவரும் ஏகஹ்ருதயராய்க்கொண்டு கடாக்ஷிக்க, ஸர்வசேஷி திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் பெற்று, ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனுடைய ஸ்வரூபாதிகளையெல்லாம் அவன் தன்னைப் போலே அஸங்குசிதமாகக் காட்டுகிற ஸாக்ஷாத்காரத்தினுடைய அநுவ்ருத்தி அபிமதையான படியாலே

உசிதமான கார்யத்தை, கைங்கர்யத்தை என்றபடி, கோண்டருளவேண்டும் - அங்கீகரிக்கும்படி க்ருபை செய்யவேண்டும். முலைபிரியமாட்டாத - ஸ்தந்யபானம் பண்ணிக்கொண்டிருக்கிற, அதாவது க்ஷணகாலமும் ஸ்தந்யபானம் பண்ணுமல் தரித்திருக்க முடியாத, ஸ்தநந்தயன் - ஶிசுவான, யஸ்ய - (லோகம் முழுதும்) எந்த லக்ஷ்மியினுடைய, அபாங்க - கடைக்கண்ணை, ஸம்ச்ரயம் - ஆச்ரயித்திருக்கிறதோ, யஸ்யா: - எந்த லக்ஷ்மியினுடைய, முகம் - முகத்தை, வீக்ஷ்ய - பார்த்து (ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணுகிறுனே), யஸ்ய - எவளுடைய, ப்ரூ - புருவங்களினுடைய, விப்ரமலீலத: - விளையாட்டுக்களின் பிரிவுகளினுல் (ஒருவன் யஜமானனுகவும் மற்றொருவன் வேலைக்காரனுகவும் ஆகிறுனே) தே - உனக்கு, அஸ்து - உண்டாகட்டும், என்னும் - என்று சொல்லுகிற, அகிலஜகந்மாதாவின் - எல்லா லோகங்களுக்கும் மாதாவாகிய பெரிய பிராட்டியாருடைய, ஏகஹ்ருதயராய் - ஒரேவித அபிப்ராயத்தை உடையவர்களாய் ஸர்வசேஷி - எல்லாருக்கும் சேஷியான பகவானுடைய திருவருளும் - க்ருபையையும். பங்கயத்தாள் - தாமரைப் புஷ்பத்தில் வஸிக்கும் லக்ஷ்மியினுடைய. ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனுடைய - ஸ்வபாவத்திலேயே ஸர்வஜ்ஞனான பகவானுடைய, ஸ்வரூபாதிகளை - ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதிகள் முதலியவைகளை, அவன் தன்னைப்போலே - அந்தப் பகவானைப்போல, அதாவது அவனுடைய ஸ்வரூபாதிகளை அவன் எப்படி ப்ரத்யக்ஷமாகவும், கொஞ்சமும் விடாமலும் அனுபவிப்பனே அதைப்போல என்றபடி, அஸங்குசிதமாக - சுருக்கம் இல்லாமல், ஸாக்ஷாத்காரத்தினுடைய - ப்ரத்யக்ஷத்தினுடைய, அநுவ்ருத்தி - தொடர்ச்சி, அபிமதையான படியாலே - இஷ்டமானபடியாலே, பரபக்தியை - பரபக்தியை

---

1 ஆள-ஸ்தோ-37 2 ஸ்ரீஸ்தவம்-1 3

4 கத்யம்.

பரபக்த்யேகதானாய், ஸாக்ஷாத்காராநுவ்ருத்தியாலே பரஜ்ஞாநைகதானாய், உத்தரோத்தரரஸாபிநிவேசத்தாலே பரமபக்த்யேகதானாய் இப்படி பரிபூர்ணமாய் உத்தராவதிரஹிதமாய் விசுத்ததமமாய் அநந்யப்ரயோஜநமாய் அநவதிகப்ரியமான பகவதநுபவத்தாலே வந்த நிரதிசயப்ரீதியாலே ஒழிவில்காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமையை யுகந்து, 'ஏகதா' என்று துடங்கி ஓதுகிற அநியதாபரிமிதஶுத்தஸத்த்வமயவிக்ரஹங்களை பரிக்ரஹித்து,

---

உடையவனாய், ஸாக்ஷாத்கார - ப்ரத்யக்ஷஜ்ஞானத்தினுடைய, உத்தரோத்தர - மேல் மேல் உண்டாகிற, ரஸ - ஆநந்தத்தில் உண்டாகிய அபிநிவேசத்தாலே - தீவ்ரமான அபேக்ஷையினாலே. இத்தால் கத்யத்தில் பரமபதம் சென்ற பிறகு பரபக்தி பரஜ்ஞானம் பரமபக்தி இவைகள் உண்டாகிறது என்று சொல்லியிருப்பது விவரிக்கப்பட்டதாயிற்று, அதாவது இங்கு சொல்லப்பட்ட பரபக்த்யாதிகள் உபாய பரமானவையல்ல, மேல் மேல் உண்டாகப்போகிற கைங்கர்யத்திற்கு முன்னால் அதை ஆசைப்பட்டு அதை க்ரமேண அடைவது என்றபடி. பரிபூர்ணமாய்-குணம், விக்ரஹம், விபூதி, முதலியவைகளினால் நிறைந்ததாய், உத்தராவதிரஹிதமாய்-மேல் எல்லை இல்லாததாய், நாசம் இல்லாததாய் என்றபடி. விசுத்ததமமாய்- மிகவும் தெளிந்ததாய், அதாவது அதிமான ப்ரகாசத்துடன் கூடியதாய், அநந்யப்ரயோஜநமாய் - இதைவிட வேறு ப்ரயோஜனத்தை உடையதல்லாததாய், அதாவது வேறு ஒரு ப்ரயோஜனத்தில் ஆசைஉண்டாகாமல் இருக்கும்படியாய்என்றபடி. அநவதிகப்ரியமான-அளவில்லாத ப்ரீதியை உண்டாக்கக்கூடியதான. பகவதநுபவத்தாலே - பகவானை ஸாக்ஷாத்கரித்து அனுபவிப்பதினாலே, நிரதிசய - எல்லை இல்லாத ஒழிவில் - ஒழிவில்லாத, காலமெல்லாம் - எல்லாக் காலங்களிலும், உடனாய்-ஸமீபத்திலேயே இருக்குமவனாய், மன்னி - ஸ்திரமாக இருந்து, வழுவிலா - ஒன்றும் விட்டுப் போகாதே, அடிமை - கைங்கர்யத்தை, உகந்து-ஸந்தோஷத்துடன் ப்ரார்த்தித்து, ஏகதா - ஒருவிதமாக, அதாவது ஒரு ஶரீரத்தை உடையவனாக, ஓதுகிற - ஶ்ருதியில் சொல்லப்படுகிற, அநியத - நியமம் இல்லாமல், அதாவது வேண்டிய போது ஶரீரத்தைப் பரிக்ரஹித்தும், வேண்டாதபோது விட்டு விட்டும் இருக்கை கூடுமாகையினாலே ஶரீரம் எப்பொழுதும் இருக்கவேண்டும் என்ற நியமம் இல்லாமல் என்றபடி, அபரிமித - கணக்கில்லாத, எவ்வளவு ஶரீரங்கள் வேண்டுமானாலும் அவ்வளவையும் பரிக்ரஹிக்கலாம் என்றபடி, ஶுத்தஸத்த்வமய - ஸம்ஸாரிகளினுடைய ஶரீரம்போல் ப்ரக்ருதியின் பரிணாமம்

1 'மொய்ம்மாம்பூம்பொழி'லிற்படியே ஸம்ப்ரம க்ரீடாதிகளைப் பண்ணிக் காட்டியும், பர்யேதி என்னும்படி வலஞ்செய்து நாளும்மருவியும், ஸ்வேச்சாஸ்ருஷ்டரான ஸம்பந்தி பாந்தவாதி விசேஷங்களைக் கொண்டு குடியடிமைசெய்து காட்டியும், அன்றீன்ற தேநு வத்ஸத்தைபோலவும், அத்தேநுவை வத்ஸம்போலவும், ஸத்த்வத்தை நிழற்போலவும், சேஷிபோம் வழியெல்லாம் ஸஞ்சாரவசம் பண்ணி, இருள்தருமா ஞாலத்துள் ஶார்ங்கதரனவதரிக்கும்போது ஜ்ஞாநஸங்கோசாதிகள் பிறவாதபடி அவன் தன்னைப்போலே வந்து போயும், ஶ்ருதிஸுகம

அல்லாமல் சுத்த ஸத்வ மயமான த்ரவ்யத்தின் பரிணாமமான, விக்ரஹங்களை - சரீரங்களை, மொய்ம்மாம் பூம்பொழிலிற்படியே - 'மொய்ம்மாம் பூம்பொழில்' என்றாரம்பிக்கும் திருவாய்மொழியில் அருளிச் செய்திருக்கிறபடியே, ஸம்ப்ரம - பரபரப்பில் உண்டான, க்ரீடாதிகளை - விளையாட்டுக்களை, துள்ளுவது, பாடுவது, நர்த்தனம் செய்வது முதலியவைகளை என்றபடி, பர்யேதி - நாலு பக்கமும் சுற்றிவருகிறான், என்னும்படி - என்று ஶ்ருதியில் சொல்லுகிறபடியே, நாளும் - எப்பொழுதும், வலம் செய்து - ப்ரதக்ஷிணம் செய்து, மருவியும் - ஸ்திரமாய் இருந்து அனுபவித்தும், ஸ்வேச்சாஸ்ருஷ்டரான - தன்னுடைய ஸங்கல்பம் மாத்திரத்தினாலே உண்டாகிய, 'ஸம்பந்தி' இத்யாதி - ஸம்பந்திகள் பந்துக்கள் முதலியவர்களைக் கொண்டு, குடியடிமை - குடியாகக் கைங்கர்யம், அதாவது தன் க்ருஹத்தில் இருக்கும் எல்லோரும் சேர்ந்து செய்யும் கைங்கர்யம். அன்றீன்ற - அப்பொழுது கன்று போட்ட, தேநு - பசுமாடு, வத்ஸத்தைப்போலவும் - அந்தக் கன்றைப் போலவும், அத்தேநுவை - அந்தப் பசுவை, வத்ஸம்போலவும் - அந்தக் கன்றுக்குட்டி போலவும், ஸத்த்வத்தை - ப்ராணியை, நிழல் போலவும்-அதினுடைய சாயைபோலவும், ஸஞ்சாரவசம் பண்ணி-கூடவே ஸஞ்சரித்து, இருள்தரு - அஜ்ஞானத்தைக் கொடுக்கக்கூடிய, மா - விசாலமான, ஞாலத்துள் - பூமியுள், ஜ்ஞாநஸங்கோசாதிகள் - ஜ்ஞானத்திற்கு குறைவு முதலியவைகள். 'அவன் தன்னை' இத்யாதி - பகவான் அவதரித்துத் தன் அவதார ப்ரயோஜனம் முடிந்தவாறே தன்னுடையச்சோதிக்கு எழுந்தருளுகிறாப்போல இவர்களும் அவனுக்குக் கைங்கர்யம் செய்வதற்காக அவனுடன் கூட அவதரித்தும், அவனுடைய அவதார ஸமாப்தி காலத்தில் தாங்களும் அவனுடன் கூட நித்யவிபூதிக்கு எழுந்தருளியும் என்றபடி, ஶ்ருதிஸுகம - காதுகளுக்கு இனிமையான, சூழ்ந்து - பகவானுக்குச்

1 திருவாய்மொழி-3-5-1

ஸஞ்சாராதிகளைப் பண்ணி சூழ்ந்திருந்து பல்லாண்டேத்தியும், இப்படி ஸூரியுகந்த ஸர்வவிதகைங்கர்யஸம்பத்தை ஸர்வதேச ஸர்வகாலாதிகளிலும் உசிதமாக உகந்து 1 'ஹர்ஷயிஷ்யாமி' என்கிற மநோரதபூர்த்தியாலே அநாதிகாலமிழந்ததெல்லாம் படியெடுத்த தென்னலாம்படி அநவதிகாநந்தஸாகரநிமக்நனாய், ப்ரக்ருதிகுணங்களைக் கழித்து ஶுத்தஸத்வகுணங்களிலே பிணைகொடுக்கி

சுற்றிலும் எல்லாப் பக்கங்களிலும் நின்று, அதாவது பகவானுடைய ஒரு அவயவ ஶோபையை அனுபவித்து மற்றொரு அவயவத்தை அனுபவிக்கவேண்டும் என்கிற ஆசையினால் அதை அனுபவிப்பதற்காகச் சுற்றிச் சுற்றி வந்து, இருந்து - ப்ரத்யுஜ்ஜ்வலவர்ணஸர்வஷோபா ஸர்வஹ்ருத்யமான எம்பெருமானுடைய ஒவ்வொரு அவயவங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கிறவர்கள் அதில் போதுமென்கிற த்ருப்தி இல்லாமையாலே நின்ற இடத்திலேயே ஸ்தாவர ப்ரதிஷ்டையாய் நின்று அந்த ஒரு அவயவ ஶோபையை அனுபவித்துக்கொண்டே இருந்து. அன்றிக்கே 'சூழ்ந்திருந்து' - விஷ்வக்ஸேநாதி பரிஜனங்கள் மற்ற எல்லா ஸூரிகளும் இப்படி ஸமீபத்தில் வந்து அனுபவிப்பதற்காக இடம் விடும்படி நிர்ப்பந்தித்தாலும் ஒரு பக்கத்தில் சொல்லும்பொழுது அங்கு இடம் விடுவதாகக் காண்பித்து மற்றொரு பக்கம் சென்று, அங்கு சொல்லும்பொழுது அங்கிருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று இப்படிப் பகவானையே சூழ்ந்துகொண்டு இருந்து என்றாகவுமாம். அதுவுமன்றிக்கே எம்பெருமானைச் சுற்றிக் கோஷ்டியாக நின்றுகொண்டு என்றாகவுமாம், பல்லாண்டு-பல்லாண்டு என்கிற திவ்ய ப்ரபந்தத்தை அனுஸரித்து, ஏத்தியும் - ஸ்தோத்திரம் செய்தும், ஸூரியுகந்த - பகவானுக்கு ப்ரியமான, ஸர்வவிதகைங்கர்யஸம்பத்தை - எல்லாக் கைங்கர்யத்தையும் செய்வதாகிற ஸம்பத்தை, ஸர்வதேச - எல்லா இடங்களிலும், ஸர்வகாலாதிகளிலும் - எல்லாக்காலம் முதலியவைகளிலும், இங்கு ஆதிபதம் எல்லா அவஸ்தைகளையும் குறிக்கிறது. உசிதமாக - அந்தந்தத் தேசம், காலம், அவஸ்தை முதலியவைகளுக்குத் தகுந்தபடி, உகந்து - ப்ரீதியுடன் அங்கீகரித்து, ஹர்ஷயிஷ்யாமி - ஸந்தோஷப்படுத்தப் போகிறேன், என்கிற மநோரதபூர்த்தியாலே - என்று முன்பு எண்ணிக்கொண்டிருந்த மனோரதம் பூர்த்தி அடைந்தபடியினாலே. அநாதிகாலம் - ஆரம்பம் இல்லாமல் இவ்வளவு காலம் வரையிலும், படியெடுத்த தென்னலாம்படி - சேர்ந்து வந்தது என்று சொல்லலாம்படி. அநவதிக - எல்லையில்லாத, ஆநந்தஸாகரநிமக்நனாய் - ஆநந்தமாகிற பெரிய ஸமுத்திரத்தில் முழுகின

1 ஆள-ஸ்தோ-46

லும் போகவொண்ணுதபடி துவக்குண்டு, மேலாத்தேவருடனேகூடி மேவி மீட்சியில்லா வாழ்ச்சியை அநுபவிக்கும்.

அடலுரக முண்டுமிழ்ந்த வருக்கன்போல
அழுக்கடைந்து கழுவிய நற்றரளம் போலக்
கடலொழுகிக் கரைசேர்ந்த கலமேபோலக்
காட்டுத் தீகலந்தொழிந்த களிறே போல
மடல்கவருமயல் கழிந்தமாதர் போல
வன்சிறை போய் மன்னர் பதம் பெற்ருர் போல
உடன் முதலாவுயிர் மறைக்குமாயை நீங்கி
உயர்ந்த பதமேறி யுணர்ந்தொன்றினோமே. 19

வனுய், ப்ராக்ருதிகுணங்களை - ப்ராக்ருதியின் குணங்களான ஸத்வரஜஸ்தமஸ்ஸுக்களை, கழித்து - நிவ்ருத்திசெய்து, இதுமேல் 'துவக்குண்டு' என்பதுடன் அந்வயிக்கிறது. பிணைகொடுக்கிலும் - தனக்கு ப்ரதிநிதியாக (விஷ்வக்ஸேநாதிகளை) கொடுத்தும், போக ஒண்ணுதபடி - போக முடியாதபடி, துவக்குண்டு - ஸம்பந்தத்தை அடைந்து, மேலா - மேலானவர்களான, தேவருடனே- தேவர்கள் என்று சொல்லப்படுகிற நித்யஸூரிகளுடனே, மேவி - ஸந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருந்து, மீழ்ச்சி இல்லா - புநராவ்ருத்தி இல்லாத, வாழ்ச்சியை - வாழ்வை, ஆநந்தத்தை என்றபடி.

இப்படி ஸம்ஸாரியாய் இருந்த தசைக்கும் முக்தனுய்ப்போகும் தசையை அடைந்ததற்கும் உள்ள வ்யத்யாஸத்தை அனேக த்ருஷ்டாந்தங்களைக் கொண்டு நிரூபித்தருளுகிறுர்—'அடல்' என்றுரம்பித்து.

[ப - ம்.] அடல் - பராக்ரமத்தை உடைய, உரகம் - ஸர்ப்பத்தினுல், ராகுவினுல் என்றபடி, உண்டு - ஸாப்பிடப்பட்டு, உமிழ்ந்த - உமிழப்பட்ட, அருக்கண்போல - ஸூர்யன்போல, க்ரஹணகாலத்தில் ராகுவினுல் விழுங்கப்பட்டு அது முடிந்ததும் வெளியிலே உமிழப்பட்ட ஸூர்யனைப்போல என்றபடி, இத்தால் 'ராகுவின் முகத்தில் இருந்த விடுபட்டு சந்திரன் ப்ரகாசிப்பதைப்போல' என்றர்த்தமுள்ள சாந்தோக்ய வர்க்யமும், 'ஶ்யாம ஶ்ரீ யதுபேஷ்வேவ ஸுவா ஸஹஸ்ரம் ராக்கா ஶபராஷிவ ராஹோ முக்தா சிதாசித்தம்' என்றிவர்தாமே ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதத்தில் அருளிச் செய்திருப்பதும் ஸூசிப்பிக்கப்படுகிறது. அழுக்கடைந்து - அழுக்கினுல் பூசப்பட்டு, கழுவிய - அலம்பப்பட்ட, நல் - நல்லதான, தரளம்போல - முத்துப்போல, அன்றிக்கே நாயக ரத்னம்போல, இத்தால் 'யதா ந க்ரியதே ஜ்யோத்ஸ்நா மலப்ரக்ஷாளநாந்மணே: । ததா ஹேயகுணத்வம்ஸாதவபோதாதயோ குணா: ॥

மண்ணுலகில் மயல்தீர்ந்து மனந்தளும்பி

மன்னுத பயனிகந்து மாலேயன்றிக்

கண்ணில தென்றஞ்சியவன் கழலேபூண்டு

கடுஞ்சிறை போய்க்கரையேறும் கதியே சென்று

விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக்கண்டு

விண்ணவர்தம் குழாங்களுடன் வேதம்பாடி

பண்ணுலகிற் படியாதவிசையால்பாடும்

பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே. 20

ஹூகாஶ்யை ந ஜந்யை நித்யைவோத²நா ஹிதே॥' என்பதும் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது, கடலோழுகி-ஸமுத்திரத்தில் அடித்துக்கொண்டுபோகப் பட்டு,அதாவது விரோதமானகாற்றினுல் அடிக்கப்பட்டுபோகவேண்டிய இடத்திற்குப்போகாமல் ஸமுத்திரத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டு, கரைசேர்ந்த - (தைவஸங்கல்பத்தினுல் மற்றொரு காற்றடிக்க) போகவேண்டிய இடத்தையே அடைந்ததான, கலமே போல - கப்பலைப்போல, காட்டுத் தீ கலந்து - நாலு பக்கங்களிலும் காட்டுத் தீயினுல் சூழப்பட்டு, ஒழிந்த - அதை விட்டுத் தப்பிவந்த, களிறேபோல - யானையைப்போல, மடல் - மடலூருவதை, கவரும் - அங்கீகரிக்கக்கூடியதான, மயல் - ஆசை (அநுராகம்), கழிந்த - நிவ்ருத்தியடைந்த, மாதர்போல - ஸ்திரீகளைப்போல, அதாவது 'மாதல் மடலூரார்' என்கிற வரம்பும் கடந்து மடல் எடுக்க ஒருப்படும்படியான நாயகன் இடத்தில் உண்டான தீவ்ரமான அநுராகத்தை உடையவளாய் பிறகு நாயகனுடைய ஸம்ஶ்லேஷத்தைத் தன் இஷ்டப்படி பெறுகையாலே அந்த மையலை நிவ்ருத்தி செய்துகொண்ட ஸ்திரீயைப்போல என்றபடி, இத்தால் 'கூஷாகூஷா' என்று வாய்புலற்றும்படியான ப்ராப்யத்வரையை உடையவனுக்கு அந்த ப்ராப்யம் கைபுகுந்ததற்கு த்ருஷ்டாந்தம் காட்டப்பட்டதாகிறது, வன்சிறை - த்ருடமான காராக்ருஹம் அதாவது தன்னுல் நிவ்ருத்தி செய்துகொள்ள முடியாததும், அதிகமான துக்கத்தைக் கொடுக்கக் கூடியதுமான என்றபடி, போய் - நிவ்ருத்தி அடைந்து, மன்னர்பதம் - ராஜாக்களினுடைய ஸ்தானத்தை, பெற்றூர்போல - அடைந்தவர்களைப் போலவும், உடல் முதலா - ஶரீரம் இந்திரியம் விஷயம், முதலியவைகளான, உயிர் - ஜீவாத்மாவை, மறைக்கும் - மறைக்கிற, ஜ்ஞானத்தைச் சுருங்கப்பண்ணுகிற என்றபடி, அன்றிக்கே ஜீவாத்ம ஸ்வரூபத்தை உள்ளபடியே அறியவொட்டாமல் செய்கிற என்றபடியாகவுமாம், மாயை - ப்ரக்ருதியை, விட்டு - நீங்கி, உயர்ந்த பதமேறி - உயர்ந்த ஸ்தானமாகிய பரமபதத்திலே ஏறி, உணர்ந்து - எல்லாவற்றையும் அறிந்து, அதாவது ஸர்வஜ்ஞத்வத்தைப் பெற்று, ஒன்றி

ஞேம் - சேர்ந்தோம், அதாவது ஸர்வேஶ்வரனோடு அப்ருதக்ஸித்த விஶே
ஷணமாக ஸம்பந்தப்பட்டோம். 19

இப்படிப் பராப்திபர்வத்தை நிகமித்தருளி இந்த ஸ்ரீபரமபதஸோபானத்தின் பர்வங்களின் க்ரமங்களை ஒரு பாட்டாலே ஸங்க்ரஹித்தருளிச் செய்து கொண்டு பரமபதத்தில் சென்று செய்யும் கைங்கர்யத்தையும் நிரூபித்தருளுகிறார்—'மண்ணுலகில்' என்றாரம்பித்து.

[ப - ம்] மண்ணுலகில் - இந்தப் பூலோகத்தில், மயல் - அஜ்ஞானம், தீர்ந்து - நிவ்ருத்தி அடைந்து, தேஹாத்ம விவேகத்தாலும் ஜீவாத்ம பரமாத்ம விவேகத்தாலும் தேஹாத்மப்ரமம், ஸ்வதந்த்ராத்ம ப்ரமம் இவைகளை நிவ்ருத்தி செய்து, இது விவேகபர்வத்தின் ஸங்க்ரஹம், மனம் தளும்பி - தத்தளித்து, அநாதி காலமாக இப்படியறியாமல் காலம் கழிந்தமைக்கு நிர்வேதப்பட்டு, இது நிர்வேதபர்வத்தின் அர்த்தம், மன்னாத - ஸ்திரமல்லாத, பயன் - ஐஶ்வர்யாதி ப்ரயோஜனங்களை, இகந்து - விட்டுவிட்டு, அவைகளில் தோஷத்தைப்பார்த்து அவைகளை விட்டுவிட்டு, இது விரக்திபர்வார்த்தம், மாலேயன்றி - பகவானைத்தவிர, கண்-வேறு ரக்ஷகர், இலது - இல்லை, என்று - என்று எண்ணி, அஞ்சி - பயந்து, இது பீதிபர்வத்தின் ஸங்க்ரஹம், அவன் கழலே - அந்தப் பகவானுடைய திருவடிகளையே, பூண்டு - ஆஶ்ரயித்து, பக்தி ப்ரபத்திகளாலே ஆஶ்ரயித்து என்றபடி, இது ப்ரஸாதநபர்வ ஸங்க்ரஹம், கடும் - க்ரூரமான, சிறை - ஸ்தூல ஶரீரமாகிற ஜயில், போய் - நாசமடைந்து, இது உத்க்ரமண பர்வார்த்தம், கரையேறும் - ஸம்ஸார மண்டலத்திற்கு அக்கரையான பரமபதத்தை அடையக்கூடிய, கதியே - அர்ச்சிராதி கதியிலேயே, சேன்று - போய், இது அர்ச்சிராதிபர்வத்தின் அர்த்தம், விண்- ஆகாசத்தில் இருக்கும், உலகில் - லோகத்தில் அதாவது பரமபதத்தில் என்றபடி, அன்றிக்கே பரமாகாசம் என்று சொல்லப்படுகிற லோகத்தில் என்றாகவுமாம், வியப்பெல்லாம் - ஆஶ்சர்யங்களை எல்லாம், 'ததஃ வஹூ தம்' என்று சொல்லப்பட்ட ஆஶ்சர்யகரங்களான உத்யான வன மண்டப கோபுராதிகள் எல்லாவற்றையும், அன்றிக்கே பகவானுடைய ஆஶ்சர்யகரமான ஸ்வரூப குணாதிகள் எல்லாவற்றையும் என்றாகவுமாம், விளங்க - விசதமாக, கண்டு -ப்ரத்யக்ஷமாகப் பார்த்து, இது திவ்யதேஶப்ராப்தி பர்வஸங்க்ரஹம், விண்ணவர் தங்குழாங்களுடன்-நித்ய முக்தர்களினுடைய ஸமூஹங்களுடன், வேதம் - ஸாமவேதத்தை, பாடி - கானம் செய்து, பண் - ராகங்களினுடைய, உலகில் - ஸமூஹத்தில், அதாவது இந்த உலகத்தில் காணப்படுகிற ராகங்களின் ஸமூஹத்தில் என்றபடி, படியாத - அடங்காத, இசையால்-அப்ராக்ருதமான திவ்யகானத்தினால், பாடும்-பாடப்படுகிற,பல்லாண்டே- மங்களாஶாஸன ரூபமான வாக்யங்களை, பல்லாண்டும், பாடுவோமே, அன்றிக்கே இப்பர்வத்தின் ஆரம்பத்தில் 'பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடு

மாளாத வினையனைத்தும் மாள நாம் போய்
வானேறி மலர்மகளாரன்பு பூணுங்
தோளாத மாமணிக்குத் தொண்டுபூண்டு
தொழுகந்து தோத்திரங்கள் பாடியாடிக்
கேளாத பழமறையின் கீதம் கேட்டுக்
கிடையாத பேரின்பம் பெருகநாளும்
மீளாத பேரடிமைக்கன்புபெற்றோம்
மேதினியிலிருக்கின்றோம் விதியினாலே. 21

வமே' என்றருளிச் செய்யப்பட்டதை அனுஸரித்து, பல்லாண்டே - திருப்பல்லாண்டு என்கிற திவ்ய ப்ரபந்தத்தையே, பல்லாண்டும் - அனேகம் வருஷங்களும், ஸர்வதா என்றபடி என்றாகவுமாம். 'பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே' என்றது இங்கநுஸந்தேயம். ஸ்வயம் போக்யமுமாய் அநந்ய ப்ரயோஜனமுமாய் ஸர்வ சேஷியினுடைய ஸம்ருத்தியையே ஆசாஸிப்பதாகிற ஸ்வரூபோசித புருஷார்த்தத்தைச் சொல்லுகிற திருப்பல்லாண்டையே எப்பொழுதும் அநுஸந்திப்போம் என்றபடி. 20

இப்படி இந்த ரஹஸ்யத்தில் விவேக நிர்வேதாதி பூர்வகமாகப் பகவதனுபவ கைங்கர்ய பர்யந்தமாக நிரூபித்தருளி, இப்படித் தெளிந்து மோக்ஷத்தில் தீவ்ரமான ஆசை உண்டாகி சீக்ர பல ப்ரதமான ப்ரபத்தியாகிற உபாயத்தை அநுஷ்டித்து க்ருத க்ருத்யர்களாயிருக்கும் பரமைகாந்திகளும் இந்தப் பூலோகத்தில் வஸிப்பதற்குக் காரணம் என்ன என்னில், அதை ஸ்வாநுஸந்தானமாக அருளிச்செய்கிறார்—'மாளாத' என்றாரம்பித்து.

[ப - ம்.] நாம் - அநாதிகாலமாக ஸம்ஸாரத்தில் இருந்து 'யிமஶூவி ஊவிநீதம்' இத்யாதிகளிற்படியே அந்தப் பரம புருஷார்த்தத்தை மனதிலும் சிந்திக்க யோக்யதை இல்லாதவர்களாயிருந்து பகவானுடைய க்ருபையினால் உண்டான ஸதாசார்ய கடாக்ஷ மூலமாக விவேகம் முதலாக உபாயானுஷ்டானம் வரையிலான பரிபாகத்தைப் பெற்ற நாம், 'மாளாத' ப்ராயஶ்சித்தாதிகளினால் நாசமடையாதவைகளான, வினை - கர்மங்கள், அனைத்தும் - எல்லாம், மாள - நசிக்க, பகவானுடைய க்ருபையினாலே ஸ்வயமே நசிக்க என்றபடி, போய் - அர்ச்சிராதி மார்க்கத்திலே சென்று, வான் ஏறி - பரமபதத்திலே ஏறி, மலர் மகளார் - புஷ்பத்திலே வஸிக்கிற பெரிய பிராட்டியார், அன்பு பூணும் - ப்ரீதியினால் ஒரு ஆபரணமாகப் பூட்டிக்கொண்டிருக்கிற, 'ஸ்ரீஹஸ்தாபரணம் தேஜ:' என்றும், 'ஹஸ்தாபரணம் வாம நாயிகா: ஹரிஷணம் ஹரிஷணாதவி' என்றும் சொல்லப்பட்டதிறே, அதாவது தனக்கு ஆப

ரணமாகையினால் அதைவிட்டுப் பிரியாமல் ப்ரீதி பூர்வகமாக ஸம்ஶ்லேஷித்திருக்கிறாள் என்றபடி, தோளாத - துளைக்கப்படாத, ஒருவிதத் தோஷமும் இல்லாத என்றபடி, மாமணி - பெரிய நீலரத்னத்திற்கு, நீலரத்னம் போன்ற எம்பெருமானுக்கு என்றபடி, தொண்டு - தாஸ்யத்தை (கைங்கர்யத்தை), பூண்டு - தனக்கு அலங்காரமாக அங்கீகரித்து, அவனுடன் விட்டுப் பிரியாமை பெரிய பிராட்டிக்கு அலங்காரம், அவ்விருவருமான சேர்த்தியில் கைங்கர்யம் பண்ணுவது இவனுக்கு அலங்காரம், இத்தால் ‘திருவுக்கும் திருவாகிய செல்வா’ என்கிறபடியே எல்லா வஸ்துக்களுக்கும் ஸம்பத்தைக் கொடுக்கக்கூடியவளான அவளுக்கும் இவன் ஸம்பத்தைக் கொடுக்கிறவன், அவளுடைய சேர்த்தியால் இவனும் நிரவதி கைஶ்வர்யம் பெற்றான் என்றபடி, இப்படிப்பட்ட மிதுனச் சேர்த்தியில் அடிமை செய்வதினால் இவன் நிரவதிக கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றான், ‘ஸுஹ ஜஸ்யாநுயாத்ராயை [illegible]’ என்கிறபடியே ஸ்வரூபோசிதமான கைங்கர்யமாகிற புருஷார்த்தத்திற்கு உறுப்பாகையாலே மர உரியும் அலங்காரமாயிற்று என்றபடி, தொழுது - ஸேவித்து, உகந்து - அந்த அனுபவத்தினால் உண்டான ப்ரீதியை அடைந்து அந்த ப்ரீதிக்குப் பரீவாஹமாக, தோத்திரங்கள் பாடி - ஸ்தோத்திரங்களைப் பாடி, கீழ் நிரூபித்தருளினபடியே திருப்பல்லாண்டு முதலியவைகளைப் பாடி, அவ்வளவிலும் த்ருப்தி பெறாமல், ஆடி-நர்த்தனம்செய்து, ‘மொய்ம்மாம்பூம்பொழில்’ என்கிற திருவாய்மொழியில் அருளிச் செய்திருக்கிறபடியே ஸஸம்ப்ரம நர்த்தனங்களைச் செய்து, கேளாத - ஸம்ஸாரி தசையில் கேட்கப்படாத, பழை - அநாதியான, மறையின் - வேதத்தின், கீதம் கேட்டு - கானத்தை ஶ்ரவணம்பண்ணி, நித்யமுக்தர்கள் பண்ணும் ஸாமகானங்களைக்கேட்டு என்றபடி, கிடையாத - நமக்குக்கிடைக்கத் தகாததான, அன்றிக்கே இப்படி உபாயானுஷ்டானம் பண்ணினவர்களுக்குத் தவிர மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடாததான, பேரின்பம் - பெரிய ஆநந்தம், நாளும் - தினம்தோறும், பெருக - வ்ருத்தி அடைந்துகொண்டுவர, மீளாத - திரும்பிவராத, அனுபவிக்கும் ஆநந்தத்திற்குக் குறைவாவது, முடிவாவது இருந்தாலல்லவோ புனராவ்ருத்திக்கு ப்ரஸங்கம் உண்டு, ‘அப்பொழுதைக் கப்பொழுது என்னாராவமுதமே’ என்கிறபடியே அனுபவிக்க அனுபவிக்க ஆநந்தம் அதிகமாக வருகிறபடியினால் புநராவ்ருத்திக்கு ப்ரஸங்கம் இல்லை என்றபடி, பேரடிமைக்கு - மஹா கைங்கர்யத்திற்கு, அன்பு - ஸ்நேஹத்தை, அத்துடன் கூடிய த்வரையை அதாவது கைங்கர்யத்தை அடைவதில் த்வரையை என்றபடி, அன்றிக்கே அவ்வளவு கைங்கர்யத்திற்குக் காரணமான பகவத் க்ருபையை, பெற்றோம் - அடைந்தோம், இதில் ஸம்ஶயம் இல்லை

ஸமூாஷாகஷஷூ்ஹி ஸஹுஹாஹிரவலாாயெெ விஹிதயா
வலாவஷ்த்வா நித்யம் ஹவஜலுயிவெஜெ நிவததாம் ।
ஷுயிஜ்ா ஷஂவஷா ஹஜவஷநாகஂவெெகவவாஷா
ஷுதீஷீ ஷஷெஷயம் வாஷவஷஷொவாநவஷவீ ॥

என்று கருத்து, இப்படிப்பட்ட பாக்யத்தைப் பெற்றிருந்தபோதிலும், மேதினியில் - இந்தப்பூமியில், விதியினால் - பகவத் ஸங்கல்ப விசேஷத்தினால், இருக்கின்றோம். இங்கு 'விதி' என்றருளிச்செய்தது 'காஷம் கஷிஷ ஜஜதி வியிநா கெநவிஷ ஷாவஷாநா:' என்றிவர் தாமே அருளிச்செய்திருக்கிற படியே இன்னவிதமான ஸங்கல்பம் என்று நம்மால் அறியமுடியாதது, அதாவது அர்ச்சாவதார ரூபத்தில் இருக்கும் நம்முடைய ஸங்கவிசேஷத்தினாலோ, 'நிதூாஷஷெஷ: ஷஹஷெஷஜஷஜவஷநஂ ஷாஷ கஷஷஂ ஶாஷி:' என்றும், 'ஹஷெஷரவவியெநம்' என்றும் இவர் தாமே ஸ்ரீமத் த்ரமிடோப நிஷத்தாத்பர்ய ரத்நாவளியிலும், ஸாரத்திலும் ஸங்க்ரஹித்தருளினதற்கு மூலமான 'பொலிக பொலிக' என்கிற திருவாய்மொழியில் படியே நம்மைக் கொண்டு மற்ற சேதனர்களையும் திருத்தவேண்டும் என்கிற பகவத் ஸங்கல் பத்தினாலோ என்று நிஶ்சயிக்க முடியாத ஒரு ஸங்கல்பத்தினால் என்ற படி, 'இங்கே திரிந்தேர்க்கு இழுக்குற்றென்,' 'ஏரார்முயல்விட்டுக் காக்கை பின் போவதே' இத்யாதிகளையும் இங்கநுஸந்திப்பது. 21

இந்த ஸ்ரீ பரமபத ஸோபாநம் பகவத் க்ருபையைத் தனக்குப் பலமாக உடையதாகையினால் ஒருநாளும் ஶிதிலமாகாதது என்று அருளிச்செய்கிறார்— 'ஸமூாஷாகஷஷூ்ஹி:' என்றாரம்பித்து.

[ப - ம்.] **ஸமூாஷ** - பலத்தினால், **ஆகஷஷூ்ஹி:** - இழுக்கிற, **ஸஹு ஹி:** - அநேகங்களான, **அவலாயெ:** - குற்றங்களினால், அதாவது 'வாவ: ஷஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் வஷந: வஷந: । நஷ ஷஜ்ஞ: வாவஷெவ வஷநராஷஹஷெ நா:॥' என்கிறபடியே ஒரு அபசாரம் செய் தோமேயானால் அந்தப் பாபத்தின் பலனாக ஜ்ஞான ஸங்கோசம் உண்டாகி அத்தால் இன்னும் மேலே பாபங்களைப் பண்ணும்படி செய்கிறது என்றபடி, இப்படிப்பட்டவைகளினால், **விஹிதயா** - செய்யப்பட்ட, **வலாவஷ்த்வா** - திரும்புவதினால், அதாவது பகவானைவிட்டுத் திரும்பிப் போவதனால் என்ற படி, **நித்யம்** - எப்பொழுதும், **ஹவஜலுயிவெஜெ** - ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தில் இருக்கும் சேற்றில், **நிவததாம்** - விழுந்துகொண்டிருக் கிற நமக்கு, **ஹஜவஷநாகஂவெெகவவாஷா** - பகவானுடைய க்ருபை

ஶ்ரீமத்வேங்கடநாத: த்ரய்யந்தகுரு:
ஸ்வபாவசித்ரமிதம் ।
வ்யதநோத் நவபர்வயுக்தம்
ஸாத்யம் பரமபதஸோபாநம் ॥

இதி கவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஶ்ரீ பரமபதஸோபாநே

॥ நவமம் ப்ராப்திபர்வ ॥

॥ ஶ்ரீபரமபதஸோபாநம் ஸம்பூர்ணம் ॥

கவிதார்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ॥

ஒன்றையே ஸ்வரூபமாக உடைய, **ப்ரமிதா** - மஹிமையினால், **ஸம்பந்நா** - நிறைந்திருக்கிற, அதாவது பகவானுடைய க்ருபையே இதற்குப் பலத்தைக் கொடுப்பதாகையினால் இது ஒருநாளும் அழியாதது என்றபடி, **இயம்** - இந்த, **ப்ரதீசீ** - (மேற்கு முகமாய்ப் போகிற) ஸம்ஸார மார்க்கத்திற்கு விரோதமான வழியில் போகிற, **பரமபதஸோபாநபத்ததி** - ஸ்ரீ பரமபத ஸோபானத்தின் மார்க்கம், **த்ருஷ்டா** - பார்க்கப்பட்டது, ப்ரமாணங்களினால் அறியப்பட்டது என்றபடி.

இப்படி ஶ்ருதி முதலிய ப்ரமாணங்களினால் அறியப்பட்ட இந்த மார்க்கத்தைத் தாம் அந்த ப்ரமாணங்களைக்கொண்டு அறிந்ததாக நிரூபித்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்—'ஶ்ரீமத்வேங்கடநாத:' என்றாரம்பித்து.

[ப - ரை.] **த்ரய்யந்தகுரு:** - ஸ்ரீமத் வேதாந்தாசார்யர் என்கிற திருநாமத்தை உடையவரான, **ஶ்ரீமத்வேங்கடநாத:** - ஸ்ரீமானாகிய வேங்கடநாதன் என்னும் இந்த ஆசார்யன், **இதம்** - இந்த, **ஸ்வபாவசித்ரம்** - ஸ்வபாவத்திலேயே விசித்ரமான, அன்றிக்கே **ஸ்வ** - தம்முடைய, **பாவ** - திருவுள்ளத்தில் எழுதப்பட்ட, **சித்ரம்** - சித்ரமாகிய, அதாவது ப்ரமாணங்களைக்கொண்டு நிரூபித்துத் தம்முடைய திருவுள்ளத்தில் ஏற்பட்ட அர்த்தங்களையே இந்த க்ரந்தத்தில் நிரூபித்தருளினார் என்றபடி, **ஸாத்யம்** - உறுதியாயிருக்கிற, **நவபர்வயுக்தம்** - ஒன்பது படிகளை உடையதான, **பரம**

ஊஹஸ்ருஷ்டஸோபாநம் - பரமபதமாகிற மேத்தைக்குப் படியை, வ்யதத - செய்தருளினர், அதாவது இது படியென்றது எல்லோரும் பார்க்கக்கூடிய கட்டடமாக வன்றிக்கே ப்ரமாணங்களில் பரமபதத்தை அடைவதற்குக் காரணமாகச் சொல்லப்பட்டிருக்கும் விவேகம் முதலிய அர்த்தங்களையே தம்முடைய திருவுள்ளத்தில் படிகளாக அத்யவஸித்து இக்ரந்தம் அருளிச்செய்யப்பட்டது என்று திருவுள்ளம்.

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத்விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ பரமபத ஸோபாந வ்யாக்யானத்தில்

ஒன்பதாவது ப்ராப்தி பர்வம் முற்றிற்று.

ஸ்ரீபரமபத ஸோபாந வ்யாக்யானம் முற்றிற்று.